சங்க காலக் கபிலர்

(KAPILAR : A SANGAM POET)

முனைவர் (Ph.D.) பட்டத்திற்காகப்
புதுவைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெறும் ஆய்வேடு

ஆ. விஜயராணி
ஆய்வாளர்

சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி
&
இலக்கிய உயராய்வு நிறுவனம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி




மார்ச் - 1994

முனைவர் ம. மதியழகன்,
விரிவுரையாளர்,
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கிய உயராய்வு நிறுவனம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி - 605 014.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"சங்க காலக் கபிலர்" என்ற தலைப்பில் ஆ. விஜயராணி சமர்ப்பித்துள்ள இந்த ஆய்வு, புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் இவர் முழுநேர ஆய்வாளராக ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும், இவ் ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு வழங்கப்படவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

6 copies from



(ம. மதியழகன்)
மேற்பார்வையாளர்.

இடம்: புதுவை.
தேதி: 3. 3. 1994

ஆ. விஜயராணி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கிய உயராய்வு நிறுவனம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி - 605 014.

ஆய்வாளர் உறுதிமொழி

"சங்க காலக் கபிலர்" என்ற தலைப்பில் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானது எனவும், இதற்கு முன் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கும் இவ் ஆய்வேட்டினை அளிக்கவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

3/3/94
(ஆ. விஜயராணி)
ஆய்வாளர்.



(ம. மதியழகன்),
மேற்பார்வையாளர்,
விரிவுரையாளர்,
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கிய உயராய்வு நிறுவனம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி-605 014.

(அ. பாண்டுரங்கன்),
பேராசிரியர் & துறைத்தலைவர்,
சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி &
இலக்கிய உயராய்வு நிறுவனம்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி - 605 014.

ந ன் றி யு ரை

புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வு செய்வதற்கு வாய்ப்பளித்த பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆ. ஞானம் அவர்களுக்கும், பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினர்க்கும், மற்றும் உதவித்தொகை அளித்த புதுவை மாநில அரசுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுத் தலைப்புக் குறித்து, என்னைக் காணும் போதெல்லாம் கலந்துரையாடித் தக்கக் கருத்துக்களை வழங்கியதோடு அரிய நூல்களும் தந்து உதவிய தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. பாண்டுரங்கன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாய்வுப் பணியில் என்னைப் பயிற்றுவித்து ஆய்வுத் தலைப்புக்குரிய நெறிமுறைகளை வகுத்துக் கூறியவர்; ஆய்வில் ஏற்படும் ஐயப்பாடுகளைப் போக்கி ஊக்கம் தந்து நெறிப்படுத்தியவர்; ஆய்வு நிகழ்த்திய காலத்தில் பல்வேறு நடைமுறைகளுக்கும் இடையில் அவ்வப்போது தக்கக்கருத்துக்களை வழங்கியவர்; ஆய்வேட்டின் உருவாக்கத்திற்குப் பல்வகையாலும் துணை நின்றதோடு, ஆய்வுக்குரிய அரிய நூல்களையும் கொடுத்து உதவியவர் எனது மேற்பார்வையாளர் விரிவுரையாளர் ம. மதியழகன் அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி கூறக் கடமையுடையேன்.

என் ஆய்வின் நடையியல் பகுதியைத் திருத்தம் செய்து கொடுத்த பேராசிரியர் திரு. தா. சேதுபாண்டியன் (மதுரைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை) அவர்களுக்கும், இணைப்பேராசிரியர் திரு.எல்.ஆரோக்கியநாதன் (புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை) அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமையுடையேன்.

என் ஆய்வுத் தலைப்புக் குறித்துக் கலந்துரையாடி ஆய்வு மேலும் செம்மையுற தக்கக் கருத்துக்களை வழங்கிய புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் பேராசிரியர் க.ப. அறவாணன், இணைப்பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர்க்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நான் ஆய்வு நிகழ்த்திய காலத்து ஆய்வு தொடர்பாகக் கலந்துரையாடிய போது தக்கக்கருத்துக்களை வழங்கியவர்கள் பேராசிரியர்கள் திரு.செ.வை. சண்முகம் (அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை), பேராசிரியர் திரு.தி.முருகரத்தினம் (மதுரைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை), பேராசிரியர் திரு.இரா.கோதண்டராமன் (புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம்), பேராசிரியர் திரு.அ.அ.மணவாளன் (சென்னைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை), புதுவை முதுநிலை பட்ட மேற்படிப்பு மையப் பேராசிரியர்கள் திருமதி.சாரதா கலாவதி, திரு.அ.அப்பாசாமி, திரு.க. பஞ்சாங்கம், திரு.சு.சுப்பிரமணியன் முதலானோர்க்கும் என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்கு முழுமையும் உதவிய புதுவை பிரெஞ்சு இந்திய பண்பாட்டு நிறுவனத்திற்கும் (French Institute), மற்றும் நான் கேட்கும் போதெல்லாம் நூல்கள் எடுத்து தந்த திரு.சண்முகசுந்தரம், திரு. நரேந்திரன் ஆகியோர்க்கும்

எம் நன்றி உரியது. மேலும், என் ஆய்வுக்கு உதவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை & மொழியியல் துறை நூலகத்தினர்க்கும், மதுரைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை & மொழியியல் துறை நூலகத்தினர்க்கும் புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவன நூலகத்தினர்க்கும், புதுவைத் தாகூர் கலைக் கல்லூரி பொது நூலகத்தினர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுத் தொடர்பாக களப்பணி மேற்கொண்டு திருக்கோவலூர் சென்றபோது கபிலர் தொடர்பான கருத்துக்களை வழங்கியதோடு அரிய நூல்களும் கொடுத்து உதவியவர்கள் திரு. எத்திராசு, திரு. ஆர். மனோகர், திரு. பிரகாசம், திரு. தேவ. ஆசைத்தம்பி, திரு. கனகராஜய்யர் அவர்களுக்கும், திருக்கோவலூர் வீரட்டானேஸ்வரர் கோவில் ஊழியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் படிப்பில் மிகுந்த நாட்டம் கொண்டவர்; நான் மேன்மேலும் படிக்க ஊக்கம் தந்தவர் மறைந்த கம்பவாணர் அ. அருணகிரி அவர்களை இங்கு நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

என் ஆய்விற்கு கிடைத்தற்கரிய நூல்களை கொடுத்து உதவிய சகோதரர்கள் திரு. அ. சிவபெருமான், திரு. மு. மதியழகன், திரு. தி. சிவக்குமார், திரு. பிரகாச. திருமாவளவன், செல்வி. அ. மாதவி, திரு. கிருட்ணமூர்த்தி - நிர்மலா ஆகியோர்க்கும், என் ஆய்விற்கு பல வகையிலும் முன்வந்து உதவிய சகோதரர்கள் திரு. ச. சுப்புரத்தினம், திரு. ஆ. அருள்தாசு,

திரு. அரங்க. மு. முருகையன், திரு. பா. செயராமன், திரு. மு. சந்திரன் ஆகியோருக்கும், மற்றும் தமிழியல்துறையில் ஆய்வு செய்யும் அன்பு சகோதர, [illegible] என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது ஆய்வுப் பணியினைத் தன் பணிகளுக்கு இடையிலே அழகுற [illegible] சகோதரர் ரு. கலைச்செல்வன் அவர்களுக்கும் என் நன்றியை - [illegible]ரியதாக்குகிறேன்.

நான் கேட்டபோதெல்லாம் நூல்கள் எடுத்துத் தந்ததோடு, ஆய்வேட்டினைக் குறுகிய காலத்தில் தட்டச்சுச் செய்து, நல்லதொரு ஆய்வேடாகச் செம்மைப்படுத்தித் தந்த சகோதரர் திரு. மா. [illegible]ராமசாமி (தமிழியல் துறை) அவர்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

என் ஆரம்பகால படிப்பில் அரும்பெருந்த ஊக்கம் கொடுத்து என்னை படிக்க ஊக்கப்படுத்தியதோடு, என்னின் எல்லா நலன்களிலும் பங்கெடுத்துக் கொண்டு பல உதவிகளை முன் வந்து செய்து கொடுத்தவர் திரு. [illegible] அவர்களுக்கு என்றும் நன்றி கடமையுடையேன்.

மேலும், என் ஆய்வின்போது அதனைத் தொடர்பான செய்திகளைக் கேட்ட-போதெல்லாம் புன்முகத்துடன் முன்வந்து உதவிய சகோதரர்கள் திரு. வெற்றிவேல், திரு. முருகப்பன், திரு. பாண்டியன் - சிரகலட்சுமி, திரு. ஆ. முருகன் ஆகியோர்க்கும் என் நன்றி உரியது, மற்றும் தமிழியல்துறை அலுவலக சகோதரர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. விஜயராணி
(ஆய்வாளர்.)

[illegible]

அகம்.	....	அகநானூறு
உ.ஆ.	....	உரையாசிரியர்
ஐங்.	....	ஐங்குறுநூறு
கலி.	....	கலித்தொகை
குறு.	....	குறுந்தொகை
சிலப்.	....	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	....	சிறுபாணாற்றுப்படை
[illegible]	....	[illegible]
தொல். [illegible]	....	தொல்காப்பியம் [illegible]
நற்.	....	நற்றிணை
ப.	....	பக்கம்
பக்.	....	பக்கங்கள்
பரி.	....	பரிபாடல்
பதிற்.	....	பதிற்றுப்பத்து
பதி. ஆ.	....	பதிப்பு ஆசிரியர்
புறம்.	....	புறநானூறு
பெரும்பாண்.	....	பெரும்பாணாற்றுப்படை
[illegible]	....	[illegible]
P.	....	**Page**
PP.	....	**Pages.**
Ibid.	....	[illegible]
Vol.	......	**Volume**

* * *

பொருளடக்கம்

* * *

இயல் : [illegible]

முன்னுரை

1. முன்னுரை

1.1. முன்னுரை

1.2. தலைப்புத் தேர்வு

1.3. ஆய்வுப் பொருள்

1.4. ஆய்வு நோக்கம்

1.5. இதுவரை வந்துள்ள ஆய்வுகள்

1.6. ஆய்வு வரையறை

1.7. கருதுகோள்

1.8. ஆய்வு மூலங்கள்

1.9. ஆய்வு அணுகுமுறை

1.10. இயல் வரையறை

1.11. முடிவுரை.

* * *

1. முன்னுரை

1.1. முன்னுரை:-

தமிழ் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் பல இன்னமும் இலக்கியத் திறனாய்வாளர்களிடையே தீர்க்கப்படாதனவாகவும் கருத்து வேறுபாடுகள் உடையனவாகவும் உள்ளன. அவற்றுள் சங்க இலக்கியம் பற்றிய காலமும், புலவர்கள் பற்றிய செய்திகளும் அதிக கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

சங்கப்பாடல்களில் அதிகம் பாடியவரும், குறிப்பிடத்தக்க புகழ் பெற்றவருமான கபிலர் குறித்துப் பல்வேறு செய்திகள் திறனாய்வாளர்களால் கூறப்பட்டுள்ளன. அவை பற்றி ஆராய்ந்து, கபிலரின் காலத்தையும் அவர் பாடிய பாடல்கள் பற்றியும் விளக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1.2. தலைப்புத் தேர்வு:-

தமிழ் இலக்கிய வரலாற்றினை மூன்று காலக்கட்டங்களாகத் திறனாய்வாளர்கள் பிரித்துக் கூறுகின்றனர். அவை சங்ககாலம், இடைக்காலம், தற்காலம் என்பன-வாகும். இம்மூன்றுகாலப் பிரிவுகள் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இருப்பினும், இங்குச் சங்ககாலம் மட்டும் முதன்மையானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. சங்ககாலம் பற்றி முதலில் தெரிவிக்கும் நூல் இறையனார் அகப்பொருள் உரையாகும். இவ்வுரை மூலம் மதுரையில் முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்கள் இருந்தன

என்பது அறியப்படுகின்றது. இவற்றுள் முதல் இரண்டு சங்கங்கள் கடல் கோளினால் அழிவுற்றன என்றும், மூன்றாவது சங்கமான கடைச்சங்கம் மட்டும் தற்போதுள்ள தென் மதுரையில் நிலைத்திருந்தது என்றும் அந்நூல் தெரிவிக்கின்றது.

மேலும், மதுரையில் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்கள் என்ற கருத்து இலக்கியங்கள் வழியும், செப்பேட்டு வழியும், உணரப்படுகின்றது. இக்கடைச் சங்கத்தில் எழுந்த நூல்களே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும்.

இத்தொகைநூற் பாடல்கள் பற்றியும், அவற்றைப் பாடிய புலவர்கள் பற்றியும் அறிஞர்களால் தெளிவான வரலாறு இதுவரை கூறப்படவில்லை. இலக்கிய அறிஞர்கள், இப்புலவர்களைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் விளக்கியிருந்தாலும் அவர்களைப் பற்றி ஒரு முடிவான கருத்தை முன் வைக்கவில்லை என்பது அவ்விலக்கியங்கள் வழி அறியப்படுகின்றது.

சங்கப்புலவர்களில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றவர்கள் கபிலர், பரணர், நக்கீரர், அம்மூவனார், ஔவையார் போன்ற ஒரு சிலரேயாவர். இவர்களில் முதன்மையானவராகக் கொள்ளத்தக்கவர் கபிலராவர். இவர் சங்க இலக்கியத்தில் மட்டும் 235 பாடல்களைப் பாடிச்சங்கப் புலவர்களிலே அதிகப் பாடல்கள் பாடியவர் என்ற பட்டியலில் முதன்மை பெறுகின்றார். இஃதன்றி, இவரைப் பல புலவர்கள் புகழ்ந்தும், பாராட்டியும் பாடல்கள் இயற்றியுள்ளனர்.

இதேபோன்று கபிலரும் பிற புலவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

இத்தகைய சிறப்புக்கள் நிரம்பப் பெற்றவரான கபிலர் பற்றி ஆராயும்போது அவரின் பெயர் பற்றியும், அவர் பாடிய பாடல்கள் பற்றியும், அவரின் பிறப்பு பற்றியும், அவர் எந்தக் காலத்தைச் சார்ந்தவர் என்பது பற்றியும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இலக்கிய வழியும், இலக்கிய ஆய்வுகள் வழியும் காணக்கிடக்கின்றன.

மேலும், கபிலரின் பெயரைக் காணும்போது சங்ககாலந் தொடங்கித் தொடர்ந்து பல காலக்கட்டங்களில் பல்வேறு நிலைகளிற் கபிலர் என்ற பெயர் எடுத்தாளப்பட்டுள்ளது. கபிலரின் பாடல்கள் பற்றி ஆராயும்போது ஒவ்வொரு நூலுக்கும் பாடல்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவரின் பிறப்பு பற்றிக் கூறும்போது திறனாய்வாளர்கள் பலரும் பல்வேறு வகையான கதைகளைத் தம் விருப்பம்போலப் புனைந்து கூறுகின்றனர். இதனால் கபிலர் என்ற பெயரில் ஒருவர் இருந்தாரா ? பலர் இருந்தனரா ? என்ற ஐயம் பல திறனாய்வாளர்களால் முன் வைக்கப்பட்டுள்ளது.[1] ஆனால், இவ்வையம் இலக்கிய உலகில் இன்னும் தீர்வுகாணப்படாத ஒன்றாக இருந்து வருகிறது.

அஃதன்றி, கபிலர் பாடிய தொகைநூற்பாடல்களில் சிலவற்றைக் கபிலர் பாடியது அல்ல என்றொரு கருத்தையும் முன் வைக்கின்றனர்.[2] எனவே,

...4/-

இச்சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையிலும், கபிலர் பற்றிய வரலாற்றினை முழுமையாக அறிந்திடும் நோக்கத்திலும் "சங்ககாலக் கபிலர்" என்கிற தலைப்பு இங்கு ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டது.

1.3. ஆய்வுப் பொருள் :-

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் வரும் இலக்கியங்களில் கபிலர் என்ற பெயரில் நிறையப் பாடல்கள் காணப்படுகின்றன. அதில் சங்க காலத்தனவாகக் கொள்ளப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இடம்பெறும் கபிலரின் பாடல்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் அப்பாடல்கள் அனைத்தும் கபிலரால் பாடப்பெற்றவைதாமா என்பதை அவர்தம் பாடல்கள், பிற புலவர் - மன்னர்கள் வரலாறு கொண்டு ஆய்வதும், கபிலரைப் பற்றி இலக்கியவாதிகள் கூறும் செய்திகள் வழி கபிலரின் வரலாற்றைத் தெளிவுபடுத்துவதும் இங்கு ஆய்வுக்குரிய பொருளாகக் கொள்ளப்படுகின்றன.

1.4. ஆய்வு நோக்கம் :-

1. சங்கப்புலவர்களில் கபிலர் (காலம், பாடல், வரலாறு) பற்றிய சிக்கல் உருவாவதற்கு யாது காரணம் என்று காண்பதும்,
2. சங்ககாலக் கபிலர் எந்தக் காலத்தைச் சேர்ந்தவர் என்று காண முயல்வதும்,
3. கபிலர் பாடிய பாடல் எண்ணிக்கையில் உள்ள மாற்றங்களைக் கண்டறிவதும்,

...5/-

4. சங்கப்பாடல்களைப் பாடிய கபிலர் ஒருவரா , பலரா என்று ஆராய்வதும்,

5. சங்கப்பாடல்களில் இடம்பெறும் கபிலர், தொல்கபிலர் ஆகிய இருவரும் ஒருவரா என்று காண்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன.

1.5. இதுவரை வந்துள்ள ஆய்வுகள் :-

இந்த ஆய்வுத்தலைப்புக் குறித்து இதுவரை எந்த ஆய்வு நூலும் வெளிவரவில்லை. இருப்பினும், 'கபிலர்' என்ற பெயரில் ஒரு சில நூல்கள் வெளிவந்துள்ளன. அந்நூல்களில் கபிலர் பெயர், அவரின் பிறப்பு, அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை, அப்பாடல்கள் பற்றிய கருத்துக்கள், உவமை நயங்கள் என்பன மட்டுமே விளக்கப்படுகின்றன. மேலும், கபிலர் ஒருவரா , பலரா என்ற ஐயத்தை முன் வைக்கின்றனவே தவிர அச்சிக்கலை விளக்கும் வகையில் எவ்விளக்கமும் அளிக்கவில்லை.

1936-ஆம் ஆண்டு வே. வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய "கபிலர்" என்னும் நூலில் "கபிலரைக் குறித்து வழங்கும் கதைகள்" என்னும் தலைப்பில் கபிலர் பிறந்த ஊர், தாய் தந்தையர், பிறப்பு போன்றன கூறப்படுகின்றன. கபிலர் வரலாறு என்பதில் கபிலரும் அவர் பாடிய அரசர்களும் நிரல்படக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் கபிலர் காலம் கி.பி.1,2-ஆம் நூற்றாண்டு என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பின் கபிலர் பாடிய பாடல்களும், அப்பாடல்கள் வழி அறியப்படும் செய்திகளும், அவர் பாடல் பற்றிய செய்யுள் - சொல் ஆராய்ச்சியும் முறையே விளக்கப்படுகின்றன.[3]

1939-ஆம் ஆண்டு ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய "கபிலர்" என்னும் நூலில் தமிழ்ச்சங்க வரலாறும், கபிலர் வரலாறும் விளக்கப்படுகின்றன. பின், கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு, குறிஞ்சிக்கலி இவற்றின் பாடல் கருத்துக்கள் ஆராய்ச்சி நோக்கில் விளக்கப்படுகின்றன. இஃதன்றி, அவர் கபிலரின் காலத்தைக் கி.பி.50 முதல் 125 வரை இருக்கலாம் என்று கூறுகிறார். இவை மேலும் ஆய்தற்குரியவை. அடுத்து, கபிலர் பாடிய அகப்புறப்பாடல் பற்றிய செய்திகள் தொகுத்துத் தரப்படுகின்றன. இறுதியாகப் பிற்சேர்க்கையில் வேங்கடராஜுலு ரெட்டியாரின் கபிலர் நூல் பற்றிய ஆராய்ச்சியினைத் தொகுத்துக் கூறுகின்றார்.[4]

1956-ஆம் ஆண்டு கா. கோவிந்தன் எழுதிய "சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை" என்னும் நூலுள் கபிலர் என்ற உட்தலைப்பில் அவரின் பிறப்பு, குலம், சமயம், ஆகியவை விளக்கப்படுகின்றன. பின் இந்நூலுள் கபிலர் பாடிய அரசர்கள் ஒவ்வொருவரையும் ஒப்புமைப்படுத்திக் கூறப்படுகின்றனர். கபிலரின் பெருமைகள் அவரின் மறைவு, வாழ்க்கை நிலை, அவர் கையாண்ட உவமைகள் விளக்கப்பட்டுள்ளன. கபிலரின் காலம் (கடைச்சங்கக் காலம்) கி.பி. 2-ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகிறார். பின், கபிலர் காலப்புலவரும், கபிலர் பற்றிக் கூறப்படும் கதைகளும், கபிலர் இயற்றியனவாக உள்ள நூல்களும் தொகுத்துத் தரப்படுகின்றன.[5]

1959-ஆம் ஆண்டு ஆ. மாரிமுத்து எழுதிய "கபிலர் கவிநலம்" என்னும் நூலில் கபிலர் பாடிய பாடல்களின் சிறப்பான உவமை நயங்களே விளக்கப்படு- கின்றன. இதில் கபிலர் பற்றி வேறு வரலாற்றுச் செய்திகள் யாதும் ஆராயப்பட- வில்லை.[6]

1974-ஆம் ஆண்டு மு. சதாசிவம் எழுதிய "Studies in Stylistics" என்னும் ஆய்வேடு, கபிலரின் குறிஞ்சிக்கலிப் பாடல்களை மட்டும் எடுத்துக் கொண்டு அதனை மொழியியல் நோக்கில் விளக்குவதாக அமைகிறது. மேலும், கபிலரின் மற்ற அக, புறப் பாடல்களோடு சொற்களை ஒப்புமைப்படுத்தி மொழியியல் பார்வையில் ஆராயப்பட்டுள்ளது.[7]

1975-ஆம் ஆண்டு ஜெ. நீதிவாணன் எழுதிய " Language of Kapilar and Paranar" என்ற ஆய்வேடு, கபிலர் - பரணரின் பாடல்களை ஒப்பிட்டு மொழியியல் அமைப்பில் ஆராயும் முகமாக அமைகிறது.[8]

1975-ஆம் ஆண்டு எஸ். விஜயபாரதி எழுதிய "கபிலர் கவிநயம்" என்னும் நூலில், கபிலர் பாடல்கள் பற்றிய அமைப்பும், பாடல்களில்இடம்பெறும் கற்பனை உணர்ச்சி, வடிவம், கருத்து என்பனவும்மட்டுமே விளக்கப்படுகின்றன.[9]

1983-ஆம் ஆண்டு ச. மெய்யப்பன் எழுதிய "கபிலர்" என்னும் நூல், கபிலரைச் சங்ககாலக் கம்பர் எனவும், வாய்மொழிக் கபிலர் என்றும் குறிப்பிடுகிறது. பின் கபிலரைப் போற்றிய வள்ளல்கள் பற்றியும், கபிலர் பாடல்களின் கவிதை வளம்

பற்றியுமே விளக்குகிறது. இறுதியாக, சங்ககால இரட்டையர்கள் எனக் கபிலரையும் பரணரையும் குறிப்பிட்டு விளக்குவதாக அமைகிறது.[10]

1989-ஆம் ஆண்டு த. வாசுதேவன் எழுதிய, "கபிலர் கவிச்சுவை" என்னும் நூலில் முதல் தலைப்பில் கபிலரின் பாடல் சிறப்புக்களைப் பற்றிய செய்திகளே அதிகம் காணப்படுகின்றன. கபிலரின் வரலாறோ பிறவோ எதுவும் எடுத்தாளப்படவில்லை.[11]

1992-ஆம் ஆண்டு டி.எஸ். தியாகராசன் எழுதிய "நட்பின் இலக்கணம் கபிலர்" என்னும் நூலில் பதினாறு உட்தலைப்புகளில் கபிலரைப்பற்றி விளக்கம் காணப்படுகிறது. கபிலர் பற்றிப் பிறர் கூறியுள்ள வரலாறு, கற்பனைக் கதைகள் இவற்றின் அடிப்படையிலேயே அனைத்தும் எழுதப்பட்டுள்ளன.[12]

மேல் கூறப்பட்ட தனி நூல்களன்றி வேறுசில நூல்களும், கபிலரின் வரலாறு, பாடல்கள் பற்றிக் குறிப்பிடுவனவாக அமைகின்றன.[13]

இந்நூல்களும் ஆய்வுகளும் கபிலர் பாடிய பாடல்கள் பற்றியும், பாடல்களில் அமைந்துள்ள கருத்து, உவமை, உள்ளுறை, அணிநயங்கள் பற்றியும் விளக்குகின்றன. இவை அனைத்தும் கபிலர் பற்றி ஓரளவிற்குத் தெரிந்துக் கொள்வதற்குத் துணையாகக் கொள்ளப்படுகின்றன.

1.6. ஆய்வு வரையறை :-

கபிலர் என்ற பெயர் பல்வேறு காலங்களில் எழுந்த இலக்கியங்களில் இடம்

...9/-

பெற்றிருப்பினும், இங்குச் சங்க காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களாகக் கருதப்படுகின்ற. 9 எட்டுத்தொகை, பத்துப்பாட்டினுள் இடம்பெற்ற கபிலர் பாடிய பாடல்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கபிலர் பாடல் சிறப்பு பற்றியும், அவருடைய வரலாறு பற்றியும் பல்வேறு செய்திகள் இருப்பினும், கபிலரின் பாடல்களில் காணப்படும் வேறுபாடுகளைக் கண்டறிதல், கபிலர் காலப்புலவர்கள் மன்னர்களின் வரலாறு கொண்டு கபிலர் காலத்தைக் கணித்தல் ஆகியவை மட்டுமே ஆய்வின் வரையறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

1.7. கருதுகோள்:-

1. சங்கப்பாக்களில் கபிலரின் பாடல்கள் அதிகமாக இருப்பதாலும், அவர் பல அரசர்கள், புலவர்களைப் பாடியிருப்பதாலும், கபிலரின் வரலாறு பற்றிய செய்திகளில் பல கற்பனைச் செய்திகள் கலந்துள்ளன.

2. கபிலரின் தொடக்ககாலப் பாடல்களுக்கும் இறுதிக்காலப் பாடல்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1.8. ஆய்வு மூலங்கள்:-

கபிலர், தொல்கபிலர் இவர்களால் பாடப்பட்ட சங்க இலக்கியப் பாடல்கள் 242 மட்டும் முதன்மைச் சான்றுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கபிலர் பாடல்கள் பற்றித் திறனாய்வாளர்களால் எழுதப்பெற்ற நூல்கள்,

கபிலர் பற்றிய கருத்துக்கள் தொடர்பான கட்டுரைகள், இதழ்கள், மலர்கள், ஆய்வேடுகள், களஞ்சியங்கள் துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

இஃதன்றி, கபிலர் பற்றிக் கள ஆய்வில் பெறப்பட்ட கருத்துக்களும் இங்கு துணைமை ஆய்வு மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.

1.9. ஆய்வு அணுகுமுறை :-

இவ்வாய்வு மூன்று அணுகுமுறைகளில் அணுகப்படுகின்றது. அவை விளக்கவியல் அணுகுமுறை, வரலாற்றியல் அணுகுமுறை, நடையியல் அணுகுமுறை என்பன

1. 'தமிழ் இலக்கியங்களில் கபிலர்', 'சங்ககாலக் கபிலர்' என்னும் இரு இயல்களும் விளக்கவியல் ஆய்வு மூலம் அணுகப்படுகின்றன.

2. 'வரலாற்று நோக்கில் கபிலர்' என்ற இயல் வரலாற்றியல் முறையில் அணுகப்படுகின்றது.

3. 'நடையியல் நோக்கில் கபிலர்' என்ற இயல் நடையியல் ஆய்வு மூலம் கபிலரின் பாடல்கள் அணுகப்படுகின்றன.

1.10. இயல் வரையறை :-

இவ்வாய்வேடு முன்னுரை முதலாக முடிவுரை ஈறாக மொத்தம் ஆறு இயல்களாகப் பிரிக்கப்பட்டு அமைகின்றது.

1. முன்னுரை,
2. தமிழ் இலக்கியங்களில் கபிலர்,

3. சங்க காலக் கபிலர்,

4. வரலாற்று நோக்கில் கபிலர்

5. நடையியல் ஆய்வில் கபிலர்,

6. முடிவுரை.

1. "முன்னுரை" என்னும் முதல் இயலில் — தலைப்புத் தேர்வுக்கான காரணங்களும், இத்தலைப்பு குறித்து இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுக் குறிப்புக்களும், ஆய்வு நோக்கமும், ஆய்வு வரையறையும், ஆய்வு முறைகளும் குறிப்பிடப்பெறுகின்றன.

2. "தமிழ் இலக்கியங்களில் கபிலர்" என்னும் இரண்டாவது இயலில் தமிழ் இலக்கிய வரலாறு அறிமுகம் முதலில் இடம்பெறுகின்றது. பின், தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து இடம்பெறும் கபிலர் என்ற பெயர் பற்றியும் அவர் பாடல்கள் பற்றியும் காலவாரியாக நோக்கப்படுகின்றன.

3. "சங்ககாலக் கபிலர்" என்னும் மூன்றாவது இயலில் சங்ககாலம், சங்ககாலத்தின் ஆண்டு வரையறை, பல்லவர்கள் ஆட்சிமுறை, பின் அவர்களின் ஆட்சித் தொடக்கமும் முடிவும் என விளக்கப்படுகின்றன. பின்னர் சங்ககாலப் புலவர்கள் பற்றிய அறிமுகமும், கபிலர் பற்றிய அறிமுகமும் முதலில் குறிப்பிடுகின்றன. அடுத்து, கபிலர் பெயர், அவர் பாடிய பாடல்கள், பாடல்களில் உள்ள மாற்றங்கள் - சிக்கல்கள் என்கிற நிலைகளில் சில விளக்கப்படுகின்றன.

4. "வரலாற்று நோக்கில் கபிலர்" என்னும் நான்காவது இயலில் வரலாறு பற்றிய விளக்கம், வரலாற்றுக்கான பின்னணி என்பதில் சங்ககாலத்தில் ஆட்சித்தொடக்கமும் முடிவும் அங்கங்கே கூறப்படுகின்றன. பின்னர், வரலாற்று நோக்கில் கபிலர் பாடல்கள் என்னும் தலைப்பின்கீழ் அரசர்கள் - புலவர்கள் உறவுநிலையில் கபிலரின் அக, புறப் பாடல்களை ஆராய்தல், அடுத்து, கபிலரைப் பாடியப் புலவர்கள், கபிலரால் பாடப்பட்ட புலவர்கள், கபிலர் - பிற புலவர்கள் வழி அரசர்களின் கால நிலை அறிந்து அதன்வழி கபிலரின் காலமும் பற்றிச் சில விளக்கங்கள் கூறப்படுகின்றன.

5. "நடையியல் நோக்கில் கபிலர்" என்னும் ஐந்தாவது இயலில் நடையியல் ஆய்வு அறிமுகம் பற்றியும், நடை என்றால் என்ன என்பது பற்றியும், நடையியல் வகைப்பாடுகள் பற்றியும் விளக்கப்படுகின்றன. நடையியல் வகைப்பாடுகளான ஒலி நிலை, சொல் நிலை, தொடர்நிலை, என்ற மூன்று கூறுபாடுகளில் கபிலரின் சங்க இலக்கியப் பாடல்கள் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

6. இறுதியியலான "முடிவுரையில்" ஆய்வுத் தலைப்பு குறித்து ஆராய்ந்து பெற்ற கருத்துக்கள் தொகுத்துத் தரப்படுகின்றன. பின்னர், இவ்வாய்வுத் தலைப்பின்கீழ் மேலும் ஆராய்தற்குரிய களங்கள் சுட்டப்பெறுகின்றன.

இஃதன்றி, ஆய்வேட்டின் இறுதியில் பின்னிணைப்புப் பகுதியும், துணைநூற்பட்டியலும் தரப்படுகின்றன.

1.11. முடிவுரை:-

இவ்வாறாக, இவ்வியலில் தலைப்புத் தேர்வுக்கான காரணங்களும், இத்தலைப்புக் குறித்து இதுவரை வந்துள்ள ஆய்வு நூல்கள் பற்றியும் விளக்கப்பட்டன. பின், ஆய்வின் நோக்கம், அதன் காலஎல்லை, ஆய்வு வரையறை, ஆய்வின் அணுகுமுறைகள் எனப் பத்து தலைப்புகளில் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

* * *

சான்றெண் விளக்கம்:

1. அ. இராசமாணிக்கனார், மா., 'தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி' ப.67.

ஆ. கோவிந்தன், கா., 'தமிழ் வரலாறு' ப.286.

இ. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.7.

ஈ. பாலசுப்பிரமணியன், கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்', ப.27.

2. அ. கந்தையாபிள்ளை, ந.சி., 'கலித்தொகை வசனம்', ப.5.

ஆ. புருஷோத்தம், வி.பி., 'சங்ககால மன்னர் காலநிலை' (தொகுதி-1) ப.17.

இ. வையாபுரிப்பிள்ளை, எஸ்., 'தமிழ்ச்சுடர் மணிகள்' ப.55.

2. Jesudasan, C., 'Peaks of Sangam Poetry' P.4.

3. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1936.

4. வேங்கடசாமி நாட்டார், ந.மு., 'கபிலர்', கரந்தைத் தமிழ்ச் சங்கம், திருச்சி, மூன்றாம் பதிப்பு-1939.

5. கோவிந்தன், கா., 'சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை' (பகுதி-க), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1956.

6. மாரிமுத்து, ஆ., 'கபிலர் கவிநலம்', மலர் நிலையம், சென்னை, 1959.

7. Sadasivan, N., 'Studies in Stylistics', Annamalai University, Annamalai Nagar, (unpublished thesis) 1974.

8. eeti ivanan, c., 'I n uage of Kapilar and Paranar', Madurai Kamaraj University, (unpublished thesis) Madurai 1975.

9. விஜயபாரதி, எஸ்., 'கபிலர் கவிநயம்', முத்துக்குமரன் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, 1980.

10. மெய்யப்பன், ச., 'கபிலர்', மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், நான்காம் பதிப்பு, 1983.

11. வாசுதேவன், த., 'கபிலர் கவிச்சுவை', 'முத்துப்-பதிப்பகம், விழுப்புரம், முதற்பதிப்பு-1989.

12. பயோகராசன், டி.எஸ்., 'நட்பின் இலக்கியம் கபிலர்', கலைவாணர் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு-1992.

13. அ. .amachandra Ditshit ', V.R., 'Studies in Tamil Literature and History' Pp.53-59.

௩. சரளா ராசகோபால், ம., 'சங்க இலக்கியத்தில் தோழி'

பக். 325-327.

௪. முத்துராசன், கு., 'சங்க காலம்',

பக். 537-439.

௫. மாணிக்கம், வ.சுப., 'தமிழ்க்காதல்',

பக். 404-415.

உ. கனக ராஜையர், நா., 'தமிழ்ப்புலவர் வரலாறு',

பக். 35-37.

* * *

இயல் : ஒன்று

தமிழ் இலக்கியங்களில் கபிலர்

2. தமிழ் இலக்கியங்களில் கபிலர்

2.4.1. பரிபாடல்

2.4.2. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

2.4.3. பாகவத புராணம்

2.4.4. தொல்காப்பிய உரையாசிரியர்கள் வழி

2.4.5. வீரசோழியம்

2.4.6. தத்துவ நூல்கள் வழி

2.4.7. அபிதான சிந்தாமணி

2.5. கபிலர் - பெயர் விளக்கம்

2.6. தொல்கபிலர் - பெயர் விளக்கம்

2.7. கபிலர் - பிறப்பு பற்றிய செய்திகள்

2.8. முடிவுரை.

* * *

2. தமிழ் இலக்கியங்களில் கபிலர்

2.1. முன்னுரை:-

தமிழ் இலக்கிய வரலாற்றின் காலக்கட்டங்கள் குறித்துப் பல்வேறு பிரிவுகள் கூறப்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்று அடிப்படையில் சங்ககாலம், சங்க மருவிய காலம், பக்தி இலக்கிய காலம், சிற்றிலக்கிய காலம், புத்திலக்கிய காலம் எனவும் அரசர்களின் ஆட்சி முறைகளின் அடிப்படையில் சங்ககாலம், சங்கம் மருவியகாலம், (களப்பிரர் காலம்) பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் எனவும் வகைப்படுத்துகின்றனர். இருப்பினும், இங்கு இவற்றை உள்ளடக்கிச் சங்ககாலம், இடைக்காலம், பிற்காலம் என்ற மூன்று காலப் பிரிவுகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இக்காலக்கட்டங்கள் குறித்துக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இக்காலக்கட்ட இலக்கியங்களில் இடம்பெறும் சங்கப்புலவர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளிலும் தெளிவின்மை காணப்படுகின்றது. இதில் கபிலர் குறிப்பிடத்தக்கவராவார்.

கபிலரைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் வழி அறியும்போது, பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன. இஃதன்றிக் கபிலர் என்ற பெயர் சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரை வந்துள்ள தனிப்பாடல் தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளது. இந்நிலை வேறு சில சங்கப்புலவர்களுக்கும் இருந்து வருகின்றது என்பதும் சுட்டிக்காட்டத் தக்கது. ஆனால், இச்சிக்கல்கள் தமிழ் இலக்கிய

வரலாற்றில் தீர்வுகாணப்படாமலேயே உள்ளன. இங்குக் கபிலர் குறித்த சிக்கல்களைத் தீர்வுகாணும் வகையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதில் தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் கபிலர் என்ற பெயர் குறித்து இவ்வியலில் ஆராயப்படுகிறது.

2.2. தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால கட்டங்கள் :-

2.2.1. சங்ககாலம் :-

முதல் கால கட்டமாகச் சங்ககாலம் கொள்ளப்படுகிறது. இச்சங்ககாலம் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களின் அடிப்படையில் பிரித்தறியப்படுகிறது. இவற்றில் முதல், இடை என்ற இரு சங்கங்களில் கிடைத்த நூல்கள் கடல்கோளினால் அழிவுற்றன என்றும், கடைச்சங்கத்தில் கிடைத்த நூல்களே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் என்றும் கூறப்படுகின்றன.

இச்சங்கங்களுக்கு அடுத்து வரும் காலமாக, இடைக்காலத்திற்கு முற்பட்ட காலமாகச் சங்க மருவிய காலம் என்ற ஒன்று குறிக்கப்படுகிறது. இக்காலக்கட்ட நூல்களாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரு காப்பியங்களும் குறிக்கப்படுகின்றன.

2.2.2. இடைக்காலம் :-

இடைக்கால இலக்கிய வகைகளாகச் சமய அடிப்படையில் எழுதப்பெற்ற பன்னிரு திருமுறைகளும், நாலாயிர திவ்விய பிரபந்தமும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இக்காலக் கட்டத்தைப் பக்தி இலக்கிய காலமாகவும் கூறுவர். ...

இதற்கு அடுத்து வரும் இலக்கியங்களாகக்காப்பியங்கள் இடம்பெறுகின்றன. இக்காப்பியங்களுக்கு அடுத்து தூது, உலா, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, பரணி போன்ற சிற்றிலக்கிய வகைகளும், பின் புராண இலக்கியங்களும் இடம்-பெறுகின்றன.

2.2.3. பிற்காலம்:-

பிற்கால இலக்கிய வகைகளில் தனிப்பாடல் தொகுப்புக்கள், புனைகதைகள் (நாவல், சிறுகதை, நாடகம்), புதுக்கவிதைகள் போன்றன சேர்க்கப்படுகின்றன.

இவ்வாறு மேற்கூறிய மூன்று காலக்கட்டங்களில் தமிழ் இலக்கிய வரலாறு கூறப்படுகிறது. இம்மூன்று காலக் கட்டங்களிலும் கபிலரின் பெயர் இடம் பெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

2.3. தமிழ் இலக்கியங்களில் கபிலர்:-

தமிழ் இலக்கியங்களில் ஒரு புலவரின் பெயரே தொடர்ந்து காலந்தோறும் இலக்கியங்களில் இடம்பெறுவதால் சங்கச் சான்றோர்கள் பற்றிய வரலாறு தெளிவற்ற நிலையிலேயே இருந்து வருகிறது. இந்நிலை கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடனார், பொய்கையார், ஔவையார், நல்லந்துவனார் போன்ற ஒரு சிலர்க்கு மட்டும் இருந்து வருகின்றது. அவர்களில் கபிலர் என்ற பெயர் கபிலர், தொல்கபிலர், கபிலதேவர், கபிலதேவநாயனார், கபிலமுனி எனப் பல பெயர்களில் பல காலக்கட்டங்களில் அறியப்படுகின்றது.

2.3.1. சங்ககாலக் கபிலர் :-

கடைச்சங்க நூல்களாகக் கருதப்படுகின்ற எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்ற இரு தொகை நூல்களிலும் கபிலர், தொல்கபிலர் என்ற இரு பெயர்கள் காணப்படுகின்றன.

2.3.1.1. கபிலர் :-

எட்டுத்தொகையில் பரிபாடல் தவிர மற்ற ஏழு தொகைநூல்களிலும் கபிலர் என்ற பெயரில் பலபாடல்கள் இடம்பெறுகின்றன. அவை வருமாறு:

அகநானூறு	-	18	
ஐங்குறுநூறு	-	100	
கலித்தொகை	-	29	
குறுந்தொகை	-	29	
நற்றிணை	-	20	
பதிற்றுப்பத்து	-	10	(ஏழாம் பத்து)
புறநானூறு	-	28	
		234	

அடுத்து, பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு, கபிலரின் பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரு தொகுப்பிலும் இடம்பெறுவது அறியத்தக்கது.

2.3.1.2. தொல்கபிலர்:-

சங்க இலக்கியத் தொகுப்பில் கபிலர் பெயர் மட்டுமின்றி, தொல்கபிலர் என்ற பெயரும் காணப்படுகின்றது. தொல்கபிலர் என்ற பெயரில் எட்டுத்தொகை நூல்களில் மொத்தம் 7 பாடல்கள் காணக்கிடக்கின்றன. அவை வருமாறு:

அகநானூறு	-	2
குறுந்தொகை	-	1
நற்றிணை	-	4
		7

இப்பாடல் எண்ணிக்கையில் சிலர் வேறுபடுகின்றனர். அதில் அபிதானசிந்தாமணி, வேங்கடராமனின் நற்றிணைப் பதிப்பு, பொ.வே. சோமசுந்தரனாரின் அகநானூற்றுப் பதிப்பு ஆகியவற்றில் தொல்கபிலர் பாடியது மொத்தம் 6 பாடல்கள் என்ற குறிப்பும், பிற சங்க இலக்கியப் பதிப்புக்களில் தொல்கபிலர் பாடியது மொத்தம் 7 பாடல்கள் என்ற குறிப்பும் காணக்கிடக்கின்றன. இவ்வேழுள் அகநானூற்றில் இடம்பெறும் 2 பாடல்களின் எண்ணிக்கையே இங்குச் சிக்கலுக்குரியது.

அகநானூற்றில் இருபாடல்கள் தொல்கபிலரது என்று சிலரும்[1], ஒரு பாடல் என்று சிலரும்[2] கருத்துத் தெரிவிக்கின்றனர். பொ.வே. சோமசுந்தரனாரின் அகநானூற்றுப் பதிப்பில் மட்டும் தொல்கபிலர் பாடல்கள் தெளிவில்லாது குறிக்கப்பட்டுள்ளன. மற்ற அகநானூற்றுப் பதிப்புக்களில் தொல்கபிலர் பாடல்கள் இரண்டு என்றே குறிக்கப்படுகின்றன.

பொ.வே. சோமசுந்தரனார் அகநானூற்றுப்பதிப்பில் பாடல் எண் 12-ஐக் குறிக்கும்போது கபிலர் என்றும், அடைப்புக் குறிக்குள் 'தொல்கபிலர் என்றும் பாடம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.[3] இக்கருத்து தொல்கபிலர் பாடல்கள் பற்றிய தெளிவின்மையைக் காட்டுகிறது. எனவே, தொல்கபிலர், கபிலர் என்ற இருவரும் ஒருவரா, இருவரா என்பதைக் கால அடிப்படையில் இவ்விருவரின் பாடல்களையும் ஒப்பிட்டுப் பின் ('வரலாற்று நோக்கில் கபிலர் [redacted]', 'நடையியல் ஆய்வில் கபிலர் [redacted]') இயல்களில் ஆராயப்படுகிறது.

2.3.2. சங்கமருவிய காலக் கபிலர் :-

சங்ககாலத்திற்கு அடுத்த காலக்கட்டமாகக் கூறப்படுவது சங்க மருவிய காலமாகும். இக்காலத்தில் எழுந்த நூல்களாகக் கொள்ளத்தக்கவை இரட்டைக்-காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் போன்றவையாகும். இந்நூல்கள் அனைத்தும் அறம் நோக்கி பாடப்பட்டவையாகும். மேலும், களப்பிரர், பல்லவர் ஆகியோர் தமிழகத்தில் நுழைந்ததின் விளைவும், சமணர் பௌத்தர்களின் சமயப் பூசலும் இந்நூல்கள் தோன்றப் பின்னணியாய் அமைந்தன எனலாம்.

இவ்விலக்கியங்கள் பற்றியும் இலக்கியத் திறனாய்வாளர்களிடையே பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நூல்களைப் பிரித்துக் கூறுகையில் சிலவற்றைச் சங்ககால நூல்கள் என்றும்,[4] சிலவற்றைச் சங்க மருவிய காலத்து நூல்கள் என்றும்,[5] கி.பி.6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.8-ஆம் நூற்றாண்டு

வரையான காலத்தில் பாடப்பெற்றன என்றும்[6] இலக்கியவாதிகள் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இன்னா நாற்பதைப் பாடியவர் கபிலர் என்றும், கபில தேவர் என்றும் குறிக்கப்படுகின்றனர். இந்நூல் கடவுள் வாழ்த்துடன் மொத்தம் 41 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் கபிலர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், "ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் இந்நூல் ஆசிரியர் பெயர் "கபிலதேவர்" என்றே கூறப்படுகிறது.[7]

'இன்னா நாற்பது' சங்ககாலக் கபிலரால் இயற்றப்பட்டது என்பது பெரும்பாலோர் கொள்கை. ஆனால் கிடைக்கின்ற நூல்கள் வழி அறிகின்ற போது சிலநூல்களில் கபிலர் என்றும், சில நூல்களில் கபிலதேவர் என்றும் கூறப்பட்டிருப்பது கபிலரின் வரலாறு பற்றிய சிக்கலுக்கு இடம் அளிக்கின்றது. 'தமிழர் எண்ணங்கள்' என்ற நூலில் இன்னாநாற்பது பாடல் வரிகளைச் சுட்டிச் செல்லும்போது ஒருசில வரிகளுக்குக் கபிலர் என்றும், ஒரு சில வரிகளுக்குக் கபிலதேவர் என்றும் குறிப்பிடப்படுவது அறியப்படுகிறது.[8]

மேலும், சங்கச் செய்யுட்களின் பாடல் கருத்துக்களும் இன்னா நாற்பதின் பாடல்கருத்துக்களும் அடிப்படையில் முரண்பட்டுள்ளன. அதில் புறநானூற்றில் இரு பாடல்களும் (புறம்:113, 119), பதிற்றுப்பத்து பாடல்களில் (ஏழாம் பத்து) ஒன்றும் இன்னா நாற்பது பாடல் கருத்துக்களோடு வேறுபட்டுள்ளது தெரியவருகிறது.

...25/-

பாரியின் நண்பராகிய கபிலர் மதுவும் மாமிசமும் உண்பவர் என்பதை,

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் - - - - - - - - - - -
- - - - - - - - - -கிழவரைப் படர்ந்தே"
(புறம்: 113)[9]

எனவரும் புறநானூற்றுப் பாடல்வழி அறிய முடிகிறது. இப்பாடல் பாரிமகளிரைப் பார்ப்பாரிப்படுக்கக் கொண்டுபோகப் பறம்பு விடுத்தக் கபிலர் பாடுவதாக அமைகிறது. மது இருந்த சாடியை வாய் திறப்பவும் ஆட்டுக்கடாயை வீழ்ப்பவும் அடப்பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுமுடைய சோற்றையும் விரும்பிய பரிசே தரும் மிக்க செல்வம் முதிர்ந்த ஊரோடு முன்பு நட்பு செய்தாய் என்று கூறுவதாக இப்பாடல் பொருள் அமைகிறது. எனவே, கபிலர் பாரியிடம் மதுவையும், ஊன் சோற்றையும் பரிசாகவே பெற்றுள்ளார் என்பது பெறப்படுகிறது.

"கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து . . . .
. . . . வள்ளியோ னாடே" (புறம்: 119)[10]

எனவரும் புறநானூற்றுப் பாடல் பாரியின் நாடு முன்பு செம்புற்றீயல்களை

ஓனிய மோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியையுடைத்தாய் இருந்தது. அது இனிமேல்கிடைக்குமா ? என்று பாரி இறந்த பின் கபிலர் பாடுவதாக இப்பாடல் கருத்து அமைகிறது. எனவே, கபிலர் ஈயல் என்ற உயிரினப் பூச்சியினை உணவாக உண்டுள்ளார் என்பது அறியப்படுகிறது.

இதேபோன்று பதிற்றுப்பத்து (ஏழாம்பத்து)ப்பாடலில் இறைச்சியையும், கள்ளையும் கபிலர் புகழ்ந்து பாடுகிறார்.[11] இவ்வாறு கபிலரின் புறநானூற்றுப் பாடலும், பதிற்றுப்பத்துப்பாடலும் கள் உண்ணுதலையும், இறைச்சி உண்ணுதலையும் புகழ்ந்தும் பாடுவதாக அமைகின்றன.

ஆனால், இன்னா நாற்பது பாடல் வரிகள் ஊன் உண்ணுவதையும், கள் அருந்துவதையும் இன்னா எனக் கடிந்து கூறுவனவாக அமைகின்றது[12] என்பது குறிப்பிடத்தக்கது. இக்கருத்துக்களினால் இன்னா நாற்பது பாடிய கபிலர் வேறு, சங்கப் பாடல்கள் பாடிய கபிலர் வேறு என்று தெளியலாம்.

2.3.3. இடைக்காலக் கபிலர் :-

இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களைப் பக்தி இலக்கியங்களாகக் கொள்கின்றனர். அதாவது சைவர்களும் வைணவர்களும் மேலோங்கிய காலக்கட்டமாகப் பக்திக்கால இலக்கியம் விளக்கப்படுகிறது. இக்காலக்கட்டத்தில் எழுந்த நூல்கள் - தாம் பன்னிரு திருமுறைகளும், நாலாயிர திவ்விய பிரபந்தங்களும். இவற்றில் 11-ஆம் திருமுறையில் மூன்று பிரபந்தங்கள் இயற்றிய ஆசிரியர் பெயர் கபிலதேவ -

நாயனார் என்று குறிப்பிடப்படுகிறது.[13] அவை திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்பனவாகும். இதனால் கபிலர் பாடிய சங்கப்பாடல்களோடு கபிலதேவநாயனார் பாடிய பாடல்களையும் சேர்த்துக் கூறப்படுவது பலநூல்களின் வழி காணக்கிடக்கின்றன.

கபிலர் பெயர் மட்டுமின்றி, 11-ஆம் திருமுறையில் நக்கீரர், பரணர், கல்லாடனார், பொய்கையார் ஆகிய சங்கப் புலவர்களின் பெயர்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கபிலதேவ நாயனார் என்ற பெயரில் 'கபில' என்ற முன்னொட்டுப் பெயர் இடம்பெறுவதால் இலக்கிய அறிஞர்கள் சங்ககாலக் கபிலர் பாடல்களோடு இவரது பாடல்களையும் சேர்த்துக் கூறிவிடுகின்றனர். இதனால் கபிலர் என்ற பெயரில் சிக்கல் எழுகிறது. இருப்பினும் பக்தி இலக்கியப் பாடல்கள் அனைத்தும் காலம் நோக்கி அறிகையில் சங்ககாலத்திற்கு மிகவும் பிற்பட்டதாகின்றன. எனவே, 11-ஆம் திருமுறையில் உள்ள பாடல்களைப் பாடிய கபிலதேவநாயனார் சங்ககாலக் கபிலரின் வேறானவர் என்பதும், பிற்காலப் புலவர்கள் தங்களின் தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டிச் சங்கப் புலவர்களின் பெயர்களைத் தங்கள் பெயர்களோடு இணைத்துக் கொண்டனர் என்பதும் பெறப்படுகிறது.

இவ்வாறு மேற்கூறிய சங்க இலக்கியப் பாடல்கள் சங்கமருவிய பாடல்கள் (இன்னாநாற்பது), பக்தி இலக்கியப் பாடல்கள் (3 பிரபந்தங்கள்) அனைத்தும் கபிலர் என்ற பெயரில் காணப்பட்டாலும், ஒருசில பெயர்கள் கபிலர் என்ற பெயரோடு 'தொல்' என்னும் அடைமொழி பெற்று தொல்கபிலர் என்றும்

குறிக்கப்படுகின்றன. வேறுசில பாடல்கள் 'தேவர்', 'தேவநாயனார்' என்ற உபசாரத் தொடர் பெற்றுக் கபிலதேவர், கபிலதேவநாயனார் என்று வழங்கப்பட்டிருப்பதும் பெறப்படுகிறது.

இத்தகைய அடைமொழி, உபசாரத்தொடர் பெற்றுவரும் பெயர் மாற்றங்கள் கபிலருக்கு மட்டுமின்றி, சில சங்கப் புலவர்க்கும் வழங்கப்பட்டிருப்பது அறிதற்குரியது. அவர்களில் பரணர் பெயர் வன்பரணர், நெடுங்கழுத்துப் பரணர், பரணதேவநாயனார் என்று குறிக்கப்படுகிறது. கல்லாடனார் பெயர் கல்லாடதேவநாயனார் என்று கூறப்படுகிறது. நக்கீரர் பெயர் நக்கீரனார், நக்கீரதேவநாயனார், மதுரைநக்கீரனார், மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்று கூறப்படுகிறது. இதுபோன்று வேறு சில சங்கப் புலவர்களின் (ஔவையார், பொய்கையார், நல்லந்துவனார், பெருங்குன்றூர்கிழார், கோவூர்கிழார்) பெயர்கள் தொடர்ந்து வரும் காலக்கட்ட இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

2.3.4. பிற்காலக் கபிலர் :-

பிற்கால இலக்கிய வகையாகக் கொள்ளப்படும் நூல்களில் கபிலர் என்ற பெயரில் சில தனிப்பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில் தனிப்பாடல் தொகுப்பு, பன்னிருபாட்டியல், திருவள்ளுவமாலை, தமிழ் நாவலர் சரிதை மற்றும்பிற குறிப்பிடத்தக்கன.

...29/-

2.3.4.1. தமிழ் நாவலர் சரிதை:-

இந்நூலில் கபிலர் பெயரில் மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒருபாடல் வருமாறு:

"நெட்டிலை யிருப்பை வட்டவான் பூ
வாடாதாயின்
பீடுடைப் பிடியின் கோடேய்க் கும்மே
வாடினோ
பைந்தலைப் பரதவர் மனைதொறு முணங்கும்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே"[14]

என்னும் பாடல் கபிலர் பிறந்த போது அவரே பாடியது என்ற கருத்து கூறப்படுகிறது. இக்கருத்து எந்த அளவிற்கு உண்மையானது என்பது ஆராய்தற்குரியது. இப்பாடலைக் கபிலரே பாடினார் என்று பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது

"நீதிலார் மதுர கந்தழல் நெட்டிலை யிருப்பை யென்றோர்
காதற்கூர் பனுவல்பாடும் கபிலனார் பிறந்த மூதூர்
சோதிசேர் வருணநீழற் சிலம்பொறி துலங்கக் காட்டும்
வேதநாயகனார் வாழும் வியன்திரு வாதவூரார்"[15]

என்ற பாடல் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் ஞான உபதேசம் பெற்ற பகுதியில் கூறப்படுகிறது. இப்பாடலால் கபிலர் நெட்டிலை யிருப்பை

என்றோர் பாடலைப் பாடினார் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இப்பாடலில்கூறப்படும் கபிலர் சங்ககாலக் கபிலரா ? பிற்காலக் கபிலரா ? என்பது ஆராய்ந்து அறிதற்குரியது.

மேற்கூறிய பாடலின்றி, புறநானூற்றில் கபிலர் பாடிய 28 பாடல்களில் இரண்டு பாடல்கள் தமிழ் நாவலர் சரிதையில் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்-தக்கது.

2.3.4.2. திருவள்ளுவ மாலை:-

தனிப்பாடல் தொகுப்பு என்ற இலக்கிய வகையில் திருவள்ளுவமாலை இடம்பெறுகிறது. அதில்,

"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் -. மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி" [16]

என்ற பாடல் கபிலர் பாடியதாக அமைந்துள்ளது. திருவள்ளுவமாலையில் கபிலர் பாடல் மட்டுமின்றி வேறுசில சங்கப் புலவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவர்களில் பரணர், நக்கீரர், மாமூலனார், இறையனார், கல்லாடனார், இடைக்காடர், வெள்ளிவீதியார், மோசிகீரனார், மாங்குடி மருதனார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் சங்கத் தொகை நூல்களில் பல பாடல்கள் பாடியுள்ளனர் என்பது உணர்தற்குரியது.

மேற்கூறிய கருத்துகளினால் திருவள்ளுவமாலையில் இடம்பெறும் பாடலைப் பாடியவர் சங்ககாலக் கபிலர் என்று சிலரும், பிற்காலக் கபிலர் என்று சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.[17] இருப்பினும், திருவள்ளுவ்மாலையில் சங்கப்புலவர் காலத்திற்குப் பிற்பட்டவராகிய பாரதம் பாடிய பெருந்தேவனார் போன்ற சிலரின் பாடல்களும் இடம்பெறுவதால் இந்நூலினைப் பிற்காலப் புலவர்கள் பாடிய நூல் எனக் கொள்ளலாம். மேலும், சங்கப் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப்பா வகையில் இடம்பெற, திருவள்ளுவமாலை அனைத்தும் வெண்பா வகையில் இடம்பெற்றிருப்பது மேற்கூறிய கருத்திற்கு அரணாகிறது.

எனவே, திருவள்ளுவமாலைப் பாடல், பாவகை நோக்கியும், பிற்காலப் புலவர்கள் பலர் பாடியிருப்பது கொண்டு பிற்கால நூல் என்றும், பிற்காலத்தில் வந்த புலவர்களால் பாடப்பட்டது என்றும் சிறப்பு நோக்கிச் சில பாடல்களுக்குக் கபிலரின் பெயர் கொடுக்கப்பட்டது என்றும் தெளியலாகிறது.

2.3.4.3. பன்னிரு பாட்டியல்:-

பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூலில் கபிலர் பாடியதாகச் சில நூற்பாக்கள் உள்ளன. கபிலர் பெயரில் சில சூத்திரங்கள் என்று குறிப்பிடுகின்றனரே தவிர எத்தனை சூத்திரங்கள் என்று யாரும் குறிப்பிடவில்லை.

இந்நூலில் கபிலர் பாடிய பாடல்களாக 24 நூற்பாக்கள் உள்ளன. ஆனால், "கபிலர் இயற்றியனவாக 8 சூத்திரங்கள் உள"[18] என்று கூறும் கருத்து

...32/-

ஐயத்திற்கு இடமளிக்கிறது. அவை எழுத்தியலில் 3 சொல்லியலில் 5 என்பனவாகும். பன்னிருபாட்டியல் நூல்வழி அறிகையில் எழுத்தியலில் 19, சொல்லியலில் 5 என்பது அறியப்படுகிறது.

பன்னிரு பாட்டியல் 12 புலவர்கள் பாடிய நூல் என்று சிலரும் 15 புலவர்கள் பாடியது என்று சிலரும் ஒருவரே பாடியது என்று சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.[19] இருப்பினும், இதில் இடம்பெறும் புலவர்கள் பலர் சங்கப் புலவராகக் குறிக்கப்படுகின்றனர். அவர்களில் அகத்தியர், கபிலர், பரணர், கல்லாடர், பொய்கையார், பெருங்குன்றூர்கிழார், கோவூர்கிழார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இப்புலவர்கள் அனைவரும் சங்ககாலப் புலவர்களா அல்லது சங்கப்புலவர்களின் பெயர்களைத் தாங்கிய பிற்காலப் புலவர்களா என்பது ஆராய்தற்குரியது.

இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் பன்னிருபாட்டியலில் இடம்பெறும் நூற்பாக்களை எல்லாம் பாடிய சான்றோர்கள் சங்கப்புலவர்களின் பெயர்களைத் தாங்கிய பிற்காலப் புலவர்கள் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதே. இதற்கு அரணாக பன்னிரு பாட்டியலில் வரும்

"கணமே மூவசைக் கூட்ட மாகும்"[20]

என்ற கபிலரின் நூற்பா விளங்குகிறது. இதில் முதலடியின் முதற்சீர் மூவசைச்சீராய் அமைதலே மங்கலத்தன்மை பொருந்தியதாம் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

ஆனால்,

"வையங்காவலர் வழிமொழிந்தொழுக.......(புறம்:8)[21]

"சேயிழை பெறகுவை வாணுதல் விறலி......"(புறம்:108)[22]

"பாரிபாரி என்றுபல வேத்தி............"(புறம்:107)[23]

"அளிதோ தானே பாரியது பறம்பே......."(புறம்:109)[24]

"இவரியார் என்குவை யாயின்............"(புறம்:201)[25]

எனவரும் கபிலரின் புறநானூற்றுப்பாடல் வரிகள் மேற்கூறிய விதியினை மீறி, ஈரசைச்சீராக முதற்சீர் அமைவதை அறியமுடிகிறது. இதனால் பன்னிருபாட்டியலில் இடம்பெற்ற புலவர் பிற்காலத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது.

மேலும், இச்சூத்திரங்களில் கூறியது கூறல் இடம் பெறுதலாலும், பரிதி, சோமன், அருக்கன், பிரமன் என்பன போன்ற வடசொற்கள் கலந்து வருதலாலும், தொல்காப்பியத்தில் கொள்ளப்படாத நாலசைச்சீரைப் பற்றிய இலக்கணம் காணப்படுவதாலும் இந்நூல் பிற்காலத்தவர் ஒருவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுவாரின் கருத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

எனவே, மேற்கூறிய கருத்துக்களில் இருந்து கபிலர் பெயரில் காணப்படும் பன்னிரு பாட்டியல் சூத்திரங்கள் அனைத்தும் பிற்காலத்தைச் சேர்ந்த புலவர் ஒருவரால் பாடப்பட்டன என்பது தெளிவாகிறது.

2:3:4:4: கபிலரகவல்:-

கபிலர் பாடியதாகக் கபிலரகவல் என்னும் நூல் கூறப்படுகிறது. இந்நூல் எழுதப்பட்டதற்குப் பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. இந்நூலில் கூறப்படும் வரலாறு பின்வருமாறு:

"பகவன் என்பவனுக்கும் ஆதி என்பவளுக்கும் திருவாரூரில் பிறந்தவர் கபிலர். அவரை, அவ்வூர்ப் பார்ப்பார் ஒருவர் எடுத்து வளர்த்து வந்தார். அவர், கபிலருக்கு உபநயனஞ் செய்யக் கருதிப் பார்ப்பனரை அழைத்த பொழுது அவர்கள், "பார்ப்பனக்குலத்திற் பிறவாத இக்குழந்தைக்கு உபநயனஞ் செய்ய யாம் உடன்படேம்" என்று மறுத்தனர். அதுகேட்டுப் பார்ப்பனர் வருந்திக்-கொண்டிருக்கையில், கபிலர் அப்பார்ப்பனரை நோக்கி, 'பிறப்பினால் சாதி வேறுபாடு கருதலாகாது' என்று நியாயம் கூறி அறிவுறுத்திப் பாடிய பாட்டு என்பது' கூறப்படுகிறது.[26]

இந்நூலிற் கூறப்பட்டுள்ள முதன்மையான செய்தி, மக்கட்பிறப்பில் சாதி வேறுபாடு இல்லை என்பதே. இத்தகைய சாதிப் பூசல் சங்ககாலத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், சங்ககாலக் கபிலர் அந்தணர் என்பது கபிலரது பாடல் வழியும், பிற புலவர்கள் வழியும் அறியப்படுகிறது கபிலரே தன்னை,

"தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே"...[27]

என்றும்,

"....................பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தணன்"[28]

என்றும் கூறிக்கொள்வதாலும், மாரோக்கத்து நப்பசலையார் கபிலரை,

'புலன் அழுக்கற்ற அந்தணாளன்'[29]

என்று கூறுவதாலும் சங்ககாலக் கபிலர் அந்தணர் என்பது பெறப்படுகிறது. மேலும், கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் சென்று வாழ்த்திப் பாடிய போது,

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ"[30]

என்று வரும் வரிகளில் "அந்தணர்க்குப் பணிதல் அல்லாமல் பிறருக்குப் பணிதலை அறியாய்" என்று குறிப்பிடுவது அறியப்படுகிறது. மேற்கூறிய சான்றுகளினால் கபிலர் அந்தணர் என்பது தெள்ளிதின் புலனாகிறது.

எனவே, பார்ப்பனர்களை எதிர்த்து, சாதியினை எதிர்த்துக் கபிலரகவல் பாடிய கபிலர் சங்ககாலக் கபிலரினும் வேறானவர் என்பது உறுதிச் செய்யப்படுகிறது. அஃதன்றி, இச்செய்யுளில் அதிகமான வடசொற்கள் கலந்து வந்துள்ளமையும் இது பிற்கால நூல் என்பது உறுதியாகிறது. சங்கப்பாடல்கள் பெரும்பான்மையும் யவனர் வந்தது பற்றிய' குறிப்பினையே தருகின்றன. ஆனால் இந்நூலில் யவனர் மட்டுமின்றிச் சீனத்தர், சிங்களர் போன்றோரும் தமிழகம் வந்துள்ளனர் என்ற குறிப்பு காணப்படுகிறது.

இத்தகைய காரணங்களால் கபிலரகவல் பாடிய கபிலர் சங்ககாலக் கபிலர் அல்லர் என்பதும், பிற்காலப் புலவர் ஒருவர் கபிலர் பெயரை ஏற்றுக் கொண்டு அப்பெயரிலேயே பாடிய பாட்டு என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

இவ்வாறாக, தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து வந்த காலக்கட்டங்களில் கபிலர் என்ற பெயரில் பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன என்பது தெரியவருகின்றது. அஃது கபிலர் என்ற புலவரின் செல்வாக்கைக் காட்டுகிறது எனலாம்.

2.4. கபிலர் பற்றிய வரலாற்றுச் செய்திகள்:-

கபிலர் என்ற பெயரில் காலந்தோறும் வந்துள்ள இலக்கியங்களில் பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன என்பது தெளிவாகிறது. கபிலர் பாடிய பாடல்கள் மட்டுமின்றி அவரின் பெயர், பிறப்பு பற்றிய வரலாற்றினையும் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:

2.4.1. பரிபாடல்:-

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் திருமாலின் பல அவதாரங்களையும் அவரைப் பற்றிய புராணச் செய்தியினையும் எடுத்துரைக்கும்போது அப்பாடலில் கபிலர் என்ற பெயர் இடம்பெறுகிறது. அப்பாடல் வருமாறு:

"தீவளி விசும்பு நிலனீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும், அறனும், ஐவரும்
திதியின் சிறாரும் விதியின் மக்களும்

மாசில் வீண்மரும் பதினொரு கபிலரும்

தாமா இருவரும் தருமனும்........

...............உரைதர வலந்த" (பரி:3:3-11)[31]

என்ற பாடலில் 'பதினொரு கபிலர்கள்' என்ற குறிப்பு இடம்பெறுகிறது.

'பதினொரு கபிலர்' என்ற சொல்லின் பொருளைக் குறிப்பிடும்போது உபப்பிரமர்கள் அல்லது உருத்திரர்கள் என்று பொருள் கூறப்படுகிறது. எனவே, கபிலர் என்ற பெயர் பாடலுள் குறிக்கப்பட்டு இருந்தாலும், அப்பெயரின் பொருளாக வேறு சொல் கூறப்படுவது தெரியவருகிறது. பரிபாடலில் இடம்பெறும் கபிலர் என்ற பெயரும், சொல்லும் பொருள் நோக்கில், வேறுபட்டு இருந்தாலும், 'பதினொரு கபிலர்' என்ற பெயர் பரிபாடலில் வருவதாலும் சங்ககாலக் கபிலரின் பெயரைக் கொண்டு மேற்கண்ட சொல் வருவதாலும் இங்கு எடுத்துக்-கொள்ளப்படுகிறது.

2.4.2. திருவால வாயுடையார் திருவிளையாடற்புராணம்:-

பழைய இலக்கண உரைகளில் 'கபிலபரணர்' என்று தொகைநிலைத் தொடரில் வழங்கப்பட்டு வருவது அறியத்தக்கது. இதுபோன்று தொகைநூல்களிலும், பிறவற்றிலும் கபிலர் பரணர் என்று குறிப்பிடப்படுகிறது. இஃதன்றி, கபிலரது பாட்டிற்குப் பின் பரணரது பாட்டு இடம்பெறுவதும் இவ்விரு புலவர்களுக்கும் ஒரு ஒற்றுமை உள்ளது புலனாகின்றது.

இவ்வொற்றுமையை,

"பிள்ளையில் கபிலன் தோழன்

பெயரிடைக் காடனென் போன்" (திருவால:20:1)[32]

எனவரும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண திருவிருத்த வரிகள் தெளிவுறுத்துகின்றன. இவ்வரிகளால் கபிலர்க்குத் தோழனாக இடைக்காடனார் இருந்தார் என்பது தெளிவாகிறது. மேலும்,

"ஏனையந்தாதி சொன்னவன் கபிலன்"[33]

என்று வரும் வரி சிவபெருமான் கட்டளையிட்டருளியதாகக் கூறப்படுகிறது. மேற்கூறிய பாடல்கள் மூலம் கபிலரின் பெயர் வருவது அறியத்தக்கது.

கபிலர் பிறந்த ஊர் பற்றிக் குறிப்பிடுவதாக இந்நூலுள் ஒரு பாடல் இடம்பெறுகிறது. அப்பாடல் வருமாறு:

நீதிலார் மதா கநீழல் நெட்டிலை யிருப்பை யென்றோர்

....

...................வாழும் வியன்திரு வாதவூரான்"[34]

எனவரும் பாடல் கபிலர் பிறந்தபோது பாடிய பாடல் பற்றிய குறிப்பினைத் தருகிறது. இப்பாடல் தரும் கருத்தாவது, 'நெட்டிலையிருப்பை' என்ற பாடலைப் பாடிய புலவர் திருவாதவூரில் பிறந்த கபிலர் என்னும் பெயரினை உடையவர் என்பது பெறப்படுகிறது.

இப்புராணம் குறிப்பிடும் கபிலர் சங்ககாலக் கபிலரா என்பதும், கபிலர் நண்பர் இடைக்காடனார் சங்ககாலத்தைச் சேர்ந்தவரா என்பதும் ஆராய்தற்குரியன.

2.4.3. பாகவத புராணம்:-

விஷ்ணுவின் தசாவதாரங்களைப் பற்றி இந்நூல் கூறுகின்றது. இந்நூலில் விஷ்ணுவின் அவதாரங்களாகக் கபிலரும், புத்தரும் குறிக்கப்படுகின்றனர்.[35] ஆங்குக் குறிப்பிடப்படும் கபிலர் என்ற பெயர் எந்தக் காலத்தைச் சார்ந்த கபிலர்க்குரியது என்பது ஆராய்தற்குரியது.

2.4.4. தொல்காப்பிய உரையாசிரியர்கள் வழி:-

தொல்காப்பியத்தில் உரையாசிரியர்கள் கூற்றின்வழி 'கபிலரது பாட்டு' என்னும் தொடர் எடுத்தாளப்பட்டிருப்பது தெரியவருகிறது. வேற்றுமையியலில் 6-ஆம் வேற்றுமையில் தற்கிழமை, பிறிதின்கிழமைப் பொருளுக்குச் சான்று தரும்போது கபிலரது பாட்டு, பரணரது பாட்டு எனக் குறிப்பிடப்படுகிறது.[36]

ஆங்குக் கபிலரது பாட்டு என்று குறிப்பிடப்பட்டது, சங்கப்புலவராகிய கபிலரின் பாட்டா . கபிலரது பாட்டு என்ற நூலே இருந்ததா என்கிற ஐயம் எழுகின்றது. இருப்பினும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் வழி, கபிலர் என்ற பெயர் குறிப்பிடப்படுவது அறியத்தக்கது. மேலும் கபிலரது பாட்டு என்ற நூலோ, பாடலோ இன்றைக்குக் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இஃதன்றி, 'கபிலம்' என்ற நூல் இருந்ததாகத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டிச் செல்கின்றனர். வேற்றுமை மயங்கியலில்,

"முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்

சினையிற் கூறும் முதலறி கிளவியும்

....

வினை முதலுரைக்குங் கிளவியொடு தொகைஇ

அனைய மரபினவே ஆகுபெயர் கிளவி" (நூற்:31)[37]

என்று வரும் நூற்பாவிற்குச் சேனாவரையர் உரை விளக்கம் தரும்போது தொல்காப்பியனாலுங் கபிலனாலுஞ் செய்யப்பட்ட நூலைத் தொல்காப்பியம், கபிலம் என்றல் வினைமுதலுரைக்குங் கிளவியென்றாரால் உரையாசிரியர்களால் விளக்கம் கூறப்படுகிறது.[38]

"இதனைத் தொல்காப்பியன், கபிலன் என்னும் பெயரிறுதி இவனாற் செய்யப்பட்டதென்னும் பொருள் தோன்ற 'அம்' என்பதோரிடைச் சொல் வந்து 'அன்' கெடத் தொல்காப்பியம், கபிலம் என நின்றது என்பது ஆசிரியர் கருத்தாம்"[39] என்பது கூறப்படுகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் கபிலர் எழுதியது 'கபிலம்' என்னும் நூலைக் குறிப்பிடுவது அறியத்தக்கது. ஆனால், தற்பொழுது இந்நூல் கிடைக்கப்பெறவில்லை என்பதையும் சுட்டிச் செல்கிறார். எனவே, தொல்காப்பிய உரையாசிரியர்கள் வழி, கபிலம் என்ற பெயர் சுட்டப்பட்டுள்ளது அறியத்தக்கது.

...41/-

2.4.5. வீரசோழியம்:-

வீரசோழியம் என்ற இலக்கண நூலில் தொகைப்படலம் 6-ஆம் கலித்துறை உரையால் பரணருடன் கபிலர் வாது செய்தவரென்பது தெரியவருகின்றது.[40] இதில் கூறப்படும் கபிலர் எந்தக் காலத்தைச் சார்ந்தவர் என்கிற ஐயம் எழுகிறது. இருப்பினும், இங்குக் கபிலர் என்ற பெயர் இடம்பெறுவது மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

2.4.6. தத்துவநூல்கள் வழி:-

"சாங்கிய மத நெறியை நிறுவிய தலைவராக ஒரு கபிலர் இருந்தார்" என்பது தத்துவநூல்கள் வழி ஒருசில இலக்கிய அறிஞர்களால் குறிக்கப்படுகின்றது.[41] அப்பெயர் பற்றிச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் விளக்கம் தருகையில் சாங்கிய நெறியை நிறுவிய கபிலரின் நினைவாகச் சங்கப் புலவர்க்குக் கபிலர் என்ற பெயரிடப் பெற்றது என்றும் கபிலர் என்ற பெயர் வடமொழிப் பெயர் என்றும் கூறப்படுவது அறியப்படுகிறது.[42]

இக்கருத்துக்களினால் சாங்கிய மதத்தலைவராக ஒரு கபிலர் இருந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

2.4.7. அபிதான சிந்தாமணி:-

இந்நூல் கபிலர் என்ற பெயரிலேயே எழு பெயர்களைக் குறிப்பிடுகின்றது. அவை:

1. கர்த்தமப் பிரசாபதிக்குத் தேவ பூதியிடம் உதித்த விட்டுணுவின் அம்சமாக ஒரு கபிலர் குறிக்கப்படுகின்றார்.

2. தனுகுமார்களில் ஒருவன் என ஒரு கபிலர் குறிக்கப்படுகின்றார்.

3. இவர் பொய்யடிமையில்லாத புலவர் கூட்டத்துள் ஒருவர். இவர் அருளிய நூல்கள் மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, சிவபெருமான் இரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி எனக் குறிக்கப்படுகிறது.

4. ஓர் இருடி. இவர் விநாயக பூசை செய்து விநாயகர் பிரசன்னமாகத் தன்னிடமிருந்து கவர்ந்த மணியை மீண்டும் பெறும்பொருட்டுக் கவர்ந்த அவனைச் சங்கரிக்க வரம் பெற்றவர் என்று கூறப்படுகிறது.

5. சங்கத் தொகைப் பாடல்களைப் பாடிய கபிலராக ஒருவர் குறிக்கப்படுகின்றார்.

6. ஒரு தமிழ்ப்புலவர், இவர் பிறந்தபோது "நெட்டிலையிருப்பை வட்டவான்பூ, வாடாதாயிற் பீடுடைப் பிடியின் ...." என வரும் பாடலைப் பாடிய கபிலராக ஒருவர் குறிக்கப்படுகின்றார்.

7. வள்ளுவருடன் பிறந்தவர். இவர் பிறந்தபோது தாய் விட்டுப் பிரிய மனமிலாது வருந்துகையில்,

"கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கும்
உண்ணும்படி யறிந்தூட்டுமவர் - கண்ணும்
நமக்குப் படியளப்பார் நாரியோர்பாகர்
தமக்குத் தொழிலென்ன தாய"

என்ற பாடலைப் பாடி தாயைச் சமாதானம் செய்தவர் ஒரு கபிலர் என்று கூறப்படுகிறது.[43]

இப்பாடல் பற்றி மேலும் விளக்கம் கூறுகையில் கபிலரின் தாய் இப்பாடலைக் கேட்டு விட்டுப் பிரிந்தபின் கபிலர் ஒரு வேதியன் வீட்டில் வளர்ந்து தன் உபநயன காலத்தில், மற்ற வேதியர்கள் இவரை வேதியன் அன்று என மறுக்க அவர்களுடன் கர்மத்தாற் சாதியன்றிச் சன்மத்தால் சாதியில்லை என்று வாதிட்டு அவ்விடம்விட்டு நீங்கித் தம்பெயரால் 'கபிலரகவல்' என்னும் பாடலைப் பாடித் தவஞ்செய்தவர் என்று கூறப்படுகிறது.

திருவள்ளுவமாலையில் கபிலர் பெயரில் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது என்பது முன் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாடல் அபிதான சிந்தாமணியில் வேறொரு பாடலாகக் கூறப்பட்டுள்ளது என்பது அறியப்படுகிறது. இப்பாடல் மாற்றம் கபிலர் பற்றிய ஐயத்திற்கு இடமளிக்கிறது எனலாம். எனினும், ஒற்றுமையான கபிலர் பெயர்களாக எழுவர் குறிக்கப்படுகின்றனர் என்பது மட்டும் அறியக்கூடியது.

இவ்வாறாக, கபிலர் பற்றிய வரலாற்றினைக் குறிப்பிடும் நூல்கள் பல உள்ளன. அந்நூல்கள் கபிலரையும், அவரது ஊரையும் குறிப்பிடுகின்றனவே தவிர, கபிலர் காலம் பற்றியோ அவர் எந்தக்காலக் கபிலர் என்பது பற்றியோ குறிப்பிடப்படவில்லை என்பது உணரத்தக்கது.

...44/-

கபிலர் என்ற பெயர் காலந்தோறும் வரும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது அறியப்பட்டது. அதுபோன்று கபிலர் என்ற பெயர் பற்றியும், அவரது பிறப்பு பற்றியும் பல்வேறு வரலாற்றுச் செய்திகள் அறியப்படுகின்றன. இச்செய்திகளில் கபிலர் பற்றிய ஒரு தெளிவின்மையே காணப்படுகிறது. எனவே, கபிலரது பெயர் பற்றியும், அவரது பிறப்பு பற்றியும் இனிவரும் தலைப்புகளில் ஆராயப்படுகின்றன.

2.5. கபிலர் - பெயர் விளக்கம் :-

சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறியப்படும் கபிலர்கள் கபிலர், தொல்கபிலர் ஆகிய இருவராவர். இவ்விரு புலவர்களின் பெயர் பற்றிய விளக்கம் அறியும் போது இருவரும் வேறுவேறு புலவர்கள் என்ற கருத்து பெறப்படுகிறது.

கபிலர் என்னும் பெயர் சங்ககாலத்தில் பரவலாக இருந்திருக்கலாம். அப்பெயர் காரணப் பெயரா, இயற்பெயரா என்பது சிந்திக்கத்தக்கது. அவ்வகையில் கபிலர் பெயர் பற்றி விளக்கம் தரும்போது பலரும் வடமொழிப் பெயர் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கபிலர் தாம் பாடிய புறப்பாடல் ஒன்றில் 'கபிலம்' என்னும் சொல்லைக் குறிக்கின்றார். இச்சொல்லைக் கொண்டு கபிலர்க்கு அப்பெயர் வந்தது என்று விளக்கம் கூறப்படுகிறது. அச்சொல் அப்பாடலில் உயிர்நிலையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பாடல் வருமாறு:

"...........................

ஈதலானா விலங்குதொடித் தடக்கைப்
பாரி பறம்பிற் பனிச்சுனைப் போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார் நறும்புகை ஐதுசென் றடங்கிய
கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு
மனைச்செறிந் தனளே வாணுத லினியே
....
..............................."(புறம்: 337)[44]

இப்பாடல், பிற்காலத்தில் கீர்த்தனை, பதம் முதலிய இசைப்பாடல்களை இயற்றிய புலவர்கள் தமது பெயரை அப்பாடல்களின் முடிவில் அமைத்துள்ளமை போல் உள்ளது. இதில் தியாகராசர், முத்துத்தாண்டவர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் என்ற செய்தி பெறப்படுகிறது.[45] இவர்கள் இயற்றிய கீர்த்தனைகளும் இத்தகைய பெயரினைக் குறிப்பிடும் வகையிலேயே அமைந்துள்ளன.

எனவே, மேற்கூறிய புலவர்களின் பெயர்கள் அவர்களைக் குறிப்பிடும் அடையாளக் குறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது பெறப்படுகிறது. கபிலரும் அதுபோன்று தன் பெயரை நிலைநிறுத்திக் கொள்ளக் 'கபிலம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற கருத்துக் கூறப்படுகிறது.

'கபிலம்' என்ற சொல்லுக்குச் செந்நிறம் என்று பொருள் கூறப்படுகிறது. நிறத்தை ஒட்டிச் சிவபெருமானுக்கும் கபிலர் என்ற பெயர் உண்டு. எனவே, சிவன் செந்நிறம் உடையவன். ஆதலின், பரிபாடலில் சிவனது திருவுடையாரான உருத்திரர் பதினொருவரையும் பதினொரு கபிலர் என்று கூறியிருப்பது இங்கு ஒப்பிட்டு அறியத்தக்கது.

அன்றிப் புகையின் நிறத்தைக் குறிப்பதற்குக் கபிலம் என்ற சொல் குறிக்கப்படுவது புறம். 337-ஆம் பாடல் கருத்துவழி அறியப்படுகிறது. எனவே, கபில நிறத்தை உடையவர், கபிலர் என்று பொருள் கோடலே பொருத்தமாகும் என்ற கருத்து கூறப்படுகிறது.[46]

கபிலநெடுநகர் என்னும் தொடர் கபிலர் பாடிய புறம், 337-ஆம் பாடல் வழி அறியப்படுகிறது. இத்தொடரினாலே கபிலர் என்ற பெயர் வந்தது என்று கூறப்படுகிறது. ஆனால், இக்கருத்து ஏற்புடையது அல்ல. புற-நானூற்றில் பலபாடல்கள் ஆசிரியர் பெயர் இல்லாமலேயே தொகுக்கப்பட்டுள்ளன. ஒருசில பாடல்களுக்கு அப்பாடலில் வரும் ஒரு தொடரினைக் கொண்டு அத்தொடரினையே அப்பாடலின் ஆசிரியர் பெயராக வைத்துள்ளது அறியப்படுகிறது. அவர்களில் செம்புலப்பெயல்நீரார், அணிலாடு முன்றிலார், தொடித்தலை விழுத்தண்டு ஊன்றினார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இஃதன்றி, கபிலர் சங்க இலக்கியத்தில் மட்டும் 100-க்கும் அதிகமானப் பாடல்களைப் பாடியுள்ளார். புறநானூற்றிலும் இவ்வொரு பாடலின்றி 27 பாடல்களைப்

பாடியுள்ளதும் அறியப்படுகிறது. ஆதலால் கபிலர் என்ற பெயரில் பல பாடல்கள் இருக்க ஒரு பாடலுக்கு மட்டும் 'கபிலம்' என்ற சொல் கொண்டு பெயர் வந்தது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. எனவே, புறம்-337-ஆம் பாடலில் வரும் சொல் கொண்டு கபிலர்க்குக் காரணப் பெயர் வந்திருக்கலாம் என்று கொண்டாலும் சங்க இலக்கியத்தில் 100-க்கும் மேற்பட்ட பாடல்கள் கபிலர் பெயரிலேயே காணப்படுவதால் கபிலர் என்ற பெயர் இயற்பெயரே என்பது உணரப்படுகிறது.

2.6. தொல்கபிலர் - பெயர் விளக்கம்:-

தொல்கபிலர் பற்றிய வரலாற்றினை அறியும் போது குறிஞ்சிப்பாட்டைப் பாடிய கபிலரும் இவர் வேறுபட்டவர் என்ற கருத்து மட்டும் கூறப்படுகிறது. தொல்கபிலர் பற்றிய வேறு வரலாற்றுச் செய்திகளோ, குறிப்புக்களோ, பிறப்புப்பற்றிய கதைகளோ எந்த நூலிலும் குறிப்பிடப்படவில்லை என்பது அறியத்தக்கது.

கபிலரினும் தொன்மை உடையவராதல் வேண்டும் என்பதால் இவர் 'தொல்' என்னும் அடைமொழி பெற்றுத் தொல்கபிலர் என்ற பெயர்பெற்று வந்தனர் எனப் பல இலக்கிய அறிஞர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.[47] மேலும், நற்றிணையில் தொல்கபிலர் பாடிய பாடல் ஒன்று [illegible]:

"........................குன்ற நாடன்

துளிபெயல் பொறித்த புள்ளித் தொல்கரை

பொருதிரை நிவப்பின் வரும்யாறு அஞ்சுவல்
ஈர்ங்குரல் உருமின் ...." (நற் : 114).[48] இப்பாடலில்

'புள்ளித் தொல்கரை' என்ற தொடர் குறிக்கப்படுகிறது. இத்தொடரின் அடைச்சிறப்பால் தொல்கபிலர் எனப் பெயர் பெற்றார் என்றொரு கருத்தும் கூறப்படுகிறது. ஆனால், சங்க இலக்கியத் தொகுப்பு முயற்சியில் பாடலின் தொடர் கொண்டு பெயர் பெற்றவர் என்ற வரிசையில் இவரின் பெயர் இடம்-பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அபிதான சிந்தாமணி தொல்கபிலன் என்றொரு பெயரினுக்கும் விளக்கம் தருகிறது. அதில் இப்பெயர் கடைச்சங்கம் மருவிய புலவர் என்று சுட்டப்படுகின்றது.

உ.வே. சாமிநாதய்யரின் சங்க இலக்கியப் பதிப்புக்களில் பாடியோர் வரலாறு கூறுகையில் கபிலர் வேறு, தொல்கபிலர் வேறு என்று மட்டும் கூறப்பட்டுள்ளது. கபிலர்க்குக் கூறப்படும் பிறப்பு பற்றிய புனைகதைகள் எதுவும் தொல்கபிலர்க்குக் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுபற்றித் தெளிவதற்கு இருவரின் பாடல்களும் ஒப்பிட்டு ஆராய்தற்குரியன.

2.7. கபிலர்-பிறப்பு பற்றிய செய்திகள்:-

கபிலரின் பிறப்பு பற்றிப்பல்வேறு கருத்துக்கள் இலக்கிய அறிஞர்களிடையே நிலவி வருகின்றன. ஒவ்வொரு நூலிலும் பல்வேறு விதமான கதைகள் கூறப்படுகின்றன. அவ்வாறு கபிலரின் பிறப்பு பற்றிய கதையினைக் கூறும் நூல்களாகக் கபிலரகவல்,

சோழமண்டல சதகம், ஞானாமிர்தம், தமிழ் நாயனர் சரிதை, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், கடம்பவன-புராணம், ஆலாஸ்ய மஉறாத்மியம், புலவர் புராணம், விநோதரசமஞ்சரி, திருவள்ளுவர்காதை, பன்னிரு புலவர் சரித்திரம், தனிப்பாடற்றிரட்டு போன்றவை குறிக்கப்படுகின்றன.

இந்நூல்களுள் உறாலாஸ்யமஉறாத்மியமும் பரஞ்சோதியார் புராணமும் கபிலர் சரசுவதிதேவியின் உடற்கூறாகிய எழுத்துக்களுள் ஒன்றன் அவதாரம் என்றும், நான்முகக்கடவுளின் சாபத்தால் நிலவுலகில் மக்கட் பிறப்பிற் பிறந்து சிறந்த புலவராய் மதுரையையடைந்து, பாண்டிய மன்னனால் சிறப்புப்பெற்று வாழ்ந்திருந்தார் என்றும் கூறுகின்றன. திருவாலவாயுடையார் திருவிளையாடலும், கடம்பவன-புராணமும் கபிலர் கலைமகளின் அம்சம் என்று கூறவில்லையாயினும், மதுரையில் சங்கப்புலவர்களுள் ஒருவராய் வீற்றிருந்தார் என்பதை மட்டும் தெரிவிக்கின்றன.

இப்புராணங்களில் கூறப்படும் கதைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட முரணான கதைகளையே கூறுகின்றன. கபிலரகவல் என்னும் நூல், கபிலர் செய்ததென்று கருத்து உள்ளது. இந்நூலில்,

"அருந்தவ மாமுனி ஆம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினில் அன்றுவ தரித்த
காண்முனை யாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்

...50/-

ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்

யாம்வளர் திறஞ்சிறி தியம்புவர் கேண்மின்

. . . .

. . . .

அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"[49]

என்று வரும் பாடல் வரிகள் கபிலரின் பிறப்பு பற்றிய வரலாற்றை எடுத்தியம்பு-கின்றன. இவற்றிலிருந்து கபிலர் வளர்ந்தது திருவாதவூர் என்பதும், அவரின் தாய்-தந்தையர் பகவன் - புலைச்சி என்பதும், உடன்பிறந்தவர் எழுவர் என்பதும் பெறப்படுகிறது.

சோழமண்டல சதகத்தில் வரும் செய்யுளால் கபிலர் சோழநாட்டில் பிறந்தவர் என்றும், மறையவர் குலத்தினர் என்றும், ஞானப்பொருளமைந்த தோ-ரகவலைச் செய்தவர் என்றும் தெரியவருகின்றது. அதனை,

"பொறையார் தில்லை வாழ்முனிவர் புகலிப் பெருமான் கண்டசர்

நறையார் கலையார் பூசலையார் நீல நக்கன் நிகழ்சோமன்

முறையார் ஞானத் திருவகவல் மொழிந்த கபிலர் முதலாய

மறையோ ரெவரும் இளமையோராம் வாழுஞ் சோழமண்டலமே"

என்னும் செய்யுள் அறிவுறுத்துகிறது.[50] இதில் கபிலர் பிறந்தவூர் இதுவெனத் தெரியவில்லையாயினும் அவர் சோழநாட்டில் பிறந்தவர் என்பது மட்டும் தெரியவருகிறது.

ஞானாமிர்தம் என்னும் நூலில் கபிலர் பிறப்புப் பற்றிக் கூறுகையில்,

"யாளி, கூவற் றாயிடும் ஆதப் புலைச்சி
காதற் காசனி யாகி மேதினி
யின்னிசை யெழுவர்ப் பயந்தோள னின்டே"[51]

என்று அறிவுறுத்துகிறது. இப்பாடலில் இடம் பெறும் எழுவர் பற்றிய குறிப்பினை,

"கபிலர் அதிகமான் காளகுறவர் பாவை
முகிலனைய கூந்தல் முறுவை - நிகரில்லா
வள்ளுவர் ஔவை வளருற்றுக் காட்டுப்பை
என்னில் எழுவர் இவர்"[52]

என்னும் வெண்பா எடுத்துரைக்கின்றது. தமிழ் நாவலர் சரிதையில் கபிலர் பிறப்பினைப் பற்றி யாதும் கூறப்படவில்லை. ஆனால், அவர் பிறந்த போது "நெட்டிலை இருப்பை" எனத் தொடங்கும் பாடல் ஒன்றினைப் பாடியதாக மட்டும் அறியப்படுகிறது.

தனிப்பாடற்றிரட்டில் ஔவையார் முதலிய எழுவரும் பிறந்தவுடனே தாயாகிய ஆதி என்பவள் இவர்களை விட்டு நீங்கமாட்டாமல் மயங்கும் போது, அவளுக்கு மனவுறுதி உண்டாகும்படி பாடியவை என்னும் தலைப்பின் கீழ், "கண்ணுழையாக் காட்டுந் ...." என்று வரும் பாடலைப் பாடினார் கபிலர் என்பது அறியப்-படுகிறது.[53]

புலவர் புராணத்தில் ஔவையார் சருக்கத்தில் கபிலரின் பிறப்புப் பற்றிய வரலாறு கூறப்படுகிறது. அதில் நான்முகன் அம்சமான ஆதி என்பவள் இரவும் பகலும் ஓடி ஒவ்வோரிடத்திற் கூடி ஏழு குழவிகளைத் [illegible] இவர்களில் ஔவையார், வள்ளுவர், கபிலர், சேரமான் என்னும் நால்வரும் தம் புலமை உலகில் விளங்கி நிற்குமாறு செய்தனர், மற்றைப் பெண்கள் மூவரும் தம் இயல்பினை வெளிக்காட்டாது இருந்து விட்டனர்.

விநோதரச மஞ்சரியில் கபிலர் பிறப்பு ஔவையார் வரலாற்றின்வழி, கூறப்படுகிறது. அவ்வையார் மதுரையில் கடைச் சங்கமிருந்த காலத்தில் உறையூர் என்னும் பட்டணத்தில் ஒரு சாவடியில் ஆதி என்பவளுக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் முதல் குழந்தையாகப் பிறந்தவர் என்று கூறப்படுகிறது.

திருவள்ளுவர் கதையில் ஆதி-பகவன் இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளாக எழுவர் குறிக்கப்படுகின்றனர். இந்த ஏழு குழந்தைகளும் பிறந்தவுடன் தாய் விட்டுச் செல்ல, தாய்க்கு இரங்கி ஒவ்வொரு பாடல் பாடினர் என்பதும் கூறப்படுகிறது.

பன்னிரு புலவர் சரித்திரத்திலும் திருவள்ளுவர் கதையினைத் தழுவியே கூறப்படுகிறது. இதில், ஆதி என்ற பெயரில் கூறப்படாது ஒரு இழிகுலப் பெண் என்று குறிக்கப்படுவது அறியப்படுகிறது.

இவ்வாறு, கபிலரின் பிறப்பு பற்றி மேற்கூறிய கதைகள் எல்லாம் ஒன்றற்கொன்று மாறுபட்ட கதைகளைக் கூறுவது அறியப்படுகிறது. வேங்கடராஜுலு ரெட்டியார் மேற்கூறிய கதைகளைச் சுட்டிக் காட்டி இக்கதைகளெல்லாம் ஆதாரமில்லாத கற்பனைக் கதைகள் என்று விளக்கம் தருகின்றார்.[54]

ஆனால், கபிலர் பிறப்பு பற்றி வேங்கடராஜுலு ரெட்டியார் கூறும் கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், இலக்கியங்கள் கூறும் சான்றுகள் அனைத்தும் பொய்யான கற்பனைக் கதைகளே என்று கூறிவிட முடியாது. இல்லாத ஒரு கதையினை இலக்கிய அறிஞர்கள் கூறியிருக்க முடியாது. அந்தக் காலக்கட்டத்தில் வழக்கில் இருந்த செவிவழிச் செய்திகளை இலக்கியம் படைக்க வந்த புலவர்கள் கபிலரின் வரலாற்றைப் புனையும்போது இணைத்துக் கூறியிருக்கலாம்.

மேலும், சங்ககாலத்தில் கபிலர் பலர் இருந்திருக்கலாம் என்ற கருத்து இலக்கிய அறிஞர்களிடையே நிலவி வருவதால் கபிலர் என்ற பெயரில் கூறப்படும் இப்பிறப்பு பற்றியக் கதைகள் எந்தக் கபிலர்க்கு உரியன என்பது ஆராயத்தக்கது. சங்ககாலத்தில் கபிலர் ஒருவர் மட்டும் இருந்திருந்தால் வேங்கடராஜுலு ரெட்டியார் கூறும் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கது. [illegible] சங்ககாலக் கபிலர்க்கு இக்கதைகள் பொருந்தாவிட்டாலும், பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு கபிலர்க்குரியது என்றே கொள்ள வேண்டும்.

ந.மு. வேங்கடசாமி நாட்டார் கபிலரின் பிறப்பினைக் கபிலரகவல் தரும் கதையினைத் தழுவியே கூறிச் செல்கிறார்.[55] எம். சீனிவாச ஐயங்கார் கபிலர் பிறப்புப் பற்றிக் கூறும்போது கபிலர் ஒர் அந்தணர் என்றும், பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் பிறந்தவர் என்றும் விளக்குகிறார்.[56] இக்கருத்தினையே இராமச்சந்திர தீட்சிதர் தன் நூலில் குறிப்பிடுகிறார்.[57]

எனவே, கபிலர் என்ற பெயர் காலந்தோறும் உள்ள இலக்கியங்களில்

இடம்பெறுவதால் மேலே குறிப்பிட்ட கதைகள் அந்தந்தக் காலத்திற்கேற்பக் கூறப்பட்டன எனலாம். மேலும், கபிலர் என்ற தொன்மையான புலவரின் புலமைத் தன்மையின் புகழ்மாலைகளாகவும், கட்டுக்கதைகளாகவும் சமூகம் அங்கீகரிப்பதற்கான செய்திகளையும் காலத்திற்கேற்ப வழங்கி வந்திருக்கின்றனர். என்பதும், கபிலரின் பெயரைக் கொண்டிருந்தால்தான் படைப்புக்கு மரியாதை கிடைக்கும் என்ற நிலையினாலும் இத்தகு செய்திகளின் பின்னணிகள் அமைந்ததையே மேற்கண்ட கருத்துக்கள் காட்டுகின்றன.

ஆதலால், கபிலர் பிறப்பு பற்றிய கதைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருந்தாலும் அக்கதை பற்றிய வரலாறு பிற்காலத்தில் இடம்பெற்ற ஒரு கபிலர்க்கு உரியது என்று கொள்ளப்படுகிறது.

2.8. முடிவுரை:-

தமிழ் இலக்கியங்களில் கபிலர் என்ற இயல் வழிப் பெறப்பட்ட முடிவுகள்.

1. காலந்தோறும் வரும் தமிழ் இலக்கியங்களில் கபிலர் என்ற பெயர் காணப்படுவதால் அனைத்துப் பாடல்களையும் சங்ககாலக் கபிலர் பாடல் எண்ணிக்கையிலே சேர்த்துக் கூறிவிடுகின்றனர்.

2. சங்கத் தொகைநூல்களில் இடம்பெற்றுள்ள சங்கப்புலவர்களில் கபிலர் பற்றியும், அவர் பாடிய பாடல்கள் பற்றியும், அவரின் பிறப்பு பற்றியும் யாரும் அறுதியிட்டுக் கூறவில்லை.

3. சங்க இலக்கியப் பாடல்களில் கபிலர், தொல்கபிலர் என்ற இரு-பெயர்கள் காணப்படுகின்றன.

4. சங்க மருவிய கால இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னா நாற்பது ஆசிரியரைக் 'கபிலர்' என்ற பெயரில் சில நூல்களும், 'கபிலதேவர்' என்ற பெயரில் சில நூல்களும் குறிப்பது _ அறியப்படுகிறது.

5. பக்தி இலக்கியத்தில் 11-ஆம் திருமுறையில் கபிலதேவநாயனார் என்ற பெயரில் மூன்று பாடல்கள் உள்ளதும், அப்பாடல்களைக் கபிலர் பாடிய சங்கப் பாடல்களோடு சேர்த்துக் கூறுவதும், அறியப்படுகிறது. இஃதன்றி, 'தேவநாயனார்' என்ற உபசாரத்தொடர் கபிலருக்கு மட்டுமின்றிப் பரணர், நக்கீரர், கல்லாடனார் ஆகிய சங்கப் புலவர்களுக்கும் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

6. பிற்கால இலக்கிய வகைகளில் கபிலர் என்ற பெயரில் பல தனிப்-பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை அனைத்தும் சங்ககாலக் கபிலர் பாடல்களோடு சேர்த்துக் கூறப்படுகின்றன என்பது பெறப்படுகிறது. இருப்பினும், காலம் கருதி அப்பாடல்கள் அனைத்தும் பின்வந்த, கபிலர் பெயர் தாங்கிய புலவர்களால் பாடப்பட்டிருக்கலாம் என்பது தெளிவாகிறது.

...56/-

****

சான்றெண் விளக்கம்:-

1. சாமிநாதய்யா, உ.வே.(பதி)'குறுந்தொகை' (பாடினோர் வரலாறு), ப.141.

2. சோமசுந்தரனார், பொ.வே.(பதி)'அகநானூறு' பதிப்பு, பாடல் எண்.12.

3. வேங்கடசாமி நாட்டார், ந.மு., மற்றும் பலர்(பதி)'அகநானூறு' (களிற்றியானை நிரை, பாடல் எண்.12).

4. இராசமாணிக்கனார், மா.,'திருவள்ளுவர் காலம் யாது?' ப.9.

5. மேலது, ப.9.

6. கோவிந்தன், கா., 'தமிழர் வரலாறு' (பகுதி-2), ப.376.

7. வையாபுரிப்பிள்ளை, எஸ்., 'தமிழ்ச்சுடர்மணிகள்', ப.50.

8. காந்தி, க., 'தமிழர் எண்ணங்கள்', ப.117.

9. சாமிநாதய்யர், உ.வே.(பதி) புறநானூறு, ப.226.

10. மேலது, பக்.233-234.

11. சாமிநாதய்யர், உ.வே.(பதி) பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், பாடல் எண்.68.

12. 'ஊன்தின்று ஊனைப் பெருக்குதல் முன்இன்னா' (22-2)
'கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்னா' (33-1)
'வருமனைப் பார்த்திருந்த ஊண்இன்னா' (36-3)
'வலைசுமந்து உண்பான் பெருமிதம் இன்னா' (12-2)
'புலையுள்ளி வாழ்தல் உயிர்க்கின்னா' (12-3)

(இன்னாநாற்பது பாடல் வரிகள்)

13. பாலசாரநாதன், க., 'சங்ககாலப் புலவர்கள்', ப.119.

14. துரைசாமிப்பிள்ளை, அ., தமிழ் நாவலர் சரிதை, ப.15.

15. மேலது, ப.15.

16. திருவள்ளுவநாயனார், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்' (திருவள்ளுவமாலை), ப.509.

17. இராசமாணிக்கனார், மா., 'திருவள்ளுவர் காலம் யாது', ப.28.

18. அரங்கராசன், ச., மருதூர், 'இலக்கண வரலாறு' (பாட்டியல் நூல்கள்), ப.138.

19. மேலது, பக்.114-115.

20. மேலது, ப.120.

21. சாமிநாதய்யர், உ.வே.(பதி.) புறநானூறு, பாடல் எண்.8.

22. மேலது, பாடல் எண்.108.

23. மேலது, பாடல் எண்.107.

24. மேலது, பாடல் எண்.109.

25. மேலது, பாடல் எண்.201.

26. கபிலர், 'கபிலரகவல்', பக்.1-2.

27. சாமிநாதய்யர், உ.வே.(பதி.)'புறநானூறு', பா.எண்.201.

28. மேலது, பாடல் எண்.200.

29. மேலது, பாடல் எண்.126.

30. சாமிநாதய்யர், உ.வே., 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரை'யும், பாடல் எண்.63.

31. புலியூர் கேசிகன், 'பரிபாடல் தெளிவுரை', பக்.36-37.

32. பாலசாரநாதன், க., 'சங்ககாலப் புலவர்கள்', பக்.118-119.

33. மேலது, ப.119.

34. மேலது, ப.

35. நடராசன், நவாலியூர், 'வடமொழி இலக்கிய வரலாறு', ப.145.

36. சேனாவரையர்(உ.) 'தொல்காப்பியம்' (சொல்லதிகாரம்), ப.74.

37. மேலது, ப.97.

38. மேலது, ப.97.

39. மேலது, ப.99.

40. பாலசாரநாதன், க., 'சங்ககாலப் புலவர்கள்', ப.118.

41. துரை அரங்கசாமி, மொ.அ., 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்', ப.71.

42. மேலது, ப.71.

43. சிங்காரவேலு முதலியார், ஆ., 'அபிதான சிந்தாமணி', பக்.335-337.

44. சாமிநாதய்யர், உ.வே.(பதி.) 'புறநானூறு', பாடல் எண்.337.

45. துரைஅரங்கசாமி, மொ.அ., 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்', ப.72.

46. சாரங்கபாணி, இரா., 'சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்', (தொகுதி-2), ப.116.

47. சாமிநாதய்யர், உ.வே., 'சங்க இலக்கியப் பதிப்புகள்' (பாடினோர் வரலாறு).

48. வேங்கடராமன், ப.'நற்றிணை மூலமும் உரையும்', பாடல் எண்.114.

49. கபிலரகவல், ப.22.

50. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', ப.3.

51. மேலது, பக்.3-4.

52. மேலது, ப.4.

53. மேலது, ப.5.

54. மேலது, ப.10.

55. வேங்கடசாமி நாட்டார், ந.மு., 'கபிலர்', பக்.30-31.

56. [illegible]rinivasa [illegible]iyangar, M., '[illegible]amil Studies', p.2[illegible]8.

57. [illegible]amachandra [illegible]ikshitar, [illegible], '[illegible]tudies in [illegible]amil [illegible]iterature [illegible]', [illegible].

* * *

பலி : படுண

சங்க சாயக் கம்பனி

3. சங்ககாலக் கபிலர்

3.1. முன்னுரை

3.2. சங்ககாலம்

3.2.1. சங்ககாலம் - ஆண்டு வரையறை.

3.2.1.1. களப்பிரர் - பல்லவர்களின் தமிழக நுழைவு.

3.2.1.2. சங்க காலத்தின் தொடக்கம் பற்றிய வரையறை

3.3. சங்கப் பாடல்கள்.

3.3.1. சங்க இலக்கியங்கள்.

3.3.1.1. எட்டுத்தொகை நூல்கள்.

3.3.1.2. பத்துப்பாட்டு நூல்கள்.

3.4. சங்க இலக்கியப் புலவர்கள்.

3.5. சங்க காலக் கபிலர்.

3.5.1. கபிலர் - தொல்கபிலர் இருவரும் ஒருவரே.

3.5.2. சங்ககாலக் கபிலர் பாடல்கள்.

3.5.3. கபிலர் பாடலில் உள்ள எண்ணிக்கை மாற்றங்கள்.

3.5.3.1. நற்றிணை

3.5.3.2. அகநானூறு.

* * *

3. சங்ககாலக் கபிலர்

3.1. முன்னுரை:-

தமிழ் இலக்கியத்தில் கபிலர் என்ற பெயர் காலந்தோறும் இடம்பெற்றிருந்தது கால அடிப்படையில் முன்இயலில் ஆராயப்பெற்றது. எனவே, இவ்வியலில் சங்ககாலக் கபிலர் என்ற பெயர் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆராயப்படுகிறது. சங்க-காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படும் கபிலரைப் பற்றிய ஆய்வு இங்கு முதன்மைப்-படுத்தப்படுவதால் சங்ககாலம் பற்றிய வரையறையும், சங்க இலக்கிய வரையறையும் இங்குத் தெளிவாக்கப்படுகின்றன.

மேலும், சங்ககாலக் கபிலர் யார்? அவர் பாடிய பாடல்கள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் முகமாகவும் இவ்வியல் அமைகின்றது.

3.2. சங்ககாலம்:-

ஆய்வறிஞரிடையே 'சங்ககாலம்' என்ற வரையறை பற்றியும், 'சங்கம்' என்ற அமைப்பு குறித்தும் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. இத்தகைய கருத்து மாறுபாடுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தெளிவுபடுத்தப்படாமலேயே இன்று வரையில் தொடர்கின்றன.

எனவே, சங்ககாலம் எதுதான், அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் இவைதான் என்று அறுதியிட்டுக் கூறுவதற்குத் தற்போது கிடைக்கின்ற இலக்கண இலக்கியச் சான்றுகள், உரையாசிரியர் குறிப்புகள், பிற்பொழு இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் ஆகியவற்றின் வழி கிடைக்கும் கருத்துக்களால் ஒருவாறு தெளியலாம்.

சங்ககாலம், சங்ககாலத்தைச் சேர்ந்த இலக்கியங்கள் என்று அறிவதற்கு முதன்மைச் சான்றாக இருப்பது இறையனார் அகப்பொருள் உரையே என்று கருதப்படுகிறது. இவ்வுரையினை அடிப்படையாகக் கொண்டே சங்ககாலம் குறித்தும் சங்க இலக்கியங்கள் குறித்தும் ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறி வருகின்றனர். எனவே, 'சங்ககாலம்' என்பது எக்காலம் என்பது தெளிவாக்கப்பட வேண்டிய ஒரு வினாவாகின்றது.

இறையனார் களவியல் உரை முதல், இடை, கடைச் சங்கங்களைப் பற்றிய வரலாற்றைத் தருகின்றது. இம்மூன்று சங்கங்களின் வரலாறும் அழிவும் உண்மையா, இல்லையா என்பதைப் பின்வரும் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இலங்கையில் பல கடல்கோள்கள் நிகழ்ந்துள்ளன என்பதை 'மகாவம்சம்', 'இராசாவளி' போன்ற இலங்கை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.[1] இவற்றில் இரண்டாம் கடல்கோளே இலங்கையில் பெரும்பகுதியை அழித்தது என்றும், பின்

கபாடபுரம் உள்ளிட்ட தமிழகத்துச் சில பகுதிகளை அழித்தது என்றும் கூறப்படுகிறது. மேலும்,

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரி கோடும் கொடுங்கடல் கொள்ள"[2]

என்றமையும் சிலப்பதிகார அடிகள் இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே குமரியாறு பாயப்பெற்ற பெருநிலப்பகுதி இருந்தது என்பதைத் தெளிவுறுத்துகின்றன. இந்நிலப் பகுதியில் பாண்டியர் தலைநகரான மதுரை இருந்தது என்றும், அங்கேயே முதற்சங்கம் நிகழ்ந்தது என்றும் இறையனார் களவியல் உரைவழி அறியப்படுகிறது.

எனவே, முதற்சங்கம் நடந்த கபாடபுரம் கிழக்குக் கரை ஓரத்தில் தலைநகரமாக இருந்ததாகவும் அது கடல்கோளால் அழிந்த பிறகு மதுரை, பாண்டியர் தலைநகரமாக மாறியது என்றும் அறியப்படுகிறது. இக்கருத்துக்களினால் முதற்சங்கமாகக் கூறப்படும் கடைச்சங்கம் மட்டும் அழியாது இன்றைக்கு இருக்கும் மதுரையில் நிலைத்திருந்தது என்பது உணர்ந்து கொள்ளத்தக்கது.

மதுரையில் தமிழ்ச்சங்கம் என்ற பெயரில் 'சங்க மண்டபம்' ஒன்று இருந்ததற்கு அடையாளமாகச் சோமசுந்தரக் கடவுள் கோயிலின் பெரிய பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் சங்கப்புலவர்கள் கோயிலொன்று உள்ளது. அதில் 49 புலவர்கள் உருவச்சிலையும் (பிம்பமும்), சரசுவதி தேவியின் உருவமும் (பிம்பமும்) இருப்பது

தெரியவருகிறது.[3] இக்கருத்துக்களினால் மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்ததாகவும், அங்குச் சங்கத் தமிழ்ப்புலவர்கள் கூட்டம் ஒன்று இருந்ததாகவும் பலர் உறுதி செய்துவிடுகின்றனர்.

சங்ககாலத்தில் சரசுவதி என்ற கடவுள் குறிக்கப்படாமைக் கொண்டும், சங்கச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிலைகளாக இவை இருந்திருக்கலாம் என்று மட்டும் ஊகிக்க முடிகிறது.

மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டியர்கள் வடமொழியில் உள்ள மகாபாரதத்தைத் தமிழில் மொழிப் பெயர்க்கச் செய்தனர் என்ற செய்தியை,

"மாபாரதந் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச் சங்கம்வைத்தும்"[4]

எனவரும் பாண்டிய இராஜசிம்மன் சின்னமனூர்ப் பெரியச் செப்பேட்டுத் தொடர்கள் விளக்குகின்றன. இத்தமிழ்ச் சங்கத்தை அப்போது ஆட்சிப்புரிந்த பாண்டிய மன்னர்கள் ஆதரித்தனர் என்பதற்கு,

"தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனமூன்று
சங்கம் இரீஇயினார் பாண்டியர்"[5]

என்று அமையும் இறையனார் அகப்பொருள் உரைப்பகுதிச் சான்றாகிறது. மேற்கூறிய

அக்கருத்தினையே பாண்டியன் பராந்தக வீர நாராயணனின் தளவாய்ப்புரச் செப்பேட்டில்,

"மன்னெதிரா வகைவென்று தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனில் அருந்தமிழ்நற் சங்கம் இரீஇத்
தமிழ் வளர்த்தும்....."[6]

எனவரும் வரிகள் அறிவிக்கின்றன.

எனவே, மேற்சுட்டியவற்றில் இருந்து 'தமிழ்ச்சங்கம்' என்ற ஓர் அமைப்பு மதுரையில் இருந்துள்ளது என்பதும், அப்போது அரசாண்ட பாண்டிய மன்னர்கள் தமிழையும் தமிழ் அறிஞர்களையும் போற்றினர் என்பதும் தெரியவருகின்றன. அவ்வாறு மதுரையில் சங்கம் அமைத்துத் தமிழ் ஆராய்ந்த காலம் எது என்பது இங்கே ஆராய்தற்குரியதாகிறது.

3.2.1. சங்ககாலம் - ஆண்டு வரையறை :-

தமிழக வரலாற்றிலும், தமிழிலக்கிய வரலாற்றிலும் காலக்கணிப்பு முற்றுப் பெறாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. பாண்டியர் வழிவழிச் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தகாலம் சங்ககாலம் என்பது பெறப்பட்டது. அக்காலம் எந்த ஆண்டில் தொடங்கி எந்த ஆண்டில் முடிவுற்றது என்பதை இதுவரை யாரும் தெளிவுபடக்

கூறவில்லை. எனினும், இலக்கிய அறிஞர்கள் சங்ககாலத்தை ஒரு சில சான்றுகளுடன் வரையறை செய்துள்ளனர். அவர்களின் காலக்கணிப்பு இங்கு ஆராயப்படுகிறது.

1. சி.வை. தாமோதரம்பிள்ளை சங்ககாலத்தை அநாதரக்காலம் அல்லது புத்தர் காலம் என்று குறிப்பிட்டு அக்காலக்கட்டத்தை கி.மு.150 முதல் கி.பி.50 வரை என்று வரையறை செய்வது அறியத்தக்கது.[7]

2. வி.கோ. சூரியநாராயண சாத்திரியார் சங்ககாலத்தை ஆதிகாலம் என்ற பெயரில் கி.மு.8000 முதல் கி.பி.100 வரை என்று வரையறைப் படுத்துகிறார்.[8]

3. கே.என். சிவராஜபிள்ளை, சங்ககால மன்னர்கள் காலத்தைக் கி.மு.50-ஆம் ஆண்டில் இருந்து கி.பி.200-ஆம் ஆண்டுவரை குறிப்பிட்டு, அக்காலத்தைப் பத்துத்தலை-முறையாகப் பகுத்து அவற்றில் மூவேந்தர்களையும் பொருத்திக் காட்டியிருப்பது உணர்தற்குரியது.[9]

4. சீனிவாச ஐயங்கார் சங்ககாலத்தைக் கி.மு.600-200 முதல் கி.மு.200-கி.பி.150 வரை என்று இருவேறு நிலைகளில் கூறுகிறார்.[10]

5. இராசமாணிக்கனார், சங்ககாலம் பற்றிக் கூறும்போது சங்ககாலத்தின் கீழ் எல்லை கி.பி.300 என்றும் மேல் எல்லை வரையறுத்துக் கூற இயலாத பழமையுடையது என்றும் குறிப்பிடுகிறார்.[11] இவரே தனது மற்றொரு நூலில் கடைச்சங்க காலம் என்பது கி.மு.300 முதல் கி.பி.300 வரை கொள்ளத் தக்கது என்று சுட்டிச் செல்வர்.

6. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியரது தலைநகராகிய மதுரையில் விளங்கிய கடைச்சங்கம் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் முதற்பகுதியில் முடிவெய்தியது என்பது ஆராய்ச்சியாளரது கொள்கை என்று தன் கருத்திற்கு அரண் சேர்க்கிறார்.[12]

7. மயிலை.சீனி. வேங்கடசாமி, கடைச்சங்கக் காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் அரசியல் நிலைமை இன்னதென்று தெரியாமல் சரித்திரத்தில் இருண்டகாலமாக இருந்தது என்று குறிப்பிட்டு, பின் கடைச்சங்க காலத்தின் முடிவு ஏறத்தாழ கி.பி.250-ஆக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது என்ற கருத்தினை முன் வைக்கிறார்.[13]

8. வையாபுரிப்பிள்ளை, சங்ககாலத்தைக் கி.பி.2 அல்லது கி.பி.3 ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுவர். வேறொரு நூலில் கி.பி.100-300 என்று முதலில் குறிப்பிட்டுப் பின், பலரின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டிச் சங்ககாலம் கி.பி.150 முதல் கி.பி.300 வரை நிகழ்ந்துள்ளது என்று வரையறை செய்கிறார்.[14]

9. கா. கோவிந்தன், சங்ககாலத்தை வரையறை செய்யும்போது, கிடைத்துள்ள வரலாற்றுச் சான்றுகள் அனைத்தும் சங்ககாலம் கி.பி.2-ஆம் நூற்றாண்டு என்பதையே உறுதிசெய்கின்றன[15] என்கின்றார். மேலும், சங்ககாலம் பற்றிக் கி.பி.2-ஆம் நூற்றாண்டு என்றும், கி.பி.5-ஆம் நூற்றாண்டு என்றும் ஊர்ஜிதமாகப் பிறர் கூறும் கருத்தையும் சுட்டிச் செல்கிறார். மற்றொரு நூலில் சங்ககாலம் கி.பி.100 அல்லது கி.பி.150 ஆண்டுகள் நீடித்து இருந்தது என்று இவரே வரையறையும் செய்வது[16] அறியத்தக்கது.

10. ந. சுப்பிரமணியன் 1000 ஆண்டு காலத்தைச் சங்ககாலமாகக் கூறுதல் பெரும்பாலோர்க்கு உடன்பாடன்று என்பதைச் சுட்டிக் காட்டி, கி.மு.4-ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது தமிழ்ச்சங்ககாலம் என்று கொள்ளுதலே சிறந்தது என்று விளக்கம் தருகின்றார்.[17]

மேற்சுட்டிய அறிஞர்களில் பலர் சங்ககாலம் பற்றி வரையறை செய்வதில் ஒரு தெளிவான கருத்தை முன் வைக்கவில்லை என்பது உணரப்படுகிறது.

1. அவர்களில் சங்ககாலத்தின் இறுதியைக் கி.பி.300 என்று கூறுவதில் மா.இராச-மாணிக்கனார், எஸ். வையாபுரிப்பிள்ளை, தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், ந. சுப்பிரமணியன், சீனி. வேங்கடசாமி ஆகிய ஐவரும் ஒன்றுபடுகின்றனர்.

2. கி.பி.200-இல் முடிவுற்றது என்று சே.என். சிவராஜுப்பிள்ளை, கா. கோவிந்தன் ஆகிய இருவரும் கூறுகின்றனர்.

3. கி.பி.150-இல் முடிவுற்றது என எம். சீனிவாச ஐயங்காரும், கி.பி.100-இல் முடிவுற்றது எனச் சூரியநாராயண சாத்திரியாரும், கி.பி.50-இல் முடிவுற்றது எனத் தாமோதரம்பிள்ளையும் கூறுவது அறியப்படுகின்றது.

இவ்வாறு, சங்ககாலத்தின் முடிவு கி.பி.50-முதல், கி.பி.300 வரை ஐந்து நிலைகளில் கொண்டு செல்வது அறியத்தக்கது.

- -

சங்ககாலத்தின் தொடக்கத்தினைக் கி.மு.8000 என்று சூரியநாராயண சாத்திரியாரும், கி.மு.600-200 என்று எம். சீனிவாச ஐயங்காரும், கி.மு.4-ஆம் நூற்றாண்டு என்று ந. சுப்ரமணியனும், கி.மு.300 என்று மா. இராசமாணிக்கனாரும், கி.மு. 50 என்று கே.என். சிவராஜப்பிள்ளையும் வரையறை செய்வது அறியப்படுகிறது.

எனவே, சங்ககாலத்தின் தொடக்கத்தினைக் குறித்தும் முடிவினைக் குறித்தும் வேறு வேறு கருத்துக்கள் நிலவுவது அறியப்படுகிறது. இருப்பினும், மேற்சுட்டப்பட்ட கருத்துகளில் இருந்து, சங்ககாலம் என்பது கி.மு.வில் தொடங்கி, கி.பி.யில் முடிவடைந்து உள்ளது என்பது தெளிவாகிறது.

சங்ககாலத்தின் இறுதியைக் கூறுவதற்குப் பெருந்துணைபுரிவது, சங்ககாலத்திற்கு அடுத்த காலமான களப்பிரர், பல்லவர்கள் ஆட்சிக்காலமாகும். அவர்களின் காலம் இங்கு ஒருவாறு ஆராயப்படுகிறது.

3.2.1.1. களப்பிரர்-பல்லவர்களின் தமிழக நுழைவு:-

தமிழக வரலாற்றைக் கற்காலம் தொட்டுத் தற்காலம் வரை வரலாற்றாசிரியர்கள் எழுதி வருகின்றனர். இருப்பினும், சங்ககாலத்தை அடுத்த காலமான கி.பி. 3-ஆம் நூற்றாண்டு காலத்தில் தமிழகத்தின் நிலை என்ன என்பதை இதுவரை யாரும் தெளிவுபடக் கூறியதாகக் காணப்படவில்லை. இக்காலக்கட்டத்தில் களப்பிரர் என்னும் அயலார் இங்கு ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் யார், இவர்களது பண்பாடு என்ன,

...69/-

தமிழக ஆட்சிப் பரப்பில் இவர்களால் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை போன்றவற்றை அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை. இக்காரணங்களாலேயே சங்க காலத்திற்குப் பிறகு கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6-ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழக வரலாற்றை 'இருண்ட காலம்' என்று குறிப்பிட்டுள்ளனர் எனக் கருத வேண்டியுள்ளது.

வேள்விக் குடிச்செப்பேடு வெளியான பிறகுதான், களப்பிரரைப் பற்றிய செய்திகள் தெரிய வந்தன. இதன்பிறகே களப்பிரரைப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதத் தொடங்கினர். ஆனால், களப்பிரரைப் பற்றிய முழு விவரம் இன்னும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றியது எப்பொழுது என்று காணும் போது வரலாற்றாசிரியர்களிடையே பல மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. வடுகக் கருநடராகிய களப்பிரர் தமிழகத்தைக் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ கி.பி.250-இல் அல்லது அதற்குச் சற்றுப் பின்னர் கைப்பற்றிச் சேர, சோழ, பாண்டிய நாட்டையரசாண்டனர்[18] என்று பொதுவாக அனைவராலும் குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், சில வரலாற்றாய்வாளர்களிடையே மாறுபட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன.

கே.ஏ. நீலகண்ட சாத்திரி தமிழ்நாட்டில் கி.பி.275-இல் களப்பிரர் ஆட்சி

...76/-

ஏற்பட்டது என்று கூறுகின்றார்.[19] கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் கருதுகிறார்.[20]

சங்கம் (வச்சிரநந்தி கி.பி.470-இல் நிறுவிய திராவிட சங்கம்) கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்டது. கி.பி.6-ஆம் நூற்றாண்டு தொடங்கியபோது தமிழ்நாட்டின் அரசியலில் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தக் காலத்தில்தான் களப்பிரர் படையெடுப்பும், அவர்கள் பாண்டி நாட்டைக் கைப்பற்றியதும் நிகழ்ந்தன என்று எம்.என். இராமசாமி அய்யங்கார் கூறுகிறார்.[21] இக்கருத்தைச் சீனி. வேங்கடசாமி மறுத்துரைத்துக் கூறுகையில், களப்பிரர் தமிழகத்தை ஆட்சிசெய்யத் தொடங்கிய பிறகுதான் வச்சிரநந்தியின் திராவிட சங்கம் ஏற்பட்டதே தவிர, வச்சிர நந்தியின் திராவிட சங்கம் ஏற்பட்ட பிறகு களப்பிரர் ஆட்சி ஏற்படவில்லை என்கிறார். ஆகவே, கி.பி.6-ஆம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது என்று கூறுவது தவறு எனச் சுட்டி விளக்கம் தருகின்றார். எனவே, களப்பிரர் ஆட்சித் தமிழகத்தில் கி.பி.3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது எனக் கூறவியலும் என்கிறார்.[22]

களப்பிரர் ஆட்சியின் அழிவிற்குக் காரணமாக விளங்கியவர்கள் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னனும், சிம்ம விட்டுணு என்ற பல்லவ மன்னனும் ஆவர். சிம்மவிட்டுணு வாழ்ந்த காலமாகக் கி.பி.575-ம், கடுங்கோன் வாழ்ந்த காலமாகக் கி.பி.590-ம் கூறப்படுகின்றன.[23]

மேற்கூறியவற்றால் களப்பிரர்கள் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர்கள்; கி.பி.6-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழகத்தை ஆண்டவர்கள் என்பது புலனாகின்றது. எனவே, களப்பிரர் கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகம் வந்து கி.பி.6-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்துள்ளனர் என்பதை உணர இயலும்.

இதே காலக் கட்டத்தில் பல்லவர் என்ற அரசமரபினரும் தமிழகத்தினைச் சுமார் கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் சிறிதுசிறிதாக ஆளத் தொடங்கினார்கள் என்று குறிக்கப்படுகிறது.[24] இவர்களைப் பற்றிய தெளிவான வரலாற்றைக் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதி முதலே அறியமுடிகிறது. தமிழகத்தில் இவர்கள் எப்போது ஆட்சியை ஏற்படுத்தினர் என்பது போன்ற செய்திகளைத் தெளிவாக அறிவதற்கில்லை. எனினும், கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் ஆட்சிச் செய்யத் தொடங்கிய இவர்களது வரலாறு இருவகையாகப் பகுத்துக் கூறப்படுகிறது. அவை,

1. கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரையில் உள்ளவர்கள் தொடக்ககாலப் பல்லவர்கள் என்றும். 2. கி.பி.6-ஆம் நூற்றாண்டின் பின் ஆண்டவர்கள் பிற்காலப் பல்லவர்கள் என்றும்[25] என அறியப்படுகின்றன.

பல்லவர்கள் கி.பி.315-முதல் தமிழகத்தில் ஆட்சி செய்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.[26] இதில் முதலாம் சிவஸ்கந்தவர்மன் என்பவனே முதல் பல்லவ மன்னனாகக் குறிக்கப்படுகின்றான் (கி.பி.315-கி.பி.345).

...72/-

வட இந்தியாவில் கி.பி.4-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் பேரரசனாக இருந்த சமுத்திரகுப்தன் விந்தியமலைக்குத் தென்பால் படையெடுத்துவந்து அரசர் பலரை வென்றான் என்றும், அவர்களுள் காஞ்சியை ஆண்ட 'விட்டுணுகோபன்' (கி.பி.350-கி.பி.355) என்னும் பல்லவன் ஒருவன் என்றும் அக்குப்தனது அல்லகாபாத் தூண் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[27]

கி.பி.300-இல் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பல்லவர்கள் கி.பி.900 வரையில் தென்னிந்தியாவில் பேரரசர்களாக இருந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது. எனவே, கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டைமண்டலம் பல்லவர் என்ற அரச மரபினர் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது.

இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இருந்த பல்லவரைப் பற்றி மிகப்பழைய தமிழ்நூல்கள் என்று கருதப்படும் தொகைநூல்களிலும், காவியங்களிலும் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரு காப்பியங்களும் காஞ்சியைப் பற்றிப் பல இடங்களில் குறித்தாலும் பல்லவ அரசருள் ஒருவரைப் பற்றியேனும் குறிப்புகள் இடம்பெறாதது கவனிக்கத்தக்கது.

இதேபோன்று அச்சுதவிக்கந்தன் என்னும் அரசன் சோழ நாட்டை ஆண்டு பௌத்த சமயத்தை ஆதரித்ததாக ஏறத்தாழ கி.பி.450-இல் வாழ்ந்த புத்ததத்தர் என்ற பௌத்த நூலாசிரியர் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.[28] ஆனால்,

தக்களப்பிரரைப் பற்றிய குறிப்புகளும் சங்க நூல்களில் காணப்படவில்லை என்பதும் கருதத்தக்கது.

இங்ஙனம், கி.பி.300-க்குப் பிறகு தமிழகத்தில் நுழைந்து ஆதிக்கம் கொண்ட பல்லவரைப் பற்றியோ, களப்பிரரைப் பற்றியோ சங்கத் தொகை-நூல்களிலும், காவியங்களிலும் குறிப்புகள் காணப்படாமையின் சங்க நூல்கள் கி.பி.300-க்கு 'முற்பட்டன என்பது தெள்ளிதின் உணரத்தக்கது.

எனவே, தமிழகத்தைச் சங்ககாலத்திற்கு அடுத்த காலக் கட்டப்பகுதியில் களப்பிரர் என்ற அரச மரபினரும், பல்லவர் என்ற அரச மரபினரும் ஆட்சி செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. அதில், கி.பி.3-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி (கி.பி.250) முதல், கி.பி.6-ஆம் நூற்றாண்டின் (கி.பி.600) முடிவுவரையிலான, கால கட்டத்தில் தமிழகத்தின் வடக்கில் முற்காலப் பல்லவர்களும் நடுப்பகுதியில் களப்பிரர்களும் ஆண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், சங்ககாலத்தின் முடிவு கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று வரையறை செய்யப்படுகிறது. ஆனால், அதன் தொடக்ககால வரையறை, தெளிவாக்கப்படாது இருப்பது தெரியவருகிறது.

3.2.1.2. சங்ககாலத்தின் தொடக்கம் பற்றிய வரையறை:-

கடைச்சங்ககாலத்தின் இறுதி கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று

மன் கட்டப்பெற்றது. அக்காலத்தின் தொடக்கம் ஏறத்தாழ கி.மு.4-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று தக்க சான்றுகள் கொண்டு நிறுவியுள்ளனர்.[29] இன்றுள்ள தொகை நூற் பாடல்களை நடுவுநிலையினின்று ஆராயின் இன்றுள்ள பாக்களில் சில கி.மு.1000 வரை செல்கின்றன என்றும் கூறப்படுகிறது.

வடமொழியில் ஆதிகாவியம் பாடிய வான்மீகியார் என்ற புலவர் புறநானூற்றில் (புறம்:358) ஒரு பாடல் பாடியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விருவரும் ஒருவரே என்று செந்தமிழ் இதழாசிரியராகிய நாராயண ஐயங்கார் கருத்துத் தெரிவித்துள்ளார் என்ற செய்தி அறியப்படுகிறது.[30] இவரின் கருத்து ஏற்புடையதாயின் புறநானூறு பாடல் பாடிய வான்மீகியாரின் காலம் ஏறக்குறைய கி.மு.600 எனக் கொள்ளலாம்.

புறநானூற்றில் பாடியோர் வரலாறு கூறும்போது அதில் வான்மீகியார் இருவர் இருந்தனர் என்று கூறப்படுகிறது.[31] இக்கருத்துப்படி நோக்கின் வான்மீகியார் என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர் என்ற கருத்துப் பெறப்படுகிறது. இதனால் இராமகாதையைப் பாடிய வான்மீகியாரும், புறநானூறு பாடிய வான்மீகியாரும் வேறு வேறானவர்களாக இருக்கலாம் என்று உணரப்படுகிறது. எனவே, கி.மு.600 என்று கூறப்படும் காலம் எந்த வான்மீகியார்க்கு உரியது என்பது சிக்கலுக்குரியது.

வடமொழியில் ஆதிகாவியம் பாடிய வான்மீகியாரின் காலம் கி.மு.600. ஆனால், சங்க இலக்கியத்தின் தோற்றம் கி.மு.300 என்று அறிஞர்களால்

குறிக்கப்படுகிறது. எனவே, கால வேறுபாடு இரண்டிற்கும் அடிப்படையாகின்றது. இதனால் வடமொழி, புறநானூறு பாடல் பாடிய வான்மீகியார்கள் ஒருவரே என்பது வினாவுக்குரியது. மேலும், இருவரும் ஒருவரே எனக் கருதின் வடமொழியில் ஒரு காவியத்தையே பாடிய வான்மீகியார் தமிழில் ஒரேஒரு பாடலை மட்டும் பாடியிருக்க முடியுமா என்றும் வினா எழுகின்றது. இங்குப்பெயர் ஒற்றுமையைத் தவிர வேறு ஒற்றுமைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, வான்மீகியாரின் பாடல்கொண்டும் சங்க இலக்கியத்தின் தோற்றம் அறிவதற்கில்லை என்பது பெறப்படுகிறது.

அடுத்து, சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெறும் 'நந்தர்' என்ற சொல்லைக் கொண்டும் சங்ககாலத்தின் தொடக்கம்பற்றிச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மாமூலனார் அகநானூற்றில் இரண்டு (அகம்:251,268) பாடல்களில் நந்தர் என்ற பெயரினைக் குறிப்பிடுகிறார். அதில் நந்தன் பெருஞ்செல்வத்தை உடையவன் என்று,

"நாம்படக் கூறாம் அருந்துயர் கேட்பின்
நந்தன் வெறுக்கை எய்தினும், மற்று அவண்
தங்கலர் - வாழி தோழி......." (அகம்:251)[32]

எனவரும் பாடல் வரிகள் மூலமும், நந்தன் பாடலிபுரத்தில் திரட்டிய பெருஞ்செல்வத்தைக் கங்கையாற்றுப் படுகையில் ஒளித்து வைத்தது,

...70/-

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ ? ....
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தாங்கிய பொருளே"

(அகம்:265)[33]

எனவரும் பாடல் வரிகள் மூலமும் அறியப்படுகிறது.

கி.மு.4-ஆம் நூற்றாண்டில் 'நந்தர்கள்' கங்கையாற்றில் செல்வத்தை ஒளித்துவைத்த செய்தியை உவமையாகக் கையாளும் மாமூலனார் கி.மு.3-ஆம் நூற்றாண்டிலோ அல்லது கி.மு.2-ஆம் நூற்றாண்டிலோ வாழ்ந்திருக்க வேண்டும் என்பர்.

மாமூலனார் தம் பாடல்களில் தம் காலத்து வரலாற்றுச் செய்திகளை மட்டுமின்றி, பழங்காலத்து வரலாற்றுச் செய்திகளையும் கூறிச் செல்வதைச் சங்கப்-பாடல்கள் வழி அறியலாம். எனவே, நந்தர்களை நன்கு தெரிந்த புலவராக மாமூலனார் இருந்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.மு.4-ஆம் நூற்றாண்டு செய்தியினைக் குறிப்பிடும் மாமூலனார் கி.மு.4 அல்லது அதற்குப்பின் அப்பாடலைப் பாடியிருக்க வேண்டும் என்பது உய்த்துணரப்படுகிறது.

நந்தர்களின் காலத்தைத் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் தனது நூலில் மறுத்துக் கி.பி.5-ஆம் நூற்றாண்டு என்று கூறுவர்.[34] ஆனால், இவரின் கருத்து ஏற்புடையது அல்ல. ஏனெனில், சங்ககாலத்தின் இறுதி கி.பி.3-ஆம் நூற்றாண்டில் முடிவுற்றது என்பது களப்பிரர், பல்லவர் இவர்களின் தமிழக நுழைவினால் அறியப்பட்டது. எனவே, நந்தர்களின் காலம் கி.பி.5-ஆம் நூற்றாண்டாக இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

கங்கையாற்றுக்கரையில் இருந்த பாடலிபுரத்தினை அரசாண்ட நந்தர்கள் மோரியர் என்ற ஒரு இனத்தார்க்கு முற்பட்டவர்கள் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இவர்களது ஆட்சிக்காலம் கி.மு.413-க்கும் கி.மு.322-க்கும் இடைப்பட்ட காலம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[35] இக்கருத்துப்படி நோக்கின் நந்தர்கள் கி.மு.4-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்கள் என்பது தெரியவருகிறது.

எனவே, மேற்சுட்டிய இரு அகநானூற்றுப் பாடல்கள் துணைகொண்டும், நந்தர் என்ற சொல் குறிப்புக் கொண்டும் சங்ககாலம் கி.மு.வில் தொடங்கியுள்ளது என்பது புலப்படுகிறது. இக்கருத்து மட்டுமின்றிக் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் நடந்த மற்றொரு நிகழ்ச்சியும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

நந்தர் ஆட்சியைக் கைப்பற்றி, மகதப் பேரரசின் அரசனாகச் சந்திரகுப்த மௌரியன் கி.மு.324 முதல் கி.மு.300 வரை ஆட்சி செலுத்தினான் என்ற வரலாற்றுச் செய்தி அறியப்படுகிறது. அவனுக்குப்பின் அவன் மகன் பிந்துசாரன்

...78/-

கி.மு.300 முதல் கி.மு.272 வரை ஆண்டான். பிந்துசாரனுக்குப்பின் அசோகர் கி.மு.272 முதல் கி.மு.232 வரை ஆட்சி செலுத்தினார் என்கிற செய்தியும் தெரியவருகிறது.[36]

மௌரியப் பேரரசனாகிய பிந்துசாரன் கி.மு.272-இல் ஆட்சி புரிந்து தென்னாட்டின் மீது படையெடுத்தான் என்கின்ற செய்தியினைச் சங்க இலக்கியப் பாடல்கள் விளக்குகின்றன.[37] இவ்வரசன் 28 ஆண்டுகள் ஆட்சிச் செலுத்தியுள்ளான் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இவ்வரசன் காலத்தில்தான் (கி.மு.300 - கி.மு.272) மோரியப் படைவீரர்கள், வடுகர்படை, கோசர்படை என்பனவற்றுடன் தமிழகத்தினுள் நுழைந்து, பல இடங்களில் திரிந்து வெற்றியும், தோல்வியும் பெற்று இறுதியில் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்பவனால் முற்றிலும் முறியடிக்கப்-பட்டுத் திரும்பினார்கள் என்ற செய்தி புறநானூற்றுப் (புறம்:175, 378) பாடல்களாலும், அகநானூற்றுப் (அகம்:69,251,281) பாடல்களாலும் தெரியவருகின்றது.

மோகூர் மன்னர்கள் பணியாததால் மோரியர் படையெடுத்து வந்தார்கள் என்ற செய்தியினை,

"தென்முனை சிதைத்த ஞான்றை மோகூர்ப்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

...79/-

புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வறைவாய் உம்பர்"[38]

(அகம்: 251)

என வரும் அகநானூற்றுப்பாடல் விளக்குகிறது. "வலிமைமிக்க வடுகர் முன்செல்ல, மோரியர் என்பார் தென்திசை நாடுகளைப் பிடிக்க வெண்ணிப் போந்த வருகைக்கு வானளாவ உயர்ந்த பனியுடைய பெரிய மலையினைத் தமது ஒளிய கதிர்களையுடைய சக்கரம் தடையின்றிச் செல்ல வேண்டி வெட்டிவழியாக்கிய பாறைகளைக் கடந்து... (அகம்: 281) என்ற செய்தியை,

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரிஉருளிய குறைத்த[39] (அகம்: 281)

என வரும் பாடல் வரிகளாலும், விண்ணைத் தொடும் நீண்ட குடையையுடைய தேரில் மோரியர் வந்தனர் என்ற செய்தி,

"விண்பொரு நெடுவரை யியறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த"[40].

(அகம்: 69)

எனவரும் பாடல் வரிகளாலும் அறியப்படுகிறது. இதேபோன்று புறநானூற்றுப் பாடலில்,

> விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
> திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
> உலக விடைகழி யறைவாய் நிலைஇய ...[41]
>
> (புறம்: 175)

எனவரும் வரிகள் மோரியர் பற்றிய சிறப்பினைக் குறிப்பிடுகின்றன. மேற்கூறிய சான்றுகளினால் மோரியர் சங்ககாலத்திற்கு முற்பட்டவர் என்பதும், அவர்களின் காலம் கி.மு.வில் தொடங்கியுள்ளது என்பதும் அறியப்படுகிறது.

கி.மு.3-ஆம் நூற்றாண்டில் நடந்த மோரியர் படையெடுப்பு நிகழ்ச்சி மாமூலனார் பாடலில் குறிக்கப்படுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகளின் துணைகொண்டு சங்ககாலத்தின் தொடக்கத்தினை வரையறுக்கையில் கி.மு.3-ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி.மு.2-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கொள்வது பொருத்தமாகும்.

ஏனெனில், பாடல் வரிகளில் குறிக்கப்படும் நிகழ்ச்சிகள் இறந்தகால நிகழ்வுகளைக் குறிப்பதாகவே அமைகின்றன. எனவே, சங்கப் பாடல்களின் தொடக்கம் கி.மு.3-ஆம் நூற்றாண்டின் (கி.மு.272 பிந்துசாரன் ஆட்சி முடிவு) இறுதி என்று இங்கு வரையறை செய்யப்படுகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து சங்ககாலம் என்பது கி.மு.3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி, கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் என்று கூறமுடியும். ஆதலால், சுமார் 600 ஆண்டுகள் சங்ககாலம் இருந்தது என்று கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

1.3. சங்கப்பாடல்கள் :-

கடைச்சங்க நூல்கள் எனப்படுகின்ற எட்டுத்தொகையும் அதற்கு அடுத்துப் பாடப்பெற்ற தனித்தனி நீண்ட பத்துப் பாடல்களால் ஆகிய பத்துப்பாட்டுமே சங்ககால நூல்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ்விரண்டு தொகுப்புகளில் அடங்கிய பாடல்களையே சங்கப்பாடல்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

இவ்விரண்டு தொகுப்பு நூல்களின் பாடல் எண்ணிக்கை மொத்தம் 2381 ஆகும். அப்பாடல்களைப் பாடிய புலவர்களின் மொத்த எண்ணிக்கை 473 பேர் ஆவர். இப்பாடல்களில் பெரும்பாலானவை அரசர்களையும், அவர்களின் வீரத்தையும் போற்றிப் புகழ்கின்றன. வீரமும் காதலுமே இப்பாடல்களின் முக்கியப் பாடு-பொருளாகக் கொள்ளப்படுகின்றன.

ஒருசில பாடல்களில் கடவுள், தத்துவம் முதலிய பொதுக்கருத்துக்களும் காணப்படுகின்றன. மேலும், நம்பமுடியாத கதைகள், பொய்யான புனைந்துரைகள், அற்புத நிகழ்ச்சிகள், இல்லாததைச் சொல்லிப் புகழ்தல் போன்றவை இப்பாடல்களில் இடம்பெற, கவிதை மரபுக்காக ஓரளவு உயர்வு நவிற்சி ஆங்காங்கே காணப்பட்டாலும்

....27-

இப்பாடல்கள் அக்காலச் சமுதாயத்தையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன எனலாம்.

3.3.1. சங்க இலக்கியங்கள்:-

சங்க இலக்கியங்கள் இவை என்பதில் இலக்கிய அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இரு தொகுப்பினையும் சங்க இலக்கியங்கள் என்று கூறுகின்றனர். அஃதன்றி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சங்க நூல்கள் என்றே கூறப்படுகின்றன. மா. இராசமாணிக்கனார் சங்க நூல்கள் என்று கூறும்போது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய மூன்று தொகுப்பினையும் சேர்த்துக் கூறுகிறார்.[42] இவரே தனது வேறு நூலில் சங்ககால இலக்கியம் பற்றிக் கூறுகையில் தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய அனைத்து நூல்களையும் குறிப்பிடுகிறார்.[43] சிலர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை மட்டும் சங்க இலக்கியங்கள் என்று கூறுகின்றனர்.

எனவே, சங்க இலக்கியங்கள் இவைதான் என்பதில் தெளிவான கருத்து இலக்கிய அறிஞர்களிடையே கூறப்படவில்லை. இருப்பினும், இங்குச் சங்க இலக்கியங்களாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் மட்டுமே கொள்ளப்படுகின்றன.

3.3.1.1. எட்டுத்தொகை நூல்கள்:-

எட்டுத்தொகை நூல்கள் இவை என்பன,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை"[44]

என்ற பாடல் தெளிவு செய்கிறது. இவ்வெட்டு நூல்கள் பற்றியும் இலக்கிய அறிஞர்களிடையே தெளிவான கருத்து இல்லை.

ஒருசிலர் இந்நூல்களில் சிலவற்றைப் பிற்கால நூல்கள் என்று கூறுகின்றனர். ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலிநூற்றைம்பது ஆகிய நான்கும் பிற்காலப் பாக்களைக் கொண்டவை என்று குறிக்கப்படுகின்றன.[45] இக்கருத்தினைத் தெளிவு செய்யும் வகையில் பின்வரும் பகுதிகள் அமைகின்றன. வேறுசிலர் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டும் சங்க இலக்கியங்கள் இல்லை என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.[46] இக்கருத்து இன்னும் தெளிவு செய்யப்படாது, அதற்கானத் தீர்வுகளும் கூறப்படாது இருப்பது அறியப்படுகிறது. எனவே, எட்டுத்தொகை நூல்கள் பற்றிய வரிசையில் ஒரு தெளிவின்மை இருப்பது உணரப்படுகிறது.

3.3.1.2. பத்துப்பாட்டு நூல்கள் :-

பத்துப்பாட்டு நூல்கள் இவை என்பதை,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலைக் கடாத்தொடும் பத்து"[47]

என்ற பாடல் சுட்டிக் காட்டுகிறது. இந்நூல்கள் குறித்தும் இலக்கிய அறிஞர்கள் தெளிவானக் கருத்தை முன் வைக்கவில்லை. அனைத்து நூல்களும் ஒரே காலகட்ட நூல்கள் அல்ல என்றும், வெவ்வேறு காலகட்ட நூல்கள் என்றும் குறிப்பிடுவர். அவற்றில் திருமுருகாற்றுப்படை கி.பி.6-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தைச் சேர்ந்தது என்று விளக்கம் தரப்படுகிறது.[48]

பத்துப்பாட்டு நூல்களை நிரல்படுத்துகையில் பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நான்கும் ஏறத்தாழ ஒரே காலத்தன என்று கூறப்படுகின்றன. அதற்கடுத்த மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய மூன்றும் ஒரு காலத்தன என்றும், கி.பி.3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் வரிசைப்படுத்தப்படுகின்றது.[49]

சிறுபாணாற்றுப்படையில் பாரி முதலிய வள்ளல்கள் எழுவர் வரலாறுகள் இறந்த காலத்தில் வைத்துப் பாடப்பட்டுள்ளன. இவர்கள் கபிலர், பரணர், முடமோசியார், ஔவையார் போன்ற புலவர்களால் பாடப்பட்டவர்களாவார்கள். எனவே, இப்புலவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் நல்லூர் நத்தத்தனார் என்பவர் இந்நூலைப் பாடியுள்ளார் என்பது பெறப்படுகிறது. இந்நூல் ஏறத்தாழ கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டது என்று கூறுவர்.[50] இதனால்

கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டுக்குறித்துச் சிக்கல் எழுகிறது. குறிஞ்சிப்பாட்டுப் பாடிய கபிலர் எந்தக் கால கட்டத்தைச் சேர்ந்தவர் என்ற ஐயம் எழுகின்றது.

இஃதன்றி, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தன் மதுரைக் காஞ்சிக்குரிய தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தோற்றவன். அவனைப் பொருந்திலிளங்கீரனார்,

"வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்ற . . . "[51]

என்ற புறநானூற்றுப் பாடலில் பாராட்டிக் கூறுகிறார். இக்கருத்தினை ஒப்பிட்டு அறியும்போது, மதுரைக்காஞ்சி பாடப்பட்ட காலகட்டத்தில் கபிலர் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. கபிலரின் குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி பாடிய பிறகு பாடப்பட்டதா, அதற்கு முன்பு பாடப்பட்டதா என்ற ஐயம் எழுகிறது.

மதுரைக் காஞ்சிக்குரிய தலைவனும், கபிலரைப் பாராட்டிப் பாடிய பொருந்திலிளங்கீரனாரால் பாடப்பட்ட யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் ஒருகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது பெறப்படுகிறது. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பொருந்திலிளங்கீரனார் பாராட்டிப் பாடும்போது கபிலர் இல்லையே என்று இரங்கிப் பாடுவதாக அப்பாடல் அமைகிறது. எனவே, குறிஞ்சிப்பாட்டு மதுரைக் காஞ்சிப் பாடுவதற்கு முன்பே பாடப்பட்டிருக்க வேண்டும். ஆதலால் குறிஞ்சிப்பாட்டுப் பாடிய கபிலரும், எட்டுத்தொகைப் பாடல்கள் பாடிய

கபிலரும் ஒருவரா ? வெறுவேறானவர்களா ? என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறாகப் பத்துப்பாட்டு நூல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலகட்டத்தில் பாடப்பட்டவை என்பது பெறப்படுகிறது. ஆனால், பத்துப்பாட்டு நூல் வரிசையிலும் இலக்கிய அறிஞர்களிடையே தெளிவான கருத்தில்லை என்பதும் அறியப்படுகிறது. இத்தகைய கருத்துக்களினால் அத்தொகைநூல் பாடல்களைப் பாடிய புலவர்கள் பற்றியும் தெளிவான வரலாறு காணப்படவில்லை.

3.4. சங்க இலக்கியப் புலவர்கள் :-

சங்கப் புலவர்கள் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று வள்ளல்களைப் பாடிப் பல்வகைப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவ்வாறு இவர்களால் இயற்றப்பெற்ற பாடல்களைப் பின்னால் வந்தவர்கள் தங்களுக்குக்கிட்டிய பாடல்களைத் தொகுத்தனர். அவர்களின் முயற்சியினால் கிடைத்தவையே எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் ஆகும்.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதிவரை சங்க இலக்கியம் புலவர்களால் 'எழுதப்பட்ட இலக்கியம்' என்ற கருத்தே நிலவி வந்தது. 1968-இல் கைலாசபதி சங்க இலக்கியங்கள் வாய்மொழிப் பாடல்களாக உருவானவை என்று கூறினார். ஆயினும், அவை உறார்ட், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் தனித்தனிப்பட வாய்மொழிப் பாடல்கள் அல்ல; வாய்மொழிப் பாடல்களின் மரபியும், எழுத்து மரபிலும் உருவானவை என்று கூறினார்கள்.[52] எனவே, தமிழின் முதல் இலக்கியமாகச் சங்க இலக்கியம்

உருவாகியது பற்றிக் கீழ்க்காணும் மூன்று கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவை,

1. எழுதப்பட்டவை
2. வாய்மொழிப் பாடல்கள்
3. வாய்மொழிப் பாடல் மரபில் எழுதப்பட்டவை என்பனவாகும்.[53]

இக்கருத்துக்களினால் சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் புலவர்களால் எழுதப்பட்டவை என்பதற்கு மாறாக வாய்மொழி வடிவில் உருவானவையா என்ற ஐயம் எழுகின்றது.

பொதுவாக, வாய்மொழிப் பாடல்களை இயற்றிய ஆசிரியரின் பெயர்கள் தெரியா. ஆனால், சங்க இலக்கியப் பாடல்களை இயற்றிய புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் மொத்தம் 473 பேர். அவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 2381 ஆகும்.

இப்புலவர்களில் 30 பேர் பெண்பாற்புலவர்கள். சங்கப்புலவர்களில் ஆசிரியர், தட்டார், பொற்கொல்லர், கொல்லர், அறுவை வணிகர் போன்ற பல தொழில் செய்தவர்கள் இருந்துள்ளனர். அவர்களிலும் கோத்திரத்தால் பெயர் பெற்ற புலவர்கள் 11 பேர். இவர்கள் 'அந்தணர்' அல்லது 'பார்ப்பார்' என்று சங்க இலக்கிய வழக்கால் குறிப்பிடப்படுகின்றனர்.[54] இன்றைய மொழியில் இவர்களை 'ஆரியர்கள்' என்று இனப்பெயரால் குறிப்பிடுவர்.[55] இப்புலவர்கள்

...80/-

பிறமொழி, குறிப்பாக வடமொழி தொடர்பு உடையவர்கள் என்று கருதப்படுகின்றனர். இதில் கடவுள் பெயர் அந்தணர் என்று குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இவரைப் பிற புலவர்கள் அந்தணர் என்று கூறுவதாலும், அவரே தன்னை அந்தணர் என்று கூறிக் கொள்வதாலும் அறிய முடியும்.

அடுத்துக் 'கிழார்' என்ற பெயர் பெற்ற புலவர்கள் பலர் குறிக்கப்படுகின்றனர். சமயத்தால் பெயர் பெற்றவர்களாக மூன்று பேர் குறிப்பிடப்பெறுகின்றனர். அவர்களில் ஒருவர் பௌத்தர் என்றும்; இருவர் சமணர் என்றும் கூறப்படுகின்றனர். இவ்வாறாக, சங்ககாலப் புலவர்களைத் தொழில், குலம், சமயம் என்கின்ற அடிப்படையில் பிரித்து அறியமுடிகிறது.

மேற்கூறிய பிரிவுகளன்றி, சங்கப்புலவர்களை வட்டார அடிப்படையிலும் பிரித்தறியப்படுகிறது. தொண்டை நாட்டுப் புலவர்களாக 9 பேரும், சேரநாட்டுப் புலவர்களாக 24 பேரும், சோழநாட்டுப் புலவர்களாக 55 பேரும், பாண்டிய நாட்டுப் புலவர்களாக 90 பேரும் இருந்ததாக அறியப்படுகிறது.[56] எனவே, 473 புலவர்களில் 178 புலவர்களுக்கே நாடு பற்றிய வரலாற்றுடன் தொடர்புப்படுத்திக் கூறப்படுவது கருதத்தக்கது.

இங்குப் பாண்டிய நாட்டுப்புலவர் வரிசையில் கபிலர் குறிக்கப்படுகின்றார். கபிலர் பாண்டிய நாட்டினர் என்று கூறினாலும் அதில் தெளிவான கருத்துக்கூறப்படவில்லை; அவர் பிறந்த ஊர் பற்றிய கதைகளில் பல்வேறு ஊர்கள் கூறப்படுகின்றன என்பது முன்னுரையில் சுட்டப்பட்டது.

[illegible] கபிலர் பற்றியும் அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை பற்றியும், இவரது காலம் பற்றியும், கபிலர் குறித்த வரலாறு பற்றியும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இலக்கிய ஆய்வாளரிடையே நிலவி வருகின்றன. அது பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

3.5. சங்ககாலக் கபிலர் :-

சங்கப் புலவர்களில் முதன்மையாகக் கருதப்பெறுபவர் கபிலராவார். இவர் பல அரசர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவரைப் பல புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். இவரால் சில புலவர்கள் பாராட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு பலராலும் புகழப்படும் கபிலர், மற்றப் புலவர்களைக் காட்டிலும் அதிகப் பாடல்கள் பாடியிருப்பவர் என்ற நிலையில் சிறப்பிடம் பெறுகிறார். இத்தகைய சிறப்புக்கள் நிரம்பிய கபிலர் வரலாறு பற்றி இலக்கிய ஆய்வாளரிடையே ஒரு தெளிவான கருத்தில்லை. கபிலர் என்ற பெயர் தமிழ் இலக்கியத்தில் காலந்தோறும் வழங்கி வந்துள்ளது என்பது முன் இயலில் சுட்டப்பெற்றது. ஆனால், இங்குச் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் கபிலர், தொல்கபிலர் என்ற இருபெயர்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவர்களின் பாடல்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

3.5.1. கபிலர் - தொல்கபிலர் இருவரும் ஒருவரே :-

சங்க இலக்கியத்தில் கபிலர் பாடிய பாடல்களாக எட்டுத் தொகையில் குறிக்கப்படுவன பின்வருமாறு :

அகநானூறு	-	16	
ஐங்குறுநூறு	-	100	
கலித்தொகை	-	29	
குறுந்தொகை	-	29	
நற்றிணை	-	20	
பதிற்றுப்பத்து	-	10	(ஏழாம்பத்து)
புறநானூறு	-	[illegible]	
		234	

இஃதன்றிப் பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டும் சேர்ந்து மொத்தம் 235 பாடல்கள் கபிலர் பாடியது ஆகும்.

சங்க இலக்கியத்தில் தொல்கபிலர் பாடிய பாடல்களாக 6 பாடல்கள் என்று சிலராலும், 7 பாடல்கள் என்று சிலராலும் குறிக்கப்பட்ட கருத்துக்குறித்து முன் இயலில் ஆராயப்பெற்றது.

தொல்கபிலர் பாடல்களை ஆராய்கையில் அனைத்தும் குறிஞ்சித்திணைக்குரிய பாடல்களாக, சங்ககாலக் கபிலரின் பாடல் கருத்துக்களையே அடியொற்றி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சங்ககாலக் கபிலர்க்குக் 'குறிஞ்சிக்குக் கபிலன்' என வழங்கப்படும் தொடர் கொண்டு இப்பாடல்களையும் கபிலர் என்ற பெயருடைய ஒருவரே பாடியிருக்க வேண்டும்

எனக் கருத முடிகிறது. கபிலர் விரும்பிக் கையாண்ட தொடர்கள் சில தொல்கபிலர் பாடல்களில் இடம்பெறுகின்றன. அவற்றில் 'அளிதோ தானே' (நற்:114), 'கான மஞ்ஞை' (நற்:276), குன்ற நாடன் (நற்:114), மலைநாடன் (நற்:398) 'பெரியகதில் லம்ம', 'அறிகதில் லம்ம' (குறு:14) எனவரும் தொடர்கள் குறிப்பிடத்தக்கன.

இப்பாடல்களில் எந்த அரசனும் குறிக்கப்படவில்லை. தொல்கபிலர் பற்றிய வேறு வரலாற்றுக் குறிப்புகளும் ஏதும் காணப்படவில்லை. ஆனால், இவர் பாடிய நற்றிணை 114-ஆம் பாடலில் இடம்பெறும் "புள்ளித் தொல்கரை" என்ற தொடரால் இவருக்கு இப்பெயர் வந்தது என்ற காரணம் மட்டுமே கூறப்படுகிறது. வேறு செய்திகள் கூறப்படாமைக் கொண்டு, மற்ற 5 பாடல்களுக்கு எங்ஙனம் தொல்கபிலர் என்ற பெயர் வந்தது எனவும் சிந்திக்க வைக்கிறது. எனவே, தொல்கபிலர் என்ற பெயருடைய ஒருவர் சங்ககாலத்தில் இருந்திருக்க முடியாது எனத் தெளியலாம். இதனால் தொல்கபிலர் பெயரில் இடம்பெறும் 6 பாடல்களும் சங்ககாலக் கபிலர் என்ற பெயருடனே வைத்து ஆராயப்படுகின்றது. இக்காரணங்களினால் இவ்விருவரும் ஒருவரே என்பது பெறப்படுகிறது.

3.5.2. சங்ககாலக் கபிலர் பாடல்கள்:-

கபிலர் பெயரில் இடம்பெறும் 235 பாடல்களும், தொல்கபிலர் பெயரில் இடம்பெறும் 6 பாடல்களும் ஒரே கபிலர் பாடிய பாடல்கள் என்றே இங்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

கபிலர் பெயரில் இடம்பெறும் பாடல் எண்ணிக்கைகள் ஒவ்வொரு தொகை-நூலுக்கும் தமிழ் இலக்கிய அறிஞர்களால் வெவ்வேறு விதமாகக் குறிக்கப்பட்டுள்ளன. மேலும், கபிலர் பாடிய பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு என்கிற தொகை நூல்களில் அமையும் பாடல்களிலும் சில சிக்கலான கருத்துக்கள் வழங்கப்படுகின்றன. இச்சிக்கல்கள் கீழே ஆராயப்படுகின்றன.

3.5.3. கபிலர் பாடலில் உள்ள எண்ணிக்கை மாற்றங்கள் :-

கபிலர் பாடல்களில் இடம்பெற்றுள்ள அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பதிப்புகளில் அதன் பதிப்பாசிரியர்களால் வெவ்வேறு வகையில் பாடல் எண்ணிக்கைகள் குறிப்படப்படுகின்றன. அம்மாற்றங்கள் பின்வருமாறு;

1. நற்றிணையில் கபிலர் பாடிய பாடல்கள் 20 என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார், வே. வேங்கடராஜுலு ரெட்டியார், உ.வே. சாமிநாதய்யர், எஸ். வையாபுரிப்பிள்ளை, அ. நாராயணசாமி ஐயர், கா. கோவிந்தன், ந.சி. கந்தையாபிள்ளை, ஆகியோர்கள் தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். இவர்களன்றி வேறுசில திறனாய்வாளர்களும் 20 பாடல்கள் என்று கூறுகின்றனர். ஆனால், 19 பாடல்கள் என்று ஒரு சிலர் குறிக்கின்றனர். அவர்களில் நா. கனகராஜய்யரும், ஆ. சிங்காரவேலு முதலியாரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

2. அகநானூற்றில் கபிலர் பாடிய பாடல்கள் 18 என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார், வே. வேங்கடராஜுலு ரெட்டியார், எஸ். வையாபுரிப்பிள்ளை,

கா. கோவிந்தன், மற்றும் பலர் கூறுகின்றனர். ஆனால், 16 பாடல்களே என்று உ.வே. சாமிநாதய்யர், ந.சி. கந்தையாபிள்ளை, அ. நாராயணசாமி ஐயர், நா. கனகராஜய்யர், ஆ. சிங்காரவேலு முதலியார் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

3. புறநானூற்றில் கபிலர் பாடல்கள் 30 என்று உ.வே. சாமிநாதய்யர், ந.சி. கந்தையாபிள்ளை, அ. நாராயணசாமி ஐயர், போன்றோர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், 28 பாடல்கள் என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார், வே. வேங்கட-ராஜுலு ரெட்டியார், ஆ. சிங்காரவேலு முதலியார், நா. கனகராஜய்யர், எஸ். வையாபுரிப்பிள்ளை, கா. கோவிந்தன், வ.சுப. மாணிக்கம் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

4. குறுந்தொகையில் கபிலர் பாடல்கள் 29 என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார், நா. கனகராஜய்யர், எஸ். வையாபுரிப்பிள்ளை, கா. கோவிந்தன், வ.சுப. மாணிக்கம், ஆகியோர் குறிப்பிடுகின்றனர். ஆனால், உ.வே. சாமிநாதய்யர் மட்டும் 28 பாடல்கள் என்று குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய நான்கு தொகுப்பு நூல்களிலும் கபிலர் பாடிய பாடல்கள் எண்ணிக்கையில் ஓரிரு பாடல்களைச் சேர்த்தும், சேர்க்காமலும் கூறப்படுவது அறியப்படுகிறது. இம்மாற்றங்களே இங்கு ஆராயப்பட வேண்டியவைவாக அமைகின்றன.

3.5.3.1. நற்றிணை:-

நற்றிணையில் கபிலர் பாடிய பாடல்கள் [illegible] என்று சிலரும்,[57] 19 என்று சிலரும்[58] கூறுகின்றனர். நற்றிணையில் கபிலர் பாடிய பாடல்கள் 20 என்பதனை ஆ. நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பதிப்பும், அதற்கு அடுத்து வெளிவந்த எச். வேங்கடராமன் நற்றிணைப் பதிப்பும் உறுதி செய்கின்றன. இவ்விரண்டு நூ[ஸ்களிலும்] கபிலர் பாடல்களாக 20 பாடல்கள் உள்ளன. ஆனால், 19 பாடல்கள் என்று கூறுகின்றவர்களின் கருத்து ஐயத்தை எழுப்புகிறது.

இருப்பினும், கிடைக்கின்ற நற்றிணைப் பதிப்புகளைக் கொண்டும் [illegible] இடம்பெற்றுள்ள கபிலர் பாடல்களைக் கொண்டும் கபிலர் பாடிய பாடல்கள் 20-தான் என்ற முடிவுக்கு வரலாம். ஒரு பாடல் வேறுபாடு என்பது காலப்போக்கில் பதிப்பாசிரியர்களால் ஏற்படுத்தப்பட்ட பிழை என்று கருதலாம். இஃதன்றித் தொல்கபிலரின் 4 நற்றிணை பாடல்களும் கபிலர் பாடல்களுடன் சேர்த்து 24 என்று கொள்ளப்பட்டிருக்கலாம்.

3.5.3.2. அகநானூறு:-

அகநானூற்றில் கபிலர் பாடல்கள் 16 என்று ஒருசிலரும்,[59] 18 என்று சிலரும்[60] கூறுகின்றனர். இக்கருத்துக்கள் இருவேறு நிலையில் நிலவுகின்றன. ஒன்று கபிலர் பெயரில் இடம்பெறும் பாடல்கள். மற்றொன்று தொல்கபிலர் பெயரில் இடம்பெறும் பாடல்கள். இதில் பொ.வே. சோமசுந்தரனார் அகநானூற்றுப்

பதிப்பிலும், வேங்கடசாமி நாட்டார் & கரந்தை வேங்கடாசலம்பிள்ளை இவர்களின் அகநானூற்றுப் பதிப்பிலும் கபிலர் பாடல்கள் 18 என்றே உள்ளன.

ஆனால், பொ.வே. சோமசுந்தரனார் அகநானூற்றுப் பதிப்பில் 12-ஆம் எண்ணுள்ள பாடலுக்கு ஆசிரியர் பெயர் குறிப்பிடுகையில் கபிலர் என்று குறிப் பின் அப்பாடலின் அடைப்புக்குறிப்புக்குள் 'தொல்கபிலர்' என்றும் பாடம் எனக் குறிக்கப்படுகிறது.[61] ஆசிரியர் பற்றிய குழப்பமே கபிலரின் அகநானூற்றுப் பாடல்களின் எண்ணிக்கை மாற்றத்திற்கு காரணமாகின்றது. பொ.வே. சோமசுந்தரனார் மட்டும் 'கபிலர்', 'தொல்கபிலர்' என இரு பெயரினையும் 12-ஆம் பாடலுக்குக் குறிப்பிடுவது கொண்டே இதனையே சிலர் பின்பற்றியுள்ளனர் என்பது பெறப்படுகிறது. எனினும், தொல்கபிலர் பெயரில் அகநானூற்றில் ஒரு பாடல் என்ற (அகம்: 282) பலராலும் கூறப்படுவது கொண்டு அகநானூற்றில் கபிலர் பெயரில் 18 பாடல்கள் என்றும் தொல்கபிலர் பெயரில் 1 பாடல் என்றும் கொள்ளப்படுகிறது.

இருப்பினும், கபிலர், தொல்கபிலர் ஆகிய இருவரும் ஒருவரே என்பதால் நமக்குக் கபிலரின் அகநானூற்றுப் பாடல்களாக மொத்தம் 19 பாடல்கள் எனக் கொள்ளலாம்.

3.5.3.3. புறநானூறு:-

உ.வே. சாமிநாதய்யர் தனது புறநானூற்றுப் பதிப்பில் பாடினோர் வரலாறு கூறும்போது கபிலர் பாடியது 30 பாடல்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஆனால், அவரின் புறநானூற்றுப் பதிப்பிலுள் இடம்பெறும் கபிலர் பாடல்கள் 28 மட்டுமே உள்ளன. இதனை ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை புறநானூற்றுப் பதிப்பு மேலும் தெளிவு செய்கிறது.[62]

எனவே, புறநானூற்றில் கபிலர் பாடல்கள் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பில் மட்டும் 2 பாடல்கள் அதிகமாகக் குறிக்கப்படுவது ஐயத்திற்கு இடமளிக்கிறது. இதனால், இவ்வெண்ணிக்கை மாற்றம், பதிப்பிக்கும்போது ஏற்பட்ட ஒரு பிழையே என்று கொள்ளத்-தக்கது. பின்னால் வந்த சிலர் உ.வே. சாமிநாதய்யர் பதிப்பில் இடம் பெற்றப் பாடல்களைக் காணாது பாடியோர் வரலாற்றில் கூறப்பட்டதை எடுத்துக்கொண்டதால் வந்த எண்ணிக்கை மாற்றமே என்று முடிவுக்கு வரலாம்.

3.5.3.4. குறுந்தொகை :-

வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியத் தொகுப்பில் கபிலர் பாடல்களைக் காண்கையில் குறுந்தொகையில் 29 பாடல்கள் உள்ளன. ஆனால், உ.வே. சாமிநாதய்யர் குறுந்தொகைப் பதிப்பிலுள், வையாபுரிப்பிள்ளை குறிப்பிடும் 259-ஆம் எண்ணுள்ள பாடல் பரணர் பாடலாகக் குறிக்கப்பட்டுள்ளது.[63]

உ.வே. சாமிநாதய்யரே தமது புறநானூற்றுப் பதிப்பில் பாடியோர் வரலாறு கூறும்போது, கபிலர் பாடியதாகக் குறுந்தொகையில் 29 பாடல்கள் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், குறுந்தொகைப் பதிப்பிலுள் 28 பாடல்களே

உள்ளன. எனவே, குறுந்தொகையில் கபிலர் பாடிய பாடல் எண்ணிக்கையில் ஒரு பாடல் மட்டும் இவ்விரு பதிப்பிலும் மாறுபட்டு இருந்தாலும், உ.வே.சாமிநாதய்யர் குறுந்தொகை பதிப்பிலுள்ள பாடல்களின்படிக் கபிலர் 28 பாடல்களே பாடியுள்ளார் என்பது கொள்ளப்படுகிறது.

மேலும், தொல்கபிலர் பெயரில் குறுந்தொகையில், ஒரு பாடல் (குறு:14) இடம்பெறுகின்றது. இப்பாடலையும் சேர்த்துக் கபிலர் பாடியதாக 29 பாடல்கள் கொள்ளப்படுகின்றன.

மேற்சுட்டியதில் இருந்து கபிலர் பாடிய பாடல்கள் குறித்த எண்ணிக்கை மாற்றங்கள் பின்வருமாறு:

வ. எண்	நூல்கள்	கபிலர் பாடியவை	தொல்கபிலர் பாடியவை	மொத்தப் பாடல்கள்
1.	அகநானூறு	18	1	19
2.	குறுந்தொகை	28	1	29
3.	நற்றிணை	20	4	24
4.	புறநானூறு	28	-	28
				100

எட்டுத்தொகையில் கபிலர் பெயரில் இடம்பெறும் பிறபாடல்கள் பின்வருமாறு. அவை

ஐங்குறுநூறு - 100 (குறிஞ்சித்திணை)
கலித்தொகை - 29 (குறிஞ்சிக்கலி)
பதிற்றுப்பத்து - 10 (ஏழாம் பத்து)
139

என்பனவாகும். பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டும் கபிலர் பெயரில்

...98/-

குறிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் சேர்த்துக் கபிலர் பாடியவையாக மொத்தம் (100 + 139 + 1) 240 பாடல்கள் எனத் தெரியப்படுகின்றன.

3.5.4. கபிலர் பாடல்களும் சிக்கல்களும்:-

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு தொகைநூற்பாடல்களிலும் கபிலர், தொல்கபிலர் ஆகிய இருபெயர்களில் மொத்தம் 240 பாடல்கள் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆனால், ஒரு சிலர் கபிலர் பாடிய தொகை நூற்பாடல்களில் சிலவற்றைக் கபிலர் (சங்கக் கபிலர்) பாடியது அல்ல என்று நீக்கி விடுகின்றனர். அதில் கலித்தொகையில் (குறிஞ்சிக்கலிப்பாடல்கள்-29) உள்ள பாடல்கள் குறிப்பிடத்-தக்கன. அஃதன்றி, ஐங்குறுநூறு (குறிஞ்சித்திணைப் பாடல்கள்-100), பதிற்றுப்பத்து (ஏழாம்பத்துப்பாடல்கள்-10), குறிஞ்சிப்பாட்டு ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன. அதில், இப்பாடல்களைப் பாடிய கபிலரும், மற்ற அக, புறப்பாடல்களைப் பாடிய கபிலரும் வேறு வேறானவர்கள் என்ற கருத்துக்களை மட்டும் கூறிச் செல்கின்றனர்.

இப்பாடல்களைக் கபிலர் ஒருவரே பாடினர் என்றும், பல கபிலர்கள் பாடினர் என்றும் கருத்து வேறுபாடுகள் காணப்படுவதால், இவ்வேறுபாடுகள் குறித்த சிக்கல்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

3.5.4.1. கலித்தொகைப் பாடல்கள் பற்றிய சிக்கல்கள்:-

கபிலர் பாடிய பாடல்களில் குறிஞ்சிக்கலிப் பாடல்கள் 29-ம் சேர்க்கப்-பட்டு இருந்தாலும், பின்வந்த இலக்கியத் திறனாய்வாளர்கள் அப்பாடல்கள் கபிலரால்

பாடப்பட்டவை அல்ல என்ற கருத்தை முன் வைத்தனர். இஃதன்றிக் கலித்தொகைப் பாடல்கள் 150-ம் ஒரு புலவராலேயே பாடப்பட்டன என்ற கருத்தையும் தெரிவித்து வருகின்றனர். அதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவை பின்வருமாறு;

கலித்தொகையை முதன்முதல் பதிப்பித்து வெளியிட்ட சி.வை. தாமோதரம்பிள்ளை இந்நூல் இயற்றியோர் ஒருவரே எனக் கருத்துத் தெரிவிக்கின்றார்.[64] அதன் பின்னரே,

"பெருங் கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்வியலார் கண்ட கலி"[65]

எனவரும் வெண்பா வெளியிடப்பட்டது என்று கருத்து பலரால் கூறப்படுகிறது. இப்பாடலைத் தொடர்ந்தே, கலித்தொகைப் பாடல்களை ஐந்திணைகளில் பிரித்து, ஐந்து புலவர்களால் பாடப்பட்டது என்று கூறி வந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

கே.என். சிவராஜபிள்ளை கலித்தொகைப் பாடல்களை ஆசிரியர் ஒருவரே பாடினர் என்பது பொருந்தா முடிவாகும் என்ற கருத்தினைத் தெரிவிக்கின்றார்.[66] இதனால் கலித்தொகைப் பாடல்களின் ஆசிரியர் ஒருவரா ? ஐவரா ? என்ற ஐயம் எழுகின்றது.

கலித்தொகையில் ஒவ்வொரு கலியும் செய்தவர் இன்னார் என்று குறிப்பிடும் வெண்பா தற்காலத்தில் உள்ளவர் ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டது என்றும் ஆதலால் குறிஞ்சிக் கலி கபிலர் இயற்றியது என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை என்றும் எஸ். வையாபுரிப்பிள்ளை காரணம் கூறுகிறார்.[67] ஆனால் இவரே தனது சங்க இலக்கியப் பதிப்பில் கபிலர் பாடிய பாடல்கள் என்று குறிக்கும் போது கலித்தொகையில் உள்ள குறிஞ்சிக்கலிப்பாடல்கள் 29-யும் சேர்த்துக் குறிப்பிடுகிறார்.

மற்றொரு நூலில் எட்டுத்தொகை நூல் வரிசையில் இடம்பெறுகின்ற பரிபாடல், கலித்தொகை என்ற இரண்டும் மற்றத் தொகை நூல்களில் இருந்து தனித்தனி என்றும் மிகவும் பிற்பட்ட காலத்தில் பாடப்பட்டுத் தொகுத்தவை என்றும் விளக்கம் தருகிறார். இவ்விரண்டு நூல்களும் குறைந்தது கி.பி.2 அல்லது கி.பி.3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் கருத்துத் தெரிவிக்கின்றார்.[68]

மேற்சுட்டிய கருத்துக்களில் இருந்து வையாபுரிப்பிள்ளை, கலித்தொகைப்-பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார் என்பதற்கு அரணாகச் சில நூலையும், கபிலர் பாடியது அல்ல, மிகவும் பிற்பட்டது என்பதற்கு அரணாகச் சில நூலையும் முரண்படக் கூறியுள்ளார் என்பது பெறப்படுகிறது.

கா. கோவிந்தன், சங்க இலக்கியத்தில் பிற்காலப் பாடல்களைக் கொண்ட நூல்களாக ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை என்ற நான்கு நூல்களையும் குறிப்பிடுகிறார்.[69] இந்நூல்கள் ஒரு கொள்கையை விளக்க, ஒரு

894.8111A
V1J

குறிப்பிட்ட காரணத்திற்காகப் பாடப்பட்ட பாடல்கள் என்பதால் பிற்காலத் தொகைநூல்கள் நான்கும் மற்ற முற்காலத் தொகை நூல்களில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன என்று இவரால் காரணம் கூறப்படுகின்றது.

எனவே, கலித்தொகையில் கூறப்படும் கருத்துக்கள் மற்ற அகப்பாடல் கருத்தில் இருந்து வேறுபடுகின்றன என்பது அறியத்தக்கது. ஆனால், இப்பாடல்கள் பற்றிய வேறு கருத்துக்கள் இவரால் யாதும் கூறப்படவில்லை.

இருப்பினும், இவரே தனது மற்றொரு நூலில் மேற்கூறிய கருத்திற்கு மாறாகக் கபிலர் பாடிய பாடல் தொகைகள் என்று கூறும்போது கலித்தொகை 29 பாடல்களையும் சேர்த்து மொத்தம் 275 பாடல்கள்[70] என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடல் எண்ணிக்கையுடன் வேறுசில தனிப்பாடல்களையும் சேர்த்துக் கபிலர் பாடியது என்று விளக்கம் கூறுகின்றார்.

எனவே, இவரும் கலித்தொகைப் பாடல் குறித்துக் குறிப்பிடும்போது ஒவ்வொரு நூலுக்கும் முரணான கருத்துக்களையே முன் வைப்பது அறியப்படுகிறது.

மா. இராசமாணிக்கனார் சங்க நூல்கள் என்று கூறும்போது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்பனவற்றையும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களையும் சேர்த்துக் குறிப்பிடுவது சிந்தித்தற்குரியது. இவரே தனது வேறு நூலில் எட்டுத் தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும் சங்கநூல்கள் என்றும், சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் அடுத்துப்பாடப்பட்ட சங்க மருவிய நூல்கள் என்றும் விளக்கம் தருகின்றார்.[71]

இவ்வாறு சங்க நூல்கள் பற்றிப் பிரித்துக் கூறியவர் பின், கலித்தொகைப் பாடல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் கபிலர் பாடியனவாகக் கலித்தொகையில் உள்ள குறிஞ்சிக்கலிப் பாடல்களையும் சேர்த்துக் கூறுதல் மரபு என்று கூறுகிறார். இவர் இங்கு 'மரபு' எனக் குறிக்கப்படுவதன் காரணம் யாது எனக் கூறப்பட இல்லை.

மேலும், உ.வே. சாமிநாதய்யர் தமது பத்துப்பாட்டுப் பதிப்பில் குறிஞ்சிக் கலிப் பாடல்களைச் சேர்த்துக் கூறுகின்றார் என்றும், நாராயணசாமி ஐயர் தமது நற்றிணைப் பதிப்பில் குறிஞ்சிக்கலிப் பாடல்களைச் சேர்க்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இது பற்றி இவர் முடிவான எக்கருத்தும் கூறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, மேற்சுட்டிய கருத்துக்கள் கபிலர் பாடல்கள் குறித்துச் சிக்கல்கள் இருப்பதைக் காட்டுகின்றன.

மா. இராசமாணிக்கனார் கலித்தொகைப் பாடல்கள் கபிலர் பாடியவை அல்ல என்பதற்குக் காரணம் கூறுகையில் "இப்பாக்களின் மொழியமைப்பு, நடை, நூல் அமைப்பும் புராண இதிகாசக் கதைகள் விரவிக் கிடத்தல், பிற அகப் பொருள் நூல்களில் குறிக்கப்பட்ட சிற்றரசர், பேரரசர் பெயர்களுள் ஒன்றேனும் குறிக்கப்படாமை, பாண்டிய நாட்டையும், பாண்டியரையுமே பாராட்டும் முதலியவை இடம்பெறுவதே"[72] என்று சுட்டிக் காட்டுவதும் உணர்தற்குரியது.

மா. இராசமாணிக்கனார் கூறும் சில முரணான கருத்துக்கள் இருப்பினும், இறுதியாக அவர் கலித்தொகை பாடிய கபிலர் வேறு ஒருவர் என்று கூறுவது மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கே.ஏ. நீலகண்ட சாத்திரி கலித்தொகை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "கலித்தொகை போன்ற தொகை நூல்களில் காணப்படும் பாடல் ஆசிரியர்கள் ஒருவரே இவற்றைத் தொகுத்தார் என்பது இலக்கிய மரபேயாகும்.[73] இம்மரபை மறுப்பதற்கான சான்றுகள் ஏதும் தரப்படவில்லை" என்று மட்டும் கூறுகிறார். இவரின் கருத்துவழி, கலித்தொகைப் பாடல் ஆசிரியர்கள் பலரா, ஒருவரா என்ற சிக்கலான வினா எழுகின்றது.

சி.இ. இராமச்சந்திரன் கூறுகையில், "இலங்கையைச் சேர்ந்த சி.வை. தாமோதரம்பிள்ளை 1887-ல் கலித்தொகையைப் பதிப்பித்தார். அதற்கு 'நல்லந்துவனார் கலித்தொகை' என்ற பெயர் இடப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டி, வையாபுரிப்பிள்ளை கூறிய முதலில் பதிப்பித்த கலித்தொகைப் பதிப்பில் புலவர் இவர் பாடியதாகக் கூறப்படும் வெண்பா இல்லை என்ற கருத்தினையும் சுட்டிச் செல்வது அறியத்தக்கது.[74]

இதுபற்றிக் காரணம் தருகையில் "கலித்தொகைப் பாடல்கள் ஒன்று கூடச் சோழனையோ, சேரனையோ குறிப்பிடவில்லை. அனைத்துப்பாடல்களும் பாண்டியன்

...104/-

பற்றிய செய்தியினையும் வையை ஆறு பற்றியும், அங்கு நிகழ்ந்த தமிழ்ச்சங்கம் பற்றியுமே தெரிவிப்பதால் கலித்தொகை பாடிய புலவர் பாண்டிய நாட்டைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருத்து இடம் உள்ளது என்று விளக்குகிறார்.[75] எனவே, இவரும் கலித்தொகைப் பாடலாசிரியர் பற்றிச் சிக்கலான கருத்துக்களையே முன்வைப்பது தெரியவருகிறது.

மேற்சுட்டப் பெற்ற, இலக்கிய ஆய்வாளர்கள் மட்டுமின்றி வேறு சில திறனாய்வாளர்களும் கபிலரின் கலித்தொகைப் பாடல்கள் பற்றி பல முரணான கருத்துக்களைக் கூறிச் செல்கின்றனர். அவர்களில் ஜெ. நீதிவாணன்,[76] சி. ஜேசுதாசன்,[77] இரா. சாரங்கபாணி,[78] கே. வசந்தகுமாரசுந்தரம்[79] கு.வெ. பாலசுப்பிரமணியன்,[80] செ.வை. சண்முகம்[81], சாமி சிதம்பரனார்[82] போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இவர்கள் அனைவரும் மேலே கூறப்பட்ட இலக்கிய வரலாற்றாய்வாளர்களின் கருத்துக்களை அடியொற்றியே கபிலரின் கலித்தொகைப் பாடல் குறித்த சிக்கலான கருத்துக்களைக் கூறிச் செல்கின்றனர் என்பது அவரவர்கள் நூல்கள் வழி பெறப்படுகின்றன.

இவ்வாறாகச் சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களான கலித்தொகையும், பரிபாடலும் மிகவும் பிற்பட்டவை என்ற கருத்தினைச் சிலரும், குறிஞ்சிக்கலிப்பாடல்களைப் பாடியது கபிலர் அல்ல என்று சிலரும் கூறுகின்ற கருத்துப் பெறப்பட்டது. அதேபோன்று

கலித்தொகை பாடிய புலவர்கள் ஐவர் என்று சிலரும், ஒருவர் என்று சிலரும் கருத்துத் தெரிவிப்பதும் அறியப்படுகின்றது. இதனால் குறிஞ்சிக்கலி பாடிய கபிலர் பற்றிச் சிக்கல் எழுகிறது. முதலில் கலித்தொகைப் பாடிய புலவர்கள் பற்றிக் கூறப்படும் வெண்பாவை ஆராயின் குறிஞ்சிக்கலி பற்றிய சிக்கலுக்கு விடை கிடைக்கும் எனலாம்.

2.2.4.1.1. கலித்தொகைப் புலவர்கள்:-

கலித்தொகை பாடிய புலவர்கள் ஐவர் எனப் "பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி..." என்று வரும் வெண்பாப்பாடல் அறிவுறுத்துகிறது. இப்பாடல் மூலம் கலித்தொகையை ஐந்து புலவர்கள் பாடினர் என்பது அறியப்படுகிறது. ஆனால், இவ்வெண்பாவைத் தவிரக் கலித்தொகையை ஐவர் பாடினர் என்பதற்கு வேறு சான்றுகள் காணப்படவில்லை. எனவே, இவ்வெண்பாவில் குறிக்கப்படும் ஐந்து புலவர்களும் கலித்தொகையைப் பாடினார்களா அல்லது வேறு வேறு புலவர்களால் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்டதா அல்லது ஒரே புலவரால் பாடப்பட்டதா ? என்பன போன்ற ஐய வினாக்களை ஆராய வேண்டுவது அவசியமாகின்றது.

இவ்வெண்பா பற்றி மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகையில்,

"ஏனைத் தொகை நூல்களில் பாலைத்திணைச் செய்யுட்களைப் பாலை கடுங்கோன் பாடியிருத்தலாலும், குறிஞ்சித்திணைப் பற்றிப் பல செய்யுட்களைக் கபிலர் பாடியிருத்தலாலும் முதல் இரண்டு கலிகளையும் இவர்கள் பாடினார்கள்

...106/-

என்பது பொருந்தும். இருபத்தும் ஏனைய மூன்று கலிகளையும் பாடிய புலவர்கள் குறிப்பிட்ட திணையில் பாடத் தகுதி வாய்ந்தவர்கள் என்பதற்குரிய சான்றுகள் ஏனைய தொகைநூல்களில் காணப்படவில்லை" என்று காரணம் தருகிறார்.[83]

கே.என். சிவராஜபிள்ளை "நெய்தற்றிணையில் நல்லந்துவனார் ஒரு செய்யுளும் செய்திலர் என்பது பெறப்படுகிறது. ஆனால் நெய்தற்கலியை நல்லந்துவனார் பாடினார் என்று வெண்பா அறிவுறுத்துகிறது என்பதைச் சுட்டிச் செல்கிறார். மேலும், கலித்தொகை முழுவதும் நன்கு ஆராயின், அச்செய்யுட்கள் அனைத்தும் ஒரே ஆசிரியர் இயற்றியன என்பது புலனாகும். இதனை நன்கு யோசியாது புலவர்கள் சிலர் கலித்தொகையை ஐவர் பாடியதாகக் கொண்டு விட்டனர்' என்று கருத்து கூறுகிறார்.[84]

இவ்வெண்பாவைப் பற்றி வையாபுரிப்பிள்ளையும் வெங்கடராஜுலு ரெட்டியாரும் கருத்துத் தெரிவிக்கையில், முற்றும் ஆதாரமற்ற இக்காலப் புலவர் எவரோ ஒருவர் கட்டிவிட்ட கதையால் வந்த வெண்பா என்று கூறுகின்றனர்.[85]

கலித்தொகைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் கி.பி.14-ஆம் நூற்றாண்டினர் என்பர். இவர் நெய்தற்கலி 25-ஆம் செய்யுள் உரையில், சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவுத் தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுள் செய்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.[86]

எனவே, நச்சினார்க்கினியர் காலத்தில் நெய்தற்கலிச் செய்யுள் நல்லந்துவனார் செய்தார் என்னும் வழக்கு இருந்தது என்பது தெரியவருகிறது. மேலும், கடவுள் வாழ்த்தின் உரையில், "ஆதலான் ஈண்டுப் பாலைத் திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார் என்று கூறுக" நச்சினார்க்கினியார் கூறும் கருத்துச் சிந்தித்தற்குரியது.

நச்சினார்க்கினியர் கூற்றில் இருந்து கலித்தொகையில் உள்ளபடி நான்கு கலிகளைப் பாடியவர் இன்னவர் என்ப, கி.பி. 14-ஆம் நூற்றாண்டினரான நச்சினார்க்கினியர்க்கே தெரியவில்லை; அவர் காலத்துப் புலவர்களுக்கும் தெரியவில்லை; அதுபற்றிய கருத்தும் வழக்கில் இல்லை என்பது அறியத்தக்கது.

மேலும், முல்லைக்கலியில் கூறப்படும் முல்லைநில மக்கள் பாண்டிய நாட்டவராகக் காணப்படுகின்றனர். அவர்கள் பாண்டியனை வாழ்த்துவதாகவே அச்செய்யுள்களில் கருத்துக்கள் அமைந்துள்ளன. எனவே, சோழன் நல்லுருத்திரன் தன் நாட்டு மக்களைப் பாடாது பாண்டியனையும், அந்நாட்டு மக்களையும் பாடியிருப்பதும் சிந்தித்தற்குரியதாகிறது.

மேற்காட்டப்பெற்ற காரணங்களால் கலித்தொகைப் பாடலுக்குக் கூறப்பட்ட வெண்பா பிற்காலத்தில் பாடப்பட்டுச் சேர்க்கப்பட்டது என்பது புலனாகிறது. ஆகவே கலித்தொகைப் பாடல்கள் முழுவதையும் ஒரே ஆசிரியர்தான் பாடினார் என்றும் கொள்ள முடியாது.

இதுபற்றி மேலும் இலக்கிய அறிஞர்கள் கூறுகையில்,

கே.என். சிவராஜபிள்ளை, "ஒவ்வோர் சமயமும் சில இடங்களில் பாண்டியன், வையை, கூடல் என வருதல் கொண்டு கலித்தொகைச் செய்யுட்கள் அனைத்தும் பாடியவர் ஒருவர் என்பது பொருந்தா முடிபாகும்" என்று கருத்துக் கூறுகிறார்.[87]

மா. இராசமாணிக்கனார், நெய்தற்கலியில் உள்ள செய்யுளை ஆசிரியர் நல்லந்துவனார் செய்தார்; முறைப்படியே கோத்தார் எனவரும் நச்சினார்க்கினியர் கூற்றினை மறுத்துரைக்கிறார். அஃதன்றி, நெய்தற்கலியில் மட்டும் நல்லந்துவனார் பெயர் குறிப்பிட்ட உரையாசிரியர் ஏனைக் கலிகளில் கூறாமையும் 'கோத்தார்' எனப் பொதுப்படக் கூறலும் கலித்தொகைச் செய்யுட்கள் அனைத்தும் ஒருவரே செய்தனவும் அல்ல;

நல்லந்துவனார் மட்டும் பாடியதும் அல்ல என்று கூறும் கருத்து உணர்தற்குரியது.[88] மேலும், நல்லந்துவனாரே அனைத்துப் பாடல்களையும் பாடினார் எனின், 'கோத்தார்' என்று கூறுவது பொருந்தாதன்றோ என்று விளக்கம் தருகிறார். அடுத்து, "ஒரு கலியில் ஒரே துறையில் ஒரே பொருள் பற்றிப் பல பாடல்கள் ஒருவரே பாடியிருத்தல் இயலாது. ஒவ்வொரு கலியிலும் கூறியது கூறல் ஒரே ஆசிரியரால் ஏற்படத் தக்கதன்று. இக்குற்றத்தைப் பண்டைத்தமிழ்ப் புலவர்கள்மேல் ஏற்றிக் கூறலும் பொருத்தமானது அன்று"[89] என்றும் விளக்கம் தருவது அறிதற்குரியது.

வே. வேங்கடராஜுலு ரெட்டியார், கலித்தொகைப் பாடிய புலவர் ஒருவர் அல்லர் என்பதற்குக் காரணம் கூறுகையில் "கலித்தொகையில் ஒவ்வொரு திணைச்செய்யுட்களும் ஒவ்வொருவர் பாடியிருப்பாராயின், அத்திணைகளின் இறுதிச் செய்யுளின்கீழ் அவ்வொருவர் பாடிய இன்ன திணைச் செய்யுள் முற்றும் என்று எழுதப்பட்டிருக்கும். அவ்வாறின்றி நூல்முழுவதும் இயற்றியவர் நல்லந்துவனாரே ஆவர் எனின், நூலின் இறுதியில் 'நல்லந்துவனார் செய்த கலித்தொகை முற்றும்' என்று எழுதப்பட்டிருக்குமன்றே ! அவ்வாறும் இல்லாமையின் நூல் முழுதும் இயற்றினார் நல்லந்துவனார் ஆகார் என்று விடுக்க"[90] என விளக்கம் தருவதும் அறிதற்குரியது.

இவ்வாறாக, ஒரு சில இலக்கிய அறிஞர்கள் கலித்தொகைப் புலவர்கள் ஐவர் என்றும், ஒரு சிலர் ஒருவர் என்றும், மற்றும் சிலர் நல்லந்துவனாரே பாடினார் என்றும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி இருப்பது தெரியவருகிறது.

இருப்பினும், இங்குக் கலித்தொகைப் பாடல்கள் முழுவதையும் ஒரே ஆசிரியர்தான் பாடினார் என்று கொள்வதற்கில்லை. கலித்தொகையை முதலில் பதிப்பித்தச் சி.வை. தாமோதரம்பிள்ளையின் கலித்தொகைப் பதிப்பில் ஐந்து புலவர்கள் பற்றிக் குறிப்பிடும் வெண்பா இல்லாததால் பலரும் ஒரு புலவர் பாடியது என்றும், வேறு ஐந்து புலவர்கள் பாடியது என்றும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். அக்கருத்தும் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

ஐந்திணைகளும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டது என்பது பின்வந்த

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெறும் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது போன்ற நூல்கள் சான்றாகின்றன. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு புலவர் என்ற மரபு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலேயே அதிகம் காணப்படுகின்றது. கலித்தொகை, ஐங்குறுநூறு போன்றவற்றிலும் இம்மரபு காணப்படுகிறது. எனவே, இம்மரபு சங்க காலத்திற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்பதும் கலித்தொகையும் ஐங்குறுநூறும் பின்னால் வந்தவை என்பதும் தெளிவாகின்றன. ஆனால் கலித்தொகைப் புலவர்கள் ஐவரில் நால்வரின் பெயர்கள் சங்கப் -
(கபிலர், நல்லந்துவனார், பெருங்கடுங்கோ, மருதனிளநாகனார்) புலவர்கள் பெயரில் இருப்பதால் சங்கப்புலவர்களா? சங்கப்புலவர்களின் பெயர் தாங்கிய பிற்காலப் புலவர்களா? என்பது ஆராய்ந்து அறிதற்குரியது. இதனைப் பின்வரும் இயல்கள் கபிலரின் பிற அகப்புறப் பாடல்களோடு கலித்தொகைப் பாடல்களை ஒப்பிட்டு ஆராய முனைகிறது.

3.5.4.2. ஐங்குறுநூறு பாடல்கள் பற்றிய சிக்கல்கள்:-

சங்கத் தொகை நூற்பாடல்களில் ஐங்குறுநூறு பற்றியும் இலக்கியத் திறனாய்வாளர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. அவர்களில் டாக்டர். நீதிவானன் ஐங்குறுநூறு பற்றிக் குறிப்பிடும்போது "திரும்பத் திரும்பப் பயின்றுவரும் வாய்மொழி இலக்கிய உத்தியினைக் காணும்போது ஐங்குறுநூறு ஏனையவற்றைவிட முதலில் எழுதப்பட்டிருக்க வேண்டும்" என்று சுட்டிச் செல்கிறார்.[91] இக்கருத்தைப்

பற்றி வேறு எந்த விளக்கமும் அவரால் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐங்குறுநூற்று இலக்கியத்தைத் தொகுப்பிக்கச் செய்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஆவான். இதனைத் தொகுத்தவர் கூடலூர்கிழார் என்ற புலவராவார். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும், இவனது சமகாலத்தவனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனும் பகைவர் என்பதைப் புறநானூற்றில் (புறம்: 17, 20, 20) மூன்று பாடல்கள் வழியும், அவற்றின் பின்குறிப்புக்களாலும் அறியப்படுகிறது. இதனால் ஐங்குறுநூறு, மதுரை மாநகரில் கூடி, கடைச்சங்கத்தில் ஆராயப்பட்டதாகக் கூறும் கருத்து ஏற்புடையது அன்று என்ற கருத்தினைச் சுட்டிச் செல்வது அறிதற்குரியது.[92]

பி.டி. சீனிவாச ஐயங்காரும், கா. கோவிந்தனும் — ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை ஆகிய நான்கினையும் பிற்காலத் தொகைநூல்கள் என்று குறிப்பிடுவது அறியப்படுகிறது.[93] எனவே, இவரும் ஐங்குறுநூற்றை எட்டுத்தொகை நூல் வரிசையில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது அறியத்தக்கது.

இவ்வாறாக, ஐங்குறுநூறு குறித்து இலக்கிய அறிஞர்கள் மாறுபட்ட கருத்தினைக் கூறுவது அறியப்படுகிறது. இதனால் கபிலர் பாடிய குறிஞ்சித்திணைப் பாடல்கள் குறித்துச் சிக்கல் எழுகிறது. இச்சிக்கலைப் பின்வரும், வரலாற்றியல் ஆய்வும், நடையியல் ஆய்வும் ஆராய முற்படுகின்றன.

3.5.4.3. பதிற்றுப் பத்துப் பாடல்கள் பற்றியச் சிக்கல்கள் :-

பாரி இறந்தபின் கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் சென்று, அவனைப் புகழ்ந்து பாடிய பாடல்களே பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள ஏழாம்பத்துப் பாடல்கள் ஆகும். ஆனால், ஒட்டுமொத்தமாக இத்தொகுப்பு நூல்பற்றிக் கூறும்போது திறனாய்வாளர்கள் ஒரு சிலர் சிக்கலுக்குரிய கருத்துக்களை முன் வைக்கின்றனர்.

1. கா. கோவிந்தன் பிற்காலத் தொகைநூல்கள் என்று கூறும் பகுதியில் பதிற்றுப்பத்தையும் சேர்த்திருப்பது முன் தலைப்பில் சுட்டப்பெற்றது. அதுவே இங்குக் கருதத்தக்கது. மற்றொரு நூலில் இவர் இந்நூலின் காலம்பற்றிக் குறிப்பிடும்போது, "பதிற்றுப்பத்து ஆசிரியர்கள் எல்லாம் கி.பி.5-ஆம், 6-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிராமணர்கள், ஆகவேதான் அப்பாடல்களில் ஆரியக் கருத்துக்கள் மற்றும் ஆகமப் பழக்கவழக்கங்கள் பொங்கி வழிகின்றன" என்றும், இப்பாடல்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் ஆகமநெறிகள், கோவில்வழிபாடுகள் பரவியதற்குப் பின்னர்ப் பாடப்பட்டதாதல் வேண்டும் என்றும் விளக்கம் தருவது அறிந்து கொள்ளத்தக்கது.[94]

2. இனி பதிற்றுப்பத்துப் பாடல்களில் நடையில் ஒருமைக்கூறுகள் இருப்பதற்கு யாது காரணம் என்பதற்கு வ.சுப. மாணிக்கம் தரும் கருத்து இங்கு நோக்கத்தக்கது. "சேரர் குலப்பத்துப் பாடும் புலவர்கள் முன்னைப் பத்துக்களில் பார்ப்பதும் அதன் முறைகளைத் தழுவிப் பார்ப்பதும் ஒரு மரபு"[95] என்று கூறப்படுவது அதன் உண்மையறிந்து ஆராயத்தக்கதாகும்.

3. பதிற்றுப்பத்தின் பாடல்கள் அனைத்தும் ஒரே நடையொருமை காணப்படுவதைக் காட்டி அனைத்தும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டிருக்க வேண்டுமோ என ஐயுறுவர் அறிஞர் அ.சா. ஞானசம்பந்தன்.[96] பின், பதிற்றுப் பத்துப் பாடல்களைப் புலவர் பலரே பாடியுள்ளனர் என்றும், இந்நூற் பாடல்களில் கவிதை நயம் இல்லையென்று கூறுவது சரியன்று என்றும் தண்டாயுதம் கூறும் கருத்து இவரால் சுட்டிக் காட்டப்படுவதும் அறியத்தக்கது.[97]

4. பதிற்றுப் பத்துப் பாடல்களின் நடை மற்ற சங்கப் பாடல்களின் நடைக்குச் சிறிது மாறுபட்டுள்ளது. எனவே, பதிற்றுப்பத்துப் பாடல்கள் சங்ககாலத்தில் எழுதப்படவில்லை என்ற கருத்தைப் புருஷோத்தம் தன் நூலில் குறிப்பிட்டுச் செல்கிறார்.[98] வேறு விளக்கங்கள் இக்கருத்துப் பற்றி அறிவதற்கு இல்லை.

மேற்சுட்டப் பட்ட கருத்துக்களில் இருந்து, பதிற்றுப்பத்துப் பாடிய புலவர்கள் ஒருவர் என்பதும், அப்பாடல்கள் பாடப்பட்ட காலம் மிகவும் பிற்பட்டக் காலத்தினை உடையது என்பதும் பெறப்படுகிறது.

இருப்பினும், ஒரே புலவர் குறிப்பிட்ட இரு சேரப்பரம்பரை வழிவந்த அரசர்-களைப் பாடியிருக்க முடியாது என்பதைக் கால அடிப்படையில் ஏற்க இயலாது. எனவே, பதிற்றுப்பத்தை வெவ்வேறு புலவர்கள் பாடினர் என்று கொள்ளலாம். இதனைப் பின்வரும் இயல்கள் தெளிவு செய்யும்.

5.4.4. குறிஞ்சிப் பாட்டுப் பற்றியச் சிக்கல்கள் :-

பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டுக் கபிலர் பாடியதாகக் கூறப்படுகிறது. ஆனால், அப்பாட்டினைக் கபிலர் பாடியது அல்ல என்றும், பாடியது என்றும் திறனாய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியதன்று என்று கூறுவாருளர். அதற்குக் காரணமாக அப்பாட்டில் இருந்து இரண்டு சொற்களை எடுத்துக் காட்டுகின்றனர்.[99] ஒன்று,

"பைவிரி யல்குற் கொய்தழை தந்து"[100] (குறிஞ்சிப் : வரி-103)

என்னும் அடியில் வரும் 'அல்குல்' என்ற சொல்லாகும். அல்குல் என்பது பெண்குறியை உணர்த்தும் சொல் என்று குறிக்கப்படுகிறது. பெண்குறிக்குப் பெயராகப் பண்டைப் புலவர் வழங்கிலர், ஆதலின், இப்பாட்டுப் பண்டைப் புலவராகிய கபிலர் பாடியது ஆகாது என்று காரணம் கூறப்படுகிறது.[101]

இக்கருத்தினை வே. வேங்கடராஜுலு ரெட்டியார் மறுத்துக் கூறுகையில், "பண்டைச் செய்யுட்களில், அல்குல் என்பது பக்கத்தையும், மகளிரின் அரை, புட்டம் என்னும் உறுப்புக்களையும் குறித்து வந்ததேயன்றிப் பெண்குறியைக் குறித்து வந்திலது. இதனால், அல்குல் என்பது பெண் குறிக்குப் பெயரன்று என்பது போதரும். ஆகவே, இது காரணமாகக் குறிஞ்சிப்பாட்டுப் பாடியவர் கபிலரல்லர் என்பது அமையாது"[102] என விளக்கம் தருகின்றார். மற்றொன்று,

"கானக் கல்லென் மிரட்ட"[103] (குறிஞ்சிப்:பாட்-227-228)

என்ற வரியில் வரும் இரட்ட என்ற சொல்லாகும். இங்கு இரட்டுதல் என்பது ஒலித்தல் என்னும் பொருளில் குறிக்கப்படுகிறது. இரட்டுதல் என்னும்சொல், "யானைமணியிரட்ட" என்பது போலல்ல பண்டு வழங்கியதன்றி, ஒலித்தல் என்னும் பொருளில் வந்திலது. ஆதலின், இது கபிலர் பாடியது அன்று என்று கூறப்படுகிறது.[104] இக்கருத்தினையும் வேங்கடராஜுலு ரெட்டியார் தமது நூலில் மறுத்துரைத்து, குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் கபிலர் ஆகார் என்றல் அமைதியன்று என்று கூறுகிறார்.[105]

எனவே, மேற்கூறிய இரண்டு சொற்களைக் கொண்டு குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியது அல்ல என்று கொண்டாலும், வே. வேங்கடராஜுலு ரெட்டியாரின் மறுத்துரை ஏற்றுக்கொள்வதற்கில்லை. இதுபற்றி மேலும் தெளிவு பெற கபிலரின் பிற அக, புறப் பாடல்களுடன் குறிஞ்சிப்பாட்டினை (நடையியல் ஆய்வு மூலம்) ஒப்பிட்டு ஆராய்தற்குரியது.

இவ்வாறாகக் கபிலர் பாடியதாகக் கூறப்படும் கலித்தொகை (குறிஞ்சிக்கலி-29) ஐங்குறுநூறு (குறிஞ்சித்திணை-100), பதிற்றுப்பத்து (ஏழாம் பத்து-10), குறிஞ்சிப்-பாட்டு ஆகிய நான்கும், கபிலர் பாடியது அல்ல என்று இலக்கிய அறிஞர்களால் தெளிவுறக் கூறப்படுவது அறியப்படுகிறது.

3.6. முடிவுரை:-

சங்ககாலக் கபிலர் என்ற இயல்வழி பெறப்பட்ட முடிவுகள்.

1. சங்கம் என்ற அமைப்பு குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் திறனாய்வாளர்களால் கூறப்பட்டு வந்தாலும், கிடைக்கின்ற இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு பழந்தமிழகத்தில் சங்கம் என்ற அமைப்பு இருந்துள்ளமைப் பெறப்படுகிறது.

2. சங்ககாலம் பற்றிய ஆண்டு வரையறை பல திறனாய்வாளர்களால் தெளிவுபட, அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையிலேயே இருந்து வந்துள்ளது. சங்ககாலத்தினைக் களப்பிரர், பல்லவர் இவர்களின் தமிழக நுழைவு கொண்டே அக்காலத்தைக் கி.மு.300 முதல் கி.பி.300 என்று வரையறை செய்ய முடிகின்றது.

3. சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் கபிலர், தொல்கபிலர் இரு பெயர்களும் ஒன்று என்பதை இவ்வியல் தெளிவுபடுத்துகின்றது.

4. சங்கப் புலவர்களில் கபிலரின் பாடல் குறித்துப் பல்வேறு எண்ணிக்கை மாற்றங்கள் இருந்து வந்தாலும், கிடைக்கின்ற சங்க இலக்கிய பதிப்புகளில் இடம் பெறும் பாடல்கள் கொண்டு கபிலர் (234), தொல்கபிலர் (6) ஆகிய இருவரின் பாடல்களாக மொத்தம் 240 பாடல்கள் என்று தெளிவு செய்யப்படுகிறது.

5. கபிலரின் பாடல்களில் கலித்தொகை (குறிஞ்சிக்கலிப்பாடல்கள்) குறித்தும், கலித்தொகைப்பாடிய ஐந்து புலவர்கள் குறித்தும் பல்வேறு கருத்துவேறுபாடுகள் நிலவி வந்துள்ளன என்பதும், அப்பாடல்களை ஐந்து புலவர்களே பாடியுள்ளனர் என்பதும் பெறப்படுகிறது.

6. கபிலரின் மற்ற ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, குறிஞ்சிப்பாட்டு ஆகிய பாடல்கள் குறித்துச் சிக்கலான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதே தவிர, அப்பாடல்கள் குறித்துத் தெளிவான செய்திகள் ஏதும் விளக்கப்படவில்லை என்பதும் பெறப்படுகிறது.

* * *

சான்றெண் விளக்கம்:

1. இராசமாணிக்கனார், மா., 'சோழர் வரலாறு', ப.18
2. இராசமாணிக்கனார், மா., 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்', ப.6.
3. சாமிநாதையர், உ.வே., 'சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்', ப.34.
4. தேவநேயன், ஞா., 'தமிழ் இலக்கிய வரலாறு', ப.7.
5. சுந்தரசண்முகனார், 'தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம்', ப.96.
6. தேவநேயன், ஞா., 'தமிழ் இலக்கிய வரலாறு', ப.7.
7. வசந்தகுமாரி சுந்தரம், கே., 'வையாபுரிப்பிள்ளை ஆய்வு நெறி', ப.15.
8. மேலது, ப.15.
9. Sivaraja Pillai, K.N., Chronology of the Early Tamils, P.166.
10. Srinivasa Aiyangar, M., 'Tamil Studies', P.211.
11. இராசமாணிக்கனார், மா., 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு', ப.44.
12. சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., 'தமிழ் இலக்கிய வரலாறு', ப.2.
13. வேங்கடசாமி, சீனி.மயிலை, 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்', ப.9.
14. வசந்தகுமாரி சுந்தரம், கே., 'வையாபுரிப்பிள்ளை ஆய்வுநெறி', ப.9.
15. கோவிந்தன், கா., 'சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை' (பகுதி-1), ப.97
16. மேலது, ப.99.
17. சுப்ரமணியன், ந., 'தமிழக வரலாறு', ப.30.
18. வேங்கடசாமி, சீனி.மயிலை, 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்', ப.16.

19. மேலது, ப.16.

20. மேலது, ப.16.

21. மாதவி,அ., 'களப்பிரர் ஆட்சியில் தமிழ் தமிழிலக்கியம் தமிழகம்', பக்.94-95.

22. மேலது, ப.95.

23. மேலது, ப.95.

24. சிவசங்கரன்,ஏ., 'பல்லவர் ஆட்சியில் தமிழ் தமிழிலக்கியம் தமிழகம்', ப.15.

25. மேலது, ப.16.

26. மேலது, ப.15.

27. இராசமாணிக்கனார்,மா.,'திருவள்ளுவர் காலம் யாது ?', ப.10.

28. மேலது, ப.11.

29. இராசமாணிக்கனார், மா., 'சோழர் வரலாறு', ப.18.

30. மேலது, ப.18.

31. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ) 'புறநானூறு'(பாடினோர் வரலாறு), ப.60.

32. சிவசுப்பிரமணியன்,வே.,(பதி.ஆ),'அகநானூறு'(மணிமிடைப்பவளம்), பாடல் எண்-251.

33. மேலது, பாடல் எண்-265.

34. சதாசிவப்பண்டாரத்தார்,தி.வை.,'தமிழ் இலக்கிய வரலாறு', பக்-4-5.

35. மேலது, ப.5.

36. இராசமாணிக்கனார்,மா.,'தமிழ்மொழி-இலக்கிய வரலாறு',பக்-54-56.

37. 'அகநானூறு', பாடல் எண்-251,281.

'புறநானூறு', பாடல் எண்-172.

38. சிவசுப்பிரமணியன்,வே.,(பதி.ஆ), 'அகநானூறு'(மணிமிடைப்பவளம்), பாடல் எண்-251.

39. மேலது, பாடல் எண்-281.

40. சிவசுப்பிரமணியன்,வே., (பதி.ஆ),'அகநானூறு',(களிற்றியானைநிரை), பாடல் எண்-69.

41. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ) 'புறநானூறு',பாடல் எண்-175.

42. இராசமாணிக்கனார்,மா., 'சோழர் வரலாறு', ப.9.

43. இராசமாணிக்கனார்,மா., 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு', ப.25.

44. வையாபுரிப்பிள்ளை,எஸ், 'சங்க இலக்கியம்'(பகுதி-1), முகவுரை,ப.4.

45. கோவிந்தன்,கா., 'தமிழர் வரலாறு',(பகுதி-1),ப.242.

46. வசந்தகுமாரி சுந்தரம்,கெ.,'வையாபுரிப்பிள்ளை ஆய்வுநெறி',ப.21.

47. வையாபுரிப்பிள்ளை,எஸ், 'சங்க இலக்கியம்' (பகுதி-1),முகவுரை,ப.4.

48. இராசமாணிக்கனார்,மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', ப.247.

49. மேலது, ப.20.

50. மேலது, ப.20.

51. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ) 'புறநானூறு', பாடல் எண்-53.

52. சண்முகம்,செ.வை., 'மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும்', பக்.65-66

53. மேலது, ப.66.

54. மேலது, ப.80.

55. மேலது, ப.80.

56. சஞ்சீவி,ந., 'சங்க இலக்கிய அட்டவணைகள்', ப.33.

57. i) சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ) 'புறநானூறு' (பாடியோர் வரலாறு ப.35.

ii) வேங்கடராஜுலு ரெட்டியார்,வே., 'கபிலர்', ப.30.

iii) வையாபுரிப்பிள்ளை,எஸ்., 'சங்க இலக்கியம்'(பகுதி-1),பக்.428-436.

)நாராயணசாமி ஐயர்,அ.,(பதி.ஆ), 'நற்றிணை நானூறு மூலமும் உரையும்',(பதிப்பு).

58. i) சிங்காரவேலு முதலியார்,ஆ., (பதி.ஆ) 'அபிதான சிந்தாமணி',ப.337

ii) கனகராஜையர், 'தமிழ்ப்புலவர் வரலாறு', ப.37.

59. i)கனகராஜய்யர்,நா., 'தமிழ்ப்புலவர் வரலாறு', ப.37.

ii) சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ) 'புறநானூறு',(பாடியோர் வரலாறு),ப.35

iii) சிங்காரவேலு முதலியார்,ஆ.,(பதி.ஆ) 'அபிதானசிந்தாமணி',ப.337

...122/-

60. i) வேங்கடசாமி நாட்டார், ந.மு., (பதி.ஆ) 'அகநானூறு', (பதிப்பில் இடம்பெறும் பாடல்கள்).

ii) வேங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', ப.30.

iii) கோவிந்தன், கா., 'சங்கத்தமிழ்ப்புலவர் வரிசை', (பகுதி-1), ப.115.

61. சோமசுந்தரனார், பொ.வே., (பதி.ஆ) 'அகநானூறு', பாடல் எண்-12.

62. துரைசாமிப்பிள்ளை, சு.ஔவை, (பதி.ஆ) 'புறநானூறு' (பதிப்பில் இடம்பெறும் பாடல்கள்).

63. வையாபுரிப்பிள்ளை, எஸ், 'சங்க இலக்கியம்' (பகுதி-1), ப.425.

64. கந்தையாபிள்ளை, ந.சி., (பதி.ஆ) 'கலித்தொகை வசனம்', (முகவுரை), ப.5.

65. மேலது, ப.5.

66. Sivaraja Pillai, K.N., 'The Chronology of the Early Tamils', p.224.

67. வையாபுரிப்பிள்ளை, எஸ்., 'தமிழ்ச்சுடர்மணிகள்', ப.55.

68. Vaiyapuripillai, S., 'History of Tamil Language and Literature', p.30.

69. கோவிந்தன், கா., 'தமிழர் வரலாறு', (பகுதி-1), ப.242.

70. கோவிந்தன், கா., 'சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை', (பகுதி-1), ப.74.

71. இராசமாணிக்கனார்,மா., 'திருவள்ளுவர் காலம் யாது ?', ப.9.

72. இராசமாணிக்கனார்,மா., 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு',ப.196.

73. நீலகண்ட சாஸ்திரி,கே.அ., 'சோழர்கள்' (புத்தகம்-1),ப.5.

74. Ramachandran, C.E., 'Historical Studies in the Pattuppattu', p.103.

75. Ibid., p.104.

76. நீதிவாணன்,ஜெ., 'நடையியல்', ப.31.

77. Jesudasan, C., 'Peaks of Sangam Poetry', p.4.

78. சாரங்கபாணி,இரா., 'சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்'(தொகுதி-1), ப.119.

79. வசந்தகுமாரி சுந்தரம்,கே., 'வையாபுரிப்பிள்ளை ஆய்வு நெறி',ப.22.

80. பாலசுப்பிரமணியன்,கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்',ப.246.

81. சண்முகம்,செ.வை., 'மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும்',ப.109.

82. சாமிசிதம்பரனார், 'பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும்', ப.145.

83. இராசமாணிக்கனார்,மா., 'தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி', ப.60.

84. Sivaraja Pillai, K.N., 'Chronology of the Early Tamils', p.225.

85. வேங்கடராஜுலு ரெட்டியார்,வே., 'கபிலர்', ப.38.

86. அனந்தராமையர்,இ.வை.,(பதி.ஆ) 'கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்', ப.893.

87. Sivarajapillai, K.N., 'Chronplogy of the Early Tamils', p.224.

88. இராசமாணிக்கனார்,மா., 'தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி',ப.6

89. மேலது, ப.64.

90. வேங்கடராஜுலு ரெட்டியார்,வே., 'கபிலர்', ப.34.

91. ஸ்ரீநிவாசன், ஜெ., 'நடையியல்', ப.31.

92. வையாபுரிப்பிள்ளை,எஸ்., 'இலக்கியச் சிந்தனைகள்', ப.36.

93. i) Srinivasa Iyengar, P.T., 'History of the Tamils', p.1[illegible].

ii) கோவிந்தன்,கா., 'தமிழர் வரலாறு' (பகுதி-1), ப.242.

94. கோவிந்தன்,கா., 'தமிழர் வரலாறு' (பகுதி-2), ப.242.

95. மேலது, ப.227

96. மேலது, ப.277.

97. பாலசுப்ரமணியன்,கு [illegible]

98. புருஷோத்தமம், வி.வி., 'சங்ககால மன்னர் காலநிலை வரலாறு' (பகுதி-1), ப.29.

99. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', ப.38.

100. சாமிநாதய்யர்,உ.வே., (பதி.ஆ) 'பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்' (குறிஞ்சிப்பாட்டு)பாடல் வரி-103.

101. வெங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', ப.38.

102. மேலது, ப.40.

103. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ) 'பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்' (குறிஞ்சிப்பாட்டு) பாடல் வரி-227,228..

104. வெங்கடராஜுலு ரெட்டியார், வே., 'கபிலர்', ப.40.

105. மேலது, ப.41.

* * *

இயல் : நான்கு

வரலாற்று நோக்கில் கபிலர்

4. வரலாற்று நோக்கில் கபிலர்

4.1. முன்னுரை

4.2. சங்ககாலம்

4.3. அரசர்கள் புலவர்கள் உறவுநிலையில் கபிலர்

4.3.1. கபிலரின் அகப்பாடல்களில் அரசர்கள்

4.3.1.1. காரி

4.3.1.2. ஓரி

4.3.1.3. நள்ளி

4.3.2. கபிலரின் புறப்பாடல்களில் அரசர்கள்

4.3.2.1. சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன்

4.3.2.2. வேள்பாரி

4.3.2.3. மலையமான் திருமுடிக்காரி

4.3.2.4. விச்சிக்கோ

4.3.2.5. இருங்கோவேள்

4.3.2.6. பேகன்

4.3.2.6.1. அரிசில்கிழார்

4.3.2.6.2. வன்பரணர்

4.3.3. கபிலரைப் பாடிய புலவர்கள்

4.3.3.1. மாறோக்கத்து நப்பசலையார்

4.3.3.1.1. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

4.3.3.2. பொருந்திலிளங்கீரனார்

4.3.3.2.1. கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

4.3.3.3. பெருங்குன்றூர்கிழார்

4.3.3.3.1. சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

4.3.3.3.2. உருவப்பஃறேரிளஞ் சேட் சென்னி

4.3.3.3.2.1. பரணர்

4.3.3.4. நக்கீரர்

4.3.3.4.1. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

4.3.4. கபிலரால் பாடப்பெற்ற புலவர்

4.3.4.1. கழாஅத்தலையார்

4.4. முடிவுரை

* * *

4. வரலாற்று நோக்கில் கபிலர்

4.1. முன்னுரை:-

சங்க இலக்கியப் பாடல்களை மொத்தம் 473 புலவர்கள் பாடியுள்ளார்கள். இவர்களில் பல புலவர்கள் நூறுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்களில் அம்மூவனார் (127), பேயனார் (105), ஓதலாந்தையார் (103), ஓரம்போகியார் (110), கபிலர் (235), ஆகிய ஐவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் ஐவரும் ஐங்குறுநூற்றில் முறையே 100 பாடல்கள் பாடியிருப்பதாலே அதிகப்பாடல்கள் பாடியவர்களின் வரிசையில் இடம்பெறுகின்றனர். ஆனால், கபிலர் ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைக்குரிய 100 பாடல்கள் பாடியிருந்தாலும், மற்ற தொகைநூல்களில் பாடியுள்ள பாடல்களின் எண்ணிக்கை மட்டும் 135 பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கபிலர்காலப் புலவர்களாகக் கூறப்படுகின்ற பரணர் (85), நக்கீரர் (37), ஔவையார் (59), கல்லாடனார் (14), நல்லந்துவனார் (40), பாலைபாடிய பெருங்கடுங்கோ (65), பெருங்குன்றூர்கிழார் (21), அரிசில் கிழார் (16) முதலானவர்கள் நூறுக்கும் குறைவான பாடல்களே பாடியுள்ளனர்.

கபிலர் சங்கப் புலவர்களிலே அதிகமான பாடல்களைப் பாடியவர் என்பதால் அவரின் பாடல்கள் குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள்

கூறப்படுகின்றன. இவ்வேறுபாடுகளைத் தெளிவுசெய்யும் பொருட்டுக் கபிலரால் பாடப்பட்ட அரசர்கள், அவ்வரசர்களைப் பாடிய புலவர்கள், கபிலரைப்பாடிய புலவர்கள், அப்புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள் என்கிற உறவு நிலையில் கபிலரின் காலத்தை வரலாற்றியல் நோக்கில் விளக்க முற்படுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

4.2. சங்ககாலம்:-

முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களில் கடைச்சங்கமே சங்ககாலப் பகுதியாகக் கொள்ளப்படுகிறது. அச்சங்ககாலம் கி.மு.300-இல் தொடங்கி, கி.பி.300-இல் முடிந்துள்ளது என்பது முன் இயலில் (சங்ககாலக் கபிலர்) ஆராயப்பட்டது. எனவே, சங்ககாலம் சுமார் 600 ஆண்டுகள் நிகழ்ந்துள்ளது என்பது ஆராய்ந்து பெறப்பட்ட முடிவாகும். இந்த 600 ஆண்டுக்காலப் பிரிவுக்குள் வாழ்ந்த புலவர்கள் - அரசர்கள் உறவுநிலையில் கபிலரின் காலம் ஆராயப்படுகிறது.

4.3. அரசர்கள் - புலவர்கள் உறவு நிலையில் கபிலர்:-

சங்ககாலத்தில் புலவர்கள் யாராவது ஒரு அரசனைச் சார்ந்தே பாடல்கள் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்துள்ளனர். சில புலவர்கள் சில மன்னர்களைத் தங்களின் உயிர்த்தோழர்களாகவே கொண்டிருந்தனர் என்பதும் பெறப்படுகிறது. அவர்களுள் கபிலர், ஔவையார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், கோவூர்கிழார்,

போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அரசர்களைச் சார்ந்தும், அவர்களின் நட்பைப் பெற்றும் வாழ்ந்துள்ளதை அவர்கள் பாடியுள்ள பாடல்கள் வழி அறியலாம். இவர்களில் கபிலர் பாரியை நண்பனாகப் பெற்று வாழ்ந்திருப்பது போன்று வேறு எந்தச் சங்கப் புலவர்களும் வாழ்ந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கபிலர் பாரியை உயிர்த்தோழனாகக் கொண்டு இருந்தாலும், வேறு சில அரசர்களையும் தம் பாடல்களில் பாடியிருக்கின்றார். அவர்களில் பேகன், காரி, விச்சிக்கோ, இருங்கோவேள், செல்வக் கடுங்கோ வாழியாதன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் மட்டுமின்றி, நள்ளி, ஓரி, அகுதை என்பவர்களையும் கபிலர் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டினை ஆரியவரசன் யாழ்ப்பிரமத் தத்தனுக்காகப் பாடியுள்ளார். இருப்பினும், அப்பாட்டில் அவ்வரசனைப் பற்றி யாதும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கபிலர், அரசர்களை மட்டுமின்றிச் சில புலவர்களையும் தம் பாடல்களில் புகழ்ந்துள்ளார். அவர்களில் கழாத்தலையார் என்னும் புலவர் குறிப்பிடத்தக்கவர். இவரைப் பற்றிக் கபிலரின் பாடல் ஒன்றில் பெருமையாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு, கபிலர் தம் பாடல்களில் பாரி, ஓரி, காரி, பேகன், செல்வக்கடுங்கோ வாழியாதன், விச்சிக்கோ, இருங்கோவேள், அகுதை, நள்ளி

ஆகிய அரசர்களையும், கழாத்தலையார் என்னும் புலவரையும் பாடியுள்ளார். இஃதன்றிக் கபிலரை மார்க்கோக்கத்து நப்பசலையார், பெருங்குன்றூர்கிழார், நக்கீரர், பொருந்திலிளங்கீரனார் ஆகிய நான்கு புலவர்களும் புகழ்ந்து பாடியுள்ளனர். இவர்களின் வரலாறு இங்கு ஆராயப்படுகிறது.

4.3.1. கபிலரின் அகப்பாடல்களில் அரசர்கள்:-

கபிலர், அரசர்களைப்பற்றி நிறையப் புறப்பாடல்களில் மட்டுமின்றி அகப்பாடல்களிலும் ஒரிரு அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். காரி, ஓரி, நள்ளி ஆகியோர் கபிலரின் அகப்பாடல்களில் இடம்பெறும் அரசர்களாவார்கள்.

4.3.1.1. காரி:-

தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர் வழி வந்தோர் ஆண்டு கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே அவர்களுக்கு அடங்கியும் அடங்காமலும் அதியர், ஆவியர், மலையர், வேளிர் போன்ற வேறுபிற இனத்தரசர்களும் ஆண்டு வந்துள்ளனர்.[1] மூவேந்தர்கள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நாட்டை ஆண்டுவந்தது போன்றே குறுநில மன்னர்களும் தங்கள் ஆட்சிக்குரிய நிலமாக ஓர் எல்லைக்குட்பட்ட பகுதியை ஆண்டு வந்தனர்.

அத்தகைய அரச இனங்களுள் ஒன்றாகிய மலையர் அல்லது மலையமான்கள் என்பார், இன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளதும் பெண்ணையாற்றின் -

கரைக்கண்ணதாயுமான திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டதுமான சிறநாட்டை ஆண்டுவந்தனர்.[2] மலையமானாட்டார் அவ்வக்கால அரசியல்நிலைக்கு ஏற்ப, சிலகால் சேரர்க்கும், சிலகால் சோழர்க்கும் படைத்துணைப் புரிவராயினர். இதனைப் புறம்.125-ஆம் பாடல் அறிவுறுத்துகிறது.

மலைய மன்னர்களுள் திருமுடிக்காரி என்பவன் சிறந்தவனாவான். இவன் தன் ஆட்சியில், முள்ளூர் மலையைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசை கொண்டு பெரும்படையுடன் வந்த ஆரிய அரசர்களை வென்று துரத்தியடித்தான் காரி என்பது, நற்றிணை-100, 291, 320 ஆகிய பாடல்களாலும், புறம்-158-ஆம் பாடல்வழியும் அறியப்படுகிறது. அப்போது அதியமான் நெடுமானஞ்சி என்னும் குறுநில மன்னன் சேரநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி இன்று தர்மபுரி என வழங்கும் தகடூரை ஆண்டு வந்தான். தன்குலத்தவரும், தன் பகைவருமாகிய சேரர்க்கு மலையமான் திருமுடிக்காரி படைத்துணை அளித்தான் என்ற காரணத்தால் அவனோடு பகை கொண்டான் அதியன். அதனால் காரி ஆட்சி செலுத்திய திருக்கோவலூர்க்குப் பேரழிவை உண்டாக்கினான்.

அதியன்பால் தோல்விகண்ட மலையன் அவனை எவ்வாறேனும் வெற்றிகொள்ள விரும்பினான். அக்காலத்தில் சேரநாட்டில் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் பெருவேந்தன் ஆண்டுகொண்டிருந்தான். அவன் அதியன்பால் பகைகொண்டுள்ளான் என்பதறிந்த மலையமான், அவன் துணைகொண்டு அதியனை அழிக்கத் துணிந்தான்.

இதற்கிடையில், கொல்லிமலையை ஆண்டு வந்த வல்வில்ஓரியை முதலில் அழிக்க வேண்டும் என்று பெருஞ்சேரல் இரும்பொறை திட்டமிட்டான். அதற்காகத் திருமுடிக்காரி கொல்லிமலையை நோக்கிப் படையுடன் சென்று, ஓரியை வென்றான். ஓரியை வென்று கொல்லிமலையைப் பெருஞ்சேரலிரும்பொறைக்கு அளிக்கிறான் காரி. அதனால் பெருமகிழ்ச்சி கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை அம்மலையன் உளம் உவக்குமாறு தகடூரை முற்றுகையிட்டு அதியமானை வென்றுவிடுகிறான்.

மலையமான் திருமுடிக்காரியும், பெருஞ்சேரல் இரும்பொறையும் வாழ்ந்த காலத்தே சோணாடாண்ட சோழ வேந்தருள் சிறந்து விளங்கியவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன். இவ்வரசன் தன் பகைவன் பெருஞ்சேரலிரும்பொறை மலையமானுக்கு உறுதுணையாக உள்ளான் என்ற காரணத்தால் அவன்மேல் மிகுந்த சினங்கொண்டான். இதனால் மலையமானோடு போரிட்டு, அவனை வென்று அவன் மக்கள் இருவரையும் சிறைப்படுத்தி யானையின்கால்கீழிட்டுக் கொல்லத்துணிந்தான் என்பதைப் புறம் 46-ஆம் பாடல் அறிவுறுத்துகிறது.

காரியின் வரலாற்றை அறியும்போது அவன் வாழ்ந்த காலத்தே தொடர்புடைய மன்னர்களாக அதியமான் நெடுமானஞ்சி, பெருஞ்சேரல் இரும்பொறை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், ஓரி ஆகிய நால்வரும் குறிக்கப்படுகின்றனர். எனவே, காரி உள்ளிட்ட ஐவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது பெறப்படுகிறது.

இம்மன்னர்களைப் பாடிய புலவர்கள் யாவர் என்று அறியும்போது கபிலரின் காலத்தை ஓரளவு தெளிவாக்க முடியும் எனலாம்.

1. அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் ஆகிய நான்கு புலவர்கள் பாடியுள்ளனர்.

2. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், கோவூர் கிழார், நல்லிறையனார், எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார், வெள்ளைக்குடிநாகனார் ஆகிய பத்துப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.

3. காரியை அம்மூவனார், கபிலர், கல்லாடனார், கோவூர்கிழார், நல்லூர் நத்தத்தனார், பரணர், பெருஞ்சித்திரனார், மாறோக்கத்து நப்பசலையார் ஆகிய எட்டுப் புலவர்கள் பாடியுள்ளனர்.

பெருஞ்சேரல் இரும்பொறை, ஓரி ஆகியோரின் வரலாறு பின்னர் ஆராயப்பட உள்ளது.

இங்கு, பரணர், பெருஞ்சித்திரனார், மாறோக்கத்து நப்பசலையார் ஆகிய மூன்று புலவர்களும் காரி, அதியமான் நெடுமான் அஞ்சி ஆகிய இருவரையும் பாடியவர்கள் என்பதில் சமகாலப் புலவர்களாகின்றனர். கோவூர்கிழார் காரியைப்

பாடியிருந்தாலும் சோழக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியிருப்பதால் வேறுபட்டு நிற்கிறார்.

4.3.1.2. ஓரி:-

கொல்லி மலையையும், அம்மலையைச் சூழ அமைந்த சிறு நாட்டையும் ஆண்டிருந்தவன் ஓரி என்னும் பெயருடைய குறுநில மன்னனாவான். கடையெழு வள்ளல்களுள் ஒருவனாய்க் குமணனுக்கும் ஒய்மா நாட்டு நல்லியக்கோடனுக்கும் முற்பட்டோனாய் வாழ்ந்த வல்வில் ஓரி, தன் பெயரே பூண்ட குதிரை மீது அமர்ந்து அமர் செய்யும் பெரு வீரனாதலோடு தன் படையுள் மழவர் என்ற சிறந்த வீரரையும் பெற்றிருந்தான். இதனை,

"ஓரிக் குதிரை ஓரியும் எனஆங்கு
எழுசமம் ...." (சிறுபாண்: வரி-111)[3]

"மழவர் பெருமகன் மாவள் ஓரி ....
.........................."(நற்: 53)[4]

எனவரும் பாடல் வரிகள் அறிவுறுத்துகின்றன.

அவனையும் அவனது மலையையும் அடைதல் வேண்டும் என்ற விருப்பம் உடையவனான பெருஞ்சேரல் இரும்பொறையின் கருத்தறிந்த, திருமுடிக்காரி

கொல்லிமலையை அடைந்து ஓரியுடன் போர் செய்து அவனது நாட்டைக் கைப்பற்றி வெற்றி வாகை சூடினான் என்பது கபிலர் பாடிய குறுந்தொகைப் (குறு : 100) பாடல் வழி அறியப்படுகிறது.

ஓரியைக் கபிலர் மட்டுமின்றி, வேறு பல புலவர்களும் பாடியுள்ளனர். கல்லாடர், கழைதின் யானையார், நல்லூர் நத்தத்தனார், பரணர், பாலத்தனார் பெருஞ்சித்திரனார், வன்பரணர் முதலானோர் ஆவர்.

இவன் காலத்து அரசர்களாகக் காரி, பெருஞ்சேரல் இரும்பொறை ஆகியோர் அறியப்படுகின்றனர்.

எனவே, ஓரி, காரி ஆகிய இருவரையும் பாடிய புலவர்கள் என்பதில் கல்லாடர், கபிலர், நல்லூர் நத்தத்தனார், பரணர், பெருஞ்சித்திரனார் ஆகியோர் சமகாலப் புலவர்களாகின்றனர் என்பது பெறப்படுகிறது.

4.3.1.3. நள்ளி:-

கபிலர் பாடிய அகநானூற்றுப் பாடல் ஒன்றில் நள்ளி குறிப்பிடப்படுகின்றான். இவன் தோட்டி மலையையும் அதைச் சூழ்ந்து உள்ள காடுகளையும் காவல் மேற்கொண்டு வாழ்ந்திருந்தவன். இவன் 'கண்டீரக்கோ' எனவும், 'கண்டீரக்கோப்பெருநள்ளி' எனவும் வேறு பெயர்களில் கூறப்படுகின்றான்.[5]

நல்லிசை வல்பரணர் (புறம்:150), காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் (குறு:210), இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறுபாண்: வரி-103-107), பரணர் (அகம் : 152), பெருஞ்சித்திரனார் (புறம் : 158) போன்ற புலவர்கள் பாடியுள்ளனர்.

இப்புலவர்களில் பெருஞ்சித்திரனார் குமணன், அதியமான் நெடுமானஞ்சி, இளவெளிமான் ஆகிய மூவரைப் பாடியுள்ளார். வல்பரணர் ஓரியை மட்டும் பாடியுள்ளார்.

காக்கைப்பாடினியார் பதிற்றுப்பத்தில் (ஆறாம் பத்து) ஆடுகோட்பாட்டு சேரலாதனைப் புகழ்ந்துள்ளார்.

பரணர் உருவப்ப ஃறேரிளஞ்சேட் சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்ப ஃறடக்கைப் பெருநற்கிள்ளி வையாவிக்கோப்-பெரும்பேகன், சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் ஆகிய அரசர்களைப் பாடியுள்ளார்.

மேற்கூறிய அரசர்களைப் பாடிய புலவர்கள் எல்பதில் கபிலருடன் பெருஞ்சித்திரனார், காக்கைப்பாடினியார், வல்பரணர், பரணர் ஆகிய நால்வரும் சமகாலத்தவர்கள் ஆகின்றனர்.

...[illegible]/-

இவ்வாறாக, கபிலரின் அகப்பாடல்களில் காரி, ஓரி, நள்ளி என்னும் மூன்று அரசர்கள் அறியப்படுகின்றனர். இவர்களைப் பாடிய பிற புலவர்கள், அப்புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள் என்ற நிலையில் காணும்போது நிறைய ஒற்றுமை வேற்றுமைகள் உள்ளன. கபிலர் அகப்பாடல்களில் குறிக்கப்படும் இம்மூன்று அரசர்களும் கடையெழு வள்ளல்களாகக் குறிக்கப்படுகின்றனர்.

இம்மூவரையும் கபிலர், பெருஞ்சித்திரனார், பரணர், கல்லாடனார், நல்லூர் நத்தத்தனார் ஆகிய ஐந்து புலவர்கள் பாடியுள்ளதால் சமகாலப் புலவர்களாகின்றனர். ஆனால், பெருஞ்சித்திரனார் குமணனையும் பாடியிருப்பது ஐயத்திற்கு இடமளிக்கிறது. இவனது காலம் கடையெழு வள்ளல்களின் காலத்திற்கு அடுத்த காலப்பகுதியாகக் கூறப்படுகிறது. இவ்வரசனைப் பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவரும் பாடியுள்ளார். இவர் பாடிய அரசர்களாக நள்ளியின் தம்பி இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ, இளங்குமணன் எனப் பிற்காலத்தில் வாழ்ந்த அரசர்களையே (சங்ககால அரசர்களின் 2-வது தலைமுறையினர்) பாடியிருப்பது தெரியவருகிறது.

எனவே, கபிலர் பாடிய அகப்பாடல்களில் இடம்பெறும் அரசர்கள் என்பதில் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் கபிலருடன் சமகாலத்தில் வாழ்ந்தவர் என்றாலும், குமணனைப் பாடியிருப்பது கொண்டு கடையரின் இறுதிக்காலத்தில் வாழ்ந்த புலவராக அவரை எண்ணலாம்.

இக்கருத்தும் பின்வரும் கபிலரின் புறப்பாடல் அரசர்கள் - புலவர்கள் உறவுநிலையில் ஒப்பிட்டு ஆராயத்தக்கது.

4.3.2. கபிலரின் புறப்பாடல்களில் அரசர்கள் :-

கபிலர் ஒருசில அரசர்களைத் தான்பாடிய அகப்பாடல்களில் சுட்டியிருக்கத் தன் உயிர்த்தோழனாகிய பாரியை எந்த ஒரு அகப்பாடல்களிலும் குறிப்பிடாதது உணர்தற்குரியது. பாரியைப் புறப்பாடல்களில் மட்டுமே புகழ்ந்து பாடுகிறார். அதேபோன்று கபிலரால் பாடப்பட்ட வேறுசில அரசர்களும் புறப்பாடல்களில் மட்டுமே புகழப்படுகின்றனர். அவர்களில் இருங்கோவேள், விச்சிக்கோ, கடுங்கோ வாழியாதன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வரசர்களைக் கபிலர் தவிர வேறு புலவர்கள் யாவரும் பாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கபிலர் தனது புறப்பாடல்களில் நிறைய அரசர்களைக் குறித்துப் பாடியுள்ளார். அவர்களோடு சில நாள் தங்கி வாழ்ந்து உள்ளார் என்பதும், அவர்களை அணுகிப் பரிசில் வேண்டியுள்ளார் என்பதும் புறநானூற்றுப் பாடல்கள்வழி அறியப்படுகின்றன. சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், பாரி, மலையமான் திருமுடிக்காரி, பேகன், விச்சிக்கோ, இருங்கோவேள், அகுதை போன்றவர்கள் கபிலரால் பாடப்பட்ட புறநானூற்று அரசர்கள் ஆவர்.


இவ்வரசர்களின் வரலாற்றினையும், இவர்களைப் பாடிய பிற புலவர்களின்

வரலாற்றினையும் ஒப்பிட்டு ஆராயும்போது கபிலரின் காலநிலை ஓரளவிற்குத் தெளிவாகும் எனலாம். அவ்வகையில் கபிலரின் புறப்பாடல்களில் இடம்பெறும் அரசர்களின் காலநிலை வரலாறு ஆராயப்படுகிறது.

4.3.2.1. சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன்:

கபிலர் பதிற்றுப்பத்தில் உள்ள ஏழாம் பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளார். இ∴தன்றிப் புறநானூற்றில் (பாடல் எண்: 8,14) இரண்டு பாடல்களிலும் இவ்வரசனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவ்வரசனது வரலாறு பற்றித் தெரிவிப்பது பதிற்றுப்பத்தில் இடம்பெறும் பதிகமேயாகும். இப்பதிகம் சேரர்களின் தலைமுறையினை ஒருவாறு நிரல்படுத்திக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் சேரர் வரலாறு இரண்டு தலைமுறையாகப் பிரித்துக் கூறப்படுகிறது.[6] அவர்களின் வழித்தோன்றல் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு:



கருவூர் ஏறிய கோப்பெருஞ்சேரல் இரும்பொறை
அந்துவஞ்சேரல் (வஞ்சி பெருந்தேவி)
(மகன்)
உதியஞ்சேரல் (நல்லினி)
(2 மகன்கள்)
செல்வக்கடுங்கோ வாழியாதன்
(பதுமன் மகள்)
(மகன்)
நெடுஞ்சேரலாதன்
(2 மனைவியர்)
பல்யானைச் செல்கெழுகுட்டுவன்
தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
(அந்துவஞ்செள்ளை)
(3 மகன்கள்)
(மகன்)
சோழன் மகள்
(பதுமன்மகள்)
இளஞ்சேரல் இரும்பொறை
செங்குட்டுவன்
நார்முடிச்சேரல்
ஆடுகோட்-
பாட்டுச்
சேரலாதன்

....13 /-

இவ்வாறாக; பதிற்றுப்பத்துப் பதிகங்கள் வழி பத்துச் சேரர்களின் பிறப்பு பற்றிய வரலாறு அறிய முடிகிறது. இதனையே அடிப்படையாகக் கொண்டு அவ்வரசர்களின் காலமும் மற்ற அரசர்கள் - புலவர்களின் காலமும் எவ்வகையில் ஒன்றுபடுகின்றன அல்லது வேறுபடுகின்றன என்பது இனி ஆராயப்படுகிறது.

சேரர் பரம்பரையில் அந்துவஞ்சேரல், உதியஞ்சேரல் என்ற இரு பரம்பரையினர் வாழ்ந்துள்ளனர் என்ற குறிப்பே பலராலும் தரப்படுகின்ற கருத்து. அவர்களில் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்த அந்துவஞ்சேரல் பெருந்தேவி இவர்களின் மகனாகச் செல்வக்கடுங்கோ வாழியாதன் குறிக்கப்படுகின்றான்.[7] இவனின் மனைவியாகப் பதுமன் என்பவனின் மகள் எனக் குறிக்கப்படுகின்றாளே தவிர அவளது பெயர் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் மகனாகத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை கூறப்படுகின்றான்.

பதிற்றுப்பத்தில் இவனது பெயர் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்று கூறப்படுகிறது. கபிலர் பாடிய இரண்டு புறநானூற்றுப் பாடல்களில் இவனது பெயர் சேரமான் கடுங்கோ வாழியாதன் என்றும், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்றும் கூறப்படுவதால் செல்வக்கடுங்கோ வாழியாதன் பெயர் குறித்து ஐயம் எழுகிறது.

உ.வே. சாமிநாதய்யர் தனது புறநானூற்றுப் பதிப்பில் சேரமான் கடுங்கோ வாழியாதனையும், சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனையும் பாடப்பட்டோர்

வரலாற்றில் தனித்தனியாகக் குறிப்பிடுகிறார். சேரமான் கடுங்கோ வாழியாதன் என்ற பெயருக்கு விளக்கம் தருகையில் பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்திற்கு உரியவன் இவனே என்று குறிப்பிடுகிறார்.[8] இதனால் மேற்கூறிய மூன்று பெயர்களும் ஒரே பெயரினைக் குறிப்பதாகவும், வேறு வேறு பெயர்களைக் குறிப்பதாகவும் கருத்து கூறப்படுகிறது.

இவ்வரசனைக் கபிலர் மட்டுமே பாடியுள்ளார் என்பது அறியப்படுகிறது. வேறு புலவர்கள் யாரும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இம்மூன்று பெயர்களும் ஒரே அரசனைக் குறிக்கும் பெயரே என்று உறுதியிட்டுக் கூறலாம். மேலும், 'சேரமான்' என்பது தன் நாட்டுப் பெயராகவும் 'செல்வ' என்பது செல்வம் அதிகம் உடையவன் என்ற காரணத்தினாலும் இவனுக்குச் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற பெயர் வழங்கப் பட்டிருக்க வேண்டும் எனலாம்

கபிலர், பாரி இறந்தபின் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் சென்று பாடியதாகக் குறிப்பு உள்ளது. கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் சென்று, "திரும்பி வரமுடியாத உலகத்திற்குப் பாரி சென்று விட்டான். அதனால் என்னை நீ காப்பாற்ற வேண்டும் என்று உன்னிடம் இரக்க ரவில்லை. உனது நல்ல புகழைக் கேள்விப்பட்டு உன்னைக் காண வந்தேன்" என்று கூறுவதாக அமைகிறது. இதனை,

"மலர்ந்த —:ரியின் மாவண் பாரி......

வாராச் சேண்புலம் படர்ந்தோன்; அளிக்க என

இரக்குவாரேன்; எஞ்சிக் கூறேன்

நல்இசை தரவந்திசிலே" ...... (பதிற்று:61)

எனவரும் பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.[9]

இதன்வழி, கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடும்போது பாரி உயிருடன் இல்லை என்ற கருத்து பெறப்படுகிறது. இவ்வரசனைக் கபிலர் தவிர வேறு எந்தப் புலவரும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவன் 25 ஆண்டுகள் ஆட்சிப் புரிந்தான் என்றும் கூறப்படுகிறது. காலம் கி.மு.250 முதல் கி.மு.225 என்றும் குறிப்பிடப்படுகிறது.

4.3.2.2. வேள்பாரி:-

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகக் குறிக்கப்படுகின்றான். இவனே முந்நூறு ஊரை உடைய பறம்பு நாட்டிற்கும், பறம்பு மலைக்கும் தலைவன். முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தோன் என்பதை,

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய

பிறங்குவெள் ளருவி வீழும் சாரற்

பறம்பிற் கோமான் பாரியும்....." (சிறுபாண்:வரி-89-91)

என்கின்ற வரிகள் தெரியப்படுத்துகின்றன.[10]

"பாரியும் பாண்டியன் மண்டலமே"[11]

என முடியும் பாண்டி மண்டல சதகச் செய்யுளாலும், மதுரையில் உள்ள பழைய சிறைக்கூடத்து வடபுறச்சுவரில் பறம்பு நாட்டைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதாலும் பறம்பு நாடு பாண்டி நாட்டைச் சேர்ந்தது என்பது அறியவருகிறது.

இஃதன்றி, பாண்டி நாட்டுத் திருப்பத்தூர்ச் சிவன் கோவில் கல்வெட்டொன்றில்

"புறமலை நாட்டுப் பொன்னமராவதி யூருடையான்
திருக் கொடுங் குன்ற றாடையான்....."

என்னும் தொடர் காணப்படுகிறது.[12] இங்குக் கூறிய புறமலை நாட்டைப் பறமலைநாடு என்பதன் மருஉவாகவும், பறமநாடு என்பதைப் பறம்புநாடு என்பதன் திரிபாகவும் கொள்ளுதல் பொருந்தும் எனலாம்.

பின், பாரி எடுப்பித்து வழிபாடு செய்த கோவிலாகப் பாரீசுவரம் கொள்ளப்படுகிறது.[13] இப்பாரீசுவரம் பிரான்மலையில் அடிவாரத்திலுள்ள மற்றொரு கோவிலாகும். வேள்பாரி அமைத்த ஒரு கோவில் பற்றிய செய்தியினைக் கல்வெட்டுக் கள் வழி அறியமுடிகிறது. இருப்பினும், பாரி கோவில் கட்டி வழிபாடு செய்திருக்க-லாம், ஆனால் பாரீசுவரம் என்ற பெயரினைப் பின்னால் வந்த மக்களே வழங்கி-யிருக்க வேண்டும். ஈசுவரம் என்ற சொல்லோ, கடவுளோ சங்ககாலத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரைக்கு வடக்கில் ஏறத்தாழ 10 கல் தொலைவில் திருமோகூர் என்னும் வைணவ திருப்பதி உள்ளது. அங்குள்ள கல்வெட்டு அப்பதியைத் தென் பறம்பு நாட்டின் திருமோகூர் என்று குறித்துள்ளது.[14] எனவே, திருமோகூரைச் சுற்றியுள்ள பகுதி பாரியின் ஆட்சிக்கு உட்பட்ட பறம்பு நாட்டின் தென்பகுதி என்பது தெளிவாகிறது. மேலும், திருமோகூருக்குக் கிழக்கில் ஏறத்தாழ 4 கல் தொலைவில் உள்ள திருவாதவூர், கபிலர் பிறந்த திருப்பதியாகும் என்றும் குறிக்கப்படுகிறது. இவ்வூர் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் திருவாசகத்தை இயற்றிய மணிவாசகர் ஊராகவும் குறிக்கப்படுவது அறியத்தக்கது. இங்குத் திருவாதவூர் தென்பறம்பு நாட்டைச் சேர்ந்தது என்பது மட்டும் உணர்ந்து கொள்ளத்தக்கது.

பாரியின் வண்மை பற்றியும் திறல் பற்றியும் பிற புலவர்கள் பாடியிருப்பினும், கபிலரே பாரியின் அரசவைப் புலவராகவும், அவனின் ஆருயிர் நண்பராகவும் தொடர்ந்து இருந்து பல பாடல்கள் பாடி அவனைச் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளார்.

பாரியின் வரலாற்றினைக் கபிலரது பாடல் கொண்டு பார்க்கும்போது, பாரி மூவேந்தர்களால் வஞ்சனை செய்து கொல்லப்பட்டான் என்ற செய்தி தெரியவருகிறது. பறம்பு மலையினை மூவேந்தர்கள் சூழ்ந்து முற்றுகையிட்டனர் என்ற செய்தியினை,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றியும்...." (புறம் : 109)

எனவரும் கபிலரின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.[15] இக்கருத்ினையே புறம் 110-ஆம் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.[16] மூவேந்தர்கள் பாரியின் நாட்டை முற்றுகையிட்டு இருந்த போது அவர்களை நோக்கிக் கபிலர் பாடுவதாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன. அதில்,

"ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே" (புறம் : 109)[17]

எனவரும் பாடல் வரிகளும்,

"..............பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே" (புறம்:110)[18]

எனவரும் பாடல் வரிகளும், குறிப்பிடத்தக்கனவாகும்.

"..............திணைமலர் புரையுமுண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினன் வரினே" (புறம்.: 111)[19]

எனவரும் பாடல் வரிகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இதனால் பாரியை வெல்லுதல் என்பது அரிது; அவன்பால் ஆடியும் பாடியும் இரவலர்களாகச் சென்றால் தன்னையே கொடையாகத் தருகின்றவன் பாரி என்பது கபிலரின் கூற்றுவழி அறியப்படுகிறது. மேலும்,

"பாரிய தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானே வேந்தர்" (புறம் : 116)[20]

என்னும் பாடல் வரிகள் பாரியின் அருமையைப் புகழ்ந்து பாராட்டி, அவனுக்காகக் கபிலர், இரங்கிப் பாடுவதாக அமைகிறது. இதேபோன்று 'பாரியோரி' எனவும், 'மன்புகழ்பாரிகாரி' எனவும் புகழப்படுவது அறியப்படுகிறது. எனவே, பாரி, காரி, ஓரி ஆகிய மூவரும் ஒரே காலத்தவர் என்பது அறுதியிட்டுக் கூறத்தக்கது.

மேலும்,

"பாரி யோரி நள்ளி யெழினி
யாயே பேகன் பெருந்தோன் மலையனென்
றெழுவ ளொருவனு மல்லை" (சூடாமணி: 125)[21]

என்ற பாடல் சான்றாகிறது. இப்பாடலைச் சி.வை. தாமோதரம் பிள்ளை தனது தொல்காப்பியப் பொருளதிகாரத்தச் செய்யுள் உரையில் வெளியிட்டுள்ளார், (கி.பி.1885).[22]

கடையெழு வள்ளல்களில் பாரி, ஓரி, காரி(மலையன்), நள்ளி, பேகன் ஆகிய ஐவரைக் கபிலர் பாடியுள்ளார். ஆய், எழினி ஆகிய இரு வள்ளல்கள் மட்டும் கபிலரால் பாடப்படவில்லை என்பது புலனாகிறது.

ஆய் என்பானை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் தமது உயிர் நண்பராகக் கொண்டு வாழ்ந்துள்ளார். எழினி என்ற பெயர் அதியமான் நெடுமானஞ்சி மகன் பொருட்டெழினி எனவும், அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி எனவும் இருபெயர்களில் காணப்படுகிறது. இவ்விருவரையும் முறையே ஔவையாரும், அரிசில்கிழாரும் பாடியுள்ளார்கள்.

மேற்கூறிய செய்திகளால் பாரியின் வரலாற்றில் கடையெழு வள்ளல்கள் பற்றிய குறிப்பும், அவனை முற்றுகையிட்ட மூவேந்தர்கள் பற்றிய செய்திகளும் தெரியவருகின்றன. பாரியைப் பற்றி வேறு செய்திகள் அறிதற்கில்லை.

4.3.2.3. <u>மலையமான் திருமுடிக்காரி:-</u>

திருமுடிக்காரியின் வரலாறு முன்னரே கூறப்பட்டுள்ளது. பாரி இறந்த பிறகு அவனது மகளிர்க்கு மணம் முடித்துவைத்தல் பொருட்டு முதலில் செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் சென்று, பின் இருங்கோவேள், விச்சிக்கோ என்ற இரு மன்னர்களிடமும் சென்று, இறுதியாகக் காரியிடம் செல்வதாகக் கபிலரின் வரலாறு கூறுகிறது. இவ்வரலாறு எந்த அளவிற்கு உண்மை என்பது ஆராய்தற்குரியது.

மலையமான் திருமுடிக்காரி, இன்றைக்குத் திருக்கோவிலூர் என்று வழங்கப்படும் அன்றைய திருக்கோவலூர் நாட்டை ஆண்டு வந்தவன். இதனை இவ்வூர்த் தல வரலாறு தெளிவுறுத்துகிறது. கபிலர் இறுதியாக வந்தது திருமுடிக்காரியிடம்

என்பது பல வரலாற்று நூல்கள் வழி அறியப்படுகிறது.[23] இதனை அவ்வூரில் உள்ள கல்வெட்டுச் சான்றும், கபிலர் உயிர் நீத்த இடமாகக் கூறப்படும் கபிலக் குன்றும் சான்று பகர்கின்றன.[24]

கபிலர் பாரி மகளிரை மணந்து கொள்ளும்படி இருங்கோவேள், விச்சிக்கோ என்ற இரு அரசர்களையும் வேண்ட அவர்கள் மறுத்துவிடவே திருக்கோவலூர் வந்து திருமுடிக்காரியிடம் அவ்விரு மக்களுக்குத் திருமணம் செய்து வைக்க முனைகிறார். ஆனால், காரி மூவேந்தர்களும் சம்மதம் தந்தால் தனது மக்களுக்கு மணம் முடித்துத் தருவதாகக் கூறுகிறான். அதுகேட்டுக் கபிலர் மனம் வருந்தித் தன் வழிவந்த ஔவையாரிடம் பாரி மகளிர் இருவரையும் ஒப்படைத்துப் பின் உயிர் துறந்ததாக வரலாறு கூறப்படுகிறது.[25] ஔவையார் பாரி மகளிர்க்குத் திருமணம் செய்து-வைத்தார். அதற்கு அடையாளமாகத் திருக்கோவலூரை அடுத்துள்ள 'மணப்பூண்டி' என்ற ஊர் அமைகிறது. இவ்வூரில்தான் பாரி மகளிர் திருமணம் நடந்ததாகவும், அதனாலே அவ்வூர் அப்பெயர் பெற்றது என்றும் விளக்கம் கூறப்படுகிறது.[26]

கபிலர் பாரி மகளிரை ஔவையாரிடம் அடைக்கலப்படுத்திய பிறகு உயிர் வாழ விரும்பாது, அருகில் உள்ள தென்பெண்ணையாற்றங்கரையில் உள்ள ஒரு மலைக்குன்றின் மீது அமர்ந்து வடக்கிருந்தார் என்பது அறியப்படுகிறது. இதனை,

வன்கரையிற் பொருது வரும்புனல் பெண்ணைத்
தென்கரையுள்ளது தீர்த்தத் துறையது

....

..................வீடுபே றெய்திக்

கனல்புகுங் கபிலக் கல்லது"[27]

எனவரும் வீரட்டானேஸ்வரர் கோவில் கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது. கபிலர் அமர்ந்து உயிர்துறந்த இடத்திற்குக் "கபிலக்கல்" என்றும் "கபிலர் குன்று"[28] என்றும் இன்றும் திருக்கோவிலூர் மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது. இஃதன்றி, கபிலர் நினைவாக ஆண்டுதோறும் மே மாதத்தில் முதல் 5 நாட்கள் 'திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகம்' சார்பில் 'கபிலர் விழா' என்ற பெயரில் விழா செய்து வருகின்றனர்.[29]

இந்நிகழ்ச்சிகள் கபிலர் திருக்கோவிலூர் சென்றுள்ளார் என்பதையும் அங்கேயே வடக்கிருந்து உயிர் துறந்தார் என்பதையும் உண்மையென மெய்ப்பிக்கும் சான்றுகளாகின்றன.

எனவே, மேற்கூறிய கருத்துக்களில் இருந்து கபிலர் திருக்கோவிலூரில் உயிர் துறந்தார் என்பது சான்றுகளுடன் தெளியப்படுகின்றது.

திருக்கோவிலூர் 'கபிலர் குன்று' பற்றிப் பல்வேறு கதைகள் அவ்வூர் மக்களால் கூறப்பட்டு வருகின்றன. இதனை அவ்வூர் தலவரலாறு புத்தகம் எடுத்தியம்புகிறது. பாரி மகளிர்க்கு மணம் செய்து வைத்தவர்கள் கபிலர்,

ஔவையார் என்பதில் இலக்கிய அறிஞர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும் திருக்கோவிலூர் தகவலாளிகள் கூறும் கருத்துக்களின் படியும்,[30] இது பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர் கருத்துப்படியும்[31] ஔவையாரே பாரி-மகளிர்ச் மணம் செய்து வைத்தார் என்று உறுதிசெய்யப்படுகிறது.

எனவே, கபிலர் இறுதியாக வந்து பாடிய அரசன் திருமுடிக்காரி என்பதும், அவ்வூரிலே வடக்கிருந்து உயிர் நீத்தார் என்பதும் பெறப்படுகிறது.

4.3.2.4. விச்சிக்கோ:-

இவன் சிற்றரசர்களுள் ஒருவன், பாரி மகளிரைக் கபிலர் மணஞ் செய்து கொள்ளும்படி இவனிடம் வேண்டியும், மறுத்துக் கூறியுள்ளான். இதனைப் புறம்.200-ஆம் பாடல் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.[32] இவ்வரசன் சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும் பொறையால் வெல்லப்பட்டான் என்பதைப் பதிற்றுப்பத்தில் உள்ள 9-ஆம் பத்தின் பதிகம் தெளிவுறுத்துகிறது.

"வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்
றிருபெரு வேந்தரும் விச்சியும் வீழ.........."[33]

(பதிற்று:9:பதிகம்:வரி-3-4)

எனவரும் பாடல் வரிகள் அக்கருத்தினை எடுத்தியம்புவன.

பதிற்றுப்பத்தில் உள்ள 9-ஆம் பத்து, பெருங்குன்றூர் கிழாரால்

பாடப்பட்டது. விச்சிக்கோவைக் கபிலரைத்தவிர வேறு எந்தப் புலவர்களும் பாடவில்லை. வேறு சிறப்புகள் இவ்வரசன் பற்றி அறியப்படுதற்கு இல்லை. இவனது தம்பி இளவிச்சிக்கோ என்பது மட்டும் அறியக்கிடக்கின்றது. இவனைப் பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர் பாடியுள்ளார்.[34]

கபிலர் விச்சிக்கோவைப் பாடியிருந்தாலும், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையிடம் அவன் தோல்வியடைந்துள்ளான் என்ற செய்தி பெருங்குன்றூர் கிழார் பாடல் வழி அறியப்படுகிறது. எனவே, கபிலர் பெருங்குன்றூர் கிழார் ஆகிய இரு புலவர்களும் சமகாலத்தவர் என்பது பெறப்படுகிறது.

4.3.2.5. இருங்கோ வேள்:-

இவ்வரசனைக் கபிலர் 2 புறநானூற்றுப் (புறம்:201,202) பாடல்களில் பாடியுள்ளார். ஒன்று பாரி மகளிரை மணந்துகொள்ளும்படி வேண்டுவதாகவும், மற்றொன்று, அவன் மணக்க மறுத்துவிட அதற்கு மனம் பொறாது அவனை இழித்துரைத்துக் கூறுவதாகவும் அமைகின்றன. இவனை வேறு புலவர்கள் எவரும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவனது மற்றொரு பெயர் 'புலிகடிமால்' என்று குறிக்கப்படுகிறது. இதனைக் கபிலரே அவனது பெயரை,

"தந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்....."[35]

(புறம்: 202)

என்று வரும் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகிறார்.

கரிகாற் பெருவளத்தானால் வெற்றி கொள்ளப்பட்டோருள் இருங்கோவேளும் ஒருவன் என்ற குறிப்புக் காணப்படுகிறது.[36] மேலும், பாண்டியன் நெடுஞ்செழியனோடு தலையாலங்கானத்தே போரிட்டவர்களுள் இருங்கோவேண்மான் என்பானும் ஒருவன் என்று குறிக்கப்படுகிறது.[37] இங்கு இருங்கோவேண்மான், இருங்கோவேள் என்ற இருபெயரும் ஒன்றா வேறா என்ற கருத்து முரண்பாட்டினை அறியும் போது ஒருவரே என்று கொள்ளப்படுகிறது. ஏனெனில், தொல்காப்பியர் கூறியுள்ள விதிப்படி,[38] இருங்கோவேள் என்பது இருங்கோவேண் எனத் திரிந்து வந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது.

இங்குக் கரிகாற் பெருவளத்தானைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரும், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய நக்கீரரும் கபிலர் காலப் புலவர்கள் ஆகின்றனர் என்பது பெறப்படுகிறது.

4.3.2.6. பேகன்:-

கடைஎழு வள்ளல்களில் ஒருவனாகப் பேகன் குறிக்கப்படுகின்றான். இவனது வரலாற்றினை இவனைப்பற்றிக் குறிப்பிடும் பாடல்கள் வழியே அறியப்படுகின்றன. இவன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து இருக்கையில், அதுகண்டு மனம் பொறாத சங்கப் புலவர்கள், அவனைக் கடிந்து அறிவுரை வழங்கியதாகப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. அவர்களில் கபிலர், பரணர், அரிசில்கிழார்,

வன்பரணர், பெருங்குன்றூர்கிழார் ஆகிய ஐந்து புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் இவரும் பேகனைப் பாடியவர்கள் என்பதால் கபிலரின் சமகாலப் புலவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். மேலும், இவர்கள் பேகனிடம் நேரிடையாகச் சென்று அவனுக்கு அறிவுரை பல வழங்கி அவன் மனைவியால் சேர்த்து வைத்தனர் என்பதை அவரவர் பாடல்கள் வழி பெறப்படுகின்றன.

இப்புலவர்களில் பரணர், வன்பரணர் என்ற இருவரும் வேறு வேறு புலவர்கள் என்பது அவரவர் பாடலில் இடம்பெறும் கருத்துக் கொண்டு தெளியப்படுகிறது. பெருங்குன்றூர்கிழார் கபிலரைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்பதைப் பதிற்றுப்பத்து பாடல்வழி அறிய முடிகிறது. இப்புலவரின் வரலாறு பின்னர் ஆராயப்படுகிறது. ஈங்கு அரிசில்கிழார், பரணர், வன்பரணர் ஆகிய மூன்று புலவர்களின் வரலாறு மட்டும் ஆராயப்படுகிறது.

4.3.2.6.1. அரிசில் கிழார் :-

அரிசில்கிழார் சங்கப் புலவர்களில் கபிலர் பரணரோடு ஒழுங்கு வைத்துப் பேசப்படும் புலவராவார். இவர் பேகனை நேரிடையாக விளித்துப் பாடியவர் என்பதால் பேகன் காலத்துப் புலவர் என்பதும் பேகனைக் கபிலர் உள்ளிட்ட நால்வர் பாடியதால் அவர்களின் சமகாலப் புலவர் என்பதும் அறியத்தக்கது.

இவர்கால அரசர்களாக உக்கிரப்பெருவழுதி, பெருஞ்சேரல் இரும்பொறை,

அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி ஆகியோர் கூறப்படுகின்றனர். இவர் பாடிய பாடல்களாகப் பதிற்றுப்பத்தில் 8-ஆம் பத்துப் பாடல்களும், புறநானூற்றில் 7 பாடல்களும் (புறம்:146, 230, 281, 285, 300, 304, 342) குறுந்தொகையில் ஒரு பாடலும், திருவள்ளுவமாலையில் ஒரு பாடலும் கூறப்படுகின்றன.

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தைப் பாடித் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையிடம் ஒன்பது நூறாயிரம் காணம் பரிசில் பெற்று அவன்பால் அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கியவன் என்பதைப் பதிகம் எடுத்துக் கூறுகிறது.[39]

பேகனை அரிசில் கிழார் பாடியுள்ளதால் கபிலரின் சமகாலப் புலவர் என்பதும், பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடியதால் கபிலரின் பிற்பட்டக் காலத்திலும் வாழ்ந்த புலவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனை பாடியுள்ளதும், பெருஞ்சேரல் இரும்பொறை செல்வக் கடுங்கோவின் மகன் என்று கூறப்படுவதால் காலம் வேறுபடுவதை அறியமுடிகிறது. எனவே, தந்தையின் ஆட்சியினைக் கபிலரும், அவனது மகனின் ஆட்சியினை அரிசில்கிழாரும் பாடியிருத்தலின் கபிலர்க்குப் பிற்பட்டவராக அரிசில்கிழார் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

4.3.2.6.2. வன்பரணர்:-

இவரின் பெயர் போன்று பரணர், நெடுங்கழுத்துப் பரணர் என இரு வேறு பெயர்களில் பாடல்கள் காணப்படுகின்றன. மூவரும் ஒருவரா வேறு-வேறானவர்களா என்பது சிக்கலுக்குரியதாயினும், இங்கு வன்பரணர் பற்றிய பெயர்

மட்டும் ஆராயப்படுகிறது.

வன்பரணர் பற்றிப் பெயர் விளக்கம் தருகையில் பெயர்க்குமுன் வன்மையென்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.[40] இவரால் பாடப்பட்டோர் பேகன், கண்டீரக்கோப்பெருநள்ளி, வல்வில் ஓரி ஆகிய மூவருமாவர்.

இவர் பாடியனவாக நற்றிணையில் 1 பாடல் (நற்: 374), புறநானூற்றில் 8 பாடல்கள் (புறம் : 144,145,148,149,150,152,153,255) காணப்படுகின்றன.

உ.வே. சாமிநாதய்யர் தமது புறநானூறு பதிப்பில் வன்பரணர் பாடியது 6 பாடல்கள் என்று குறிப்பிடுகின்றார். ஆனால், பதிப்பினுள் எட்டு பாடல்கள் இவர் பெயரில் இடம்பெறுகின்றன. இங்குப் பேகனைப் பரணரும் பாடியுள்ளார். அவரின் பெயரில் இரண்டு பாடல்கள் குறிக்கப்படுகின்றன. பரணர் (பிரதிபேதம் - வன்பரணர்) - என்ற குறிப்பு[41] வன்பரணர் குறித்த பாடல் மாற்றத்திற்குக் காரணமாகிறது எனலாம்.

பரணர், வன்பரணர் இருவரின் பாடல்களும் ஆராயப்பட்டதில் அப்பாடல்களில் கூறப்படும் ஒரே கருத்து கொண்டு (கொடைத்தன்மையைப் புகழ்தல்) இருவரும் வேறானவர்கள் என்பது பெறப்படுகிறது. ஒரு புலவர் ஒரே நிகழ்ச்சியை எல்லாப் பாடல்களிலும் கூறமுடியாது என்ற காரணத்தால் இவ்விரு புலவர்களும் வேறுபட்டவர்கள் என்று கொள்ளப்படுகிறது.

பரணர் பற்றிப் பின்னால் ஆராயப்பட உள்ளதால், இக்குப் பேகனைப் பாடிய புலவர் வரிசையில் கபிலரின் சமகாலப் புலவர் என்பது மட்டும் அறியத்தக்கது.

எனவே, பேகனைப் பாடிய புலவர்கள் என்பதில் கபிலர், அரிசில் கிழார், வன்பரணர், பரணர், பெருங்குன்றூர்கிழார் ஆகிய ஐவரும் சமகாலப் புலவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

4.3.3. கபிலரைப் பாடிய புலவர்கள்:-

பல அரசர்களைப் புகழ்ந்து பாடியவரும் சங்கப் பாடல்களில் அதிகப் பாடல்கள் பாடியவர் என்ற பட்டியலில் முதன்மையான இடத்தைப் பெற்றவருமான கபிலரைப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். அவர்களில் மாறோக்கத்து நப்பசலையார், பெருங்குன்றூர்கிழார், நக்கீரர், பொருந்தில் இளங்கீரனார் என்ற நான்கு புலவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேற்குறித்த நால்வரும் 'கபிலர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்களா கபிலர்க்குப் பின்னர் வாழ்ந்தவர்களா என்பது ஆராயத்தக்கது. இருப்பினும், கபிலர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் அல்லது கபிலர் இறந்த பின்பு அவரைப் பாராட்டியிருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. எனவே, இந்நான்கு புலவர்களின் கூற்றில் இருந்து அவர்களின் வரலாற்றினை அறிந்து கபிலரின் காலத்தை ஒருவாறு தெளிவு செய்ய முடியும் எனலாம்.

4.3.3.1. மாறோக்கத்து நப்பசலையார் :-

இவர் சங்கப்புலவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பிடம் பெறும் பெண்பாற்புலவர் ஆவார். வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பில் இவரது பெயர் நப்பசலையார் என்றும்[42], மாறோக்கத்து நப்பசலையார் என்றும்[43] இருவேறு பகுதியாகப் பிரித்துக் கூறப்படுகிறது. இவர் 9 பாடல்களை பாடியுள்ளார். அவை புறநானூற்றில் 7 பாடல்களும் நற்றிணையில் 2 பாடல்களும் ஆகும். நற்றிணையில் இவரின் பாடல்கள் இருவேறு பெயர்களில் இரண்டு பாடல்களும் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால், வெங்கடராமன் நற்றிணைப் பதிப்பில் மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெயரில் ஒரு பாடல் மட்டுமே இடம்பெற்றுள்ளது.[44] இங்கு எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடும் 243-ஆம் பாடல் வேறு புலவர் பெயரில் குறிக்கப்படுகிறது. எனவே, மாறோக்கத்து நப்பசலையார் பாடல்கள் புறநானூற்றில் ஏழும், நற்றிணையில் ஒன்றுமாகக் கொள்ளப்படுகின்றன.

இவரால் பாடப்பட்ட அரசர்கள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்னும் மூவராவர்.

மாறோக்கத்து நப்பசலையார் புறநானூற்றில் இரண்டு பாடல்களில் கபிலரைப் புகழ்ந்து பாடியுள்ளார். அதில் மலையமான் திருமுடிக்காரியைப் பற்றி பாடும்போது,

"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்....."[45]

(புறம் : 126)

புலனழுக்கற்ற அந்தணாளன் என்று கபிலரைப் புகழ்ந்து குறிப்பிடுகிறார். "நிலத்தின்மேல் மிக்க மாந்தரெல்லாரினும் அறிவின் கண் மாசற்ற அந்தணாளனாகிய கபிலர், இரந்து செல்லும் புலவர்க்கு இனிப் புகுதற்கு இடன் இல்லையாகப் பரந்து புகழ் நிற்பப் பாடினான்" என்று கபிலரது பெருமையைக் கூறுவதாகப் இப்பாடல் வரிகள் அமைகின்றன.

கபிலர் அனைவரையும் புகழ்ந்து பாடிய புலவர் என்பதும், இனிவரும் இரவலர்களாகிய புலவர்களுக்குப் புகழ்ந்து பாட இடம் இல்லை என்பதும் மாறோக்கத்து நப்பசலையார் கூற்றில் இருந்து பெறப்படும் கருத்தாகும். இப்பாடல் சேரமன்னன் கடல் பிறகோட்டிய செங்குட்டுவனுக்கு அவனது கொடைச் சிறப்பினை ஒப்பிட்டுக் கூறுவதாக அமைந்துள்ளது. இதில் காரியின் பெருமை போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

"சினம்மிக்க சேனையையுடைய சேரன்மேல் கடலின்கட் பொன்னைத்தரும் நாவாய் செலுத்திய அவ்விடத்து வேறுசில மரக்கலம் போகமாட்டாத அத்தன்மையை-யுடையேமாயும், எமது மிடி துரக்க நின்புகழ் கொடுவர வந்து நினது வன்மையிலே

சில சொல்லத் தொகுத்தளம் பாங்கள்" என்று காரியிடம் கூறும் சொற்களாக அப்பாடல் அமைகிறது.

இப்பாடல் கருத்துவழி மாறோக்கத்து நப்பசலையார் திருமுடிக்காரியைப் பாடும்போது கபிலர் உயிருடன் இல்லை என்பது பெறப்படுகிறது. காரியைக் கபிலரும் பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்குக் கபிலர் காரியைப் பாடி அவ்வூரிலேயே உயிர் துறந்த பிறகு மாறோக்கத்து நப்பசலையார் காரியிடம் சென்று அவனை வாழ்த்திப் பாடியுள்ளார் என்பது உணரப்படுகிறது.

மாறோக்கத்து நப்பசலையார் கபிலரை மற்றொரு புறநானூற்றுப் பாடலில் புகழ்ந்து பாடுகிறார். அப்பாடல்,

"பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மைபடு நெடுவரை யாங்க ணொம்பெனச்
செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை ......"[46]

(புறம் : 74)

என்பதாகும். இதில் கபிலரின் சிறப்பு கூறப்படுகிறது. இப்பாடல் வரிகள் திருமுடிக்காரியின் மகன் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனின் நாடு, மலை, அவனின் வெற்றி இவற்றைச் சிறப்பித்துப் பாடும் முகமாக அமைகின்றன.

கபிலர் முன்பொரு முறை பாடிய முள்ளூர் மலையின் சிறப்பும், அந்நாட்டு

மக்களின் வெற்றிச் சிறப்பும் பற்றிப் பாடியதையே மாறோக்கத்து நப்பசலையார் இப்பாடலில் ஒப்பிட்டுக் கூறுகிறார். "பொய்யாத நாவினை உடைய கபிலரால் பாடப்பட்டதும், முழங்கித்த பெரிய மலையினை உடையதுமாகிய முள்ளூர் மலை" என்று கபிலரும் முள்ளூர் மலையைப் பாடியவர் என்ற சிறப்பினைச் சுட்டிக் காட்டுகிறார்.

எனவே, இப்பாடல் பாடும்போதும் கபிலர் உயிருடன் இல்லை என்பது பெறப்படுகிறது. இஃதன்றி, மாறோக்கத்து நப்பசலையார் திருமுடிக்காரியின் மகனைப் பாடும்போது காரி உயிருடன் இல்லை என்பதும் பெறப்படுகிறது.

மாறோக்கத்து நப்பசலையார் கபிலரைப் பாடிய இரண்டு பாடல்களும் தந்தை, மகன் (திருமுடிக்காரி, மகன் சோழிய ஏனாதி திருக்கண்ணன்) ஆகிய இருவரையும் பற்றிக் குறிப்பிடுவது ஆகும். கபிலர் திருமுடிக்காரியைப் புறநானூற்றில் 12 பாடல்களில் பாடுகிறார். இஃதன்றி, வேறு சில அகப்பாடல்களிலும் புகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமுடிக்காரியின் மகன் சோழிய ஏனாதியை மாறோக்கத்து நப்பசலையார் மட்டுமே பாடியுள்ளார். வேறு எந்தப் புலவர்களும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து மாறோக்கத்து நப்பசலையார் கபிலர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பதும், காரி அரசாளுகையில் இறுதியில் வாழ்ந்தவர் என்பதும் அறியத்தக்கது.

மாறோக்கத்து நப்பசலையார் இவ்விரு அரசர்கள் மட்டுமின்றிச் சோழன்

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வரசன் இறந்த போது அவனை நினைத்துக் கொண்டு கையறுநிலைப் பாடல்கள் பல பாடியுள்ளார் இவனைப் பற்றிய குறிப்புக்களை அறியும்போது கபிலரின் காலத்தை ஒருவாறு தெளிவு செய்ய முடியும் எனலாம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இப்புலவர் மட்டுமின்றி வேறு சில புலவர்களும் பாடியுள்ளார்கள். கோவூர்க்கிழார், ஆலத்தூர்கிழார், ஐயூர் முடவனார், மாறோக்கத்து நப்பசலையார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஆலூர் மூலங்கிழார், வெள்ளைக்குடி நாகனார் போன்றவர்களாவர்.

4.3.3.1.1. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்:-

இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்து வந்தவன். இவன் தன் கீழ் வாழும் மக்களுடனும் மக்கள் தலைவர்களுடனும் எவ்வாறு ஒன்றிப் பழகி அவர்களின் அன்பில் தோய்ந்திருந்தான் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவனே தன்னை ஒரு பாணனாகக் கொண்டு தன் ஆருயிர் நண்பனான சிறுகுடிப்பாணனைப் புகழ்ந்து பாடுவது புறம் 173-ம் பாடல் வழி அறியப்படுகிறது. எனவே, இவனைப் பல புலவர்கள் பாடியிருந்தலோடு இவ்வரசனும் புலமைத்திறம் வாய்ந்தவன் என்பது அறியப்படுகிறது.

இவன் தன் மாற்றான் மலையமானின் (சோழிய ஏனாதி திருக்கண்ணன்) இரு

குழந்தைகளைக் கவர்ந்து வந்து, பலரறிய யானைக்காலிட்டு கொலை செய்யத் துணிந்தான். இந்நிகழ்ச்சி கண்டு மனம் பொறாத கோவூர்கிழார் (புறம் : 46) அவனுக்கு அறிவுரை கூறுவதாக ஒரு பாடல் உள்ளது.[47] இந்நிகழ்ச்சி மிகவும் பிற்பட்ட காலத்திற்கு உரியதாகும். வேறு செய்திகள் இவ்வரசன் பற்றி அறிவதற்கு இல்லை. எனவே இவ்வரசன் காலத்திலும் கபிலர் உயிருடன் இல்லை என்பது உணரத்தக்கது.

மேற்கூறிய செய்திகளில் இருந்து, மாறோக்கத்து நப்பசலையார் கபிலரைப் புகழ்ந்து பாடும்போது கபிலர் உயிருடன் இல்லை என்பது பெறப்படுகிறது.

4.3.3.2. பொருந்திலிளங்கீரனார் :-

இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் (புறம்:53), அகநானூற்றில் இரண்டு பாடலும் (அகம்:19,351) பாடியுள்ளார். வேறு பாடல்கள் இவர் பாடியதாகக் குறிப்பில்லை. மிகக்குறைந்த பாடல்களே பாடியவர் என்பது தெரியவருகிறது.

இப்புலவர் பாடிய புறநானூற்றுப் பாடல் சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் வெற்றியினைப் புகழ்ந்து பாடுவதாக அமைகிறது. அவ்வாறு பாடுகையில்,

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்றநின்

ஆடுகொள் வரிசைக் கொப்பப்

பாடுவோன் மன்னாற் பகைவரைக் கடப்பே"

(புறம் : 53)[48]

என்று கபிலரின் நாவன்மையைப் போற்றுகிறார். பல பொருளையும் அடக்கியச் செய்யுளைச் செய்யும் செவ்விய நாவினையும் மிக்க கேள்வியையும், விளங்கிய புகழையுமுடைய கபிலன் இன்று உளனாகப் பெறின் நன்று. அது பெற்றிலேன், நினது வெற்றி கொண்ட சிறப்பினுக்குப் பொருந்தப் பாடுவேன் என்று கூறுவதாக அப்பாடல் அமைகிறது.

மேற்கூறிய பாடல்வழி பொருந்திலிளங்கீரனார் இச்சேர மன்னனைப் பாடும்போது கபிலர் உயிருடன் இல்லை என்பதும், அவர் இன்று இருந்திருந்தால் நன்று; அவர் இன்று இல்லையே என்று வருந்திக் கூறுவதும் புலனாகிறது. எனவே, பொருந்திலிளங்கீரனாரும் கபிலர்க்குப் பிற்பட்டவர் என்பது தெளிவாகிறது.

இப்புலவர் பாடிய சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற அரசனின் வரலாற்றினை அறியும்போது, இவனது பெயர் போன்றே வேறு பல பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. அப்பெயர்கள் வருமாறு:

1. கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை

2. சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

3. சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை

என்ற மூன்று பெயர்கள் ஒரே மாதிரி காணப்படுகின்றன. இம்மூன்று பெயர்களைக் குறிக்கும் மன்னர்கள் ஒருவரா இருவரா என்று தமிழ் ஆய்வாளர்களிடையே ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது.

4.3.3.2.1. கோ 'சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை :-

இம்மன்னன் கொல்லிமலைக்குத் தலைவனும், விளங்கில் என்னும் ஊர்க்குப் பகைவரால் வந்த துன்பத்தைத் தீர்த்தோனும், தொண்டியென்னும் நகரத்தை ஆண்டவனுமாவான். இவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் கட்டுப்பட்டுப் பின்பு அதனை நீக்கிக்கொண்டு வந்த புகழ் பெற்றவனுமாவான். மேலும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தவன் என்பதும் அறியப்படுகிறது.

இவ்வரசனது பெயர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை எனவும்,[49] சேரமான் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எனவும்,[50] சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எனவும்[51] வழங்கப்படுகிறது. இப்பெயர்களில் வரும் 'சேரமான்', 'சேரமான் யானைக்கட்சேய்', 'யானைக்கட்சேய்' என்ற முன்னொட்டுகளைப் பெற்ற அடைப்பெயர்களாகத் தொடர்ந்து ஒரே பெயரினைக் கொண்டு முடிவது அறியப்படுகிறது.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எட்டுத்தொகையில் ஒன்றாகிய ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தோன் என்பது அத்தொகுப்பு நூல் வழி அறியப்படுகிறது.

புறநானூறு பதிப்பில் உ.வே. சாமிநாதையர் பாடப்பட்டோர் வரலாறு கூறும்போது மூன்று பெயர்களையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு, பாடிய புலவர்களைத் தனியாகக்கூறி விளக்கம் தருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரசனைக் குறுங்கோழியூர்கிழார், பொருந்திலிளங்கீரனார், கூடலூர்கிழார் என்னும் மூன்று புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் இவ்வரசன் இறந்த பின்பும் இருந்தவர் கூடலூர் கிழார் என்று கூறப்படுகிறது.

சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற பெயருடைய அரசனை வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் என்ற புலவர் பாடியுள்ளார். இதுபோன்று சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்ற பெயருடைய அரசனைக் குறுங்கோழியூர்கிழார் என்ற புலவரும் பாடியுள்ளார்.

மேற்சுட்டிய மூன்று பெயர்களில் 'கோச்சேரன்' என்பது ஒட்டுப்பெயர் என்று இலக்கணவிளக்கச் சூத்திர (சூத்:38) உரை குறிப்பிடுகிறது.[52] 'மாந்தரன்' என்பது ஒரு சேரன் பெயர் எனப் பதிற்றுப்பத்தில் உள்ள 9-ஆம் பத்துப் பாடல் வரி தெளிவுறுத்துகிறது.[53] இக்கருத்தினையே அகநானூற்றுப் பாடல் ஒன்று விளக்குகிறது. அப்பாடல் வருமாறு,

"இலமல ரன்ன வஞ்செந் நாவிற்
புலமீக் கூறும் புரையோ ரேக்கப்
பலர்பேர் தோன்றிய கவிகை வள்ளல்
நிறைபருந் தானை வெல்போர் மாந்தரன் பொறையன்
.............................." (அகம்:142)[54]

என்ற பாடலில் மாந்தரனின் மகன் என்று கூறப்படுவது அறியப்படுகிறது. குறுங்கோழியூர்கிழார் இவ்வரசனை, புகழ்ப் பாடும்போது, "மாந்தரன் எனும் உயர் பெயர் பூண்டு, சேரனின் இரும்பொறை மரபினருள் வந்தோனாகிய இவன் யானைக்கண் போலும் கண் பெற்றிருந்தமையால் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்று அழைக்கப்பெற்றான்" என விளக்கம் தருகிறார்.[55]

மேலும், குறுங்கோழியூர் கிழார் இவனை,

"வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்"

எனவும்,

"மாந்தரஞ் சேரல் இரும்பொறை யோம்பிய நாடே"

(புறம்:22)[56]

எனவும் விளித்துப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியதில் இருந்து யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற ஒரு அரசனின் பெயரே வேறு வேறு புலவர்களால் பல்வேறு அடைகளுடன் சிறப்புக் கொடுத்து அழைக்கப்பெற்றுள்ளது என்பது அறியப்படுகிறது. எனவே, மூன்று பெயர்களும் ஒன்றே என்பது தெளியப்படுகிறது. இவ்வரசனை நான்கு புலவர்கள் பாடியுள்ளனர் என்பதும் பெறப்படுகிறது.

கபிலர் இறந்த பின்பு வாழ்ந்த புலவர் பொருந்திலிளங்கீரனார் என்பவர். இவரால் பாடப்பட்டவன் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல்

திரும்பொறை என்பதும் பெறப்படுகிறது. இவ்வரசனின் உதவியுடன் கூடலூர்கிழார் ஐங்குறுநூற்றினைத் தொகுத்தார் என்ற செய்தியும் கூறப்படுகிறது. இவ்வரசன் இறந்த பின்பு உடன் கூடித் வருந்தியவர் என்பதும் கூறப்படுகிறது.

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடியிருப்பவர் கபிலர் என்ற கருத்து உள்ளது. அதில் ஜெ. நீதிவாணன் ஐங்குறுநூறு பற்றி விளக்கம் தருகையில் மிகவும் முற்பட்ட காலத்தது என்றும், கா. கோவிந்தன், பி.டி.சீனிவாச அய்யங்கார் போன்றோர் ஐங்குறுநூற்றை மிகவும் பிற்பட்டது என்றும் கூறும் கருத்து அறியத்தக்கது. இக்கருத்துக்களை மேற்சுட்டிய கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது, ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடிய கபிலர் வேறொரு கபிலராக இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. ஏனெனில், கபிலர் இறந்த பின்பு அவர் இன்று உயிருடன் இல்லையே என்று வருந்திப் பாடுவதாகப் பொருந்தில்இளங்கீரனார் பாடல் அமைகிறது. அதன்படி ஐங்குறுநூறு மிகவும் பிற்பட்டது என்று கொள்ளப்படுவதால் ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடிய கபிலர் வேறொருவராகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பதும் அவர் பிற்காலக் கபிலர் என்பதும் பெறப்படுகிறது. இதனை நடையியல் ஆய்வுப் பகுதி மேலும் தெளிவுப்படுத்தும்.

4.3.3.3. பெருங்குன்றூர்கிழார் :-

கபிலரைத் தன் பாடல்களில் குறிப்பிட்டவர்களில் இப்புலவரும் ஒருவர்.

இப்புலவர் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்பொறையைப் பதிற்றுப்பத்து 9-ஆம் பத்துப் பாடல்கள் பாடிப் பரிசில்கள் பெற்றவர் என்ற குறிப்பு 9-ஆம் பத்தின் பதிகம்வழி அறியப்படுகிறது. இதில் பெருங்குன்றூர்கிழார் இம்மன்னனின் வெற்றிச் சிறப்பினையும், கொடைச் சிறப்பினையும் புகழ்ந்து பாடுகையில் ஒரு பாடலில் கபிலரைக் குறிப்பிடுகிறார். அதில்,

"அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலைக் கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே"[57]

(பதிற்று: 85)

என்று கபிலர் பெற்றப் பரிசினை ஒப்பிட்டு அவன்பெற்ற வெற்றிச் சிறப்பினை மிகைப்படுத்திக் கூறுகிறார். "அரசவைகள் பணியும்படி அறத்தையே விரும்பி விளக்கிய, வீரத்தை விரும்பிய கொள்கையை விளங்குகின்ற செவ்விய நாவினாலும், அழிவு மிகாத கவலையில்லாத மனத்தாலும் மெய்ம்மையாற் பாடிய நல்லிசையையுடைய கபிலரென்னும் புலவர் பெற்ற ஊரினும் பலவாகும்" என்பது இப்பாடல் வரிகளின் கருத்தாகும்.

கபிலன் பெற்ற ஊரென்றது செல்வக் கடுங்கோ வாழியாதன் நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் சுட்டிக் காட்டிக் கபிலர்க்குக்

கொடுத்த செய்தியினையே குறிக்கின்றது எனலாம்.

இளஞ்சேரல் இரும்பொறையோடு சோழன் போர் செய்து தோற்று ஓடியபோது பல வேல்களை விட்டுச் சென்றான். அவ்வாறு விட்டுச்சென்ற வேல்களின் எண்ணிக்கை, கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் சென்று பெற்ற ஊரைக்காட்டிலும் பல என்று பெருங்குன்றூர் கிழார் சேரலின் வெற்றிச் சிறப்பை ஒப்புமைப்படுத்தித் தம்பாடலில் புகழ்ந்து கூறுவது அறியத்தக்கது.

பெருங்குன்றூர் கிழார் சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையை மட்டுமின்றிச் (புறம்: 210, 211) சோழன் உருவப்ப·றேரிளஞ்சேட் சென்னி (புறம்: 266), பேகன் (புறம்: 197) ஆகிய இருவரையும் புறநானூற்றில் பாடியுள்ளார். புறப்பாடல்கள் மட்டுமின்றி, குறுந்தொகையில் (குறு: 338) ஒரு பாடலும், அகநானூற்றில் (அகம்: 8) ஒரு பாடலும், நற்றிணையில் (நற்: 5, 112, 119) மூன்று பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளது தெரியவருகின்றது.

பெருங்குன்றூர்கிழார் காலத்துப் புலவர்களாகச் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையனார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், ஊக்காயனார் மகனார் நக்கீரனார் போன்றவர்கள் குறிக்கப்படுகின்றனர். இதில் கபிலர் பெயர் குறிக்கப்படவில்லை என்பது உணரத்தக்கது. எனினும், பேகனைப் பெருங்குன்றூர்கிழார் முன்னிலைப்படுத்தி அவனுக்கு அறிவுரை பல

வழங்கி அவன் மனைவி கண்ணகியால் சேர்ந்து வாழும்படி பாடியவர் என்பதில் கபிலர் உள்ளிட்ட நால்வரும் சமகாலப் புலவர்கள் ஆகின்றனர் என்பது பெறப்படுகிறது.

மேற்கூறிய கருத்துக்களில் இருந்து பெருங்குன்றூர்கிழார் கபிலர் வாழ்ந்த அதே காலக்கட்டத்தில் வாழ்ந்துள்ளார் என்பது புலனாகிறது. காரணம், பேகனை மேற்சுட்டிய ஐந்து புலவர்களும் முன்னிலைப்படுத்தி ஒரே சமயத்தில் அறிவுரை கூறியுள்ளனர். இவரும் ஒரே நிகழ்ச்சியினைப் பின்னணியாகக் கொண்டே பாடல்கள் பாடி, பேகனையும் அவன் மனைவியையும் சேர்த்து வைத்துள்ளனர் என்பது மேற்கூறிய கருத்தை அரண் செய்கிறது.

எனவே, பெருங்குன்றூர்கிழார் பாடல் கருத்துவழி கபிலர் அவரின் சமகாலப் புலவர் ஆகின்றார் என்பது பெறப்படுகிறது. இருப்பினும், மேலும் தெளிவு செய்ய, இப்புலவர் பாடிய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய இருவரின் வரலாறு இங்கு ஆராயப்படுகிறது.

4.3.3.3.1. சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை:-

இவனது பெயர் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை எனவும் குறிக்கப்படுகிறது. இவனைப் பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர் மட்டுமே பாடியுள்ளார். வேறு புலவர்கள் பாடியதாகக் குறிப்புகள் இல்லை. புறநானூற்றில் பெருங்குன்றூர்கிழார்க்கு இவ்வரசன் பரிசில் நீட்டித்தானாக அப்போது அவனைப் பாடுவதாக இரண்டு பாடல்கள் இடம் பெறுகின்றன. இஃதன்றிப் பதிற்றுப்பத்தில் ஒம்பதாம் பத்திற்குரிய

தலைவன் இவ்வரசனே என்பதும் பெறப்படுகிறது.

இவ்வரசன் பதினாறாண்டு அரசு வீற்றிருந்தான் என்பது பதிற்றுப்பத்தின் பதிகம் வழி அறியப்படுகிறது.[58] வேறு செய்திகள் இவ்வரசன் வழி அறிவதற்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இவ்வரசனைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் வழியே கபிலரைப் பற்றி ஓரளவு அறிய முடிகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

4.3.3.3.2. உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி :-

பெருங்குன்றூர்கிழார் தனது புறநானூற்றுப் பாடலில் இவ்வரசனைப் பற்றிப் பாடுவதால் இவனது வரலாறு இங்கு ஆராயப்படுகிறது. இவனே சங்க நூல்களில் அறியப்பெற்ற சோழ அரசர்களுள் காலத்தால் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப் பெறுகின்றான். இவனது மகனே சோழன் கரிகாற் பெருவளத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவனை முடத்தாமக் கண்ணியார் பத்துப்பாட்டில் ஒன்றான பொருநராற்றுப்படையில் சிறப்பித்துப் பாடுகிறார். அதில் கரிகாலன்,

"அழுந்தூர் வேளிடை மகட்கொண்டோன்"[59] என்பதனை
"மன்னர்பாங்கின் பின்னோர் ஆகுப"[60]

(தொல்: அகத்திணை: சூத்: 32)

என்று வரும் தொல்காப்பிய நூற்பா உரை விளக்கம் தருகிறது. மேலும், கரிகாலனை,

"உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்"[61]

(பொருநர்: வரி-130)

எனப் பெயரிட்டு அழைப்பதை பொருநராற்றுப்படை பாடல் வரிமூலம் வீரமும் கொடையும் சிறப்பிக்கப்படுவது அறியத்தக்கது.

கரிகாலன் பிறப்பதற்கு முன்பே இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டான் என்ற செய்தியினை,

"தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி....."[62]

(பொருநர்:வரி-132)

எனவரும் பாடல் வரி அறிவுறுத்துகிறது. எனவே, சோழன் உருவப்ப·ஃறேரிளஞ்சேட் சென்னி தன் மகன் கரிகாலன், பிறப்பதற்கு முன்பே இறந்து விட்டான் என்ற செய்தி பெறப்படுகிறது.

இவ்வரசன் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றான். அவை உருவப்ப·ஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட்சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, இளம்பெருஞ் சென்னி என்பனவாகும். இந்நான்கு பெயர்களும் அவனது வெற்றிச் சிறப்பால் கிடைத்த பெயர்கள் என்பது உணர முடிகிறது. இந்நான்கு பெயர்களையும் வேறு வேறு பெயராகக் கொள்ளாது ஒரே பெயராகக் கொள்ளுதல் நேரிதாம் என்று கா. கோவிந்தன் குறிப்பிடுவதும் அறிதற்குரியது.[63]

இவனைப் பெருங்குன்றூர் கிழார் மட்டுமின்றிப் பரணரும் பாடியுள்ளார்.

இவ்வரசனைப் பற்றி அறிவதற்கு வேறு செய்திகள் இல்லை என்பது பெறப்படுகிறது. இவ்வரசனைப் பரணர் பாடி உள்ளதால் அவரின் வரலாறு இங்கு ஆராயப்படுகிறது.

4.3.3.3.2.1. பரணர்:-

இவர் கபிலருடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பதைக் 'கபிலபரணர்' என்னும் தொடரால் அறிந்துகொள்ளத் தக்கது. திருக்கோவலூரில் பொருதுவென்று வந்த அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் புகழ்ந்து பாடுகையில்,

"........வெழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னாற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்......"[64]

(புறம்:99)

எனவரும் பாடல் வரியில் 'பரணன்பாடினன்' என்ற தொடரால் குறிப்பிடுவது அறியத்தக்கது. இங்குப்பரணரை ஔவையார் புகழ்ந்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

பரணர் காலத்துப் புலவர்களாகக் கழாஅத்தலையார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார், கழைதின் யானையார் ஆகிய சிலரே துணிந்து கூறப்படுகின்றனர். பரணர் பாடியனவாக எட்டுத்தொகையில் மொத்தம் 85 பாடல்கள் (அகம், புறம்

றுண்டிலும்) குறிக்கப்படுகின்றன. இதில் 10 பாடல்கள் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மேல் பதிற்றுப்பத்தில் உள்ள ஐந்தாம் பத்து பாடி உம்பற்காட்டு வரியையும், தன்மகன் குட்டுவஞ் சேரலையும் பரிசிலாகக் கொடுத்தான் என்பது அறியப்படுகிறது.[65]

இவரால் பாடப்பட்ட அரசர்கள் சோழன் உருவப்ப.்.றேரிளஞ்சேட்சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்ப.்.றடக்கைப் பெருநற்கிள்ளி, பேகன், சேரமான் கடலோட்டிய வெல்கெழு குட்டுவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பரணர் பெயர் குறித்தும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆருப்பினும் இவர்பெயரால் பாடப்பெற்று காணப்படும் அரசர்கள் வரலாறு மட்டும் இங்கு ஆய்வுக்குரியதாகிறது. மேலும், பரணர் பாடியனவாகப் பதினொராந் திருமுறையில் ஒரு அந்தாதி, பன்னிருபாட்டியலில் சில சூத்திரங்களும், திருவள்ளுவமாலையில் ஒரு பாடலும் குறிப்பிடத்தக்கனவாகும். இந்நிலை கபிலர் குறித்த பெயர் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்ட பரணர் பாடல்களும் பிற்காலத்தன என்றே கொள்ளப்படுகின்றன. எனவே, இக்குச்சங்க இலக்கியத்தில் பரணரால் புறநானூற்றில் குறிக்கப்பெறும் அரசர்களே முதன்மை பெறுகிறார்கள்.

பரணரால் பாடப்பெற்ற சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்ப.்.றடக்கைப் பெருநற்கிள்ளியும் கழாஅத்தலையார் என்ற புலவரால்

பாடப்பட்டுள்ளனர். கழாஅத்தலையாரைக் கபிலர் பாடியுள்ளதாக ஒரு பாடல் புறநானூற்றில் (புறம்:202) இடம்பெறுகிறது. இதுபற்றிக் 'கபிலரால் பாடப்பட்ட புலவர்' என்ற தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது. இருப்பினும், கபிலரைப் பெருங்-குன்றூர்கிழார் பாடியுள்ளார் என்பதில் இவ்விருவரும் சமகாலப் புலவர்கள் என்பது ப்பகளைப் பாடியதில் இருந்து அறியப்படுகிறது. பேகனின் வரலாறு முன்னர்ச் சுட்டப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தில் உள்ள ஐந்தாம்பத்தினைச் செங்குட்டுவன்மேல் பாடியவர் பரணர் என்பதால் கபிலர், பெருங்குன்றூர்கிழார் ஆகிய இருவரும் பரணரின் சமகாலப் புலவர்களாகின்றனர் என்பதும் அறியத்தக்கது.

4.3.3.4. நக்கீரர்:-

இவர் கடைச்சங்கப் புலவர் குழுவிற்குத் தலைமைத் தாங்கியவர் என்றும் இறையனார் களவியல் உரைக்கு முதலுரை கண்டவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். இவரது பெயர் குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இலக்கிய அறிஞர்களால் அறிக்கப்படுகின்றன.[66] திருமுருகாற்றுப்படை உள்ளிட்ட அவர்தம் பெயரால் வழங்கும் சங்கப் பாடல்கள் அனைத்தையும் இயற்றியவர் கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஒருவரே என்று கூறுவார் கருத்து இங்கு அறிதற்குரியது.[67] இருப்பினும், நக்கீரர் கபிலரைப்பாராட்டிப் புகழ்ந்துள்ளார் என்பதால் அவரைப்பற்றி அறிந்து கொள்ளுதல் மட்டும் அவசியமாகின்றது.

நக்கீரர் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் புறநானூற்றில் இரண்டு (புறம்:56,189) பாடல்களில் பாடியுள்ளார். இவ்வரசனை மதுரை மருதனிள நாகனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், வடைக்காடனார், வடமவண்ணக்கன் பெரிச்சாத்தனார் போன்ற பல புலவர்கள் பாடியுள்ளனர். எனவே, இப்புலவர்கள் அனைவரும் நக்கீரரின் சமகாலப் புலவர்களாகின்றனர்.

நக்கீரர் கபிலரைத் தனது அகநானூறு பாடல் ஒன்றில்,

"உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச்சேய் நின்று
செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிருஉக் கடந்து வாண்மருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி"

(அகம்:78)[68]

என்று குறிப்பிட்டுப் பாடுகிறார். இது கபிலர் பாரியின் நாட்டு மக்களுக்கு அவர் செய்த உதவியினைப் புகழ்ந்து கூறுவது ஆகும்.

மூவேந்தர்களும் பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்டு இருந்த போது, அகத்தே வாழ்வோர்க்கு உணவுப்பொருள் குறைபடாதவாறு சூழ்ச்சி செய்து உணவளித்துக் காத்தவர் கபிலர் என்பதும், அவ்வாறு பல ஆண்டுகள் முற்றுகை நீடிக்கவும் உணவு வேண்டிய அளவு பெற்று மூவேந்தர்களை ஓட்டிய புலவர் என்பதுமாகிய கைவண்பாரியின் மலைநாட்டுச் சுனையில் பூத்த புதுமலர் போல் ஒத்தலைவியின் நுதல் உள்ளது. அதனை நீ சிறிதும் நினைக்கவில்லையே என்று தோழி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைகின்றன.[69] இது தனக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியாக நக்கீரரால் குறிக்கப்படுவது அறியத்தக்கது. இதன்மூலம் கபிலர், நக்கீரர்க்கு முற்பட்டவர் என்று கருத முடிகிறது.

நக்கீரர் பாடிய பாடல்களாக எட்டுத்தொகையில் 35 பாடல்கள் காணப்படுகின்றன. அவை புறநானூற்றில் (புறம்:56, 189, 395) மூன்று பாடல்கள்; அகநானூற்றில் (அகம்:36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389) பதினேழு பாடல்கள்; குறுந்தொகையில் (குறு:75,105,131,143,161,266, 280,368) எட்டுப் பாடல்கள்; நற்றிணையில் (நற்:31,86,197,258,340, 358,367) ஏழு பாடல்கள் என்பனவாகும். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இரண்டும் பாடியதாக இலக்கிய அறிஞர்களால் குறிக்கப்படுகிறது. நெடுநல்வாடையின் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, நக்கீரர் பாடிய இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனையும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையும் ஆராய்கையில் கபிலர், நக்கீரர் இருவரும் வாழ்ந்த காலத்தை ஒருவாறு அறிய முடியும் எனலாம்.

4.3.3.4.1. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்:-

இவன் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் மகன் ஆவான். இவ்வரசனை வேளிர் ஐவர் (சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, திதியன், எழினி, எருமையூரன்) இளைஞன் என்று இகழ்ந்துரைத்தனர் என்பதைப் புறநானூற்றுப்பாடல்கள் (புறம்:19, 23,24,78) வழி அறியப்படுகிறது. அதனால் இவ்வரசன் அவர்களை நோக்கி வஞ்சினம் உரைத்துப் பாடியதாகப் புறநானூற்றில் (புறம்:72) ஒரு பாடல் இடம்பெறுகின்றது.[70]

இவ்வரசனை நக்கீரர் மட்டுமின்றி, இடைக்குன்றூர்கிழார், மாங்குடி மருதனார், குடபுலவியனார், குறுங்கோழியூர்கிழார், கல்லாடனார் ஆகிய ஐந்து புலவர்களும் பாடியுள்ளார்கள். மாங்குடி மருதனார் இவனை மதுரைக்காஞ்சியில் சிறப்பித்துப் பாடியுள்ளார் என்பதும் குறிக்கத்தக்கது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைத் தோல்வியடையச் செய்தது பற்றிப் புறநானூற்றுப்பாடல் (புறம்:17) ஒன்று தெளிவுறுத்துகிறது.[71]

இவ்விருவரும் போர் செய்ததைக் நயங்கோழியூர் கிழார் என்னும் புலவர் பாடியுள்ளார். இச்சேர அரசனைப் பொருந்திலிளங்கீரனார் என்ற புலவரும் பாராட்டிப் பாடியுள்ளார். இச்செய்தியும் புறநானூற்றில் (புறம்:53) குறிப்பிடப்படுகிறது.[72]

மேற்சுட்டிய இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒப்பிடுகையில் நக்கீரர், கபிலர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் என்ற கருத்து பெறப்படுகிறது. நெடுநல்வாடையைப் பாடியவர் சங்ககால நக்கீரரே என்று கொண்டால் அந்தக் காலக்கட்டத்தில் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிப்பாட்டும் சங்ககாலக் கபிலரால் பாடப்பட்டது எனக் கொள்ளப்படும்.

கபிலர் இறந்தபிறகு அவரை மனதில் நினைந்து பொருந்தில் இளங்கீரனார், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய கருத்தினை இங்கு ஒப்பிடுகையில், நெடுநல்வாடையில் குறிக்கப்படும் நெடுஞ்செழியன் இச்சேரனோடு போர் புரிந்து வெற்றி பெற்றுள்ளான். இச்செய்தி முரணான கருத்தைத் தருவதோடு, காலங்களும் வேறுபடுகின்றன என்பதை உணரமுடிகிறது.

ஏனெனில், நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்-சேரல் இரும்பொறையாவான். அவனது காலம் சங்க காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலமாக முன்னர் ஆராய்ந்து பெறப்பட்டது. எனவே, நெடுநல்வாடையைப்

...180/-

பாடிய நக்கீரரும், கபிலரைப் பாராட்டிப் பாடிய நக்கீரரும் ஒருவரா என்ற ஐயவினா எழுகிறது.

இருப்பினும், கிடைக்கின்ற சான்றுகள் வழி நோக்கும்போது, கபிலர் இல்லாத போது பாடிய பாடலாக நக்கீரரின் அகப்பாடல் குறிக்கப்படுகிறது. அதேபோன்று பொருந்திலிளங்கீரனார் கூற்றும் அமைகிறது. எனவே, பத்துப்பாட்டில் குறிக்கப்படும் கபிலர் வேறு ஒரு புலவராக இருந்திருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது.

இஃதன்றி, மாங்குடி மருதனார் பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்காஞ்சியில் பாராட்டிப் பாடியுள்ளார். இச்செய்தியும் கபிலர்க்குப் பிற்பட்ட காலத்தில் பாடப்பட்ட தலைவனைப் பற்றிப் பாடப்பட்டு இருப்பதால், தொகைப்பாடல்கள் பாடிய கபிலரும், குறிஞ்சிப்பாட்டுப் பாடிய கபிலரும் வேறு வேறானவர்கள் என்று உரை வாய்ப்புள்ளது.

கபிலரைப் பாராட்டிப் பாடிய நக்கீரர், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியிருப்பதாலும், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இவ்வரசனிடம் தோல்வியடைந்து இருப்பதாலும் குறிஞ்சிப்பாட்டுப் பாடிய கபிலர் வேறு ஒரு புலவர் (கபிலர் பெயர் தாங்கிய) என்பது பெறப்படுகிறது.

கபிலரைப் பாடிய புலவர்கள் என்பதில் மாறோக்கத்து நப்பசலையார், பொருந்திலிளங்கீரனார், நக்கீரர் ஆகிய மூவரும் கபிலர் இறந்த பின்பு பாடியவர்கள்

என்பது பெறப்படுகிறது. பெருங்குன்றூர்கிழார் மட்டும் பேகனைப் பாடியவர் என்பதில் சமகாலப் புலவராகக் குறிக்கப்படுகிறார். எனவே, குறிஞ்சிப்பாட்டும், ஐங்குறுநூறும் மற்ற தொகைப்பாடல் பாடிய கபிலரால் பாடப்படவில்லை என்பதும் பெறப்படுகிறது.

4.3.4. கபிலரால் பாடப்பெற்றப் புலவர்:-

கபிலரைப் பல புலவர்கள் பாடியுள்ள நிலையில் கபிலரும் சில புலவர்களைப் பாடியுள்ளார். அதில் கழாஅத்தலையார் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இப்புலவரைக் கபிலர் தனது புறநானூற்றுப் (புறம்:202) பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார். இப்பாடலின் கருத்தைக் கொண்டு கபிலரின் காலத்தை ஒருவாறு தெளிவு செய்யலாம்.

4.3.4.1. கழாஅத்தலையார்:-

உ.வே. சாமிநாதய்யர் கழாஅத்தலை என்பது ஓரூர் எனக் குறிப்பர்.[73] அக்குறிப்பின்படி இப்புலவர் ஊரால் பெயர் பெற்றப் புலவராகிறார். ஆயினும், உடம்பால் பெயர் பெற்றவர் வரிசையில் இவரது பெயரைக் குறிப்பிடுவர்.[74]

இவரைக் கபிலர் புறநானூறு 202-ஆம் பாடலில் "கழாஅத்தலை" என்ற பெயரினைக் குறிப்பிட்டுப் பாடிச் செல்வர்.

கழாஅத்தலையார் புறநானூற்றில் (புறம்:62,64,270,288,289,368) ஆறு பாடல்களைப் பாடியுள்ளார். அவரின் பாடல் சிறப்புக்கள் வருமாறு:

1. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கை பெருநற் கிள்ளியோடு போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்து ஆரம் கழுத்திடத்ததாக உயிர் போகாது கிடந்தானை மறக்களவழித் துறையிலும் (புறம்:368),[75]

2. அவ்வேந்தர் இருவரும் போர்க்களத்தே படையொடு மாய்ந்து கிடந்ததைத் தொகைநிலைத் துறையிலும் (புறம்:62),[76]

3. சேரமான் பெருஞ்சேரலாதன் - சோழன் கரிகாற் பெருவளத்தானோடு பொருது புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்ததைக் கையறு நிலையிலும் (புறம்:65) பாடியுள்ளார்.[77]

4. மற்ற மூன்று பாடல்களிலும் போர் குறித்த செய்திகளையே தனித்தனியாகப் பொதுவாகப் பாடியுள்ளது அறியப்படுகிறது.

எனவே, கழாஅத்தலையார் பாடல்கள் வழி நான்கு அரசர்களைப் பற்றிய செய்தியினைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

கபிலர், பாரி இறந்தபின் அவன் மகளிரை மணம்முடித்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலில் விச்சிக்கோன் என்ற அரசனிடம் அழைத்துச் செல்வதாகக் கூறப்படுகிறது. அவ்வரசனிடம் அந்தணனாகிய நான் பாரியின் மகளிரைப் பரிசிலாகக் கொண்டு வந்துள்ளேன். அவர்களை ஏற்றுக் கொள்வாயாக என்று கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

"கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்

யானே, பரிசிலன் மன்னுமந் தண னீயே
இவரைக் கொடுக்கும் கொளினே....."

(புறம்: 200)[78]

ஆனால், அவ்வரசன் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவதாகச் செய்தி அறியப்படுகிறது.

அதன் பின்னர், இருங்கோவேள் என்ற அரசனிடம் பாரிமகளிரை அழைத்துச் செல்கிறார். அவ்வரசனிடம் நான் இவர்களுடைய தந்தையின் தோழன், இவர்கள் என் மகளிர்; அந்தணனாகிய புலவன் கொண்டு வந்துள்ளேன்; இவர்களை நீ ஏற்றுக் கொள்வாயாக என்று வேண்டுவதாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன.

"........இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்
படுமணி யானை பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந்த தனனே
நீயே, ...
..................பான்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்தர இவரைக் கொண்மதி......"

(புறம்: 201)[79]

எனவரும் பாடல் வழி வேண்டுகிறார். ஆனால், இவ்வரசனும் மறுத்துவிடுவதாகக் குறிப்புக் காணப்படுகிறது. இதனைக் கபிலர் இவ்வரசனைப் பாடிய மற்றொரு பாடல் வழி உணரமுடிகிறது. இருங்கோவேளின் மறுப்புரை கண்டு அவனை இகழ்ந்து பாடியதாகப் பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன.

"இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியறே ரண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
தேற்றாப் புன்சொ னோற்றிசிற் பெரும
விடுத்தனென் ...."

(புறம்: 202)[80]

எனவரும் பாடல் வரிகள் "நீடிய நிலையினையுடைய சிற்றரையம், பேரரையம் ஆகிய இரண்டு நாட்டினது கோட்டையும் கெடுதற்குக் காரணம் நினது தானால்

தரப்பட்ட பொருளைபற்றி தந்தையுடைய உரிமையை நிரையப்பெற்றத் தழைத்த கல்வியையுடைய புலிகடிமாலே, நம்மையொக்கும் அறிவினை உடைய நம் குடியுள் ஒருவன் புகழ்ந்த செய்யுளையுடைய கழாஅத்தலையார் என்னும் புலவரை அவமதித்ததனால் உண்டான பயன்" என்கிற கருத்தினை இருங்கோவேளுக்குக் கபிலர் தெரியப்படுத்துவதாக உள்ளன.

இக்கருத்தின் மூலம், கபிலருக்கு முற்பட்டவராகக் கழாஅத்தலையார் இருந்திருக்க வேண்டும் என்பதும், கபிலர் இருங்கோவேளைப் பாடும்போது, கழாஅத்தலையார் உயிருடன் இல்லை என்பதும் பெறப்படுகிறது.

கழாஅத்தலையாரால் சேரமான் பெருஞ்சேரலாதன், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் ஆகிய இரு அரசர்கள் பாடப்பட்டுள்ளனர். கழாஅத்தலையார் மட்டுமின்றி, இவ்விருவரில் சேரமான் பெருஞ்சேரலாதனை வெண்ணிக்குயத்தியார் என்ற புலவரும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பரணரும் புறநானூற்றுப் பாடல்களில் பாடியுள்ளது தெரியவருகிறது. இதனால் கழாஅத்தலையார், பரணர், வெண்ணிக்குயத்தியார் ஆகிய மூவரும் ஒரே காலக்கட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆகின்றனர். இங்குப் பரணர் பற்றிய காலமே ஐயத்திற்கு உரியதாகிறது.

அதாவது, கழாஅத்தலையார் கபிலர் காலத்திற்கு முந்தியவர் ஆவார். கழாஅத்தலையார் கபிலர் வாழ்ந்த காலத்தில் இருந்ததாகக் குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை. ஆனால், பரணர் பேகனைப் பாடியதால் கபிலரின் சமகாலப்

புலவராகக் குறிக்கப்படுகிறார். அவ்வாறு இருக்கும்போது, கழாஅத்தலையார் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனையும், சோழன் வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளியையும் போர்களத்தே பொருது வீழ்ந்தபோது பாடியுள்ளார். அதே போர்க்களத்தே அவர்களைப் பரணர் பாடியதாகவும் புறநானூற்றுப்பாடல் துறை விளக்கம் வழி அறியப்படுகிறது.[81] இந்நிகழ்ச்சி பரணர் குறித்து மாறுபட்ட கருத்தினைக் கொடுப்பதாக உள்ளது.

கபிலர் கழாஅத்தலையாரைப் புகழ்ந்தது கொண்டு, கபிலர்க்கு முற்பட்டவராகப் பரணரும் இருந்திருக்க வேண்டும் என்று கருத முடிகிறது.

அடுத்து, சேரமான் பெருஞ்சேரலாதனை வெண்ணிக்குயத்தியார் என்ற புலவரும் பாடியுள்ளார். இவரே சோழன் கரிகாற்பெருவளத்தானையும் பாடியுள்ளார். இவ்வரசனைக் கருங்குழலாதனார் (புறம்:224) என்ற புலவரும் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கரிகால் வளவனுடன் சேரமான் பெருஞ்சேரலாதன் வெண்ணிப் போர்க்களத்தில் போர் செய்து முதுகில் புண்பட்டதற்கு நாணமடைந்து வடக்கிருந்து உயிர்நீத்தான் என்ற செய்தியைக் கழாஅத்தலையார் புறநானூற்றில் (புறம்:65) வருந்திப் பாடியுள்ளார்.[82] இக்கருத்தின்படி கரிகால் பெருவளத்தான் கழாஅத்தலையார் காலத்தில் வாழ்ந்தவனாகிறான்.

சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பத்துப்பாட்டில் இரண்டு பாடல்கள் கூறப்படுகின்றன. ஒன்று கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் 'பட்டினப்பாலை' என்ற பெயரிற் பாடப்பெற்றது. மற்றொன்று முடத்தாமக் கண்ணியாரால் 'பொருநராற்றுப்படை' என்ற பெயரால் பாடப்பெற்றது.

இங்குப் பரணரால் பாடப்பெற்ற உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி தன் மகன் கரிகால் பெருவளத்தான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டான் என்ற செய்தி முன் கூறாயப்பட்டது. இதனை ஒப்பிடும்போது, கபிலர்க்கு முற்பட்ட காலத்தவராகப் பரணர் குறிக்கப்படுகின்றார் என்பது தெளியப்படும். தந்தையைப் பாடிய புலவரே மகனையும் பாடியுள்ளார் என்கிற கருத்தும் பெறப்படுகிறது.

ஆனால், பத்துப்பாட்டில் கரிகாலன் பெயரில் இடம்பெறும் இரண்டு நூல்களும் சங்க கால நூல்களா அல்லது சங்ககாலத்திற்கு பிற்பட்ட நூல்களா என்ற வினா எழுகிறது. இருப்பினும், கபிலர்க்கு முற்பட்ட காலத்தவனாகக் கரிகால் பெருவளத்தான் குறிக்கப்படுகிறான் என்ற செய்தி பெறப்படுகிறது. பத்துப்பாட்டில் இடம்பெறும் கரிகாற்பெருவளத்தான் வேறொரு பெயருடைய கரிகால் வளவனாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.[83]

அதில் இமயம் சென்ற கரிகாலன் இரண்டாம் கரிகாலன் என்பதும், வெண்ணிக்-குயத்தியரால் பாடப்பெற்றவன் முதலாம் கரிகாலன் என்பதும் அறியக்கிடக்கின்றன.[84] அக்கருத்துக்களினால் பத்துப்பாட்டில் இடம்பெறும் கரிகாலன் இரண்டாம் கரிகாலன்

என்று கருத வாய்ப்பிருக்கிறது. மேலும், பரணர் பாடிய கரிகாலனுக்கும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய கரிகாலனுக்கும் கால வேற்றுமை அதிகம் காணப்படுகிறது. எனவே, கரிகாலன் என்று பெயர் தாங்கிய சோழர்கள் இருவர் இருந்துள்ளனர் என்பதைக் கிடைக்கின்ற சான்றுகள் வழி அறியலாம்.

இதேபோன்று கழாஅத்தலையாரால் பாடப்பெற்ற மற்றொரு அரசன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் ஆவான். இவன் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியோடு போர் செய்து இறந்துபட்டவன். இந்நிகழ்ச்சியினை மனம் வருந்திக் கழாஅத்தலையார் புறநானூற்றில் (புறம்:62) ஒரு பாடலில் பாடியுள்ளார்.[85] இவ்விருவரையும் பரணர் பாடியுள்ளார் என்பதும் அறியத்தக்கது.

மேற்கூறிய கருத்துக்களில் இருந்து கபிலர் காலப் புலவராகக் கருதப்படும் பரணர், கழாஅத்தலையார் காலத்திலே வாழ்ந்துள்ளார் என்பது தெரியவருகிறது. அஃதன்றிக் கபிலர்க்கு அடுத்த காலப்பகுதியிலும் பரணர் வாழ்ந்துள்ளார் என்பதைப் பேகனை முன்னிலைப் படுத்திப் பாடியதில் இருந்து அறியமுடிகிறது. கபிலர் இருங்கோவேளைப் பாடும்போது, கழாஅத்தலையார் என்ற புலவர் இருந்தார் என்பதைக் குறிப்பிட்டுச் செல்வதால், அவர் கபிலர்க்கு முற்பட்டவர் என்பதும் பெறப்படுகிறது.

மேலும், பத்துப்பாட்டில் இடம்பெறும் சோழன் கரிகால் பெருவளத்தானும் சங்கப் புறநானூற்றுப் பாடலில் இடம்பெறும் கரிகால் பெருவளத்தானும் காலம்

நோக்கி இருவரும் வேறு வேறு காலத்தவர் என்று கொள்ளவும் இடம் இருக்கிறது. பத்துப்பாட்டில் இடம்பெறும் பட்டினப்பாலையும், பொருநராற்றுப்படையும் பிற்கால அரசர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகப் பெற்றிருப்பது கொண்டு அக்காலக் கட்டத்தில் இடம்பெற்ற குறிஞ்சிப்பாட்டும் பிற்காலத்ததாகக் கொள்ளப்படுகிறது. அதனைப் பாடிய புலவரும் பிற்காலத்தைச் சார்ந்த ஒருவராக இருக்க முடியும் எனக் கருதமுடிகிறது. எனவே, கபிலர் பாடிய கழாஅத்தலையார் என்ற புலவரின் வரலாற்றினை ஆராய்ந்ததில் ஒரே பெயருடைய இருவேறுபட்ட அரசர்கள் வாழ்ந்திருப்பதும், பத்துப்பாட்டு நூல் வரிசையில் இருவேறு காலங்கள் புலனாவதும் அறியப்படுகின்றன. அந்த வகையில் பத்துப்பாட்டில் இடம்பெறும் குறிஞ்சிப்பாட்டு கபிலரும், அந்நூலின் காலமும் வேறுபட்டதாக இருத்தல் வேண்டும் என்று உரைக்க முடிகிறது.

4.4. முடிவுரை:-

'வரலாற்று நோக்கில் கபிலர்' என்ற இயல்வழிப் பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

1. தன் உயிர்த்தோழனாகப் பெற்ற பாரியைக் கபிலர் தனது அகப்பாடல்கள் ஒன்றில் கூடக் குறிப்பிடவில்லை என்பது பெறப்படுகிறது.

2. கடையெழு வள்ளல்களைப் பாடிய பெருஞ்சித்திரனார் கடையெழு வள்ளல்களின் அடுத்த தலைமுறையினராகக் கருதப்படும் குமணனையும் பாடியிருப்பதால்,

கடைபெழு வள்ளல்களைப் பாடிய கபிலரும் இப்புலவரும் சமகாலத்தவர் எனக் கூறினும், கபிலருக்குப் பிற்பட்டவர் பெருஞ்சித்திரனார் என்பது பெறப்பட்டது.

3. கபிலரைப் பாடிய புலவர் என்பதில் பெருங்குன்றூர்கிழார் கபிலரின் சமகாலப் புலவராகின்றார். மற்ற புலவர்களான மாறோக்கத்து நப்பசலையார், பொருந்திலிளங்கீரனார், நக்கீரர் ஆகிய மூவரும் கபிலர் இறந்த பிறகும் வாழ்ந்த புலவர்கள் என்பது தெரியவருகின்றது.

4. மாறோக்கத்து நப்பசலையார் காரியைப் பாடும்போது கபிலர் உயிருடன் இல்லை என்பது ஆய்வின்மூலம் அறியப்படுகின்றது.

5. ஐங்குறுநூற்றைத் தொகுப்பிக்கச் செய்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் கபிலருக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த பொருந்தில்-ளங்கீரனார் பாடியிருப்பதால், ஐங்குறுநூற்றில் உள்ள குறிஞ்சித்திணைப்பாக்கள், கபிலர்க்குப் பிற்பட்ட காலத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பதும், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை மிகவும் பிற்பட்ட காலத்து அரசனாகக் குறிக்கப்படுவது கொண்டு அவனால் தொகுக்கப்பட்ட நூலும் பிற்பட்டது என்பதும் தெளிவாகிறது. எனவே, ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடிய கபிலர் பிற்காலக் கபிலராக இருத்தல் வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

6. நக்கீரர் கபிலரைப் பாடியவர் என்பதால், அவரால் பாடப்பட்ட அரசர்களின் வரலாற்றைக் கொண்டு குறிஞ்சிப்பாட்டு பாடிய கபிலர் வேறு கபிலராக இருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

7. கபிலர், கழாஅத்தலையாரைப் பாடியவர் என்பதில் தொடர்ந்து பத்துப்பாட்டில் இடம்பெறும் கரிகால் பெருவளத்தான் இறந்தபோழ்து அவனது பெயர் கொண்டு குறிஞ்சிப்பாட்டு பாடியக் கபிலரும் வேறுபட்ட காலத்தைச்-சேர்ந்தவர் என்பதைக் கால வேற்றுமையின் காரணத்தால் அக்குறிஞ்சிப்பாட்டுப் பாடிய கபிலர் வேறானவராக இருத்தல் வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

* * *

சான்றென் விளக்கம்:

1. கோவிந்தன், கா., 'சங்ககால அரசர் வரிசை' (பகுதி-2), ப.30.
2. மேலது, ப.36.
3. மீனாட்சிசுந்தரம், தெ.பொ., 'பத்துப்பாட்டு ஆய்வு' (புறம்), ப.125.
4. வேங்கடராமன், எச்., (பதி.ஆ), 'நற்றிணை மூலமும் உரையும்', பாடல் எண்-53.
5. கோவிந்தன், கா., 'சங்ககால அரசர் வரிசை' (பகுதி-2), ப.46.
6. Sivarajapillai, K.N., 'Chronol gy of the Early Tamils', Tables-III, p.xix.
7. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', ப.186.
8. சாமிநாதய்யர், உ.வே., 'புறநானூறு' (பாடப்பட்டோர் வரலாறு), ப.69
9. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', ப.159.
10. மீனாட்சிசுந்தரம், தெ.பொ., 'பத்துப்பாட்டு ஆய்வு' (புறம்), ப.124.
11. கோவிந்தன், கா., 'சங்ககால அரசர் வரிசை' (பகுதி-2), ப.52.
12. மேலது, ப.52.
13. மேலது, ப.52.
14. இராசமாணிக்கனார், மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', ப.411.
15. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு', பாடல் எண்-109.

16. மேலது, பாடல் எண்-110.

17. மேலது, பாடல் எண்-109.

18. மேலது, பாடல் எண்-110.

19. மேலது, பாடல் எண்-111.

20. மேலது, பாடல் எண்-116.

21. ராகவையங்கார், ரா., 'பாரிகாதை' (முகவுரை), ப.7.

22. மேலது, ப.7.

23. ஆசைத்தம்பி,தேவ., 'திருக்கோவலூர் திருத்தல வரலாறு', ப.11.

24. மேலது, ப.11.

25. மேலது, ப.11.

26. நேர்காணல்: எஸ்.எத்திராஜ், திருக்கோவலூர், 30.5.1992.

27. Subramanya Iiyer, K.V., 'South Indian Inscriptions' Vol.VII/ p.433 (பின்னிணைப்பு VIII பார்க்க)

28. பின்னிணைப்பு IX பார்க்க.

29. பின்னிணைப்பு VII பார்க்க.

30. நேர்காணல்: இராஜாராம்(வீரட்டானேஸ்வரர் கோவில் நிர்வாக அதிகாரி) திருக்கோவலூர்,30.5.1992.

31. நேர்காணல்:தாயம்மாள் அறவாணன், புதுச்சேரி,30.03.1993.

32. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ), 'புறநானூறு' பாடல் எண்-200.

33. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', ப.243.

34. சாமிநாதய்யர், உ.வே., 'புறநானூறு', பாடல் எண்-202.

35. மேலது, பாடல் எண்-202.

36. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு' (பாடப்பட்டோர் வரலாறு), ப.72.

37. மேலது, ப.34.

38. இளம்பூரணர், (உ.ஆ), 'தொல்காப்பியம்' (எழுத்ததிகாரம்) நூற்பா-151.

39. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', ப.213.

40. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு' (பாடினோர் வரலாறு), ப.60.

41. மேலது, பாடல் எண்-144.

42. வையாபுரிப்பிள்ளை, எஸ்., 'சங்க இலக்கியம்' (முதல் பகுதி) ப.734.

43. மேலது, பக்-1251-1254.

44. வேங்கடராமன், எச்., (பதி.ஆ), 'நற்றிணை மூலமும் உரையும்', பாடல் எண்-304.

45. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு', பாடல் எண்-126.

46. மேலது, பாடல் எண்-74.

47. மேலது, பாடல் எண்-46.

48. மேலது, பாடல் எண்-53.

49. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு' (பாடப்பட்டோர் வரலாறு) ப.68.

50. மேலது, ப.71.

51. மேலது, ப.71.

52. மேலது, ப.71.

53. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', பாடல் எண்-90.

54. சிவசுப்பிரமணியன், வே., (பதி.ஆ), 'அகநானூறு' (மணிமிடைப்பவளம்), பாடல் எண்-142.

55. மேலது, பக்.73-74.

56. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'புறநானூறு', பாடல் எண்-22.

57. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', பாடல் எண்-85.

58. மேலது, ப.244.

59. கோவிந்தன், கா., 'சங்ககால அரசர் வரிசை', -சோழர் (பகுதி-1) ப.19

60. இளம்பூரணர், (உ.ஆ), 'தொல்காப்பியம்', (பொருளதிகாரம்), நூற்பா-32.

61. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ), 'பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்', பாடல் வரி-130.

62. மேலது, பாடல் வரி-132.

63. கோவிந்தன்,கா., 'சங்ககால அரசர் வரிசை'-சோழர் (பகுதி-1)ப.23.

64. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ), 'புறநானூறு',பாடல் எண்-99.

65. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ), 'பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்', ப.129.

66. இராமசாமி,மு.பெரி.மு., 'நக்கீரர்-ஓர் ஆய்வு', ப.8.

67. மேலது, ப.46.

68. சிவசுப்பிரமணியன்,வே.,(பதி.ஆ), 'அகநானூறு',(களிற்றியானை நிரை), பாடல் எண்-78.

69. மேலது, ப.245.

70. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ), 'புறநானூறு', பாடல் எண்-72.

71. மேலது, பாடல் எண்-17.

72. மேலது, பாடல் எண்-53.

73. மேலது, (பாடினோர் வரலாறு), ப.37.

74. சாரங்கபாணி,இரா.,(பதி.ஆ), 'சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்', (தொகுதி-1), ப.185.

75. சாமிநாதய்யர்,உ.வே.,(பதி.ஆ), 'புறநானூறு', ப.544.

76. மேலது, ப.150.

77. மேலது, பக்.155-156.

78. மேலது, பாடல் எண்-200.

79. மேலது, பாடல் எண்-201.

80. மேலது, பாடல் எண்-202.

81. மேலது, பாடல் எண்-63.

82. மேலது, பாடல் எண்-65.

83. கோவிந்தன், கா., 'தமிழர் வரலாறு', (பகுதி-2), ப.30.

84. Sivaraja pillai, K.N., 'Chronology of the Early Tamils', pp.91-99.

85. சாமிநாதய்யர், உ.வே., (பதி.ஆ) 'புறநானூறு', பாடல் எண்-62.

* * *

இயல் : ஐந்து

5. நடையியல் - ஒளவை கபிலர்

5.1. முன்னுரை

5.2. நடையியல் விளக்கம்

5.3. நடையியல் வகைப்பாடுகள்

5.4. ஒப்பீட்டாய்வில் நடையியல் கூறுகள்

5.4.1. புள்ளி நடையியல்

5.4.1.1. ஒலிநிலைக் கூறுகள்

5.4.1.1.1. மோனை

5.4.1.1.2. எதுகை

5.4.1.1.3. இயைபு

5.4.1.1.4. அளபெடை

5.4.1.2. சொல்நிலைக் கூறுகள்

5.4.1.2.1. மனிதர்கள்

5.4.1.2.1.1. தலைவன்

5.4.1.2.1.2. தலைவி

5.4.1.2.2. விலங்குகள்

5.4.1.2.2.1. யானை

5.4.1.2.2.2. புலி

5.4.1.2.2.3. பன்றி

* * *

5. நடையியல் ஆய்வில் கபிலர்

1. முன்னுரை:-

சங்க இலக்கியத்தில் அதிகமான பாடல்களைப் பாடியிருப்பவர் கபிலர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகுப்புகளில் மொத்தம் 235 பாடல்கள் அவரால் பாடப்பட்டுள்ளன என்று கருதப்படுகின்றன. ஆனால், ஆய்வாளர்களிடையே ஒரே கபிலரே இத்தனைப் பாடல்களையும் பாடியிருப்பாரா என்பது குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவர்கள் கருத்துப்படி கலித்தொகையில் 29 குறிஞ்சிக்கலிப் பாடல்களும், ஐங்குறுநூற்றில் 100 குறிஞ்சித்திணைப் பாடல்களும், பதிற்றுப்பத்தில் 10 ஏழாம் பத்துப் பாடல்களும், பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டும் கபிலரால் பாடப்பட்டன அல்ல என்பது அறியப்படுகின்றது.

மேலும், வரலாற்று நோக்கில் கபிலர் பாடல்களைப் புறச்சான்றுகள் வழி ஆராய்ந்ததில் குறிஞ்சிப்பாட்டும், ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணை பாடல்களும் பிற்காலத்தன என்பதும், அப்பாடல்கள் பாடப்பட்டக் காலங்களில் அதிக இடைவெளி இருப்பதும் தெரியவருகின்றது. இக்கருத்துக்களையேயும் தெளிவு செய்ய கபிலரது பாடல்களை அகச்சான்றுகள் அடிப்படையில் கபிலர் பயன்படுத்திய சொற்களை நடையியல் ஆய்வு மூலம் ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

5.2. நடையியல் விளக்கம்:-

இலக்கிய உலகில் அதிகம் பயின்றுவரும் ஒரு கலைச்சொல் நடை (Style) என்பதாகும்.[1] ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளுள் நடையும்

ஒன்றாகக் கருதப்படுகின்றது. இலக்கியப் படைப்பாளிகளை இனங்கண்டு கொள்ளவும், அவர்களது மொழிநடை பெரிதும் பயன்படுகிறது எனலாம்.

மொழி அமைப்பு, மொழிப்பயன்பாடு என்ற இரண்டையும் ஒரு சேர நோக்கிக் கொண்டு மொழியைப் பயன்படுத்துவோர் அவற்றை எவ்வாறெல்லாம் பயன்படுத்துகின்றனர் என்பதையும், அவ்வாறு பயன்படுத்துவதில் அவர்கள் எம்முறைகளில் எல்லாம் வேறுபடுகிறார்கள் என்பதையும் கண்டறிந்து விளக்குவது ஒரு வகையான மொழி ஆய்வாகும். இத்தகைய ஆய்வில் மொழி அமைப்பும், மொழிப்பயன்பாடும் சிறப்பிடம் பெறுவதால் இது ஒரு வகையான மொழி ஆய்வாக, மொழி இலக்கியம் என்ற இரண்டையும் சார்ந்த ஆய்வாக மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய ஆய்வே இன்று நடையியல் ஆய்வு என்று விளக்கப்படுகிறது.[2]

பொதுவாக, நடை என்பது மனிதனின் நடக்கும் செயலைக் குறிப்பதற்கும் அவனது ஒழுக்கத்தினைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும். அச்சொல் கலைச்சொல்லாக இன்றைய மொழி இலக்கிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருவர் தம்முடைய எண்ணத்தை வெளியிடும் முறையே நடை என்று குறிக்கப்படுகிறது. மேலும், நடை என்பதற்குப் பலர் பலவாறு விளக்கம் தந்துள்ளனர். "கவிஞனின் தனித்தன்மை, கவிஞன் உணர்த்தும் உத்தி, இலக்கிய நயம் என்ற மூன்றும் ஆகும் என்றும், கவிஞன் தனித்தன்மையை மொழியில் கலப்பதுதான் நடை என்றும், கவிஞன் உள்ளப்பண்போடு நடை ஒன்றியது என்றும், பொது மொழியினை இலக்கிய மொழியாக

மாற்றும்போது ஏற்படும் மரபுப் பிறழ்ச்சிகளே நடையின் சிறப்புக்கூறுகள் என்றும்" [4] குறிக்கப்படுகிறது.

இவ்வாறு நடை என்பது எண்ணம், கருத்து எனும் கருவினைச்சுற்றி அமைந்துள்ள ஒரு கூடு என்றும், வேறுபட்ட வடிவங்களுக்கிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி என்றும் கூறப்படுவது அறியத்தக்கது. எனவே, ஒரு பொருளை உணர்த்த எத்தனையோ சொற்கள், தொடரமைப்புகள் இலக்கண அமைதிகள் இருக்கவே செய்கின்றன. இத்தேர்வு முறை ஆளுக்கு ஆள் வேறுபடவே செய்யும் என்றும், ஒருவரை மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவரது நடையாகும் [5] என்றும் விளக்கம் தருவது உணர்தற்குரியது.

ஃ.மான், 'ஒன்றுக்கு மேற்பட்ட மொழி அக அமைப்புகளைப் பல்வேறு வகையான மாற்றல் விதிகளில் இருந்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து புற அமைப்புக்குக்கொண்டுவரும் முறையே நடை என்பதாகும்' என்று விளக்கம் தருகின்றார். [6] இவ்வாறாக, நடை என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் தருவது அறியப்படுகிறது.

மேற்கூறியவற்றில் இருந்து, நடை என்பது ஒரு ஆசிரியனின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதும், ஓர் ஆசிரியன் தன்னுடைய எண்ணத்தை தனக்கே உரித்தான முறையில் தமது படைப்புகளில் வெளியிடுவதும் நடை என்று கொள்ளப்படுகிறது.

மேலும், நடை பற்றிய வரைவிலக்கணம் கூறுவதும் ஈங்கு அறியத்தக்கது. அவை வருமாறு:

1. ஒரு மொழியில் ஏறக்குறைய ஒரே கருத்தைத் தரக்கூடிய இரண்டு கூற்றுக்கள் மொழியமைப்பில் வேறுபட்டுக் காணப்பட்டால் அவை நடை வேறுபாடு எனக் கூறமுடியும்.

2. ஒரு பொதுமையிலிருந்து (Commonness) ஏற்படும் விலகல் (Deviation) நடை எனக் கருதப்படும்.

3. மொழியியல் தர்க்கத்திற்குப் புறம்பானவை பற்றிய ஆய்வு நடையியல் எனப்படும்.[7]

இம்மூன்று கூறுகளும் நடைபற்றிய ஒரு முழுமையான வரைவிலக்கணம் தருபவை அல்ல என்றாலும் அவற்றிற்கிடையே ஒரு பொதுப்பண்பினைக் காண முடிகிறது. எனவே, மொழியில் காணப்படும் வேறுபாடுகளே நடை என்று கருதப்படுகிறது.

என்க்விஸ்ட் நடையின் வரைவிலக்கணமாக ஐந்து நிலைகளை வரையறை செய்கிறார். அவை வருமாறு:

1. எண்ணம் அல்லது கருத்து எனும் கருவினைச் சுற்றியமைந்துள்ள புற அமைப்பு.
2. வேறுபட்ட வடிவங்களுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி.
3. ஒரு படைப்பாளியின் அல்லது படைப்பிலக்கியத்தில் காணப்படும் தனிமைச் கூறுகளின் சேர்க்கை.
4. மொழியின் இயல்பான கட்டமைப்பில் இருந்து வேறுபடும் பிறழ்ச்சி அல்லது விலகல்.

5. தொடர் அடிப்படையிலும் முழுப்படைப்பிலும் உள்ள மொழிக் கூறுகளிடையே காணப்படும் கூறுகள்.[8]

மேற்கூறியவற்றில் இருந்து ஒரே ஆசிரியரின் இருவேறு படைப்புகளுக்குள் காணப்படும் தனிமைக் கூறுகளே நடை என்பது உணரத்தக்கது. இவ்வாறாக, நடை பற்றிய விளக்கமும், வரைவிலக்கணமும் தரப்படுவது அறியப்படுகின்றது. இந்த அடிப்படையில் கபிலரின் பாடல்கள் ஆராயப்படுகின்றன.

5.3. நடையியல் வகைப்பாடுகள்:-

மொழிநடை பல்வேறு வகைகளில் பாகுபாடு செய்து விளக்கப்பட்டு வருகிறது. ஜெ. நீதிவாணன் நடையினை நான்கு வகைகளாகப் பிரித்துக் கூறுகிறார். அவை,

1. விளக்க நடை
2. விவரிப்பு நடை
3. கட்டுரை நடை
4. கவிதை நடை

என்பனவாகும்.[9] இவ்வகைப்பாடுகள் உரைநடைப்பகுதியை ஆராய்தற்குரிய ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. அ. ஆலிஸ் நடையை இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுகிறார். அவை,

1. கால நடை
2. படைப்பாளியின் நடை

என்பனவாகும்.[10] இந்நடைகளை ஒருபடைப்பில் ஒப்பிட்டு அறிந்தால் வேறுபாடு அறிய

வாய்ப்பிருக்கிறது எனலாம். ம.செ. பூரபிள்ளை நடையை ஐந்து வகையாகப் பிரித்துக் கூறுகிறார். அவை,

1. சொல் நடை

2. சொற்றொடர் நடை

3. உரை நடை

4. செய்யுள் நடை

5. நூல் நடை

என்பனவாகும்,[11] இதில் நூல்நடை, உரைநடை என்ற இரண்டும் உரைநடை இலக்கிய வகையினை ஒப்பிட்டு அறிய உதவுவனவாகும். எனவே, ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ப நடைகள் வேறுபட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

நடை காலத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பதனை கால நடை தெரிவு செய்யும். சங்ககாலத்தில் ஆசிரியப்பாவும், இடைக்காலத்தில் விருத்தப்பாவும், தற்காலத்தில் பாவிலக்கணம் மீறிய கவிதை வகைகளும் இடம்பெற்றுள்ளன என்பது அறிதற்குரியது. தனி ஒரு கவிஞனின் நடையை அறிய உதவும் புள்ளி நடையியல் (Style statistics) படைப்பாளியின் நடையினைத் தெரிவு செய்யும் எனலாம்.[12]

இப்புள்ளி நடையியல் இரண்டு முறைகளில் பிரித்தறியப்படுகிறது.

1. கவிஞன் விரும்பிப் பயன்படுத்தும் கூறுகள் (Preferable

2. கவிஞன் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் கூறுகள் (Frequent)[13]

இவ்விரு வகைகளில் படைப்பாளியின் நடையை அணுகமுடியும் என்று கூறப்படுகிறது. இவ்விரு வகைகளையும் மூன்று நிலைகளில் ஒப்பிட்டுக் காணலாம் என்ற கருத்து கூறப்படுகிறது.

1. ஒலிக்கட்டமைப்பு

2. சொல்லாட்சி

3. தொடரமைப்பு[14]

இம்மூன்று நிலைகளிலும் கவிஞர் விரும்பிப் பயன்படுத்தும் கூறுகள், கவிஞன் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் கூறுகள் முதலியவற்றை ஆராய்கையில் தனி ஒரு கவிஞனின் நடையைக் காண முடியும் எனலாம். மேற்கூறப்பட்ட மூன்று நிலைகளின் அடிப்படையிலேயே கபிலரின் பாடல்கள் ஆராயப்படுகின்றன.

5.4. ஒப்பீட்டாய்வில் நடையியற் கூறுகள் :-

நடையியற் கூறுகள் ஒப்பீட்டு அடிப்படையிலேயே விளக்கப்பட வேண்டும். ஒரு தனிப்பட்ட படைப்பாளிக்கே உரிய நடைக்கூறுகள் ஒப்பீட்டு நடையியல் மூலமே அறிய முடியும். அதாவது, ஒரு குறிப்பிட்ட கூறு ஒரு குறிப்பிட்ட ஆசிரியருடையதாக ஏற்கப்பட வேண்டுமானால், அக்கூறு பிறரிடம் காணப்படவில்லை என்பது விளக்கப்பட வேண்டும். இதற்குக் காலமொழி நடையையும், சமகாலத்துப் படைப்பாளிகளின் மொழி நடையையும் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். இத்தகைய நிலைகளில் பல படைப்புகளை ஒப்பிட்டு, அதன் விளைவாகக் கிட்டும் பொதுமைக் கூறுகளைக் கழித்து எஞ்சியவற்றையே ஒருவரின் தனிக்கூறுகளாகக் கொள்ள வேண்டும் என்பது உணரத்தக்கது.

இத்தகைய ஒப்பீட்டாய்வு காலத்தோடு காலம் என்று மட்டுமல்லாமல் வேறு பல்வகைகளிலும் நடைபெற முடியும் என்று கூறப்படுகிறது. பழைய இலக்கியத்தோடு

தற்கால இலக்கியத்தை ஒப்பிடுதல், கவிதையோடு உரைநடையை ஒப்பிடுதல், படைப்பிலக்கியத்தோடு பிறவற்றை ஒப்பிடுதல், ஓர் ஆசிரியரோடு மற்றொரு ஆசிரியரை ஒப்பிடுதல், ஓர் இலக்கிய வகையோடு மற்றொரு இலக்கிய வகையை ஒப்பிடுதல் என்ற வகைகளில் ஒப்பீடு நிகழ்த்தப்படலாம் என்று கருத்து கூறப்படுகிறது. இங்குக் கபிலர் பெயரில் இடம்பெறும் படைப்புகளே ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

5.4.1. புள்ளி நடையியல்:-

நடையியல் ஆய்வில் புள்ளி நடையியல் முறையே இன்றியமையாதது ஆகும். ஒரே ஆசிரியர் பல படைப்புகளை ஆக்கியிருப்பாரானால் காலவரிசைப்படி அவற்றை நிரல்படுத்துவதும் புள்ளிநடையியல் மூலம் இயலும். ஆசிரியர் என்ற கோணத்தில் மட்டும் நிகழ்த்தப்படும் ஆய்வு புள்ளியியல் அணுகுமுறை கொண்டதாகும். இது 'புள்ளி நடையியல்' என்று வழங்கப்படுகின்றது.[15] ஓர் ஆசிரியரை இனங்கண்டு கொள்வதற்கு இதனையே சிறந்த உத்தியாக மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, ஒவ்வோர் ஆசிரியரின் மொழிப்பயன்பாட்டிலும் சில மடக்குக் கூறுகள் உண்டு. குறிப்பிட்ட சொற்கள், தொடர் அமைப்புகள், ஒலிக்கோலங்கள் ஆகியவற்றை ஒவ்வோர் ஆசிரியரும் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக் கொண்டிருப்பது இலக்கியங்கள்வழி காணக்கிடக்கின்றன. அதேபோன்று விருப்பக்கூறுகளாக சில திரும்ப திரும்ப வரும். இவ்விரு வகைக்கூறுகளும் ஆசிரியரை இனங்காட்டி விடக் கூடியவை என்ற கருத்தும் அறியப்படுகிறது.

ஓர் ஆசிரியரின் பெயரில் பல்வேறுபட்ட படைப்புக்கள் காணப்படுவது பல மொழிகளிலும் காணப்படுகின்ற நிலையாகும். தமிழ் இலக்கிய உலகில் ஒன்றிற்கு மேற்பட்ட ஔவையார்களும், கபிலர்களும், நக்கீரர்களும், பரணர்களும் காணப்படுகின்றனர். அவர்கள் வேறுபட்டவர்கள் என்பதனை விளக்கிக்காட்ட வல்லதும் புள்ளி-நடையியலேயாகும். இப்புள்ளி நடையியலில் ஒலி, சொல், தொடர் என்ற அமைப்புகள் கபிலர் பாடல்களில் எங்ஙனம் பயின்று வந்துள்ளன என்பது இங்குக் கணக்கெடுக்கப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் கபிலரின் பாடல்கள் எட்டுத்தொகை ஏழிலும், பத்துப்பாட்டு ஒன்றிலும் காணப்படுகின்றன. இப்பாடல்கள் கபிலரால் பாடப்பட்டனவா என்பது குறித்துத் தெளிவான வரையறை இல்லாததால், அவ்வரையறையின் பொருட்டு அவருடைய பாடல்களை ஒப்பீட்டு அடிப்படையில் புள்ளி நடையியல் மூலம் அணுகப்படுகின்றன.

இங்குக் கபிலர் பாடியது அல்ல என்று கருதப்படுகின்ற கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு என்ற மூன்று தொகைநூற் பாடல்கள் கபிலர் பாடிய பிற அக, புறப் பாடல்களோடு ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

5.4.1.1. ஒலிநிலைக் கூறுகள்:-

நடையியலில் ஒலியின் பங்கினைக்காண்பதே இதன் நோக்கமாகும். நடையியல் கூறுகளில் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது ஒலிநிலையாகும். இது ஒலிநடையியல், ஒலிக்கோலம், ஒலிநிலை, ஒலிக்கட்டமைப்பு எனப்பல்வேறு பெயர்களில் மொழியியல்

ஆசிரியர்களால் குறிக்கப்படுகிறது. நடையியல் கூறுகளுள் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது ஒலிநிலையாகும். இப்பெயரிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கவிதை இலக்கியத்தைச் சுவைப்பதற்கு அதன் ஒலியமைப்புகள் பெரிதும் துணை புரிகின்றன. ஓர் ஆசிரியரின் படைப்பில் காணப்பெறும் பல்வேறு ஒலிநயங்களையும், தொகுத்துக் காணும்போதுதான் அந்த ஆசிரியருக்கேயுரிய இயல்பான சொற்களை அறிய முடியும் என்பது மொழியலாரின் கருத்து ஆகும். இவ்வடிப்படையில் கபிலரின் பாடல்கள் அணுகப்படுகின்றன.

ஒலிநிலையில் பல்வேறு உத்திகள் மொழியியலாளரால் பின்பற்றப்படுகின்றன. அவை,

1. மோனை
2. எதுகை
3. இயைபு
4. வண்ணம்
5. அளபெடை
6. ஒலிக்குறிப்புச் சொற்கள்
7. உச்சரிப்புப் பிழைகள்
8. அசைகள் அமைப்புமுறை
9. ஓசை நயம்
10. இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர்

என்பனவாகும்.[16] வ. ஜெயா தனது நூலில் ஆறுவகையாக ஒலிநிலையைப் பிரித்துக் காட்டுகிறார்.

1. எதுகை, மோனை
2. வண்ணம்
3. இயைபு
4. ஒலிக்குறிப்புச் சொற்கள்
5. ஒலிக்கோலமும் நகைச்சுவையும்
6. வட்டார வழக்குகள்

என்பனவாகும்.[17] கவிதை இலக்கியத்தைச் சுவைப்பதற்கு அதன் ஒலியமைப்புகளும் துணைபுரிவனவாக அமைகின்றன. ஒரு ஆசிரியரின் படைப்பில் காணப்பெறும் பல்வேறு ஒலிநயங்களையும் தொகுத்துப் பார்க்கும்போதுதான் அந்த ஆசிரியருக்கேயுரிய தனிப்பான சொல்லாற்றலை அறியமுடியும். இந்த அடிப்படையில் கபிலரின் பாடல்களில் கையாளப்பட்டுள்ள ஒலிநயங்கள் புள்ளி நடையியல் மூலம் ஆராயப்படுகின்றன.

ஒலிநிலையில் பல்வேறு உத்திகள் கூறப்பட்டாலும் இங்குப் பின்வரும் ஒலிநிலைக் கூறுகள் மட்டும் ஆராயப்படுகின்றன.

1. மோனை

2. எதுகை

3. இயைபு

4. அளபெடை

5.4.1.1.1. மோனை :-

'மோனை, எதுகை முரண், இயைபு என நால்கு வகை மரபின' என்று தொகைக்கு இலக்கணம் கூறுவர் தொல்காப்பியர். எனவே, தொடையின் பாகுபாடாக மோனைக் குறிக்கப்படுவது அறியலாம். மோனைக்கு இலக்கணம் கூறுகையில்,

'அடிதோறுந் தலையெழுத் தொப்பது மோனை'[18] என்று தொல்காப்பிய நூற்பா (நூ.எண்.84) உணர்த்துவது அறியத்தக்கது. அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை என்று குறிக்கப்படுகிறது.

மோனை என்ற அமைப்பு ஒலிநிலையில் முக்கியமையாத இடத்தைப் பெறுகிறது எனலாம். இலக்கியங்கள் வாய்மொழியாகவே வழங்கிய பண்டைய நாட்களில் அவற்றை அப்படியே மனப்பாடம் செய்து மனதில் பதிய வைத்துக் கொள்ள நினைவாற்றலுக்கு மிகுந்த தேவை இருந்தது. இந்நினைவாற்றலை எளிதாக வளர்த்துக் கொள்வதற்குச் சில உத்திகள் தேவைப்பட்டன. சில ஒலிகளோ, தொடர்களோ திரும்பத்திரும்பப் பயின்று வருமானால் முழுப்பாடலையும் சற்று எளிதாக நினைவிற் கொள்ள முடியும். நாட்டுப்புற இலக்கியம் எனப்படும் வாய்மொழி இலக்கியங்கள் அனைத்திலும் இதே முறையில் பல தொடர்கள் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப் படுவதனைக் காணமுடியும். மேலும், இலக்கியம் எழுத்து வடிவில் சுவடிகளில் எழுதப்பட தொடங்கியபோதும் இவ்வுத்தி தேவைப்பட்டது என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே பாவினங்களில் எந்த முறையில் மோனைகள் அமைய வேண்டும் என்றெல்லாம் மரபுகள் வளர்த்துக் கொள்ளப்பட்டன. அடுத்து, சீர்களில் மோனை அமைகின்றதை முற்று, கதுவாய், பொழிப்பு முதலானவைகளாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்கள் முழுமையாகப் பயின்றுவரும் நிலை குறைந்து, சில ஒலிகள் மட்டுமே பயின்று வரலாயின. இக்கட்டத்திலேயே மோனை என்ற உத்தி தலைதூக்கியது எனலாம். இவ்வுத்தியினை ஒரு படைப்பாளி எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதனைக் காண்பதன் மூலம் அவரைப் பிறரிடமிருந்து பிரித்தறிய முடியும் என்பது குறிக்கத்தக்கது.

...210/-

இக்குக் கபிலரின் பாடல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அப்பாடல்களில் எந்த அளவிற்கு மோனை கையாளப்பட்டுள்ளது என்பது கணக்கெடுக்கப்படுகிறது.

கபிலர் பாடிய பாடல்கள் வரிசையில் அகநானூறு (18), ஐங்குறுநூறு (100), கலித்தொகை (29), குறுந்தொகை (28), நற்றிணை (20), புறநானூறு (2[illegible]), பதிற்றுப்பத்து (10), குறிஞ்சிப்பாட்டு முதலானவை இடம்பெறுகின்றன. இப்பாடல்களில் மோனை எங்ஙனம் கையாளப்பட்டுள்ளது என்பது ஆராயப்படுகிறது. ஐந்து நூல்கபிலரின் 6 பாடல்களும் இவ்வியலில் ஆய்வுக்குட்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவை பின்வருமாறு:

வரிசை எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்கள் எண்ணிக்கை	மோனை இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை	மோனைகளின் மொத்த எண்ணிக்கை
1.	அகநானூறு	18	8	[illegible]
2.	ஐங்குறுநூறு	100	8	6
3.	கலித்தொகை	29	16	27
4.	குறுந்தொகை	28	4	1
5.	நற்றிணை	20	4	4
6.	பதிற்றுப்பத்து	10	4	[illegible]
7.	புறநானூறு	26	9	1[illegible]
8.	குறிஞ்சிப்பாட்டு	தனிப்பாடல் (261) அடி	9	7

இவ்வாறாகக் கபிலர் பாடிய பாடல்களில் மோனை என்ற ஒலி அமைப்பு குறைந்த அளவே அமைந்துள்ளது என்பது அறியப்பட்டது. கபிலர் பாடிய பாடல்களில் ஒரு சில பாடல்களுக்கு மட்டுமே மோனை அமைந்துள்ளமை பெறப்படுகிறது. (பின்னிணைப்பு M பார்க்க)

இவற்றில் வேறுபட்ட தன்மையில் அமைப்பது கலித்தொகைப் பாடல்களாகும். இப்பாடல்களிலே அதிகமான மோனை அமைப்புகள் இடம்பெறவில்லை. மேலும், ஒவ்வொரு பாடலிலும் தொடர்ந்த ஐந்து அல்லது ஆறு அடிகளில் மோனைகள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய அமைப்புமுறை மற்றப் பாடல்களில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐங்குறுநூற்றில் மோனை எட்டு இடங்களில் மட்டும் கையாளப்பட்டிருப்பதால் அது மற்ற இலக்கியங்களில் இருந்து வேறுபடுகிறது எனலாம். ஏனெனில், அதிகம் உள்ள பாடல்கள் ஐங்குறுநூறு ஆகும். மேற்குறிப்பிட்டதில் இருந்து மோனை என்ற அமைப்பு கபிலரின் கலித்தொகை, ஐங்குறுநூறு பாடல்கள் மட்டும் தனித்து இடம்பெறுகிறது எனலாம்.

4.4.1.1.2. <u>எதுகை</u> :-

எதுகையும் தொடை வகை நான்கனுள் ஒன்று என்பது அறியத்தக்கது. தொல்காப்பியர் தம் இலக்கணம் கூறுகையில்,

'அஃதொழித்து ஒன்றின் எதுகை ஆகும்'[19] (தொ.செய்.89)

என்பார். அதாவது அடிதொறும் முதலெழுத்து ஒன்றாமல் இரண்டாம் எழுத்து ஒன்றின் அது எதுகையாம் என்பது கூறப்படுகிறது. எதுகை என்ற அமைப்பும் ஒலிநிலையில் இன்றியமையாத இடத்தினைப் பெறுகிறது. இவ்வமைப்பும் நினைவாற்றலை எளிதாக்கவல்லதாகும். எனவே, எதுகையும் மோனை என்ற அமைப்புடன் சேர்ந்த ஒன்று என்பது கொள்ளத்தக்கது.

இங்குக் கபிலர் எதுகை என்ற அமைப்பினை எவ்வாறு கையாண்டுள்ளார் என்பது கணக்கெடுக்கப்படுகிறது. அவை பற்றிய விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை	எதுகை உள்ள பாடல்களின் எண்ணிக்கை	எதுகைகளின் மொத்த எண்ணிக்கை
1.	அகநானூறு	18	18	44
2.	ஐங்குறுநூறு	100	65	79
3.	கலித்தொகை	29	29	160
4.	குறுந்தொகை	28	18	50
5.	நற்றிணை	20	19	30
6.	பதிற்றுப்பத்து	10	9	17
7.	புறநானூறு	.28	19	31
8.	குறிஞ்சிப்பாட்டு	தனிப்பாடல் (262) அடி	35	35

கபிலரின் பாடல்களில் எதுகை என்ற ஒலி அமைப்பு அமைந்துள்ள நிலையினை நோக்கும்போது, பெரும்பான்மை அனைத்துப் பாடல்களுக்கும் எதுகை கையாளப்பட்டிருப்பது அறியப்படுகிறது. இதில் வேறுபட்ட தன்மையில் இருப்பது கலித்தொகைப் பாடல்களாகும்.

கலித்தொகைப் பாடல்களில் எதுகை என்ற அமைப்பு ஒரே பாடலில் தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு அடிகளில் இடம்பெற்றுள்ளன என்பது அறியப்படுகிறது. இவ்வமைப்பு முறை மற்றப் பாடல்களில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே,

எதுகையைக் கைகொண்டிருப்பதில் கபிலரின் கலித்தொகைப் பாடல்கள் வேறுபட்டிருப்பது வெளிப்படுகிறது. (பின்னிணைப்பு XI பார்க்க)

5.4.1.1.3. இயைபு:-

ஒலிநிலையில், இயைபு மற்றொரு திட்டப்பாங்காகும். தொல்காப்பியர் இயைபுக்கு விளக்கம் தருகையில்,

'இறுவாய் ஒப்பினஃது இயைபென மொழிப'[20] (தொ.செ.92)

என்று கூறுகிறார். அடிதோறும் இறுதி எழுத்து ஒன்றின் அதனை இயைபு என்று குறிப்பர்.

பெரும்பாலான பிறமொழி இலக்கியங்களைக்காண்கையில் தமிழ் இலக்கியம் இதில் மாறுபட்டு நிற்கிறது. ஆங்கிலம் முதலான மொழிகளில் இறுதி இயைபு காணப்படுகிறது. தமிழில் பழைய இலக்கியங்களில் அடிமுதல் இயைபு சில பாடல்களில் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் அப்படிப்பட்ட சில இயைபுகள் மரபாகவே ஆளப்படுகின்றன. இம்முறையினை எதுகை, மோனையோடு ஒப்பிட்டுக் கூறலாம். முதல் அடியில் வரும் முதல் சீரும், இரண்டாம் அடியில் வரும் முதல் சீரும் இயைபாக ஒரே மாதிரி அமைவதே இங்குக் கூறத்தக்கது. சங்க இலக்கியத்தில் இத்தகைய இயைபுகள் மரபாகவே பின்பற்றப்பட்டுள்ளன.

இதேபோன்று சங்க இலக்கியத்தில் மிகுதியாக காணப்படும் மற்றோர் உத்தி பாடலை முடிக்கும்போது 'ஏகார' ஒலி கொண்டு முடிப்பதாகும். பழங்காலத்தில்

அதிகமான பிரதிகள் எடுக்க முடியாத நிலை இருந்தபோது, இலக்கியங்கள் வாய்மொழியாகவே தலைமுறை தலைமுறையாகப் போற்றப்பட்டு வந்தன என்று கருதப்படுகிறது. மேலும், பாடல் ஒன்றினை ஒருவர் வாய்மொழியாகச் சொல்லி வரும்போது பாடல் எந்த இடத்தில் முடிவடைகிறது என்பதனைத் தெரிவிக்கும் ஒரு குறியீடாகவும் ஏகாரம் பயன்படுத்தப்பட்டது என்றும் கருதப்படுகிறது. பாடலின் ஈற்று முச்சீரடியில் வரும் ஏகாரமே ஈ என உணர்ந்து கொள்ளப்பட்டது. முதலில் ஒரு தேவை காரணமாக பின்பற்றப்பட்ட இவ்வுத்தி சங்க இலக்கிய நடைக்கூறாக மாறிப்பின், யாப்பியல் விதியாக உருவெடுத்தது என்று அறியப்படுகிறது.[21]

மேற்கூறியவற்றிலிருந்து, ஒரு பாடலில் அடிமுதல் இயைபு, அடி இறுதி இயைபு என்ற இருநிலைகள் உள்ளன என்பது தெரிகிறது. இவற்றில் அடிமுதல் இயைபு என்பது எதுகை, மோனை ஆகிய இரண்டுடன் தொடர்புடையது என்பதால், இங்குப் பாடலின் அடி இறுதி இயைபு மட்டும் கபிலர் பாடல்களில் ஆராயப்படுகிறது.

வரிசை எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை	இயைபு		
			ஏகாரம்	ஓகாரம்	இயல்பான சொற்கள்
1.	அகநானூறு	18	18	-	-
2.	ஐங்குறுநூறு	100	79	11	10
3.	கலித்தொகை	29	16	-	13
4.	குறுந்தொகை	28	28	-	-
5.	நற்றிணை	20	20	-	-
6.	பதிற்றுப்பத்து	10	10	-	-
7.	புறநானூறு	28	28	-	-
8.	குறிஞ்சிப்பாட்டு	தனிப்பாடல் – (261) அடி	1	-	-

பொதுவாக, சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் 'குன்றே', 'நாடே', 'சென்றே' என 'ஏகார' இறுதி கொண்டு முடிவதை குறிப்பிடத்தக்கது. இம்முறை கபிலர் பாடல்களுக்குப் பொருந்தி வந்தாலும், அவர் பாடியதாகக் குறிக்கப்படும் கலித்தொகை, ஐங்குறுநூற்றுப் பாடல்கள் இத்தகைய அமைப்பு முறையில் இருந்து வேறுபடுகின்றன எனலாம். கலித்தொகையில் பத்து பாடல்களுக்கு இத்தகைய ஒலி அமைப்பு முறை கையாளப்படவில்லை என்பது பெறப்படுகிறது. இதேபோல் ஐங்குறுநூற்றுப்பாடல்களில் 'ஏகார', 'ஓகார' என்னும் இரு ஓசை அமைப்பு முறை இடம்பெறுகின்றன. மேலும், ஐங்குறுநூற்றில் பத்து பாடல்களுக்கு எத்தகைய ஒலி அமைப்பும் கையாளப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

எனவே, அமைப்பு என்ற ஒலிநிலையில் கலித்தொகையும், ஐங்குறுநூறும் வேறுபட்டு இருப்பதை அறிய முடிகிறது. (பின்னிணைப்பு XII பார்க்க).

.4.1.1.4. அளபெடை:-

சங்க இலக்கியத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் ஒன்று அளபெடையாகும். சில உயிர் எழுத்துகள் தொடர்ந்து பயன்படுத்தப்படும்போதே அளபெடைகள் தோன்றுகின்றன.

யாப்பியல் அடிப்படையிலும் அளபெடை பயன்படுத்தப்படுகிறது. ஏதாவதோர் இடத்தில் தளை தட்டுமானால் அங்கு அளபெடை பயன்படுத்தப்பட்டுச் சீர் செய்யப்படுகிறது. யாப்பில் அளபெடை, இரண்டு வகையாகக் கூறப்படுகிறது. அவை உயிரளபெடை, ஒற்றளபெடை என்ற இரண்டுமாகும்.[22] செய்யுளில் அதிகம் பயன்படுத்தப்படும் வகை உயிரளபெடையாகும். ஒற்றளபெடை பெரும்பாலும் செய்யுள்களில் இடம்பெறுவது கிடையாது. ஒரு சொல்லினை அழுத்தம் கொடுத்து கூறுவதற்கு இத்தகைய ஒற்றளபெடைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன எனலாம்.

அளபெடை பற்றி விளக்கம் தருகையில், 'அதிகமான உயிர் ஒலிகள் பயன்படுத்தப்படுவதனால் பாடலின் இசைமைத் தன்மையின் அளவு கூடுகிறது. இவ்வதிக அளவு இசைமையே அகவல் ஓசையைத் தந்திருக்கக்கூடும். எனவே, கவிஞர்கள் அகவல் ஓசையைப் பெறுவதற்கு இசைமை அதிகம் உடைய அளபெடைகளைப் பயன்படுத்தினர் என ஊகிக்கலாம்'[23] என்று குறிப்பிடுகிறது.

இத்தகைய அளபெடைச் சொற்களைக் கபிலர் தம் பாடல்களில் எங்ஙனம் பயன்படுத்தியுள்ளார் என்பது ஆராயப்படுகிறது.

வரிசை எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை	அளபெடை இடம்பெற்ற பாடல்கள் எண்ணிக்கை	அளபெடை இடம்பெற்ற மொத்த எண்ணிக்கை
1.	அகநானூறு	18	10	21
2.	ஐங்குறுநூறு	100	10	10
3.	கலித்தொகை	29	7	12
4.	குறுந்தொகை	28	6	7
5.	நற்றிணை	20	4	4
6.	பதிற்றுப்பத்து	10	4	4
7.	புறநானூறு	28	12	18
8.	குறிஞ்சிப்பாட்டு	தனிப்பாடல் (261) அடி	26	26

கபிலர் பயன்படுத்திய அளபெடை அமைப்பு முறையில் குறிப்பிடத்தக்க முறையில் எத்தகைய வேறுபாடும் இல்லாவிட்டாலும் அகநானூறு புறநானூறு பாடல்களும், குறிஞ்சிப்பாட்டும் மற்றப் பாடல்களில் இருந்து வேறுபட்டுள்ளன என்று குறிக்கலாம். இப்பாடல்களில் அதிகமான அளபெடைகளைக் கையாண்டுள்ளார். ஆனால், குறுந்தொகை நற்றிணை, கலித்தொகை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு முதலானவற்றில் மிகக் குறைந்த அளவிலான அளபெடைகளே இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அனைத்துச் சொற்களும் உயிரளபெடையிலே இடம்பெறுகின்றன என்பதும் அறியத்தக்கது. (பின்னிணைப்பு XII பார்க்க).

ஒலிநிலையில் மேலே ஆராயப்பட்ட மோனை, எதுகை, இயைபு, அளபெடை கூறுகள் மட்டுமின்றி வேறுசில ஒலிநிலைக் கூறுகளும் உள்ளன. அவை உரைநடை இலக்கிய வகையினை ஒப்பிட்டு அறிதற்கும் அதுபற்றிய விளக்கம் பெறுவதற்கும் துணைபுரிவன என்பதால் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.

நடையியல் கூறுகளில் ஒன்றான ஒலிநிலையில் கபிலரின் பாடல்கள் ஆராயப்பட்டதில் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு.

1. மோனை, எதுகை என்ற இரு அமைப்புகளும் கபிலர் பாடல்களில் இடம்பெற்றிருந்தாலும் கலித்தொகை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் மட்டும் வேறுபட்டிருப்பது அறியப்படுகிறது. ஐங்குறுநூற்றுப் பாடல்களில் மோனை குறைந்த எண்ணிக்கையில் இடம்பெற்றிருப்பதால் மற்ற பாடல்களில் இருந்து ஐங்குறுநூறு வேறுபடுகிறது.

...218/-

கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் மோனை குறைந்த அளவிலும், எதுகை அதிக அளவிலும் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், கலித்தொகையில் எதுகை, மோனை என்ற இரண்டிலும் சம அளவில் கையாளப்பட்டிருப்பது வெளிப்படுகிறது. இதனால் கலித்தொகையும் வேறுபட்டிருப்பதை பெறமுடிகிறது.

2. இயைபு என்ற ஒலி அமைப்பு முறையில் கலித்தொகை, ஐங்குறுநூறு பாடல்கள் மற்ற கபிலரின் பாடல்களில் இருந்து வேறுபடுகின்றன.

3. அளபெடை என்ற ஒலி அமைப்பு முறை கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் இடம்பெற்றிருந்தாலும் அகநானூறும், குறிஞ்சிப்பாட்டும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன.

5.4.1.2. சொல்நிலைக் கூறுகள் :-

ஒரு படைப்பின் சிறப்புக்கு அதனுள் பயன்படுத்தப்படும் சொற்களும் இன்றியமையாத காரணங்களாகின்றன. சொற்களின் தேர்வு, பயன்படுத்தும் முறை, புதிய சொற்களை ஆக்கும் திறமை, சொற்கள் புதிய பொருள்களை ஏற்கும் நிலை ஆகியவை இன்றியமையாத நடையியல் உத்திகளாகும்.[24] குறிப்பிட்ட இடத்தில் எச்சொல் அமைய வேண்டுமோ அச்சொல் அமைவதாலேயே படைப்பாளி தன் படைப்பு உத்தியையும், தன்மையையும் முழுமையாக வெளிப்படுத்த முடியும் எனலாம்.

சொற்களின் தேர்வு பல நிலைகளில் நடைபெறுகிறது. என்பது ஐந்து நிலைகளில் வேறுபடுத்தப்படுகிறது. அவை,

1. இலக்கிய வகைக்கு ஏற்ற சொற்கள்

...219/-

2. காலத்திற்கு ஏற்ற சொற்கள்

3. பாத்திரங்களுக்கு ஏற்ற சொற்கள்

என்பனவாகும்.[25] மேலும், மொழியில் காணப்படும் சொற்களைப் பல்வேறு வகைகளாக வகைப்படுத்துகின்றனர். அவை,

1. சொற்கள் சுட்டும் பொருள்

2. சொற்களின் அமைப்பு

3. சொற்கள் வாக்கியங்களில் வரும் பண்பு

என்பனவாகும்.[26] முன்னதைப் பொருள் அடிப்படை என்றும், பின்வரும் இரண்டை அமைப்பு அடிப்படை என்றும் இரு பிரிவுகளில் பிரிக்கின்றனர். இதில் அமைப்பு அடிப்படையினைச் சொல்லியல் அடிப்படை என்றும், தொடரியல் அடிப்படை என்றும், இருநிலையாகக் கூறப்படுகிறது. இங்குச் சொல்லியல் அடிப்படையில், சொற்களைப் பற்றிய தேர்வு என்ற நிலையில் ஆராயப்படுகிறது. சொற்களின் தேர்வு பல நேரங்களில் ஆசிரியரை இனங்கண்டு கொள்ளப்பயன்படுகிறது எனலாம். மேலும், சொற்களைப் பயன்படுத்தும் முறையிலும் படைப்பாளியின் நடை வேறுபடலாம். அன்றி, இருக்கின்ற சொற்களைக் கொண்டு புதிய சொற்களைப் பயன்படுத்துகின்ற முறையிலும் பல ஆசிரியர்கள் வேறுபடலாம் என்பதும் கூறப்படுகிறது. இந்நிலையில் கபிலர் பயன்படுத்திய சொற்களின் தேர்வுக்குக் கணக்கெடுக்கப்படுகின்றன.

சொல்நிலையில் கையாளப்படும் சொற்களைத் தனியே பிரித்தறியப்படுவதற்கு மேலும் சில வகைகள் கூறப்படுகின்றன. அவை,

1. இடக்கரடக்கல், குழூஉக்குறி சொற்களைக் கையாளுதல்

2. மங்கலச் சொற்களைக் கையாளுதல்

3. பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள் தரும் சொற்களைக் கையாளுதல்

4. பட்டப் பெயர்களைக் கூறுதல்

5. சொற்களுக்குத் தக்க அடைகளைப் பயன்படுத்தல்

என்பனவாகும்.[27] இஃதன்றித் தமிழ் இலக்கண அறிஞர்கள் சொற்களைப் 1. பெயர், 2. வினை, 3. இடை, 4. உரி என்ற நான்கு வகைகளில் பிரித்துக் கூறுகின்றனர்.[28] மொழியியல் நிலையில் சொல்நிலையை வேறு சில வகைகளில் பிரித்துக் கூறுகின்றனர். அவை,

1. கால இடைநிலைகள் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)

2. கூற்றுநிலை உத்திகள் (தன்மை, முன்னிலை, படர்க்கை)

3. உள்ள உணர்வுக்கேற்ற சொற்கள்

4. சலிப்பு நீக்கும் ஒருபொருட் பன்மொழிகள்

என்பனவாகும்.[29] இவ்வாறாகச் சொல்நிலை வேறுபாடுகள் வகைப்படுத்திக் காட்டப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட வகைப்பாடுகளில் இடக்கரடக்கல், குழூஉக்குறிச் சொற்கள், மங்கலச் சொற்கள் போன்றவை உரைநடையில் இடம்பெறும் சொல் மாறுபாடுகளைக் கண்டறிவதற்குத் துணைபுரிவன என்பது குறிப்பிடத்தக்கது. பழஞ்சொல்லுக்குப் புதுப்பொருள் தரும் சொற்களைக் கையாளுதல் என்ற வகை பேச்சு வழக்குச் சொற்களைக் கண்டறிவதற்கு சான்றாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே,

சொற்களுக்குத் தக்க அடைகளைப் பயன்படுத்தல், இடப் பெயர்களைக் கூறல் போன்ற இருநிலைகளே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலில் சொற்களுக்குத் தக்க அடைகளைப் பயன்படுத்தல் என்ற நிலையில் கபிலரின் பாடல்கள் ஆராயப்படுகின்றன.

அடைகள் மரபாகப் பயன்படுத்தப்பட்டாலும், படைப்பாளி தனது படைப்பின் பொருளாக மேற்கொள்கின்ற கருத்திற்கு தக்கவாறு அவ்வடைகளைச் சிறப்பிக்கின்ற புதிய சொற்கள் வேறுபடுகின்றன. இவ்வேறுபாட்டைக் கணக்கிடுவதின்மூலம் வேறுபட்ட ஆசிரியர்களைப் பிரித்தறிய முடியும் எனலாம். இதுபோன்று ஒரு புலவரின் வாழ்க்கை அனுபவங்களுக்கேற்ப அவர் படைப்பின் கருத்துக்களும் வேறுபடும் அக்கருத்துக்களுக்கேற்பச் சொற்களும் வேறுபடும் என்பது உணரத்தக்கது. எனவே, படைப்பாளிகளின் வாழ்க்கை அனுபவங்கள், இம்முறையில் அவர்களது சொல்நிலை வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றன.

கபிலர் ஓர் இயற்கைக் கவிஞர் என்பதால் அவர் பாடல்களில் அதிகம் இயற்கை வருணனையே இடம்பெற்றிருக்கும் என்பது உணர்ந்துக் கொள்ளத்தக்கது. மேலும், குறிஞ்சி நிலத் தாவரங்களும், விலங்கு, பறவை போன்ற உயிரினங்களின் வாழ்க்கையும் அவரது பாடல்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. அதில் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் பல்வேறு பெயர்கள், அவை வாழும் இடங்களைக் குறிக்கும் சொற்கள், வாழ்க்கை முறையை விளக்க உதவும் சொற்கள், அவை ஒன்றோடொன்று போரிடும் காட்சியை விளக்கும் சொற்கள் ஆகியவை கபிலரது பாடல்களில் மிகுதியும் பயன்படுத்தப்படுகின்றன.. இச்சொற்களைக் கணக்கிடுவதின்மூலம்

கபிலரின் பாடல்கள் குறித்த சிக்கலுக்குத் தீர்வுகாண உதவும்.

கபிலர் பாடல்களில் பயன்படும் உயிரினச் சொற்கள் யானை, புலி, பன்றி, குரங்கு, மான், கிளி, மயில் போன்றவையாகும். இப்பெயர்களைக் கபிலர் தம் பாடல்களில் எத்தகைய சொல் அமைப்பில் பயன்படுத்தியுள்ளார் என்பது இங்கு ஆராயப்படுகிறது. இப்பெயர்கள் மட்டுமின்றி தலைவன், தலைவி, தோழி ஆகியவர்களைக் குறிக்க எத்தகைய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு ஆராயப்படுகிறது.

எனவே, 'கபிலர் விரும்பிக் கையாண்ட உயிரினச் சொற்கள்' என்ற அடிப்படையிலேயே இங்குச் சொற்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுக் கபிலரின் பாடல்களில் ஆராயப்படுகின்றன. அவை,

1. மனிதர் (தலைவன், தலைவி, தோழி)
2. விலங்கு (யானை, புலி, பன்றி, குரங்கு, மான்)
3. பறவை (மயில், கிளி) என்பனவாகும்.

5.4.1.2.1. <u>மனிதர்கள்</u>:-.

சங்க இலக்கியப் பாடல்களில் குறிக்கப்படும் மாந்தர்களாகத் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை இவ் ஆசிரியர் தம் படைப்புகளில் எத்தகைய சொல் அமைப்பில் கையாண்டுள்ளார் என்பதை ஆராய்கையில் தனி ஓர் ஆசிரியரின் தனிச்சொல் தேர்வினை அறிய

ளம்பிருக்கிறது எனலாம். அச்சொற்களைக் கணக்கெடுப்பதின் மூலம் அவரது பாடல்களைப் புரிந்துகொள்ள முடியும். இங்குக் கபிலரால் குறிக்கப்படும் பாத்திரங்கள் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவர் ஆவர். அவர்களைக் கபிலர் எத்தகைய சொற்கள் மூலம் அழைக்கின்றார் அல்லது எத்தகைய சொற்களைக் கையாண்டுள்ளார் என்பது கணக்கெடுக்கப்படுகிறது.

5.4.1.2.1.1. தலைவன்:-

கபிலர் பாடிய அனைத்து அகப்பாடல்களிலும் தலைவன் எவ்வாறு குறிக்கப்படுகின்றான் என்பது ஆராயப்படுகிறது: பொதுவாகத் தலைவன் தோழி, தலைவி ஆகிய மூவரால் விளிக்கப்படுவது சங்க இலக்கிய மரபாகும். அந்நிலை கபிலர் பாடல்களில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்ற அடிப்படையில் கபிலரின் பாடல் குறித்த ஆய்வுக்குத் தீர்வுகாண இயலும் வகையும்.

[illegible]:-

கபிலர் பாடிய 18 பாடல்களில் தலைவன் 13 பாடல்களில் குறிக்கப்பெறுகின்றான். இப்பாடல்களில் தலைவன் 'நாட', 'வெற்ப' என்ற இரண்டு பெயர்களால் அழைக்கப்படுகின்றான். தலைவி தலைவனை நான்கு பாடல்களில் 'நாட' என்றே அழைக்கிறாள். அப்பெயர்கள் வருமாறு:

விறல்தோன்று }
கான } நாட
மலைகெழு }
ஓங்க }

தோழி தலைவனை 'நாடன்', 'வெற்ப' என்ற இரண்டு பெயர்களில் அழைக்கிறாள். அப்பெயர்கள் வருமாறு

விலங்குமெய்த நல்வரை குன்ற பெருங்கல் குன்ற சிறுமலை பயமலை	நாடன்
ஓங்குகல் வான்றோய்	வெற்ப

இங்குத் தலைவன் தலைவியால் 'நாட', என்றும், தோழியால் 'நாடன்', 'வெற்ப' என்றும் அழைக்கப்படுகின்றான். தலைவனுக்குக் கொடுக்கப்படும் அடைச்சொற்கள் தலைவியால் ஒரு வகைச் சொற்களாகவும், தோழியால் ஒருவகைச் சொற்களாலும் குறிக்கப்படுவது மட்டும் அறியத்தக்கது.

ஐங்குறுநூறு :-

ஐங்குறுநூற்றில் 100 பாடல்களில் 55 பாடல்களில் தலைவன் குறிக்கப்படுகிறான். அவற்றில் 41 பாடல்களில் தோழியால் 'வெற்ப', 'நாடன்', 'ஐயன்', என்ற மூன்று பெயர்களால் குறிக்கப்படுகிறான். தலைவியால் 11 பாடல்களில் தலைவன் 'வெற்பன்', 'மார்பன்', 'நாடன்' என மூன்று பெயர்களில் அழைக்கப்படுகிறான். அதுபற்றிய விபரம் பின்வருமாறு:

எ. எண்	தொகை நூல்	மாந்தர்கள்	பாடல் எண்ணிக்கைகள்	தலைவன்			
				நாடன்	வெற்பன்	மார்பன்	கிழவன்
1.	ஐங்குறுநூறு	தலைவி	11	5	4	2	-
		தோழி	41	28	7	2	4

இப்பத் தலைவன் தலைவி, தோழி ஆகிய இருவராலும் 'வெற்பன்' என்ற பெயரால் அழைக்கப்படுவது அறியப்படுகிறது.

கலித்தொகை:-

கபிலரின் 29 குறிஞ்சிக்கலிப் பாடல்களில் 14 பாடல்களில் தலைவன் பெயர் காணப்படுகின்றன. இதில் அனைத்துப் பாடல்களிலும் தோழியால் மட்டுமே தலைவன் அழைக்கப்படும் சொற்கள் காணப்படுகின்றன. அவற்றில் 'நாடன்', 'வெற்பன்', 'கிழவன்', 'காவலன்' என்ற நான்கு பெயர்களால் அழைக்கப்படுகின்றான். மேலும், ஒரே பாடலில் 6 அல்லது 5 முறைகளில் வெவ்வேறு அமைச்சொற்களுடன் அவன் குறிக்கப்படுவதும் அறியத்தக்கது.

எ. எண்	தொகை நூல்	மாந்தர்	தலைவன்			
			நாடன்	வெற்பன்	கிழவன்	காவலன்
.	கலித்தொகை (29)	தோழி	12	6	2	1

இப்பாடல்களில் தலைவியால் தலைவன் குறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகை :-

கபிலரின் 28 பாடல்களில் 13 பாடல்களில் தலைவன் பெயர் குறிக்கப்படுகிறது. அவற்றில் தோழியால் 5 பாடல்களும், தலைவியால் 10 பாடல்களும் தலைவன் குறிக்கப்படுகின்றான். இங்குத் தலைவியால் 'நாடன்' என்ற ஒரு பெயரால் மட்டும், தோழியால் 'நாடன்', 'வெற்ப' என்ற இரு பெயர்களாலும் தலைவன் அழைக்கப்படுகின்றான்.

வோக்கல்
வான்தோய் | வெற்ப

நற்றிணை :-

கபிலரின் 20 பாடல்களில் தலைவன் பெயர் 9 பாடல்களில் குறிக்கப்படுகிறது. தலைவியால் 4 பாடல்களில் தலைவன் பெயர் கூறப்படுகிறது. 4 பாடல்களில் தலைவனை தோழி குறிப்பிடுகிறாள். 1 பாடலில் பரத்தையால் 'மால்வரை நாடன்' என்று அழைக்கப்பெறுகின்றான். தலைவியால் 'நாடன்' என்ற ஒரு பெயராலேயே அழைக்கப்படுகின்றான். தோழியால் 'கிழவன்', 'துறைவன்', 'நாடன்', 'வெற்ப' என்ற நான்கு பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

தலைவி:
நெடுமலை
பெருமலை | நாடன்
குன்ற
பெருமலை

தோழி:
வான்தோய் - வெற்பன்
நீர்த்
வரிக்குந் | துறைவன்
மலை - கிழவோன்

புறத்துறை: மாக்கரை - நாடன்

துறைப்பாட்டு:-

தோழி கூற்றில் அமைந்துள்ள இப்பாடல், தலைவனை 'ஓங்குகெழு நாடன்' என்று குறிக்கின்றது.

மேற்கருப்பொருத்திலிருந்த தலைவனைக் குறிக்கப்பயன்படுத்தும் சொற்களில் ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய இரண்டும் வேறுபடுகின்றன என்பது குறிக்கத்தக்கது.

கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் தலைவன் தோழி, தலைவி ஆகிய இருவராலும் அழைக்கப்படக்கலித்தொகையில் தோழியால் மட்டும் அழைக்கப்படுகிறான்.

குறிஞ்சிக் கலித்தொகையில் தலைவன் பெயர் 90 பாடலில் பயன்படுத்தப்படுகிறது. பல்வேறுபட்ட சொற்களில் அழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதுபோலவே 'கானகநாடன்' என்ற பெயரைக் கலித்தொகை மட்டும் குறிப்பிட்டுள்ளது.

கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் தலைவன் தலைவியால் 'நாடன்' என்ற பெயரால் மட்டும் அழைக்கப்படுகிறான். பிற இடங்களில் தலைவி மட்டும் தலைவனை 'மார்பன்', 'வெற்பன்' என்ற வேறு பெயர்களாலும் அழைக்கிறாள். இதனால் சிறிது வேறுபட்ட தன்மையில் அமைப்பு அறியத்தக்கது. எனவே, தலைவனைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள் என்ற நிலையில் ஐங்குறுநூறும், கலித்தொகையும் வேறுபட்டு அமைப்பது அறியப்படுகிறது. (பின்னிணைப்பு XV பார்க்க)

5.4.1.2.1.2. **தலைவி:-**

சங்கப்பாடல்கள் தலைவியைக் குறிக்கும்போது அவளது உடல் உறுப்புகளை வர்ணிக்கும் நிலையிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றில் (கூந்தல்) …, கை, கண், பல், தோள்; முதல் ஆகிய உறுப்புகளைக் குறிக்கும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அச்சொற்கள் ஒவ்வொன்றாக இங்கு ஆராயப்படுகின்றன.

கூந்தல்:-

கபிலரின் பாடல்களில் கூந்தல் என்ற சொல் ஐங்குறுநூறு, கலித்தொகைப் பாடல்களில் மட்டும் அதிகமாகக் கையாளப்பட்டுள்ளது. ஐங்குறுநூற்றில் கூந்தல் என்பதற்குக் கையாளப்பட்ட அடைச்சொற்கள் கலித்தொகைப் பாடல்களில் இடம்பெறவில்லை. அதுபோன்றே புறநானூற்றில் கூந்தலுக்குக் கூறப்படும் அடைச் சொற்கள் கலித்தொகை, ஐங்குறுநூற்றுப்பாடல்களில் கையாளப்படவில்லை.

ஆனால், கலித்தொகையில் கையாளப்பட்ட ஒலிமென் கூந்தல் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ளதும், புறநானூற்றில் கூறப்படும் பின்னிருங்கூந்தல் குறிஞ்சிப்பாட்டில் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. எனினும், கூந்தலுக்குத் தொடுக்கப்படும் அடைச்சொற்களில் கலித்தொகையும் ஐங்குறுநூறும் வேறுபட்டுள்ளமையும், கபிலரின் பிற அகநானூறு, நற்றிணைப் பாடல்களில் கூந்தல் என்ற பெயரினைக் குறிப்பிடாததும் ஈண்டு நோக்கத்தக்கது.

கண்:- கபிலர் பதிற்றுப்பத்துப் பாடல்கள் தவிர்த்து மற்ற அனைத்துப் பாடல்களிலும் 'கண்' என்ற பெயரினைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அப்பெயருக்கு இடப்படும்

அடைச்சொற்களைக் காணும் ஒவ்வொரு தொகையிலும் இவை வேறுபட்டு அமைவது தெரியவருகிறது. கலித்தொகையில் 'கண்'ணுக்குக் கொடுக்கப்படும் அடைச்சொற்கள் 4 அல்லது 5 சீர்களில் இடம்பெறுகின்றன. ஐங்குறுநூற்றில் 2 அல்லது 3 அடைச்-சொற்கள் இடம்பெறுவது அறியப்படுகிறது.

ஆனால், அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய பாடல்களில் முறையே ஓரிரு பாடல்களில் 'கண்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இச்சொல்லுக்குக் கொடுக்கப்படும் அடைச்சொற்கள் 'உள்', 'மழை', 'தூவா' என்ற ஒரு சீரினைக் கொண்டே இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சிப்பாட்டில் 'மதர்மழைக்கண்' என்று இரண்டு இடங்களில் மட்டும் குறிக்கப்படுகிறது. எனவே, 'கண்' என்ற பெயர்ச்சொல்லிற்கு வரப்படும் அடைச்-சொற்களில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நூல்கள் தனித்து நிற்பதை அறியமுடிகிறது.

<u>தோள் :-</u>

அகநானூற்றில் இரண்டு பாடல்களில் 'தோள்' என்ற பெயர்ச் சொல்லிற்கு,

வேய்புரை பணைத் }
தடமென் } தோள்

என்ற அடைச்சொல் கொடுக்கப்படுகின்றன. இங்கு ஈரசைச்சீர் கையாளப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஐங்குறுநூற்றில் மூவசைச் சீர்களை இடம்பெற்றிருப்பது அறியப்படுகிறது.

மென்		
பணைத்		தோள்
மென்		

கலித்தொகையில் 2,3 சீர்கள் இடைபெற்று, 'தோள்' என்ற பெயர் குறிக்கப்படுவது அறியப்படுகிறது.

பணைத்		
பணைத்தடமென்		தோள்
தடமென்		

குறுந்தொகை, நற்றிணை, குறிஞ்சிப்பாட்டு ஆகியவற்றில் ஒரேமுறையே இடம்பெற்றுள்ளது.

கை:- 'கை' என்ற பெயர் அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை ஆகிய மூன்றிலும் 'தடக்கை' என்ற அடைச்சொல்லுடனே குறிக்கப்படுகிறது

பல்:- 'பல்' என்ற பெயர் கலித்தொகைப் பாடல்களில் மட்டும் இரண்டு இடங்களில் குறிக்கப்படுவது அறியத்தக்கது. கபிலரின் பிற பாடல்களில் இப்பெயர் கையாளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. வேறு மாற்றங்கள் எதும் அறிதற்கு இல்லை.

நுதல்:- 'நுதல்' என்ற பெயர் கபிலரின் ஐங்குறுநூறு பாடல்களில் 7 இடங்களில் கையாளப்பட்டுள்ளது. அவை 'நன்னுதல்', 'திருநுதல்', 'ஒண்ணுதல்', என்ற வேறு வேறு பெயர்களில் குறிக்கப்படுகின்றன.

கலித்தொகையில் 4 பாடல்களில் 'நுதல்' என்ற பெயர் கையாளப்படுகிறது.

அவை,

நறு
புகழ் | நுதல்

என்ற இரு அடைச்சொற்களுடனே குறிக்கப்படுவ. அறியத்தக்கது.

குறிஞ்சிப்பாட்டில் 4 இடங்களில் 'நுதல்' என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

அவை,

ஒள்
வரி
சுடர் | நுதல்
நறு

எனும் வேறு அடைச்சொற்களுடன் குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (அட்டவணை பார்க்க)

மேற்கூறியதில் இருந்து 'நுதல்' என்ற பெயரினை கபிலரின் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய பாடல்களைத் தவிர வேறு பாடல்களில் எங்கும் குறிக்கப்படவில்லை.

மேலும், குறிஞ்சிப்பாட்டில் நுதலுக்குக் கையாளப்படும் அடைச்சொற்கள் வேறுபட்டதாகவும், அதுபோன்று, கலித்தொகை, ஐங்குறுநூறு பாடல்களுக்குக் கையாளப்படும் அடைச்சொற்கள் வேறுபட்டதாகவும் இருப்பதால் மூன்றும் மற்ற அக, புறப்பாடல்கள் பாடிய கபிலரினும் வேறுபட்ட படைப்பாக இருக்கலாம் என்பது பெறப்படுகிறது.

5.4.1.2.2. விலங்குகள்:-

கபிலர் விரும்பிப் பயன்படுத்தும் சொற்களில் விலங்குகளும் குறிப்பிடத்தக்கன. இதில் யானை, புலி, குரங்கு, பன்றி, மான் ஆகிய விலங்குகள் குறிப்பிடத்தக்கன. இப்பெயர்களைக் கபிலர் தம் பாடல்களில் எங்ஙனம் குறிப்பிடுகிறார் என்பது இங்கே ஆராயப்படுகின்றன. (பின்னிணைப்பு XVII பார்க்க)

அகநானூறு:-

அகநானூற்றில் கபிலர் பாடிய 18 பாடல்களில் 9 பாடல்களில் யானையைக் குறிப்பிடுகிறார். அவற்றில் யானை என்ற பெயர் யானை, களிறு, வேழம் என்ற மூன்று வேறு பெயர்களில் குறிப்பிடுவது அறியத்தக்கது. 6 பாடல்களில் யானை பல அடைச்சொற்களுடன் இடம்பெறுகின்றது. அவை பின்வருமாறு:

மராஅ	யானை
பெருங்கை	
வருடம்	
மாநகர்	
வருடம்	
கெழ்கிளர்	

மற்ற மூன்று பாடல்களில்,

புகர்முக - வேழம்
வயக் - களிறு
களிறு -

என்று குறிக்கப்படுகின்றன. அகநானூற்றில் யானை என்ற பெயர் மூன்று வேறு

பெயர்களில் குறிக்கப்படுவதும், யானை என்ற பெயருக்குக்கொடுக்கப்படும்

அடைச்சொற்கள் அடைமொழிச் சொற்களாகவும் இருப்பது குறிக்கத்தக்கது.

ஐங்குறுநூறு:-

கபிலர் பாடிய 100 குறிஞ்சித்திணைப் பாடல்களில் 3 பாடல்களில் மட்டும் யானை என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அப்பெயர் வேழம், பிடி, களிறு என்ற மூன்று வேறு பெயர்களில் அழைக்கப்பெறுவதை குறிப்பிடத்தக்கது. அவை,

புகர்முக - வேழம்
தறுகண் - பிடி
- களிறு

என்ற சொற்கள் ஆகும். இப்பாடல்களில் யானை என்ற பொதுப் பெயர் குறிக்கப்படாதது அறியத்தக்கது..

கலித்தொகை:-

குறிஞ்சிக்கலிப் பாடல்கள் 29-இல் 10 பாடல்களில் யானை என்ற பெயர் குறிக்கப்படுகிறது. இப்பாடல்களில் 5 பாடல்கள் யானை என்ற பெயருடன் அடைச்சொல் கொடுத்துக் குறிக்கப்படுகின்றன. அவை,

மத
புரிசெய்
கொல் } யானை
எழில்
மையல்

என்ற சொற்களாலும், மற்ற ஐந்து பாடல்களிலும் யானை என்றே என்பித

அடைச்சொற்களுமின்றிக் குறிக்கப்படுவது அறியத்தக்கது. எனவே, கலித்தொகையில் யானை என்ற ஒருபெயரில் மட்டும் குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகை :-

கபிலரின் 28 பாடல்களில் 6 பாடல்களில் யானை என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது. அதில் யானை, வேழம், களிறு, பிடி என்ற நான்கு வேறு பெயர்களில் அழைக்கப்பெறுவதை அறியலாம். மூன்று பாடல்களில் யானை என்ற பெயருடன் அடைச்சொல் கொடுத்துக் குறிக்கப்பட்டுள்ளன.

கழியய
நெடுநல் } யானை
பனை

மற்று இரண்டு பாடல்கள்,

கருங்கண் - வேழம்

பெரு - களிறு

என்ற அடைகளுடனும், ஒரு பாடல் 'பிடி' என எந்த அடையும் இன்றியும் குறிக்கப்படுவது அறியத்தக்கது.

நற்றிணை :-

கபிலரின் நற்றிணைப் பாடல்களில் 9 பாடல்களில் யானை என்ற பெயர் இடம்பெறுகின்றது. இப்பாடல்களிலும் யானை, வேழம், களிறு, பிடி. என்ற நான்கு வேறு பெயர்களில் யானையைக் குறிக்கப்படுகிறது. இதில் 5 பாடல்களில் யானை என்ற பெயர் அடையுடன் குறிக்கப்படுகிறது. அவை,

புகர்	
பொருக	
பஃறி	யானை
பெருங்கை	
முக்செவி	

என்ற சொற்களாகும். 2 பாடல்களில் வேழம் என்ற பெயருக்கு அடைச்சொல் கொடுத்தக்குறிக்கின்றனர்.

கதழ்வாய்	வேழம்
[illegible]	

மற்ற 2 பாடல்களிலும், பிடி என்ற பெயருக்கு அடைச்சொல் கொடுத்து அழைக்கப்படுகிறது. அவை,

பெருங் - களிறு
தடக்கை - பிடி

என்பனவாகும். இப்பாடல்களில் இடம்பெறும் அனைத்துப் பெயர்களும் அடைச்சொற்களுடனேயே குறிக்கப்படுகின்றன.

புறநானூறு :-

கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் 28-இல் 5 பாடல்களில் யானைப் பெயர் குறிக்கப்படுகிறது. இவற்றில் யானை, களிறு என்ற இரு பெயர்கள் குறிக்கப்படுகின்றன. யானை என்ற பெயர்,

கருங்கண்	
படுமணி	யானை
கருங்கை	

என,

மூன்று பாடல்களில் அடைச்சொற்களுடன் இடம்பெறுகின்றன. மற்ற இரண்டு பாடல்களில் எந்த அடையும் இன்றி

யானை - -

களிறு - -

என்றே குறிக்கப்படுவது அறியத்தக்கது.

பதிற்றுப்பத்து :-

பத்து பாடல்களில் 6 பாடல்களில் யானை என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அவற்றுள் ஒன்று, யானை என்ற பெயரில் இடம்பெற்றுள்ளது. ஐந்து பெயர்களும் எவ்வித அடையும் இன்றி 4 பாடல்கள் 'களிறு' என்ற பெயரிலும், 2 பாடல்கள் 'யானை' என்ற பெயரிலும் கையாளப்பட்டிருப்பது குறிக்கத்தக்கது.

குறிஞ்சிப்பாட்டு :-

குறிஞ்சிப்பாட்டில் 6 இடங்களில் யானை என்ற பெயர் கையாளப்பட்டுள்ளது. அதில் களிறு, வேழம், யானை என்ற மூன்று பெயர்களில் குறிக்கப்படுவது அறியத்தக்கது. இப்பெயர்கள் எவ்வித அடைச்சொல்லும் இன்றிக் குறிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகக் கபிலர் பாடிய பாடல்களில் யானை என்ற பெயர் எங்ஙனம் கையாளப்பட்டுள்ளது என்பது ஆராயப்பட்டது. யானை என்ற பெயர் கையாளப்பட்டிருப்பதில் கலித்தொகை வேறுபட்டு நிற்கிறது. கபிலர் பாடிய அனைத்துப் பாடல்களும் யானையைப் பல பெயர்களில் குறிப்பிடுகிறது. ஆனால், கலித்தொகைப் பாடலில்

மட்டும் யானை என்ற ஒரு பெயர் மட்டும் குறிப்பிடப்படுகிறது. யானை என்ற பெயருக்குக் கையாளப்படும் அடைச்சொற்களும் வேறு அக, புறப்பாடல்களில் குறிக்கப்படவில்லை என்பதும் அறியப்படுகிறது.

குறிஞ்சிப் பாட்டிலும் யானை என்ற ஒரு பெயரே குறிக்கப்படுகிறது. அப்பெயருக்கு எவ்வித அடைச்சொல்லும் குறிக்கப்படாததும் குறிப்பிடத்தக்கது.

ஐங்குறுநூற்றில் 3 பாடல்களில் மட்டுமே யானை குறிக்கப்படுவதும் அப்பெயர்களுக்குத் தொடுக்கப்படும் அடைச்சொற்கள் வேறு அக, புறப்பாடல்களில் கையாளப்படவில்லை என்பதும் பெறப்படுகிறது. எனவே, யானை என்ற பெயரை கையாண்டிருப்பதில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றும் வேறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

5.4.1.2.2.2. புலி:-

அகநானூறு:-

கபிலர் பாடிய 18 பாடல்களில் 4 பாடல்களில் புலி என்ற பெயர் குறிக்கப்படுகிறது. இரண்டு பாடல்களில்,

இரும்
அடு } புலி

என்ற அடைச்சொற்களுடன் புலி கையாளப்பட்டிருக்கிறது மற்ற இரண்டு பாடல்களில் எவ்வித அடையும் இன்றி புலி என்றே குறிக்கப்படுகிறது.

<u>கலித்தொகை :-</u>

கபிலரின் 29 பாடல்களில் 4 பாடல்களில் புலி என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு பாடல்களில் அடைச்சொற்களுடன் புலி என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

உழு
இரும் } புலி

மற்ற இரண்டு பாடல்களில் எவ்வித அடையும் இன்றி புலி என்ற தனி பெயரிலேயே குறிக்கப்படுகிறது.

<u>குறுந்தொகை :-</u>

குறுந்தொகையில் கபிலர் பாடிய அனைத்துப் பாடல்களிலும் புலி என்ற பெயர் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<u>நற்றிணை :-</u>

கபிலர் பாடிய 20 பாடல்களில் 7 பாடல்களில் புலி என்ற பெயர் கையாளப்பட்டுள்ளது. ஒப்பாடலில் வேங்கை என்ற வேறு பெயரிலும் குறிக்கப்படுவது அறியத்தக்கது. மூன்று பாடல்களில் புலி என்ற பெயர் அடைச்சொல்லுடன் குறிக்கப்பட்டுள்ளது. அவை,

வயப்
உழு } புலி
இரும்

...239/-

என்பனவாகும்.

மற்ற மூன்று பாடல்களிலும் 'வேங்கை' என்ற பெயர் குறிக்கப்படுகிறது. 'கருங்கால்' என்ற அடைச்சொல்லுடன் அம்மரத்தின் பெயரும் அழைக்கப்படுகிறது. ஒரு பாடலில் 'புலி' என்றே அடையின்றிக் குறிக்கப்படுகிறது.

பதிற்றுப்பத்து:-

இதில் பத்து பாடல்களிலும் புலி என்ற பெயர் கையாளப்படவில்லை.

புறநானூறு:-

இதில் ஒரு பாடலில் மட்டும் 'இரும்புலி' என்ற அடைச்சொல்லுடன் கையாளப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாட்டு:-

இதில் ஒரு இடத்தில் 'புலி' என்று எவ்வித அடையும் இன்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

மேற்குறியதில் இருந்து புலி என்ற பெயர் குறுந்தொகை, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு தொகுப்புகளில் இடம்பெறவில்லை. கபிலரின் மற்ற அனைத்து பாடல்கள் தொகுப்பிலும் புலி என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. மற்றபடி குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதும் அறிதற்கு இல்லை.

5.4.1.2.2.3. பன்றி:-

குறுநானூறு:-

கபிலர் பாடிய 18 பாடல்களில் 2 பாடல்களில் 'பன்றி' என்ற பெயர் அடைச்சொல்லுடன் குறிக்கப்படுகிறது. அவை

களுக்கட்
தகட் | பன்றி

...ப்பவையாகும்.

ஐங்குறுநூறு:-

ஐங்குறுநூற்றில் 'கேழற்பத்து' என்ற தலைப்பில் இடம்பெறும் பத்து பாடல்களில் மட்டும் 'பன்றி' என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அதில் 4 பாடல்களில் 'பன்றி' என்ற பெயரிலும், 6 பாடல்களில் 'கேழல்' என்ற பெயரிலும் குறிக்கப்படுவது அறியப்படுகிறது.

கபிலர் பாடியுள்ள மற்ற கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, புறநானூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய தொகை நூல்களில் 'புலி' என்ற பெயர் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, கபிலர் 'பன்றி' என்ற பெயரினைக் கையாண்டிருப்பதில் ஐங்குறுநூறு வேறுபட்டுள்ளது எனவறியலாம். அந்நூற்றில் அடைச்சொற்களுடன் பன்றியைக் குறிப்பிட, ஐங்குறுநூற்றில் 10 பாடல்களில் ஒரு இடத்தில் கூட அடைச்சொல் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4.1.2.2.4. குரங்கு:-

அகநானூறு:-

18 பாடல்களில் 3 பாடல்களில் 'குரங்கு' என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது. அதில் இரண்டு பாடல்களில் 'மந்தி' என்ற பெயரிலும், ஒரு பாடலில் 'கடுவன்' என்ற

பெயரிலும் எவ்வித அடையும் இன்றி கையாளப்பட்டிருப்பது அறியப்படுகிறது.

ஐங்குறுநூறு :-

குறிஞ்சித்திணையில் உள்ள 100 பாடல்களில் 'குரக்குப்பத்து' என்ற தலைப்பில் வரும் 10 பாடல்களில் குரங்கு என்ற பெயர் கையாளப்படுகிறது. அவற்றில் 'மந்தி', 'கடுவன்', 'குரங்கு' என மூன்று வேறு பெயர்களில் குறிக்கப்படுவதை அறியத்தக்கது.

கலித்தொகை :-

கபிலர் பாடிய குறிஞ்சிக்கலிப் பாடல்கள் 29-இல் ஒரு பாடலில் மட்டும் குரங்கு என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அப்பெயர் 'கல்லாக்கடுவன்' என அடைச்சொல்லுடன் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகை :-

கபிலர் பாடிய 28 பாடல்களில் ஒரு பாடலில் மட்டும் குரங்கு என்ற பெயர் அடைச்சொல் இன்றிக் குறிக்கப்படுகிறது.

புறநானூறு :-

புறநானூற்றில் 28 பாடல்களில் இரண்டு பாடல்களில் குரங்கு என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அப்பெயர் இருவேறு பெயர்களில் கையாளப்பட்டுள்ளது. அவை,

செம்முக - மந்தி

கருவிரல் - கடுவன்

என்ற இரண்டு சொற்கள் ஆகும்.

கபிலர் பாடியுள்ள பிற நற்றிணை, பதிற்றுப்பாடல்களில் குரங்கு என்ற பெயர் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், குறிஞ்சிப்பாட்டிலும் குரங்கு என்ற பெயர் கையாளப்படவில்லை.

குரங்கு என்ற பெயர் கபிலர் பாடிய நற்றிணை, பதிற்றுப்பத்து, குறிஞ்சிப்பாட்டு பாடல்களில் இடம்பெறவில்லை என்றாலும், குரங்கு இடம்பெற்ற பிற தொகை நூற்பாடல்களில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுவது அறியப்படுகிறது.

5.4.1.2.2.5. மான்:-

மான் என்ற பெயர் கலித்தொகைப் பாடல்களில் 3 பாடல்களில் குறிக்கப்படுகிறது. அப்பெயர்கள்,

வருடை வருடைமடமறி வருடைநல்	மான்

எனவரும் அடைச்சொற்களுடன் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கபிலர் பாடியுள்ள பிற பாடல்களில் 'மான்' என்ற பெயர் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, கலித்தொகையில் மட்டும் 'மான்' என்ற பெயர் குறிக்கப்படுவது கொண்டு கபிலரின் வேறுபட்ட படைப்பாக கலித்தொகை இருப்பது தெரியவருகிறது. இஃதன்றிக் கலித்தொகைப் பாடல்கள் எருது, நரி போன்ற விலங்குகள் கையாளப்பட்டிருப்பது கொண்டும்பிற அக, புறபாடல்களில் இருந்து வேறு-பட்டுள்ளன என்பதும் அறியத்தக்கது.

5.4.1.2.3. பறவைகள்:-

கபிலர் தம் பாடல்களில் விரும்பிக் கையாளும் பறவை இனங்களில் மயில், கிளி ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விரண்டு பறவையினங்களையும் கபிலர் தம் பாடல்களில் எத்தகைய சொல்நிலையில் பயன்படுத்தியுள்ளார் என்பது இங்கு ஆராயப்படுகிறது. (பின்னிணைப்பு பார்க்க)

5.4.1.2.3.1. மயில்:-

மயில் என்ற பறவை இனத்தைக் கபிலர் தம் பாடல்களில் பல நிலைகளில் கையாண்டுள்ளது தெரியவருகிறது. அவை 'மஞ்ஞை', 'மயில்' என்ற இரண்டும் ஆகும்.

ஆடு - மயில் (அகம்:42)
- மயில் (அகம்:182)
மயில் (அகம்:203)

என மூன்று அகநானூற்றுப் பாடல்களில் மயில் என்ற பெயர் குறிக்கப்படுவது அறியப்படுகிறது.

ஐங்குறுநூற்றில் 11 பாடல்களில் மயில் என்ற பெயர் கையாளப்பட்டுள்ளது. அவை 'மயில்', 'மஞ்ஞை', 'பெருந்தோகைத் தோகை' என்ற மூன்று வகைப் பெயர்களில் குறிக்கப்படுகின்றன..

குறுந்தொகையில் 3 பாடல்களில் 'மயில்' என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அவை,

காடு - மஞ்ஞை
இனம் - மயில்
ஆடு - மயில் அகவு

...244/-

எனவரும் சொற்களில் குறிக்கப்படுவது அறியத்தக்கது.

நற்றிணையில் 'தூமயில்' என்ற ஒருபாடலில் மட்டும் மயில் என்ற பெயர் குறிக்கப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில் 'மஞ்ஞை' என இரண்டு இடங்களில் மட்டும் மயில் குறிக்கப்படுகிறது.

இன்னாத 'மயில்' என்ற பெயர் - கபிலர் பாடிய கலித்தொகைப் பாடல்களில் ஒன்றில்கூட இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெயர் கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் ஒரிரு இடங்களில் குறிக்கப்பட்டாலும், ஐங்குறுநூற்றில் 'தோகை' என்ற பெயர் குறிக்கப்படுவதை கொண்டு வேறுபட்டசொல்லைப் பயன்படுத்தியிருப்பது தெரியவருகிறது.

கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் அடைச்சொல்லுடன் மயில் என்ற பெயர் குறிக்கப்பட குறிஞ்சிப்பாட்டில் மட்டும் அடையின்றிக் குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

எனவே, மயில் என்ற பெயரினைக் கையாண்டிருப்பதில் கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு ஆகிய மூன்றும் வேறுபட்டு நிற்பதைக் காண முடிகிறது.

5.4.1.2.3.2. கிளி:-

கிளி என்ற பெயர் கபிலரின் அனைத்து அகப்பாடல்களிலும் ஒரிரு இடங்களில் குறிக்கப்படுகின்றன. ஆனால் ஐங்குறுநூற்றில் மட்டும் கிளி என்ற சொல் 'கிள்ளை' என்ற பெயரிலும் குறிக்கப்படுவது அறியப்படுகிறது. மற்ற அகப்பாடல்களில் 'பசு' 'படு', 'சிறு' எனவரும் அடைச்சொற்களுடன் 'கிளி' என்ற பெயர் குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கபிலர் பாடல்களில் சிறுபான்மையே 'கிளை' என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. இருந்தாலும் 'கிளை' என்ற சொல்லை மட்டும் கபிலர் விரும்பிப் பயன்படுத்தியுள்ளமையைத் தெரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறாகச் சொல்நிலையில் கபிலர் தம் பாடல்களில் விரும்பிப் பயன்படுத்திய சொற்கள் என்ற நிலையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என்ற மூன்று நிலைகளில் ஆராய்ந்ததில் பெறப்பட்ட முடிவுகள்.

1. தலைவன் என்ற பெயரினைக் குறிக்கும்போது கலித்தொகையும், ஐங்குறுநூறும் வேறுபட்டுள்ளன என்பது பெறப்படுகிறது.

2. தலைவி என்ற பெயரினைக் கபிலர் பயன்படுத்திய வரிசைச் சொற்கள் (கண், கூந்தல், பல், நுதல்) என்ற நிலையில் ஆராய்கையில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றும் வேறுபடுகின்றன என்பது அறியப்படுகிறது.

3. விலங்குகளில் யானையைக் கையாண்டிருப்பதில் கலித்தொகை வேறுபடுகிறது. அதில் யானை என்ற ஒரு பெயரைக் கையாண்டிருப்பதும், அப்பெயரைக் கொண்ட அடைச்சொற்கள் வேறாக, புறப்பாடல்களில் இடம்பெறுகின்றன என்பதும் அறியப்படுகிறது.

4. குறிஞ்சிப்பாட்டில் யானை என்ற பெயர் மூன்று வேறு பெயர்களில் கையாளப்பட்டுள்ளது.

5. '[illegible]' என்ற பெயரினைக் கையாண்டிருப்பதில் கபிலரின் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் வேறுபட்டுள்ளன. என்பது பெறப்படுகிறது.

6. பறவைகளில் 'மயில்' என்ற பெயரைக் குறிப்பதில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு என்ற மூன்றும் வேறுபட்டுள்ளன.

7. விலங்குகளில் 'மான்' என்ற பெயர் கலித்தொகையில் மட்டும் கையாளப்பட்டிருப்பது அறியப்படுகிறது.

8. பறவைகளில் '[illegible]' என்ற பெயர் ஐங்குறுநூற்றில் மட்டும் வேறு பெயர்களில் குறிக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது.

எனவே, சொல்நிலையில் கபிலரின் ஐங்குறுநூறு, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு என்ற மூன்றும் வேறுபட்டுள்ளது அறியத்தக்கது.

5.4.1.3. <u>தொடர்நிலைக் கூறுகள்</u> :-

ஒரு மொழியில் பல்வேறுபட்ட தொடரமைப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு படைப்பாளியும் தமக்கென சில குறிப்பிட்ட தொடரமைப்புகளைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதுண்டு. அத்தொடர் அமைப்புகளை நோக்குவதின் வாயிலாக படைப்பாளரின் தனிப்பட்ட தொடர் அமைப்பையுணர்ந்து கொள்ள முடியும். மேலும், பாக்கள் வகைக்கு ஏற்பவும், காலம், கருத்து முதலானவற்றிற்கு ஏற்பவும் தொடர் அமைப்புகள் மாறுபடும் என்று கூறப்படுகிறது.[30]

ஒலிநிலையில் நிலைமாற்றங்களுக்குத் துணையாக எதுகை, மோனை போன்ற உத்திகள் கையாளப்படுவதைப் போன்று தொடர் நிலையில் சில தொடர்நிலை உத்திகள் கையாளப்படுகின்றன. இத்தொடர் நிலையிலும் பல்வேறு வகைகள் கூறப்படுகின்றன.

சொற்றொடர் அமைப்புகள் என்னும் நிலையில் 13 வகையான தொடர் அமைப்புகள் பிரித்துக் கூறப்படுகின்றன. அவை,

1. தனி வாக்கியங்கள் (Simple sentences)
2. தகவல் பொருள் தொடர்கள் (Repertive sentences)
3. எதிர்மறை வாக்கியங்கள் (Negative sentences)
4. அனுமதி வாக்கியங்கள் (Permissive sentences)
5. எச்சத் தொடர்கள் (Participle forms)
6. பெயர்த் தொடர்கள் (Noun phrase)
7. தொடர் இணைப்பு உருபுகளால் அமையும் தொடர்கள் (Hypotactic sentences)
8. ஒப்புமைத் தொடர்கள் (Comparative sentences)
9. விளித் தொடர்கள் (Vocative sentences)
10. வியங்கோள் தொடர்கள் (Optative sentences)
11. செயப்பாட்டு வினைத் தொடர்கள் (Passive sentences)
12. வினாத் தொடர்கள் (Interrogative sentences)

...248/-

13. கலவை வாக்கியங்கள் (Complex sentences) என்பனவாம்.[31]

சில கருத்துக்களுக்கேற்பத் தொடர்களின் வகைகளும் மாறுபடுவதைச் சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை காணலாம். தலைவன் அல்லது தலைவியர் வர்ணனை பெரும்பாலாக தமிழ் இலக்கியங்களில் பெயர்த் தொடர்களாலேயே அமைந்திருப்பதனை அறியலாம். சில பொருள்களை நிரல்படுத்திக் கூறும்போதும் பெயர்த் தொடர்களே பெரிதும் பயன்படுகின்றன.

அதேபோன்று, சங்கிலித்தொடர் போன்ற நிகழ்ச்சிகளின் வரிசையைக் குறிக்கும்போது தனிவாக்கியங்களே பெரிதும் பயன்படுகின்றன. இயற்கை வருணனையில் ஒருகாட்சி வர்ணிக்கப்படும் போது நீண்ட கலவை வாக்கியங்கள் பயன்படுத்தப்படுவதும் ஓர் உத்தியாகக் காணப்படுகிறது. மேலும், அறக்கருத்துக்கள் அல்லது வாழ்க்கை நெறிகள் விளக்கப்படும்போது முன்னிலைத் தொடர்கள் பயன்படுத்தப்படுவதும் பெரிதும் காணப்படுகின்ற ஒன்று என்று கூறப்படுகிறது.[32]

பொதுவாகத் தொடர் அமைப்புக்களைக் கருத்திற்கேற்பச் சுருக்குதல் அல்லது விரித்தல் என்ற அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம்.[33] ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையில் குறைந்த அடிகள் மட்டுமே தேவைப்படும்போது நீக்கல் உத்திகள் பயன்படுகின்றன. அதே கருத்தினை விருத்தமாகவோ நீண்ட புனைப்பாவாகவோ காப்பியத்தில் கூறும்போது விரித்தல் உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

செய்யப்பட்ட 13 வகையான சொற்றொடர் அமைப்புகள் ஒருசில நீக்கம், விரிக்கல் எந்த இருவகையின் பின்பும் தொடர் அமைப்பு வகைப்பாடுகளுள் கூறப்படுகின்றன. இந் அமைப்புகளோடு மேற்கூறிய தொடர்நிலைகளும் தொடர்புடைய என்பது குறிப்பிடத்தக்கது. அவை பின்வருமாறு:

1. உவமைத் தொடர்
2. வினைத்தொடர்
3. அடைத் தொடர்
4. விருப்பத் தொடர்
5. இணைப்புத் தொடர்.
6. குறிப்புவினைத் தொடர்
7. இலக்கணநிலைமாற்றத் தொடர்
8. பழமொழித் தொடர்
9. மரபுத் தொடர்

என்ற அத்தொடர் வகைப்பாடுகள் கூறப்படுகின்றன.[34] இவற்றில் சில தொடர்நிலைக் கூறுகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவை,

1. உவமைத் தொடர்
2. வினைத் தொடர்
3. அடைத் தொடர்
4. விருப்பத் தொடர்
5. இணைப்புத் தொடர்

என்ற இந்த ஒப்புமைப்பொருள் வரும். மற்ற தொடர்நிலைகளை பெரும்பாலும் உரைநடை இலக்கிய வகையினை அமைத்தலில் பயன்படுவன என்பதால் இங்கு குறிப்பிடப்படவில்லை.

4.1.3.1. உவமைத்தொடர்:-

ஒப்புமைத் தொடர்களைப் பல கவிஞர்கள் பயன்படுத்தி இருந்தாலும் உவம உருபுகளைக் கையாளுகின்ற முறையில் வேறுபட வாய்ப்பிருக்கிறது எனலாம். ஒரு மொழியில் ஒன்றுக்கு மேற்பட்ட உவம உருபுகள் பயன்படுத்தப்படுமானால் ஒவ்வொரு படைப்பாளியும் தனக்கென்று சில உவம உருபுகளை விரும்பி மேற்கொள்வதுண்டு. வேறுபட்ட கவிஞர்கள் இருந்திருப்பார்களானால் அவர்கள் பயன்படுத்திய உவம உருபுகளாலும் வேறுபாடு இருக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, உவம உருபுகளின் உள்ள வேறுபாட்டைக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட கவிஞர் இருந்துள்ளனர் என்று கருத முடியும். இவ்வுவம உருபுகளை ஆராய்வதால் ஒரு கவிஞரின் ஒப்பீட்டுத் தொடர்பை விளக்க முடியும் என்றும் கூறலாம்.

அவிர், அன்ன, ஆக, ஆங்கு, போல, ஒப்ப, போல், உறழ், அற்று, அற்றே, கொண்ட, என, எனா, அன்னாம், நிகர்க்கும், ஏய்ப்ப, ஒக்கும், அன்னோள், கடுப்ப, கடுக்கும், செத்து, இன், புரை, அன்னன், அன்னள், அன்னார், அனைய, அற்றும், போலும் மருள், மருள் என்று வரும் உவம உருபுகள்[35] எல்லாம் பாடல்களில் பயின்று வந்துள்ளன என்பது ஆராயப்படுகின்றது. இவ்வுவம உருபுகள் கபிலர் பாடல்களில் எத்தனை இடங்களில் எவ்வெவ்வுருபுகள் இடம்பெற்றுள்ளன என்பது

[illegible]:
[illegible]
([illegible])

[illegible] உவம உருபுகள்	அகம். (18)	குறு. (100)	கலி. (29)	ஐங். (28)	நற். (20)	பதிற்று (10)	புறம். (28)	[illegible] (8)
[illegible]	-	1	-	-	-	-	-	-
அன்ன	5	9	8	6	4	2	2	5
[illegible]	-	-	1	-	-	-	-	-
[illegible]	-	1	1	-	1	-	-	-
[illegible]	-	-	-	1	-	-		-
[illegible]	-	-	1	-	-	-		-
[illegible]	-	-	-	-	-	-	1	-
[illegible]	-	-	2	-	-	4	2	-
[illegible]	1	-	-	-	-	1	-	-
[illegible]	-	-	2	2	1	2	1	-
[illegible]	1	-	-	-	-	-	-	-
[illegible]	7	11	-	5	4	-	2	[illegible]
[illegible]	-	-	-	-	-	-	2	-
[illegible]	-	-	-	-	-	-	-	-
[illegible]	1	-	5	-	-	-	-	-
[illegible]	2	-	2	-	-	-	-	-
ஏய்க்கும்	-	-	2	-	-	-	-	-
ஏய்ப்ப	-	-	2	-	-	-	-	-
ஒப்ப	-	-	1	-	-	-	-	-
[illegible]	-	-	1	-	-	-	-	-
கடுப்ப	1	-	-	-	2	1	3	3
[illegible]	-	-	-	-		1	-	
[illegible]	-	-	1	-		-	-	
[illegible]	1	2	-	-		-	-	
புரை	1	-	5	-		1	-	-
போல்	-	[illegible]	11	-	2	-		-
போல	-	1	12	2	5	-	2	-
போலும்	1	-	-	-	-	-	-	-
[illegible]	-	1	1	-	-	-	-	-
மான	-	1	-	-	-	-	-	-

...252/-

மேற்குறிப்பிட்ட உவம உருபுகள் கபிலர் பாடல்களில் பயின்று வந்தமையை ஆராய்கையில் போல், கொண்ட, அற்று, ஒப்ப, அன்னர், எய்க்கும், ஏய்ப்ப, ஒக்கும், [illegible]ளை, போன்ற உவம உருபுகள் கலித்தொகையைத் தவிர மற்ற அகப்பாடல்கள் தொகுப்பில் இடம்பெறவில்லை. ஆனால் கடுப்ப, செத்து, புரை என்ற உவம உருபுகள் கலித்தொகையைத் தவிர மற்ற அகப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்பது அறியப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில் அன்ன, புரை, கடுப்ப என்ற உவம உருபுகள் மட்டும் கையாளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐங்குறுநூற்றில் இடம்பெற்ற அன்ன, அனைய, இயைய, போலும், மருள் போன்ற உவம உருபுகள் கபிலரின் மற்ற அகப்பாடல்களில் இடம் பெறவில்லை என்பதும் பெறப்படுகிறது.

புறப்பாடல்களை ஆராய்கையில் அன்ன, புரை, ஏய்க்கும், கடுப்ப என்ற 4 உவம உருபுகள் கபிலர் பாடிய பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரண்டு தொகுப்பிலும் இடம்பெறுகின்றன. ஆனால், புறநானூற்றில் போல, புரைய, ஆங்கு, அற்று, அனைய, என்ற 5 உவம உருபுகள் அதிகம் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, கபிலர் உவமைத் தொடர்களைக் கையாண்ட முறையில் ஒவ்வொரு பாடல் தொகுப்பிலும் வேறுபட்டு இருந்தாலும் கலித்தொகைப் பாடல்கள் அதிகமான உவம உருபுகளைக் கொண்டிருக்கின்றன. கபிலர் பாடல்களில் அதிகம் கையாளப்பட்ட 'புரை' உருபு கலித்தொகையில் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கபிலரின் மற்ற பாடல்களைக் காட்டிலும் ஐங்குறுநூறு அதிகமான உவம உருபுகளைக் கொண்டுள்ளது என்பது பெறப்படுகிறது. குறைந்த உவம உருபுகளைக் கொண்ட பாடலாகக் குறிஞ்சிப்பாட்டுத் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

4.1.3.2. விளித்தொடர் :-

கருத்துக்கள் நேரடியாகச் சுட்டப்படாதபோது உவமைத் தொடர்கள் பெரிதும் பயன்படுவதைப் போன்று, ஒரு கருத்தினை நேரிடையாகச் சொல்ல விரும்பும்போது விளித்தொடர்களைப் பயன்படுத்துவது இலக்கிய உத்தியாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியத்தில் தோழி, தலைவி ஆகிய இருவரும் தலைவனை விளித்துப் பேசும் நிலையில் பல பாடல்கள் உள்ளன. இத்தகைய விளித்தொடர், அமைப்பு முறை ஒவ்வொரு ஆசிரியருக்கும் வேறுபடலாம்.

கபிலர் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தும் தொடர் விளித்தொடராகும். உரையாடலைத் தொடங்கும்போது இது வெளிப்படுகிறது. கேட்போரது கவனத்தை ஈர்ப்பதற்காக 'தோழி' என்றோ 'தலைவ' என்றோ அவரை விளித்துப் பெயர்க் குறிப்பிடும் அமைப்பும் ஓர் உத்தியாகும். சங்கப் பாடல்களில் தோழி தலைவனை விளித்துப் பேசும் பாடல்கள் மிகுதியும் காணப்படுகின்றன. இம்முறையிலேயே கபிலரின் பாடல்கள் அமைக்கப்படுகின்றன.

இத்தகைய விளித்தல் முறை அந்தந்த நிலத்திற்கு ஏற்ப தலைவன் பெயர் அமைக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. விளித்தொடர் தோழி, தலைவி, தலைவன் ஆகியோரின் கூற்றுவழி கபிலரின் பாடல்கள் ஆராயப்படுகின்றன. (பின்னிணைப்பு XV பார்க்க)

வ. எண்	சங்க இலக்கிய நூல்கள்	[illegible] பாலை பாடல்கள்	விளித்தோர்			
			தோழி	தலைவி	தலைவன்	பரத்தை
1.	அகநானூறு	18	13	4		-
2.	ஐங்குறுநூறு	100	70	20	10	-
3.	கலித்தொகை	29	20	5	4	-
4.	குறுந்தொகை	28	7	16	5	-
5.	நற்றிணை	20	12	4	2	2
6.	குறிஞ்சிப்பாட்டு	1	1	-	-	-
	மொத்தம்		123	49	21	2

அகநானூறு :-

இவற்றில் தோழி தலைவனை 8 பாடல்களில் 'நாட' என்றும், 2 பாடல்களில் 'வெற்ப' என்றும் அழைக்கின்றாள். தோழியால் தலைவன்,

குன்ற பெருங்கல் தோன்ற நல்வரை பயமலை விசும்மலை	நாட	வோங்கல் வான்றோய்	வெற்ப

என்று வரும் அடைச் சொற்களுடன் அழைக்கப்படுகின்றான்.

...255/-

தலைவி தலைவனை 4 பாடல்களில் 'நாட' என்ற அடைச்சொற்களுடன் அழைக்கின்றாள். அச்சொற்கள் பின்வருமாறு:

கானக
குன்ற
மலைகெழு
தோன்ற } நாட

ஐங்குறுநூறு :-

தோழி தலைவனை 41 பாடல்களில் விளித்துப் பாடுகிறாள். அதில் 38 பாடல்கள் 'நாடன்' என்ற பெயரிலும், 2 பாடல்கள் 'வெற்ப' என்ற பெயரிலும், ஒரு பாடல் 'கானக்குறவோன்' என்ற பெயரிலும் அழைக்கப்படுவது தெரியவருகிறது. மற்ற, 29 பாடல்களில் தோழியின் வாயிலாக விளித்தொடர் அமைப்பு இடம்பெறவில்லை என்பது அறியப்படுகிறது.

தலைவி தலைவனை 9 பாடல்களில் நாடன் என்றும், 3 பாடல்களில் 'வெற்பன்' என்றும் ஒரு பாடலில் 'நறுந்தண்மார்ப' என்றும் விளிக்கப்படுவதை விளக்குகிறாள். மற்ற 7 பாடல்களில் அத்தகைய விளித்தொடர் அமைப்பு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கலித்தொகை :-

தோழி தலைவனை 20 பாடல்களிலும் விளித்துப் பாடுகிறாள். அவை 'நாட', 'வெற்ப', '[illegible]', 'கானவ' என்ற பல்வேறுபட்ட பெயர்களில் குறிப்பிடுகிறாள்.

'நாட' என்ற பெயர்க்கு முன்,

நன்மலை	நாட
விலங்குமலை	
அணிமலை	
வளமலை	
பயமலை	

என்ற அடைத்தொடர்களும், 'வெற்ப' என்ற பெயருக்கு முன்,

மைதவழ்	வெற்ப
சேயுயர்	
மலைகெழு	
தொடர்வரை	
இலங்குநீர்	
விறல்	

என்ற அடைத்தொடர்களும், 'கிழவ' என்ற பெயர்க்கு முன்,

மலை	கிழவ
மென்றோள்	

என்ற அடைத்தொடர்களும் கையாளப்பட்டிருப்பது அறியத்தக்கது. தலைவிக் கூற்றில் வரும் பாடல்கள் ஒன்றில் கூடத் தலைவன் பெயர் விளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<u>கலித்தொகை</u>:-

தோழி கூற்றாக அமைந்த பாடல்களில் 3 பாடல்களில் 'நாட' என்ற பெயரும், 2 பாடல்களில் 'வெற்ப' என்ற பெயரும் அடைத்தொடர் கொடுத்துக் கையாளப்பட்டுள்ளது.

நற்றிணை :-

தோழி கூற்றாக உள்ள பாடல்களில் 4 பாடல்களில் தலைவன் விளிக்கப்படுகிறான். அதில் தலைவன் 'மலைகிழவோன்', 'துறைவன்', 'பெருமலைநாடன்', 'வெற்ப' என்ற பெயர்கள் தோழியால் குறிக்கப்படுவன.

தலைவி கூற்றாக உள்ள பாடல்களில் 3 பாடல்களில் தலைவன் அழைக்கப்படுகிறான். அதில் 'குன்றநாடன்', 'பெருமலைநாடன்', 'வெற்ப' என்ற மூன்று பெயர்களும் குறிக்கப்படுகின்றன.

பரத்தை கூற்றாக உள்ள ஒரு பாடலில் தலைவன் 'மால்வரை நாடன்' என்று குறிக்கப்படுகிறான்.

குறிஞ்சிப்பாட்டு :-

தோழி கூற்றாக உள்ள இப்பாடலில் தலைவன் 'குன்றுகெழு நாடன்' என்று குறிப்பிடப்படுவது அறியப்படுகிறது.

மேற்குறியவற்றிலிருந்து விளித்தொடர்களை ஆராய்கையில் கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் தலைவன் மலை நாட, வெற்ப, கிழவ, துறைவ, மார்ப, காவல என்று வரும் பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் தலைவி, தோழி ஆகிய இருவரால் தலைவன் விளிக்கப்பட, கலித்தொகைப் பாடல்களில் தோழியால் மட்டும் விளித்தல்

...258/-

கையாளப்பட்டுள்ளது. மேலும், கலித்தொகையில் ஒரு பாடலில் தலைவன் பெயர் பலமுறை விளிக்கப்படுகிறது. இத்தன்மை மற்ற பாடல்களில் இல்லை. 'ஒன்ற' என்ற அடைத்தொடர் பயின்றுவரும் அமைந்த பாடல்களிலும் மிகுதியாக இடம்பெற, கலித்தொகையில் மட்டும் இத்தொடர் இடம்பெறாததும் குறிப்பிடத்தக்கது.

தலைவியால் தலைவன் விளிக்கப்படும்போது 'நாடன்', 'வெற்பன்' என்ற பெயர்களாலே குறிக்கப்பட ஐங்குறுநூற்றில் மட்டும் தலைவயால் 'ஏந்துமார்பன்' என்ற தலைவன் அழைக்கப்படுவதை குறிப்பிடத்தக்கது.

எனவே, விளித்தொடர்களைப் பயன்படுத்துவதில் ஐங்குறுநூறும், கலித்தொகையும் வேறுபட்ட தன்மையில் இருப்பது பெறப்படுகிறது.

5.4.1.3.3. <u>அடைத்தொடர்</u>:-

அடைத்தொடர்களைப் பயன்படுத்தும்போதும் ஒன்றுக்கு மேற்பட்ட அடைச்சொற்களைப் பயன்படுத்துதலும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இணைந்த நீட்ட அடைத்தொடர்களாகக் கையாள்வதும் கவிதை நடையில் பெரிதும் காணப்படுகின்ற ஒன்று. மேலும், சொற்களுக்குத் தகுந்த அடைகளைக் கையாள்வதும் இலக்கியத்தில் பயன்படுத்தக்கூடிய ஓர் உத்தியாகும். இவ்வடைச் சொற்கள் ஒரு சொல்லாகவோ அல்லது தொடராகவோ அமைவதுண்டு.

பெரும்பாலும் அகப்பாடல்களில் தலைவன், தலைவி இவர்களின் பண்புகளை விளக்கவும், அழகினை வர்ணிக்கவும் இத்தகைய அடைமொழிகள் கையாளப்படுகின்றன.

...259/-

இந்த வகையில் கபிலரது பாடல்களில் எவ்வாறு அடைமொழிகள் கையாளப்பட்டுள்ளன என்பது ஆராயப்படுகிறது.

வ. எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்கள்	அடைத்தொடர் இடம்பெற்ற பாடல்கள் எண்ணிக்கை	மொத்த அடைத்தொடர்களின் எண்ணிக்கை
1.	அகநானூறு	18	13	23
2.	ஐங்குறுநூறு	100	49	84
3.	கலித்தொகை	29	23	65
4.	குறுந்தொகை	28	13	17
5.	நற்றிணை	20	10	28
6.	பதிற்றுப்பத்து	10	-	-
7.	புறநானூறு	28	16	16
.	குறிஞ்சிப்பாட்டு	1	16	18

அகநானூற்றில் 13 பாடல்களில் கல், தோள், புலி, யானை, பன்றி, [illegible], வேங்கை, கை, மலை என்று வரும் பெயர்களுக்கு அடைத்தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு XVI பார்க்க).

ஐங்குறுநூற்றில் 49 பாடல்களில் 16 பாடல்களுக்கு இரண்டு அல்லது மூன்று சீர்களைக்கொண்ட அடைத்தொடர்கள் இடம்பெறுகின்றன. மற்ற பாடல்களில் ஒரு சீரைக் கொண்ட அடைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் பெறப்படுகிறது.

கலித்தொகையில் கண், தோள், கை, கூந்தல், யானை, கை, புலி, நரி, எருது, பல், நுதல், இருள், வேர் என்ற வரும் பெயர்ச்சொற்களுக்குப் பலசீர்களை அடுக்கிய அடைத்தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நற்றிணையில் 10 பாடல்களில் கண், தோள், நுதல், வேழம், புலி, வேங்கை, களிறு, மயில் என்று வரும் பெயர்ச் சொற்களுக்கு அடைமொழிகள் கையாளப்பட்டுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் கண், கை, கூந்தல், நுதல், முகம், தோள் என்று வரும் பெயர்ச்சொற்களுக்கு முறையே ஓரசைச் சீர்களே அடைகளாய் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இப்பாடலில் விலங்குகளுக்கு எவ்வித அடைத்தொடரும் கையாளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியதில் இருந்து கலித்தொகையில் தலைவியை வர்ணிக்கும் அடைச்சொற்களே அதிகம் இடம்பெறுகின்றன. மற்ற நற்றிணை, அகநானூறு பாடல்களில் விலங்குகளின் வர்ணனை இடம்பெறுகின்றன. கலித்தொகையில் 7 பாடல்களில் விலங்குகள் அடைத்தொடர் மூலம் குறிக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் விலங்குகள் அடைத்தொடர் எதுவுமின்றி கையாளப்பட்டுள்ளன.

கலித்தொகையில் ஒரே பாடலில் ஒரு சொல்லுக்குப் பல அடைமொழிகள் அடுக்கியும் பல அடைத்தொடர்கள் பெற்றும் வருவதை அறியப்படுகிறது.

...261/-

இதேபோன்ற, விளையாட்டுப் பாடலுக்கு ஓர் அடைத்தொடர் எந்த முறையில் பாடும் இந்த அடைமொழிகளைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

5.4.1.3.4. விருப்பத்தொடர்கள் :-

சொற்றேர்வினைப் போன்றே தொடர்களைத் தேர்வு செய்வதிலும் படைப்பாளிக்குப் படைப்பாளி வேறுபடுகிறார்கள். இது தனி விருப்பத்தின் பேரிலோ கருத்தடிப்படையிலோ நடைபெறலாம். இந்நிலையில் ஓர் ஆசிரியர் தனக்கென்று சில விருப்பத்தொடர்களைத் தன் இலக்கியத்தில் கையாள்வதுண்டு. அதனைக் கண்டறிவதன் மூலம் அவ்வாசிரியர்க்கேயுரிய விருப்பச் சொற்களைத் தனித்தறிய முடியும் லாம்.

சங்க இலக்கியத்தில் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது அக்கருத்தினை நேரடியாகக் கூறாமல் சில குறிப்பிட்ட விலங்கினம் அல்லது பறவை இனம் ஆகியவற்றினை விளிப்பதன் மூலம் உள்ளுறையாகக் கூறுவது அனைவராலும் பின்பற்றப்படுகின்ற ஒரு மரபாகும். இதில் தலைவன் அல்லது தலைவியின் வாழ்க்கை மறைமுகமாக மற்றொன்றோடு ஒப்பிடப்பட்டு விளக்கப்படுவது விருப்பத்தொடர்களாக அமைவதன் மூலமே என்று வரையறுக்கப்படுகிறது. இந்நிலையில் கபிலரின் விருப்பத்தொடர்கள் எவை என்பது இங்கு ஆராயப்படுகிறது. (மேலும் பின்னிணைப்பு XVII பார்க்க)

...262/-

வ. எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்கள்	விருப்பத்தொடர்கள் (விலங்குகள்)						மொத்த தொடர்கள் எண்ணிக்கை
			யானை	புலி	பன்றி	குரங்கு	மான்	பிற விலங்குகள்	
1.	அகநானூறு	18	9	4	2	1	-	3	18
2.	ஐங்குறுநூறு	100	3	3	10	10	2	-	28
3.	கலித்தொகை	29	10	5	-	1	3	1	20
4.	குறுந்தொகை	28	7	-	-	1	1	1	10
5.	நற்றிணை	20	11	7	-	1	-	1	20
6.	பதிற்றுப்பத்து	10	5	-	-	-	-	2	7
7.	புறநானூறு	28	7	1	-	2	-	-	10
8.	குறிஞ்சிப்பாட்டு	261 (அடி)	6	1	-	-	-	1	8

வ. எண்	சங்க இலக்கிய நூல்கள்	கபிலர் பாடிய பாடல்கள்	விருப்பத்தொடர்கள் (பறவைகள்)			மொத்த தொடர்கள் எண்ணிக்கை
			மயில்	கிளி	பிற பறவை	
..	அகநானூறு	18	2	2	1	5
..	ஐங்குறுநூறு	100	11	11	1	23
..	கலித்தொகை	29	-	2	-	2
..	குறுந்தொகை	28	3	3	2	8
.	நற்றிணை	20	1	1	1	3
.	பதிற்றுப்பத்து	10	-	-	-	-
.	புறநானூறு	28	-	-	-	-
.	குறிஞ்சிப்பாட்டு	261 (அடி)	1	1	-	2

கபிலர் பாடிய அனைத்துப் பாடல்களிலும் யானை, புலி என்ற இரு விலங்குகளின் [illegible] பெயர் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, இவ்விரண்டு விலங்குகளையும் கலித்தொகை மட்டும் [illegible]படுத்துகிறது. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு [நூல்]களில் யானை, புலி ஆகியவற்றின் செயல்பாடுகள் தனித்து விளக்கப்பட்டு [..]ப்புகழ் கூறப்படுகின்றன.

...263/-

ஆனால், கலித்தொகையில் இவ்விரண்டு விலங்குகளின் செயல்பாடுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒப்புமைக் கூறுகளுடன் தொடர்கள் அமைகின்றன.

கலித்தொகையில் விலங்குகள் பற்றியும், பறவைகள் மற்றும் கையாளப்பட-வில்லை என்பது பெறப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில் விலங்குகள் எவ்வித அடையும் இன்றிக் குறிக்கப்பட்டுள்ளன.

ஐங்குறுநூற்றில் 'தெய்யோ பத்து' என்னும் தலைப்பில் மட்டும் யானையைப் பிடி, வேழம் என்ற பெயர்களில் 3 இடங்களில் எவ்வித அடையும் இன்றிக் குறிக்கப்படுவது அறியத்தக்கது. இப்பாடல்களில் இடம்பெறும் விலங்குகள், பறவைகள் பற்றிய குறிப்புகள் அப்பாடல்களின் தலைப்புத் தொடர்பாக இடம்பெறும் தொடர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, விருப்பத்தொடர்களைக் கையாண்டதில் விலங்குகள், பறவைகள் என்ற நிலையில் கலித்தொகைப்பாடலும், ஐங்குறுநூற்றுப்பாடலும் வேறுபட்டு இருப்பது தெரியவருகிறது.

5.4.1.3.5. இணைப்புத் தொடர் :-

ஒரு பாடலில் முன்கூறிய கருத்தையும், பின் கூறும் கருத்தினையும் விரித்துக் கூறுவதற்கு இணைப்பாக ஒரு தொடரினைக் கையாள்வதுண்டு. இது விரித்தல் உத்தியில் கையாளப்படும் ஒரு வகையான இணைப்புத் தொடராகும். இத்தகைய தொடர்களில் பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், உம்மை உருபு, தொடரிணைப்பான்கள் முதலானவை கூறப்படுவது அறியத்தக்கது.[36]

இக்குத் தொடர் இணைப்புகள் என்ற பெயர்கள் அதில் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் மட்டுமே ஆராயப்படுகின்றன. இதில் 'ஆனால்', 'அதனால்', 'எனவாங்கு', 'ஏனென்றால்','ஆதலால்' முதலானவை தொடர் இணைப்புகள் என்று குறிக்கப்படுகின்றன. இதனை வினையெச்சத் தொடர்கள் என்ற பெயரிலும் இலக்கண அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.[37]

மேற்கூறப்பட்ட சொற்றொடர் இணைப்புகள் அடுத்தடுத்த இரு தொடர்களுக்கிடையே உள்ள உறவை _ வெளிப்படுத்திக் கூறவரும் கருத்தை விரிவுபடுத்துகின்றன என்பதை உணரமுடிகிறது. இத்தகைய தொடர் இணைப்புகளைக் கபிலர் தம் பாடல்களில் எங்ஙனம் பயன்படுத்தியுள்ளார் என்பது ஆராயப்படுகிறது.

கபிலர் பாடல்களில் கலித்தொகையில் மட்டும் இத்தகைய தொடர் இணைப்புகள் வெளிப்படையாக ஆசிரியரால் கையாளப்படுகின்றன. கபிலரின் பிற பாடல்களில் அப்பாடலின் பொருளை அறியும்போதே இத்தகைய இணைப்புத்தொடர்கள் வெளிப்படுகின்றன என்பது பெறப்படுகிறது.

கலித்தொகையில் ஆனால், ஆதலால், ஏனென்றால், அதனால், எனவாங்கு என்ற அனைத்துத் தொடர்களும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 'எனவாங்கு' என்ற சொல் கலிப்பாவின் வகையில் தனிச்சொல் என்று கொண்டாலும் இத்தொடர்ச்சொல் அப்பாடலின் முன் கூறிய கருத்தினையும் பின்கூறும் கருத்தினையும் இணைப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றது என்பது உணரத்தக்கது.

எனவே, இத்தொடர் அமைப்புக் கலித்தொகையில் மட்டும் கையாளப்பட்டிருப்பது கொண்டு கலித்தொகைப் பாடல்கள் பிற்காலப் புலவரால் பாடப்பட்டிருக்க வேண்டும் எனத் தெளியலாம்.

இவ்வாறாக ஐந்து தொடர் நிலைகளில் கபிலரின் பாடல்கள் ஆராயப்பட்டன. அவற்-றிலிருந்து கீழ்க்காணும் முடிவுகள் பெறப்பட்டன.

கபிலர் உவமைத் தொடர்களை கையாண்டதில் - அனைத்து பாடல்களும் வேறுபட்டு இருந்தாலும், கலித்தொகைப் பாடல்கள் அதிகமான உவம உருபுகளைப் பெற்றுள்ளதும், கபிலர் பாடல்களில் அதிகம் பயின்று வந்த 'புல்', 'செத்து', 'கடுப்ப' என்ற உருபுகள் கலித்தொகையில் இடம்பெறவில்லை என்பதும், ஐங்குறுநூறு மற்ற பாடல்களைக் காட்டிலும் அதிகமான உவம உருபுகளைக் கொண்டுள்ளதும், குறிஞ்சிப்பாட்டு மிகக் குறைவான உவம உருபுகளைக் கொண்டு இருப்பதும் பெறப்படுகிறது.

விளித்தொடரில் - கலித்தொகையில் தலைவன் தோழியால் மட்டும் விளிக்கப்படுகிறான். தலைவியால் தலைவன் மற்ற பாடல்களில் மலையன், நாடன் என்று குறிக்கப்பட ஐங்குறுநூற்றில் மட்டும் 'மார்பன்' என்ற பெயரினைக் குறிப்பிடுவதும், கபிலரின் அனைத்துப் பாடல்களிலும் 'குன்ற நாடன்' என்று இடம்பெற கலித்தொகையில் இத்தகைய விளித்தொடர் கையாளப்படாதிருப்பதும், கலித்தொகையில் ஒரு பாடலில் தலைவன் பலமுறை விளிக்கப்படுவதும் அறியப்படுகிறது.

3. அடைத்தொடரில் - கலித்தொகையில் வரும் தலைவி மிகுதியும் வர்ணிக்கப்பட, மற்ற பாடல்களில் விலங்குகளின் 'வர்ணனை' அதிகம் இடம்பெறுகிறது. கபிலரின் பல பாடல்களில் ஓரசை அடைத்தொடர்களே பயன்படுத்தப்படக் கலித்தொகையிலும், ஐங்குறுநூறிலும் மூன்று அல்லது நான்கு அசைச்சொற்கள் இடம்பெறுவது அறியப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில் விலங்குகளுக்கு எவ்வித அடைத்தொடரும் கொடுக்கப்படாததும் நோக்கத்தக்கது.

4. விருப்பத்தொடரில் அனைத்துப் பாடல்களிலும் குறிக்கப்பட்ட மயில் கலித்தொகையில் ஒரு பாடலில் கூட இடம்பெறவில்லை என்பதும், விலங்குகளில் 'பன்றி' கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய இரண்டிலும் இடம்பெறவில்லை என்பதும், 'நரி', 'எருது' போன்ற விலங்குகள் கலித்தொகையில் மட்டும் இடம்பெறுவதும், ஐங்குறுநூற்றில் யானை எவ்வித அடையும் இன்றி குறிக்கப்படுவதும் பெறப்படுகிறது.

5. இணைப்புத்தொடரில் கையாளப்படும் தொடர்கள் கலித்தொகைப் பாடல்களில் மட்டுமே நேரிடையாக வெளிப்பட, மற்றப் பாடல்களில், பாடல் பொருளை அறியும்போது மட்டுமே உணரப்படுகின்றன என்பதும் பெறப்படுகிறது.

எனவே, தொடர் நிலைக் கூறுகளிலும் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றும் பிற பாடல்களில் இருந்து வேறுபடுவதைக் காணலாம்.

5.5. முடிவுரை:-

'நடையியல் ஆய்வில் கபிலர்' என்ற ஆய்வின்வழி பெறப்பட்ட முடிவுகள்.

1. நடையியலில் பல்வேறு வகைப்பாடுகள் இருந்தாலும் ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை என்ற மூன்று நிலைகள் மட்டும் எடுத்துக்-கொள்ளப்படுகின்றன..

2. ஒலிநிலையில் மோனை, எதுகை, இயைபு என்ற அமைப்புகளில் கலித்தொகையும், ஐங்குறுநூறும் வேறுபட்டு இருப்பதும், அளபெடை என்ற அமைப்பில் குறிஞ்சிப்பாட்டு மட்டும் வேறுபட்டு இருப்பதும் தெளிவாகிறது.

3. சொல்நிலையில் தலைவன் என்ற பெயரினைக் குறிக்கும்போது கலித்தொகையும், ஐங்குறுநூறும் வேறுபட்டு இருப்பதும், தலைவி பற்றிய வர்ணனைச் சொற்களைக் கையாண்டதில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு என்ற மூன்றும் வேறுபடுவதும், விலங்குகளைக் கையாண்டதில் 'கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய மூன்றும் வேறுபடுவதும் தெரிய வருகிறது.

4. தொடர்நிலையில் உவமைத்தொடர், விளித்தொடர், விருப்பத்தொடர் என்ற அமைப்புகளில் கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகிய இரண்டும் வேறுபட்டிருப்பதும், அடைத்தொடர் அமைப்பில் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு என்ற மூன்றும் வேறுபட்டிருப்பதும் இணைப்புத்தொடர் அமைப்பில் கலித்தொகை மட்டும் வேறுபட்டிருப்பதும் தெளிவாகிறது.

* * *

சான்றெண் விளக்கம்

1. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.1.
2. ஜெயா, வ., 'பாரதி மொழிநடை', ப.1.
3. மேலது. ப.2.
4. ஆலிஸ், அ., 'கண்ணதாசனின் கவிதை நடை', ப.1.
5. மேலது, ப.5.
6. ஜெயா, வ., 'பாரதி மொழிநடை', ப.5.
7. மேலது, ப.6.
8. மேலது, ப.7.
9. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.141.
10. ஆலிஸ், அ., 'கண்ணதாசனின் கவிதை நடை', ப.2
11. இரபிசிந்து, ம.செ., 'அண்ணாவின் மொழிநடை', ப.5.
12. ஆலிஸ், அ., 'கண்ணதாசனின் கவிதை நடை', ப.2.
13. மேலது, ப.2.
14. மேலது, ப.2.
15. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.29.
16. மேலது, ப.65.
17. ஜெயா, வ., 'பாரதி மொழிநடை', ப.16.
18. இளம்பூரணர், (உ.ஆ), 'தொல்காப்பியம்' (எழுத்ததிகாரம்) நூ.எண்.84.
19. மேலது, நூ.எண்-89.
20. மேலது, நூ.எண்-92.

21. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.42.

22. வேங்கடசாமி நாட்டார், ந.மு., (ப.ஆ), 'யாப்பருங்கலக் காரிகை', ப.16.

23. மேலது, ப.18.

24. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.46.

25. மேலது, ப.46.

26. அகத்தியலிங்கம், ச., 'சங்கத்தமிழ்' (பகுதி- I), ப.5.

27. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', பக்-48-50.

28. அகத்தியலிங்கம், ச., 'சங்கத்தமிழ்' (பகுதி-IV), ப.2.

29. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.66-68.

30. மேலது, ப.52.

31. சூலிஸ், அ., 'கண்ணதாசனின் கவிதைநடை', (ஆய்வேடு), ப.6.

32. நீதிவாணன், ஜெ., 'நடையியல்', ப.53.

33. மேலது, ப.53.

34. மேலது, ப.53-62.

35. சீனிவாசன், ரா., 'சங்க இலக்கியத்தில் உவமைகள்', (நூல் முழுமையும்)

* *

5. முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் குறித்துத் தெளிவான கருத்து இல்லை என்றாலும், அக்கால கட்டம் கடைச்சங்கக் கால பகுதியாகக் கொள்ளப்-படுகிறது. அக்கடைச்சங்க நூல்களே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும். எட்டுத்தொகை நூற்பாடல்களைப் பாடிய புலவர்கள் மொத்தம் 473 பேர் என்று அறியப்படுகிறது. ஆனால், எட்டுத்தொகை நூற்கள் பற்றியும் பல்வேறு சிக்கலான கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. அச்சங்கப் புலவர்களுள் புகழ் பெற்றவரும், அதிக எண்ணிக்கையில் பாடல்களைப் பாடியவராகக் கருதப்படுபவருமான கபிலரின் வரலாறும், அவர் பாடிய பாடல்கள் பற்றிய எண்ணிக்கையும் இலக்கிய வரலாற்றாசிரியர்களிடையே பல முரண்பாடான கருத்துக்களை உருவாக்கியுள்ளன. அம்முரண்களைத் தீர்க்கும் வகையில் சங்ககாலம் பற்றிய காலவரையறை முதலில் முடிவு செய்யப்பெற்றது. அம்முடிவின்படி, சங்ககாலம் கி.மு.300-இல் இருந்து கி.பி.300 வரை என்பதும் சங்ககாலக் கபிலர் இக்கால எல்லைக்குள் தம் பாடல்களைப் பாடியிருக்க வேண்டும் என்பதும் பெறப்பட்டன.

கபிலரின் பிறப்புப்பற்றிக் கூறும்போது பல்வேறு மாறுபட்ட கதைகளைப் புனைந்து கூறியிருப்பதால் கபிலரின் பெயர் குறித்து சிக்கல் எழுந்துள்ளது. எனவே, கபிலர் என்ற பெயர் காலந்தோறும் வந்துள்ளமையால் அப்பிறப்புப் பற்றியக் கதைகள் பிற்காலத்தில் வந்த கபிலர் ஒருவர்க்கும் பொருந்தும் என்று தெளிவு செய்யப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில் தொடர்ந்து வந்த காலக்கட்டத்தில் கபிலர் என்ற பெயர் இடம் பெற்றிருந்தாலும் அப்பெயர்கள் எல்லாம் காலம் நோக்கி சங்க-காலத்திற்கு அடுத்து வந்த காலப்பகுதியில் வாழ்ந்த பிற்காலப் புலவர்களே என்று உறுதிசெய்யப்படுகிறது.

சங்க காலத்தில் கபிலர், தொல்கபிலர் என்ற இரு புலவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருப்பினும், பாடல்களில் இடம்பெறும் சொற்களின் ஒற்றுமை கொண்டும், குறிஞ்சித்திணையில் மட்டும் தொல்கபிலரின் பாடல்கள் இடம்பெற்றுள்ளமை கொண்டும் இருபெயர்களும் ஒருவரையே குறிக்கும் என்பது பெறப்படுகிறது.

கபிலரின் பாடல் எண்ணிக்கையில் பல்வேறு மாற்றங்கள் இருந்து வந்தாலும் அம்மாற்றங்கள் எல்லாம் தொல்கபிலர் பாடிய ஒரிரு பாடல்களினால் வந்த எண்ணிக்கைக் குழப்பங்கள் என்பதும், பின்னால் வந்த இலக்கியத் திறனாய்வாளர்களும் நூல்களுக்கு முன்வந்த சங்க இலக்கியப் பதிப்புகளை ஒப்பிட்டு பார்க்காததால் வந்த இம் மாற்றங்கள் என்பதும் பெறப்படுகிறது.

பிற தொகைப் பாடல்களைப் பாடிய கபிலர்க்கும் குறிஞ்சிப்பாட்டு, கலித்தொகை, ஐங்குறுநூறு போன்றவற்றைப் பாடிய கபிலர்க்கும் காலத்தாலும், நடையாலும் வேற்றுமைகள் காணப்பட்டதால் அவையெல்லாம் பிறதொகைப் பாடல்களைப் பாடிய கபிலரால் பாடப்பட்டிருக்க முடியாது என்ற முடிவு தெளிவாகப்பட்டது. அதில்,

கபிலர் பாடியது அல்ல என்று கருதப்படுகின்ற கலித்தொகைப் பாடல்கள் பற்றி அறிகையில், கலித்தொகை முழுவதும் ஒருவரே பாடினார் என்றும், இவர்

...272/-

பாடினார் என்னும் வேறுவேறு கருத்துக்கள் நிலவி வந்தாலும், சங்க காலத்திற்கு அடுத்து வந்த காலகட்ட இலக்கியங்களில் திணைக்கு ஒரு புலவர் என்ற முறையில் ஐந்து திணைகளில் பாடல்கள் இடம்பெற்றிருப்பதனைக் கொண்டும், ஒரே புலவரே குறிப்பிட்ட சமயத்தில் ஐந்திணைகளில் பாடல்கள் பாடியிருக்க முடியாது என்று கொண்டும் கலித்தொகைப் பாடல்களை ஐந்து புலவர்களே பாடியிருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

கபிலரின் மற்ற குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்துப் பாடல்கள் குறித்துச் சிக்கல் இருந்து வந்தாலும், பதிற்றுப்பத்தினைச் சங்கக் கபிலரே பாடினார் என்பதைக் கபிலரின் பதிற்றுப்பத்துப் பாடலில் இடம்பெறும் பாடல் கருத்துக்கள் கொண்டு பாரியைத் தோழனாகப் பெற்றக் கபிலரே பாடியுள்ளார் என்பது பெறப்படுகிறது.

ஆனால், ஐங்குறுநூறும், குறிஞ்சிப்பாட்டும் பாரியைத் தோழனாகப் பெற்ற கபிலரால் பாடியிருக்க முடியாது என்பதை கபிலரால் பாடப்பட்ட அரசர்கள், புலவர்கள், கபிலரைப் பாராட்டிய புலவர்கள், அப்புலவர்களால் பாடப்பட்ட அரசர்கள் என்னும் உறவுநிலையில் ஒப்பிட்டு ஆராயப்பெற்றதில் கபிலரைப் பாடிய புலவர்கள் என்பதில் பெருங்குன்றூர்கிழார் பேகனைப் பாடியிருப்பதால் கபிலரின் சமகாலப்புலவர் என்பதும், பிற புலவர்களான மாறோக்கத்து நப்பசலையார், பொருந்தில் இளங்கீரனார், நக்கீரர் ஆகிய மூவரும் கபிலர் இறந்த பின்பும் வாழ்ந்த புலவர்கள் என்பதும் பெறப்படுகிறது.

...273/-

மேற்குறிப்பிட்ட புலவர்களுள் பொருந்தில் இளங்கீரனரால் பாடப்பட்ட யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை காலத்தால் பிற்பட்ட சேர அரசன் என்பதும், அவனால் தொகுக்கப்பட்ட ஐங்குறுநூறும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்பதை இலக்கிய அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் வழியும், இச்சேர அரசனைப் பாடிய புலவர் வரலாற்று வழியும், இவ்வரசனின் சமகால மன்னர்களின் வரலாற்று வழியும் தெளிவு செய்யப்பட்டது.

